# சிறுவர் வியாபாரத்தினை இனங்காணுதல், அறிக்கை செய்தல் மற்றும் விசாரணை செய்தல் தொடர்பான பயிற்சி விடய பாடத்திட்டம் கற்றல் செயன்முறை மற்றும் கருவிகள்

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை

# சிறுவர் வியாபாரத்தினை இனங்காணுதல், அறிக்கை செய்தல் மற்றும் விசாரணை செய்தல் தொடர்பான பயிற்சி விடய பாடத்திட்டம் கற்றல் செயன்முறை மற்றும் கருவிகள்

டிசம்பர் 2020

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை

# சிறுவர் வியாபாரத்தினை இனங்காணுதல், அறிக்கை செய்தல் மற்றும் விசாரணை செய்தல் தொடர்பான பயிற்சி விடய பாடத்திட்டம் கற்றல் செயன்முறை மற்றும் கருவிகள்


**பிரசுரம்**

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை
இல 330, தலவத்துகொட வீதி, மாதிவெல, ஸ்ரீஜயவர்த்தனபுர

**முதற்பதிப்பு 2020**

**ISBN 978-955-1417-31-4**

**பயிற்சி விடய பாடத்திட்டத்தின் கலந்துரையாடல்களுக்கான ஒத்துழைப்பு வழங்கியோர்**

மனித உரிமைகள் கல்வி நிலையம்
கொழும்பு பல்கலைக்கழகம்.

**பயிற்சி விடய பாடத்திட்டத்தின் கலந்துரையாடல்களுக்கான நிதிப்பங்களிப்பை வழங்கியோர்**

Save the Children

**பதிப்பு**
**Print Zone** நிறுவனம்
**Tel: 0112-888355**

**வழிகாட்டிகள்**

- பேராசிரியர் முதித பத்திரண, தலைவர் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை
- சட்டத்தரணி சுஜாதா அழகுப்பெருமா பிரதி தலைவர், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை
- அனோமா ஸ்ரீவர்த்தன, பணிப்பாளர் நாயகம், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை

**ஆலோசனைக் குழு**

- பேராசிரியர் வசந்தா செனவிரத்ன – சட்ட பீடம், கொழும்பு பல்கலைக்கழகம் (பணிப்பாளர், மனித உரிமைகள் கற்கை நிலையம், கொழும்பு பல்கலைக்கழகம்)
- சிரேஷ்ட விரிவுரையாளர் மொகமட் ஹக்கீம், பிரதிப்பணிப்பாளர் - மனித உரிமைகள் கற்கை நிலையம், கொழும்பு பல்கலைக்கழகம்.
- முன்னைய சிரேஷ்ட பேராசிரியர் சார்ஜா ஸ்கானிவல் - சட்ட பீடம் கொழும்பு பல்கலைக்கழகம். (முன்னைய பணிப்பாளர், மனித உரிமைகள் கற்கை நிலையம், கொழும்பு பல்கலைக்கழகம்
- விரிவுரையாளர் என்.றோஸ் விஜயசேகர – சட்ட பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்.
- சட்டத்தரணி சர்மிலா அன்ரனிபெரேரா - சட்ட பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்.
- சட்டத்தரணி சந்திரிக்கா கருணாரத்ன – ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டங்கள்.
- சட்டத்தரணி ஷானிகா மலல்கொட- பணிப்பாளர் (திட்டமிடல் மற்றும் தகவல்) தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை.
- சட்டத்தரணி பிரதீகா சகலசூரிய – உதவிப் பணிப்பாளர் (சட்டம்) தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை
- சட்டத்தரணி அசாலி அபேசுந்தர - முன்னைய உதவிப் பணிப்பாளர் (சட்ட அமுலாக்கல்) தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை.

**தொழில்நுட்ப ஆய்வுக் குழு**

- சட்டத்தரணி அஜேசா ஜினசேன – சிரேஷ்ட மேலதிக சொலிசிஸ்ட ஜெனரல், நீதிபதி திணைக்களம்.
- வைத்தியர் அஜேசா லெக்குபாலசூரிய, சமுதாய சுகாதார வைத்திய நிபுணர், குடும்ப சுகாதார பணியகம்.
- எம்.ஆர்.லதீப் - சிரேஷ்ட பிரதிபொலிஸ்மா அதிபர் விசேட அதிரடிப் படையணி, தலைமையகம்.
- ஏ.ஆர்.பீ.சீ. உதயகுமார குற்ற விஞ்ஞானம் தொடர்பான சிரேஷ்ட விரிவுரையாளர் ஸ்ரீஜயவர்த்தன பல்கலைக்கழகம்.

**கையேட்டு அட்டைப் படம்**

- சட்டத்தரணி உதானி கம்மன்பில, விரிவுரையாளர் சட்ட பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்.
- சட்டத்தரணி சர்மிலா அன்ரனி விரிவுரையாளர் - சட்ட பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்.
- அரச சட்டத்தரணி யோதனி செல்வநாதன், நீதிபதி திணைக்களம்
- சட்டத்தரணி குசாங்கிகா நவரத்ன - மனித உரிமைகள் கற்கை நிலையம், கொழும்பு பல்கலைக்கழகம்.
- அரச சட்டத்தரணி எம்.எம்.ஆர்.எப்.ரணசிங்க நீதிபதி திணைக்களம்.

**மொழிபெயர்ப்பு மற்றும் கணணியாக்கம்**

- சட்டத்தரணி சதுரிக்கா அதுரகொட விரிவுரையாளர் சட்ட பீடம் கொழும்பு பல்கலைக்கழகம்.
- சட்டத்தரணி திலினி கலப்பதி, விரிவுரையாளர் சட்ட பீடம்.
- பி.எ.சுனேத்திரா முன்னைய திட்ட இணைப்பாளர் மனித உரிமைகள் கல்வி நிலையம், கொழும்பு பல்கலைக்கழகம்.
- சுமுது விஜய சூரிய – திட்ட இணைப்பாளர் மனித உரிமைகள் கல்வி நிலையம், கொழும்பு பல்கலைக்கழகம்.
- சட்டத்தரணி குசல் காவிந்த அமரசிங்க – உதவி இணைப்பாளர், மனித உரிமைகள் கல்வி நிலையம், கொழும்பு பல்கலைக்கழகம்.
- சட்டத்தரணி ஷியாசா யொகர்தீன் - உதவி இணைப்பாளர், மனித உரிமைகள் கல்வி நிலையம், கொழும்பு பல்கலைக்கழகம்.

**மீள்பரிசீலனை**

- சட்டத்தரணி சர்மிலா அன்ரனி பெரேரா விரிவுரையாளர் - சட்ட பீடம் கொழும்பு பல்கலைக்கழகம்.
- குலாநிதி றோஸ் விஜயசேகர, சிரேஷ்ட விரிவுரையாளர் -சட்ட பீடம் கொழும்பு பல்கலைக்கழகம்.
- சட்டத்தரணி உதானி கம்மன்பில, விரிவுரையாளர் - சட்ட பீடம் கொழும்பு பல்கலைக்கழகம்.

**பதிப்பாசிரியர்**

- பேராசிரியர் வசந்தா செனவிரத்ன – சட்ட பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்
  (பணிப்பாளர், மனித உரிமைகள் கற்கை நிலையம், கொழும்பு பல்கலைக்கழகம்)

**துணைப் பதிப்பாசிரியர்கள்**

- பீ.ஏ. சுனேத்ரா, முன்னைய செயற்திட்ட இணைப்பாளர், மனித உரிமைகள் கல்வி நிலையம், கொழும்பு பல்கலைக்கழகம்.
- சட்டத்தரணி லேபா கேரத், செயற்திட்ட இணைப்பாளர், மனித உரிமைகள் கல்வி நிலையம், கொழும்பு பல்கலைக்கழகம்.

**செயற்திட்ட இணைப்பாளர்கள்**

- சட்டத்தரணி ஷானிகா மலல்கொட, பணிப்பாளர் (திட்டமிடல் மற்றும் தகவல்கள்) தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை.
- சட்டத்தரணி பிரதீகா சகலசூரிய, உதவி பணிப்பாளர் (சட்டம்) தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை.

**வெளிப்புற அட்டைப்பட வடிவமைப்பு** : வுத்தினி அனுராத செனவிரத்ன தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை.

**வடிவமைப்பு** : திலினி சந்திரசேகர, மனித உரிமைகள் கல்வி நிலையம், கொழும்பு பல்கலைக்கழகம்.

**கணணி வடிவமைப்பு** : மகேசா அபேவிக்கிறம

## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் கௌரவ தலைவரின் செய்தி



'சிறுவர் இழிதொழில் வாணிபத்தினை இனங்காணல், அறிக்கையிடல் மற்றும் விசாரணை செய்வதற்கான பயிற்சிப் பாடநெறி, கற்றல் பணியைப் பயன்படுத்தல் மற்றும் கருவிகள்' எனும் தலைப்பில் ஆக்கப்பட்டுள்ள இந்தப் பயிற்சிக் கையேடு சிறுவர் கடத்தலுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளும் தரப்பினர்களின் அறிவையும், திறமைகளையும் மேம்படுத்தும் நோக்கத்துடன் தயார் செய்யப்பட்டுள்ளது.

பூகோள ரீதியில் தீவிர கவனத்தை ஈர்த்துள்ள இந்த சிக்கலான மற்றும் கற்புலனாகாத சமூக சிக்கலானது யாதாயினுமொரு சமூகத்தில் பொருளாதார, சமூக மற்றும் கலாசார ரீதியில் ஒன்றுக்கொன்று பின்னிப்பிணைந்துள்ள பல காரணிகள் காரணமாக எழுந்துள்ளது. இந்த சிக்கலான சவாலுக்கு எதிராக போராடுவதற்குத் தேவையான அறிவையும், அனுபவத்தையும் அலுவலர்களுக்குப் பெற்றுக் கொடுப்பது அத்தியாவசியமாகும் என்பது எனது நம்பிக்கையாகும்.

இப்பயிற்சிக் கையேட்டின் மூலம் சிறுவர் கடத்தலுடன் சம்பந்தப்பட்ட அடிப்படை எண்ணக்கருக்கள், மேற்படி சம்பவங்கள் ,டம்பெறுவதற்குக் காரணமாக அமைகின்ற காரணிகள் மற்றும் அது இடம்பெறுகின்ற முறை, மேற்படி சிக்கலின் பெறுபேறுகள், அது சம்பந்தமான சர்வதேச சட்டங்கள், சமவாயங்கள், உள்நாட்டுச் சட்டங்கள் மற்றும் சமூகத்தினதும், பிரசைகளினதும் பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் எனும் தலைப்புக்கள் தொடர்பில் ஆழமாக கலந்துரையாடப்பட்டுள்ளது. இது சம்பந்தமான பயிற்சி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய சம்பவக் கற்கைகள், பயிற்சி மற்றும் கற்றல் செயற்பாடு போன்ற பயிற்சி கருவிகளும் இதில் உள்ளடங்குகின்றன.

சிறுவர் கடத்தலுக்கு எதிரான முயற்சிகளில் ஈடுபட்டுள்ள அலுலவர்களின் அறிவு மற்றும் அவர்களினால் வழிநடாத்தப்படுகின்ற பயிற்சிப் பணிகளின் போது பயிற்சி வழிகாட்டியொன்றாகவும் இப்பயிற்சிக் கையேட்டைப் பயன்படுத்திக் கொள்ள முடியும். சிறுவர் கடத்தல் எனும் சிக்கல் சிறுவர் பாதுகாப்புடன் உறுதியாக சம்பந்தப்பட்டுள்ளது. இக்கையேட்டின் மூலம் சிறுவர் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ள தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் அலுலவர்களுக்கு, அவர்களின் அறிவை மேம்படுத்தி தமது அறிவினூடாக பொது மக்களின் சமூகத்தை வலுவூட்டுவதற்கான வாய்ப்புக்களும் விஸ்தரிக்கப்படும்.

இலங்கையின் சிறுவர்களுக்கு பாதுகாப்பான எதிர்காலத்தை உருவாக்கிக் கொடுக்கும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்டுள்ள இம்முயற்சியை யதார்த்தமாக்கிக் கொள்வதற்காக சகல வகையிலும் உதவி வழங்கியுள்ள சகல அலுவலர்களுக்கும், நிறுவனங்களுக்கும் எனது இதயப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பேராசிரியர் முதித விதானபதிரன
MBBS (Col). DLM (Col).MD (Col). MA (SJP). FFFLM (UK)
தலைவர்,
தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை

# நிறைவேற்றுப் பொழிப்பு

சிறுவர் வியாபாரத்தை இனங்காணல், அறிக்கையிடல் மற்றும் விசாரணை செய்வதற்கான பயிற்சிப் பாடவிதானம், கற்கைப் பணித் தொகுப்பு மற்றும் கருவிகள் கையேட்டைத் தயார் செய்வதன் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் நோக்கமாக இருப்பது தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் அலுலவர்கள் உள்ளிட்ட சட்டத்தை அமுல்படுத்தும் அலுவலர்கள் மற்றும் சிறுவர்களுடன் நேரடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அரசாங்க அலுவலர்களின் அறிவு மற்றும் சாத்தியவளத்தை வளர்ப்பதாகும்.

மேலும் இக்கையேடானது, சிறுவர் வியாபாரம் தொடர்பிலான சம்பவங்களை இனங்காணல், பாதிக்கப்பட்டவர்களை பாதுகாத்தல் மற்றும் புனர்வாழ்வளிப்பதற்காக சட்டத்தை அமுல்படுத்தும் அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றிய அறிவைப் பெற்றுக் கொடுப்பதற்காகத் தயார் செய்யப்பட்டுள்ளது.

# உள்ளடக்கம்


| கற்கை அலகு இல | கற்கையலகுகள் மற்றும் உள்ளடக்கம் | பக்க இல |
|---|---|---|
| | | |
| 1 | **அடிப்படை எண்ணக்கருக்களை விளங்கிக் கொள்ளுதல்** | |
| | 1.2 மனிதவுரிமைகள் மற்றும் சிறுவர் உரிமைகளினை விளங்கிக் கொள்ளுதல் | 6-8 |
| | 1.3 சிறுவர் உரிமைகள் தொடர்பான உடன்படிக்கையில் உள்ள வழிகாட்டல் அடிப்படைக் கொள்கைகள் | 9-11 |
| | 1.4 சிறுவர்களின் உரிமைகள் | 11-13 |
| | 1.5 முடிவுரை | 14 |
| | கற்றற் கருவிகள் | 14-16 |
| | | |
| 2 | **சிறுவர் இழிதொழில் வாணிபத்தினையும் அதனுடைய அடிப்படைக் காரணங்களையும் விளங்கிக் கொள்ளுதல்** | |
| | a. சிறுவர் இழிதொழில் வாணிபஞ் செய்தலினை விளங்கிக் கொள்ளுதல் | 17 |
| | 2.1 இழி தொழில் வாணிபஞ் செய்தல் | 17-19 |
| | 2.2 கடத்தல் | 19-23 |
| | 2.3 சட்ட முரணான புலம்பெயர்வு | 23-24 |
| | 2.4 ஆட்கவர்தல் | 24-25 |
| | 2.5 ஆட்கடத்தல் | 25-27 |
| | 2.6 அடிமைத்தனம் | 27-30 |
| | b. சிறுவர் இழி தொழில் வாணிபத்தின் தள்ளல் மற்றும் இழுத்தற் காரணிகள் | 30 |
| | c. இழிதொழில் வாணிபத்தினை தூண்டுகின்ற காரணிகள் | 32 |
| | 2.7 பாலியல் சுரண்டுதல் அல்லது ஆபாசப் படமெடுத்தல் | 32-35 |
| | 2.8 தொழில்சார் அல்லது பொருளாதார சுரண்டல் | 35-37 |
| | 2.9 சிறுவர் போராளிகள் | 37-38 |
| | 2.10 உடல் உறுப்புக்களைக் அகற்றுவதற்காக மனித இழி தொழில் வாணிபம் செய்தல் | 38-40 |
| | 2.11 மகவேற்பு | 40 |
| | 2.12 திருமணம் | 40-43 |
| | கற்றற் கருவிகள் | 43 |
| | | |
| 3 | **வடிவங்கள் காரணங்கள் மற்றும் விளைவுகள்** | |
| | 3.1 சிறுவர் இழிதொழில் வாணிபம் எவ்வாறு செயற்படுகிறது | 44-46 |
| | 3.2 சிறுவர் இழிதொழில் வாணிபத்தில் முக்கிய வடிவங்கள் | 46-50 |
| | 3.3 சிறுவர் இழிதொழில் வாணிபத்துடன் தொடர்புடைய குற்றச் செயல்கள், இழிதொழில் வாணிபத்திற்கு முன்னரான அல்லது இணைந்த குற்றங்கள் | 50-52 |
| | 3.4 சிறுவர் இழிதொழில் வாணிபத்தினால் ஏற்படுத்தப்படும் தாக்கங்கள் | 52-56 |
| | கற்றற் கருவிகள் | 56-58 |


| | | |
|---|---|---|
| 4 | **கோட்பாட்டு வரையறையும் வேறு தொடர்புடைய ஆவணங்களும்** | |
| | **a. சர்வதேச சட்ட கட்டமைப்பு** | 59 |
| | 4.1 இலங்கையில் சிறுவர் இழிதொழில் வாணிபம் தொடர்பிலான ஆவணங்களின் பின்னுறுதிப்படுத்தல் நிலைமை | 59-60 |
| | 4.2 பலேர்மோ பின்னேடு பற்றி | 60-63 |
| | 4.3 சிறுவர்கள் உரிமைகள் மற்றும் சிறுவர் இழிதொழில் வாணிபம் தொடர்பில் தொடர்புபடும் வேறு சர்வதேச சமவாயங்கள் | 63-66 |
| | 4.4 மனித உரிமைகள் தொடர்பிலான உலகலாவிய பிரகடனம் | 66 |
| | 4.5 பெண்களுக்கு எதிரான பாராபட்சத்தின் அனைத்துவிதமான வடிவங்களையும் இல்லாதொழிப்பதற்கான சமவாயம் (1979) (CEDAW) | 66-68 |
| | 4.6 ஐநாவின் சிறுவர் உரிமைகள் தொடர்பிலான உடன்படிக்கையும் பின்னேடுகளும் | 68-70 |
| | 4.7 இழிதொழில் வாணிபத்தையும் மற்றையவர்களின் விபச்சாரச் சுரண்டலினையும் அடக்குவதற்கான ஐநாவின் சமவாயம் | 70-71 |
| | 4.8 கட்டாயப்படுத்தி தொழில் புரிய வைத்தல் தொடர்பிலான ILO உடன்படிக்கைகள் | 72-75 |
| | 4.9 1966ம் ஆண்டின் குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயம் | 75 |
| | 4.10 ஐநாவின் அனைத்து புலம்பெயர் வேலையாட்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களின் உரிமைகள் தொடர்பிலான சமவாயம் | 75-76 |
| | 4.11 சர்வதேச வழிகாட்டல்களும் கோட்பாடுகளும் | 76-80 |
| | **b. பிராந்திய கட்டமைப்பு** | 80 |
| | 4.12 சார்க் சமவாய விளக்கமளிப்பு | 80-83 |
| | **கற்றற் கருவிகள்** | 83-85 |
| | 4.13.இழி தொழில் வாணிபத்துடன் தொடர்புடைய மற்றைய பிராந்திய உடன்படிக்கைகள் | 85-86 |
| | | |
| 5 | **உள்நாட்டுச்சட்டம் மற்றும் கொள்கைக் கட்டமைப்பு** | |
| | 5.1 இழிதொழில் வாணிகஞ் செய்தல் தொடர்பான உள்நாட்டுச் சட்டங்களும் கொள்கைகளும் | 87-89 |
| | 5.2 சிறுவர்கள் உள்ளிட்ட இழிதொழில் வாணிகஞ் செய்தல் | 90 |
| | 5.2.1 2006ம் ஆண்டின் 16ம் இலக்க தண்டனைச்சட்டக் கோவை திருத்தம் | 90-92 |
| | 5.2.2 பிள்ளைகள் மற்றும் பெண்களை விபச்சாரத்திற்காக கடத்துதல் தடுத்தல் மற்றும் எதிர்த்தலுக்கான மகாநாடு | 92-94 |
| | 5.2.3 இழிதொழில் வாணிகம் தொடர்பான தவறுகள் தொடர்பிலான பிற தண்டனைச் சட்டக் கோவை ஏற்பாடுகள | 94-102 |
| | 5.2.4 பிள்ளைகளைக் கடத்துதல் தொடர்பான பிற சட்டங்கள் | 103-108 |
| | 5.3 நிவாரண முறைகள் | 109-111 |
| | **கற்றற் கருவிகள்** | 93 |
| | | |
| 6 | **பொறுப்புகளும் கடப்பாடுகளும்** | |
| | **a. பங்கேற்றல், தடுத்தல், பாதுகாத்தல், முன்னேற்றல், புனர்வாழ்வு அல்லது மீள் ஒருங்கிணைப்பு செய்தல்** | 112 |
| | 6.1 அறிமுகம் | 112 |
| | 6.2 சிறுவர் இழிதொழில் வாணிபம் செய்தலை தடுப்பதற்கான பொறுப்புகள் | 114-118 |
| | 6.3 சிறுவர் இழிதொழில் வாணிபத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களை பாதுகாத்தல் தொடர்பான பொறுப்புகள் | 118-120 |
| | 6.4 சிறுவர் இழிதொழில் வாணிபத்தினால் பாதிப்படைந்த சிறுவர்களுக்கு புனர்வாழ்வளித்தல் மற்றும் மீள் ஒருங்கிணைத்தல் தொடர்பான பொறுப்புகள் | 120-121 |
| | 6.5 பங்குபற்றுகை மற்றும் உரிமை அடிப்படையிலான அணுகுமுறையினை ஏற்றுக்கொள்ளும் பொறுப்பு | 121 |

| | | |
|---|---|---|
| | 6.6 சிறுவர் இழிதொழில் வாணிபத்துக்கான எதிர்ப்பு மற்றும் சமூக மீள்ஒருங்கிணைப்பு என்பவற்றை ஊக்குவிக்கும் பொறுப்பு | 121 |
| | 6.7 முடிவுரை | 122 |
| | கற்றற் கருவிகள் | 122-123 |
| | | |
| 7 | **தகவல்களை கையாளுதல்** | |
| | a. தகவல்களை பெறுதல், பதிவு செய்தல், அறிக்கைப்படுத்தல் மற்றும் பரப்புதல் அல்லது வெளியிடல | 124 |
| | 7.1 இழிதொழில் வாணிபம் தொடர்பான இலங்கை சட்டங்கள் | 124-127 |
| | 7.2 தகவல்களை பெற்றக்கொள்ளல் | 128-132 |
| | 7.3 தகவல்களை பதிவு செய்தல் | 133-134 |
| | 7.4 தகவல்களை அறிக்கைப்படுத்தல் மற்றும் பரப்புதல் அல்லது வெளியிடல் | 134-138 |
| | 7.5 பொறுப்பு வாய்ந்த அறிக்கைப்படுத்தல் மற்றும் இரகசியத்தன்மையை பேணுதல் என்பவற்றில் ஊடகத்தின் வகிப்பங்கு | 138-139 |
| | கற்றற் கருவிகள் | 139 |

## முதலாவது கற்கையலகு

| அடிப்படை எண்ணக்கருக்களை விளங்கிக் கொள்ளுதல் | | |
|---|---|---|
|  | **விரிவுரைகளின் எண்ணிக்கை** | 2 மணித்தியாலங்கள் |
|  | **மதிப்பீட்டு முறைகள்** | வகுப்பறைக் கலந்துரையாடல் |
| | **கற்றலின் பயன்விளைவுகள்** | கற்கையின் முடிவில் பின்வருவன பங்கேற்பாளர்களுக்கு இயலுமானதாயிருக்கும்<br>➢ மனிதவுரிமைகளினுடைய அடிப்படைக் கருத்தேற்புக்கள் மற்றும் பண்பியல்புகளினை விவரிக்கக் கூடியதாயிருக்கும்<br>➢ அடிப்படையான மனிதவுரிமை சாசனங்களினைப் பெயரிடக் கூடியதாயிருக்கும்<br>➢ சர்வதேச சிறுவர் உரிமைகள் சமவாயத்தினுடைய சிறுவர் உரிமைகள் மற்றும் வழிகாட்டுதற் கொள்கைகள் என்பவற்றினை விபரிக்கக் கூடியதாயிருக்கும்.<br>➢ சிறுவர் இழி தொழில் வாணிகஞ் செய்தலினை சிறுவர் உரிமை மீறலாகப் புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும் |

### அ. மனிதவுரிமைகள் மற்றும் சிறுவர் உரிமைகள் தொடர்பான கருத்தேற்புக்களினை விளங்கிக் கொள்ளுதல்.




மூலம்:[http://leher.org/campaigns/infographics/human-rights-day/](http://leher.org/campaigns/infographics/human-rights-day/)

சிறுவர் இழிதொழில் வாணிகஞ் செய்தல் என்பது குற்றமொன்று என்பது மட்டுமன்றி, பாரதூரமான மனிதவுரிமை மீறலொன்றாகும் என்பதும் உமக்குத் தெரியுமா? அது சிறுவர்களின் உரிமைகளினை மீறுகின்றது!



மனிதவுரிமைககள் மற்றும் சிறுவர் உரிமைகள் என்றால் என்ன?

## 1.1 மனிதவுரிமைகள் மற்றும் சிறுவர் உரிமைகளினை விளங்கிக் கொள்ளுதல்

### 1.1.1 மனிதவுரிமைகளுக்கான அறிமுகம்

மனிதர்கள் கௌரவத்துடன் வாழ்வதற்கான தார்மீக கோரிக்கைகள், நியமங்கள் மற்றும் தராதரங்கள் என்பவற்றினையே மனிதவுரிமைகள் எனும் பதம் உள்ளடக்குகின்றது. தற்காலத்தில் மனிதவுரிமைகளானவை 'மனிதர்களுடைய தேசியம், வசிக்கும் இடம், பாலினம், தேசிய அல்லது இனத் தோற்றம், நிறம், மதம், மொழி அல்லது வேறு ஏதேனும் அந்தஸ்து என்பவற்றிற்குப் புறம்பாக அனைத்து மனிதர்களுக்கும் உரித்தான உள்ளார்ந்த உரிமைகளாக அடையாளப்படுத்தப்படுகின்றன.”.[1] எவ்விதமான பாகுபாடுகளுமின்றி மனிதவுரிமைகளினை அனுபவிப்பதற்கு அனைத்து மனிதர்களுக்கும் சமத்துவமான உரிமை உண்டு.

மனிதவுரிமைகள் தொடர்பில் அரசுகளின் பிணிப்புத்தன்மையினை சர்வதேச உடன்படிக்கைச் சட்டமானது அங்கீகரிக்கின்றது. ஐக்கிய நாடுகள் சபையானது மனிதவுரிமைகளினையும் அடிப்படைச் சுதந்திரங்களினையும் பாதுகாக்கும் பொருட்டு பின்வரும் ஐந்து ஆவணங்களினை உள்ளடக்கிய 'மனிதவுரிமைகளுக்கான சர்வதேச ஆவணங்களினை' இணை ஏற்று அங்கீகரித்துள்ளது.

1) 1948 ஆம் ஆண்டின் அனைத்துலக மனிதவுரிமைகள் பிரகடனம் (UDHR)
2) 1966 ஆம் ஆண்டின் பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் தொடர்பான சர்வதேசக் கட்டுறுத்து (ICESCR)
3) 1966 ஆம் ஆண்டின் குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேசக் கட்டுறுத்து (ICCPR)
4) குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேசக் கட்டுறுத்துக்கான விருப்புரிமைப் பின்னேடு
5) மரணதண்டனையை இல்லாதொழிப்பதற்கான குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேசக் கட்டுறுத்துக்கான இரண்டாவது விருப்புரிமைப் பின்னேடு

ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையானது 10 டிசெம்பர் 1948 அன்று அனைத்துலக மனிதவுரிமைகள் பிரகடனத்தினை UDHR ஏற்றுக்கொண்டது. UDHR இனுடைய உறுப்புரை 1 ஆனது 'மனிதர்கள் அனைவரும் சுதந்திரமாகப் பிறந்தவர்கள் எனவும் கௌரவத்திலும் உரிமைகளிலும் சமத்துவத்தினைக் கொண்டவர்கள் எனவும் ஏற்பாடு செய்கின்றது.

### 1.1.2 மனிதவுரிமைகளின் அடிப்படைப் பண்பியல்புகள்

மனிதவுரிமைகளின் அடிப்படைப் பண்பியல்புகள் பின்வருமாறு: மனிதவுரிமைகளானவை[2]

- **உள்ளார்ந்தமானவை** – <u>மனிதவுரிமைகளானவை</u> பிறிதொருவரால் அல்லது <u>அதிகார மையத்தினால்</u> வழங்கப்படுவதில்லை என்பதனால் உள்ளார்ந்தனவையாக அமைகின்றன. மனிதர்களாகப் பிறந்திருக்கின்றனர் என்ற இலகுவான காரணத்தின் நிமிர்த்தம் மனிதவுரிமைகளுக்கு மனிதர்கள் உரித்துடையவர்களாகின்றனர்.
- **பாராதீனப்படுத்தப்பட முடியாதவை** – மனிதர்களினால் சொந்தங் கொள்ளப்படுபவையாக அமைவதனால் மனிதவுரிமைகளானவை பாராதீனப்படுத்தப்படவோ அல்லது பகிரப்படவோ உட்படுத்தப்பட முடியாதவை என்பதுடன் அவை பிறருக்கு கொடுக்கப்படவோ அல்லது பிறரிடமிருந்து எடுக்கப்படவோ முடியாதவையுமாகும்.
- **பிரிக்கப்பட இயலாதவை** – மனிதவுரிமைகள் <u>பிரிக்கப்பட இயலாதவை</u>. குடியியல், அரசியல், பொருளாதார, சமூக அல்லது கலாசார உரிமைகளென எதுவாக இருப்பினும் அனைத்து மனித உரிமைகளும் தனி மனித கௌரவத்திற்கு உள்ளார்ந்தனவையாக அமைகின்றன.

[1]மனிதவுரிமைகள் என்றால் என்ன?, ஐக்கிய நாடுகளின் மனிதவுரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் அலுவலகம், மேலும் பார்க்களு https://www.ohchr.org/en/issues/pages/whatarehumanrights.aspx
[2]kdpjTupikf; nfhs;iffs;, If;fpa ehLfspd; rdj;njhif epjpak;, 2005, https://www.unfpa.org/resources/human-rights-principles

- **ஒன்றுடனொன்று சார்பானவையும் தொடர்புடையனவையும்** - மனிதவுரிமைகளானவை ஒன்றுடனொன்று சார்பானவையும் தொடர்புடையனவையுமாகும். ஒவ்வொரு உரிமையும் அவரவரது விருத்தி, பௌதீக, உளவியல் மற்றும் ஆன்மீகத் தேவைகளினைப் பூர்த்தி செய்வதன் ஊடாக தனிமனித கௌரவத்தினை அனுபவிப்பதற்கு பங்களிப்புச் செய்கின்றது.
- **உலகளாவியது** – மனிதவுரிமைகளின் பயன்பாடானது உலகளாவியது. ஒருவருடைய பிறந்த இடம், அந்தஸ்து அல்லது நிலை என்பவற்றிற்குப் புறம்பாக அவை உவகளாவிய ரீதியில் பிரயோகிக்கப்படுகின்றன.

### 1.1.3 குடியியல், அரசியல், பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள்

மனிதவுரிமைகளானவை பொதுவாகக் குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் மற்றும் பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் என வகைப்படுத்தப்படுகின்றன.

UDHR இனுடைய 3 தொடக்கம் 21 வரையான உறுப்புரைகளினுள் பின்வரும் மனிதவுரிமைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன;

- நபரொருவருக்கான உயிர் வாழ்தல், சுதந்திரமாக நடமாடுதல் மற்றும் பாதுகாப்பாக வாழுதல் என்பவற்றிற்கான உரிமை (உறுப்புரை 3),
- ஆளொருவரும் அடிமையாக வைத்திருக்கப்பட முடியாது (உறுப்புரை 4),
- ஆளொருவரும் சித்திரவதைக்குட்படுத்தப்படவோ அல்லது கொடூரமானதும் மனிதாபிமானமற்றதுமான அல்லது கீழ்த்தரமான நடாத்துகை அல்லது தண்டனைக்கு உட்படுத்தப்படக் கூடாது (உறுப்புரை 5),
- அனைவரும் சட்டத்தின் முன்னர் சமம் என்பதுடன் பாரபட்சமின்றி சட்டத்தின் சமத்துவமான பாதுகாப்பிற்கும் உட்படுகின்றனர். (உறுப்புரை 7),
- அனைவருக்கும் சிந்தனை மற்றும் மனச்சாட்சியினைப் பின்பற்றுவதற்கும் மற்றும் மதச் சுதந்திரமும் உண்டு (உறுப்புரை 18) மற்றும்
- அனைவருக்கும் கருத்துச் சுதந்திரமும் வெளிப்படுத்தலுக்கான சுதந்திரமும் உண்டு (உறுப்புரை 19), இவையனைத்தும் குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளாகக் கருதப்படுகின்றன.

பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகளானவை ருனுர்சு இன் 22 தொடக்கம் 28 வரையான உறுப்புரைகளினுள் உள்ளடக்கப்பட்டுள்ளன ;

- தொழில் செய்வதற்கும் விரும்பிய தொழிலினை தெரிவு செய்வதற்குமான உரிமை (உறுப்புரை 23(1)),
- சுகாதார மற்றும் நல்வாழ்வினை வாழ்வதற்குப் போதுமான வாழ்க்கைத்தரத்தினைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமை (உறுப்புரை 25),
- கல்வி கற்பதற்கான உரிமை (உறுப்புரை 26), மற்றும்
- சமூகத்தின் கலாசார வாழ்க்கையில் சுதந்திரமாக பங்கெடுப்பதற்கான உரிமை (உறுப்புரை 27).

இதன் விளைவாக, ஐக்கிய நாடுகள் சபையானது 16 டிசெம்பர் 1966 ஆம் நாளன்று அரசுகளினைப் பிணிக்கின்றதான் குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேசக் கட்டுறுத்து (ICCPR) பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் தொடர்பான சர்வதேசக் கட்டுறுத்து (ICESCR) என்பவைகளினை ஏற்றுக் கொண்டது. இருப்பினும், ருனுர்சு உரிமைகளுக்கிடையில் வேறுபாடுகளினைக் காட்டவில்லை என்பதினைக் கவனத்திற் கொள்ள வேண்டும்.[3]

---

[3]https://www.ohchr.org/en/issues/escr/pages/areescrfundamentallydifferentfromcivilandpoliticalrights.aspx

### 1.1.4 சிறுவர் உரிமைகளுக்கான அறிமுகம்

சிறுவர்கள் மனிதவுரிமைகளினை அனுபவிப்பதற்கு உரித்துடையவர்கள். இருப்பினும், சிறுவர்களுக்கு விசேட தேவைகள் இருப்பதன் காரணத்தினால் அவர்கள் விசேட பாதுகாப்பு, கவனிப்பு, பராமரிப்பு மற்றும் அவர்களின் உடலியல் மற்றும் உளவியல் விருத்திக்குத் தேவையான கல்வி என்பவற்றினைப் பெற உரித்துடையவர்கள்.

**சட்டத்தினால் விசேடமாகக் குறித்துரைக்கப்படுகின்ற உரிமைகளுக்கான உதாரணங்கள்:**

- சிறுவர்களுக்கு பெற்றோர் அல்லது பாதுகாவலர்களிடமிருந்து அன்பு, கவனிப்பு, உறைவிடம் மற்றும் பாதுகாப்பு என்பன கிடைக்கப் பெற வேண்டும்.
- சிறுவர்களுக்கு கல்வி தேவையானது.
- சிறுவர்கள் பராமரிப்பு மற்றும் நிதியியல் உதவியினைப் பெற உரித்துடையவர்கள்
- சிறுவர்கள் குற்றங்கள் மற்றும் வன்முறைகளினால் விசேடமாக பாதிப்படையக் கூடியவர்களென்பதால் இரண்டாம் நிலைப் பாதிப்பினைத் தவிர்ப்பதற்காக சிறப்புப் பாதுகாப்பு மற்றும் பிந்தைய கவனிப்பு என்பவற்றிற்கு உரித்துடையவர்கள்.
- சிறுவர்கள் சட்ட பிரதிநிதித்துவம் மற்றும் சட்டத்தின் பிற சேவைகள் என்பவற்றைப் பெற உரித்துடையவர்கள்.
- சிறுவர்கள் தங்களுடைய கருத்துக்களினை வெளிப்படுத்துவதற்றும் அவர்களுடைய கருத்துக்கள் கேட்கப்படுவதற்குமான உரிமையினைக் கொண்டுள்ளார்கள்.

ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச சிறுவர்களுக்கான அவசர நிதியம் (UNICEF) இனால் வரைவிலக்கணப்படுத்தப்படுவதற்கு அமைய ‘சிறுவர் உரிமைகளானவை பிள்ளையொன்று உயிர்வாழ, வளர, பங்குபெற, மற்றும் அவர்களுடைய திறனை விருத்தி செய்ய தேவையானவற்றின் மீது தங்கியுள்ளது.

இனம், பால் அல்லது சமயம் என்பவற்றிற்குப் புறம்பாக ஒவ்வொரு பிள்ளைக்கும் சமத்துவமாக அவை பிரயோகிக்கப்படுகின்றன.[4] சிறுவர்களுக்கான உரிமைகளினை சிறப்பான வழியில் குறித்துரைப்பதனை அங்கீகரிக்கும் வகையில், ஐக்கிய நாடுகள் சபையினால் சிறுவர் உரிமைகளுக்கான சமவாயம் 1989 இல் ஆக்கப்பட்டது.

**உங்களுக்குத் தெரியுமா?**

- ➢ இலங்கையானது **சிறுவர் உரிமைகளுக்கான சமவாயத்தில்** (CRC) 26 ஜனவரி 1990 இல் கையெழுத்திட்டதுடன் அதனை 12 யூலை 1991 அன்று ஏற்று அங்கீகரித்தது. CRC இன் தொடர்ச்சியாக இலங்கை அரசானது 1992 இல் சிறுவர் பட்டயத்தினை உருவாக்கியது (மூலம் : மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு)*
- ➢ இலங்கையின் 1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்பானது பெண்கள், சிறுவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் ஆகியோரின் மேம்பாட்டிற்கான விசேட ஏற்பாடுகளினைக் கொண்டுள்ளது **(அரசியலமைப்பின் உறுப்புரை 12 (4) )**

[4] https://www.unicef.org.nz/child-rights

* Refer chapter number 4



ஒரு நிமிடம் தாமதியுங்கள்!

சிறுவர் என்றால் யாரென எனக்குச் சொல்ல முடியுமா?

ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகள் சமவாயமானது சிறுவர் என்பவரை **'18 வயதிற்குக் கீழ்ப்பட்ட மனிதர்'** என வரைவிலக்கணப்படுத்துகின்றது.

**CRC இனுடைய வழிகாட்டுதல் கோட்பாடுகள் என்பதால் கருதப்படுவது யாது என அறிய நீர் விரும்புகின்றீரா?**

நான் உமக்கு விளங்கப்படுத்துகின்றேன்.

## 1.2 CRC இனுடைய வழிகாட்டிக் கோட்பாடுகள்[5]

- **பாரபட்சம் காட்டாமை தொடர்பான தத்துவம் (உறுப்புரை 2)**

  *"சிறுவர்களுடைய இனம், மதம் அல்லது ஆற்றல்கள் என்பதற்கும்; அவர்கள் என்ன நினைக்கின்றார்கள் அல்லது தெரிவிக்கின்றார்கள், எந்த வகையான குடும்பத்திலிருந்து வருகின்றார்கள் என்பதற்கும் புறம்பாக அனைத்துச் சிறுவர்களுக்கும் சமவாயமானது பிரயோகிக்கப்படுகின்றது. சிறுவர்கள் எங்கு வசிக்கின்றனர், என்ன மொழியினைப் பேசுகின்றனர், அவர்களுடைய பெற்றோர் என்ன செய்கின்றார்கள், அவர்கள் பெண்களா அல்லது ஆண்களா, அவர்களுடைய கலாசாரம் என்ன, அவர்களுக்கு மாற்றுத்திறனுண்டா அல்லது அவர்கள் செல்வந்தர்களா அல்லது வறியவர்களா என்பது முக்கியமல்ல. எந்தவொரு அடிப்படையிலும் சிறுவர்களெவரும் நியாயமற்ற முறையில் நடாத்தப்படக் கூடாது."*

எந்த வகையான பாகுபாடுமின்றி அனைத்துச் சிறுவர்களும் ஒரேவிதமான உரிமைகளுக்கு உரித்துடையவர்கள் என்பதனை இக் கோட்பாடு உத்தரவாதப்படுத்துகின்றது. தனிப்பட்ட சிறுவர்கள், சிறுவர் குழுக்கள், மற்றும் பொதுவாக சிறுவர்கள் ஆகியோர் தொடர்பில் அனைத்து விதமான பாரபட்சங்களினையும் நீக்குவதனை CRC ஆனது பிரதான நோக்கமாக கொண்டுள்ளது. இருப்பினும், விசேட கவனிப்பு மற்றும் பாதுகாப்பு என்பன தேவைப்படுகின்றவர்களான மாற்றுத்திறனாளி பிள்ளைகள் போன்றவர்களுக்கு விசேட வசதிகள் வழங்குதல் போன்ற செயற்பாடுகள் பாரபட்சமான நடாத்துகையாகக் கருதப்படுவதில்லை. மேலும் வறிய பிள்ளைக்கு நிதியுதவி அல்லது புலமைப்பரிசில் வழங்குதலென்பதும் பாரபட்சமெனக் கருதப்படுவதில்லை.

**உதாரணம்:** பிள்ளையொருவருக்கு அவன் அல்லது அவளின் இனம், பால், சாதி அல்லது குடும்பத்தின் பொருளாதார நிலை என்பவற்றின் காரணமாக பாடசாலையொன்றில் அனுமதி மறுக்கப்படுதல் பாரபட்சமாக அமையும்.

- **பிள்ளையின் அதியுயர் நலன் (உறுப்புரை 3)**

  *"அவர்களினைப் பாதிக்கின்றதான முடிவுகள் எடுக்கப்படுகின்ற போது பிள்ளையின் அதியுயர் நலனிற்கு முதன்மையளிக்க வேண்டும். பிள்ளைகளுக்கு சிறந்ததெதுவோ அதனையே வயதுவந்தோர் அனைவரும் செய்ய வேண்டும். வயதுவந்தோர் தீர்மானம் எடுக்கின்ற போது, அத்தீர்மானங்கள் பிள்ளைகளை*

---

[5] https://europa.eu/capacity4dev/sites/default/files/learning/Child-rights/2.7.html

*எவ்வாறு பாதிக்கும் என்பது தொடர்பில் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இது குறிப்பாக பாதீடு, கொள்கை மற்றும் சட்டமியற்றுதல் என்பவற்றுக்கு விசேடமாக பிரயோகமாகும்.'*

சிறுவர்களுடன் தொடர்புபடுகின்ற அனைத்து செயல்களிலும் தனிப்பட்ட பிள்ளையின் அல்லது சிறுவர் குழுவின் அதியுயர் நலனானது முதன்மை நோக்கமாக கவனத்திலெடுக்கப்பட வேண்டும்.

**உதாரணம்:** கட்டுக்காவல் வழக்குகளினைத் தீர்மானிக்கையில் நீதிமன்றமானது 'பிள்ளையின் சிறந்த நலன்' தொடர்பான கோட்பாட்டினைப் பின்பற்றும். கட்டுக்காவலினை வழங்குகையில், பிள்ளையின் உடல் மற்றும் உள ஆரோக்கியம் மற்றும் மகிழ்ச்சியினை உறுதிப்படுத்தக் கூடிய பெற்றோரிடமே நீதிமன்றினால் தீர்மானிக்கப்பட்டு கட்டுக்காவல் வழங்கப்படும்.

- **உயிர்வாழ்தல் மற்றும் விருத்தி (உறுப்புரை 6)**

"சிறுவர்களுக்கு உயிர்வாழும் உரிமை உண்டு. சிறுவர்கள் உயிர்வாழ்கின்றார்கள் மற்றும் ஆரோக்கியமான முறையில் விருத்தியடைகின்றனா என்பதனை அரசாங்கங்கள் உறுதிப்படுத்த வேண்டும்."

தம்மால் இயன்றவரையில் அவர்களின் உயிர்வாழுமை மற்றும் விருத்தி (அவர்களின் முழுத்திறனையும் விருத்தி செய்வதாகப் பரவலாக பொருள்கோடல் செய்யப்படுகின்றதான) என்பவற்றினை உறுதிப்படுத்துவதற்கான பொறுப்புடமை அரசுக்குண்டு.

- **பிள்ளைகளின் பங்குபெறுவதற்கான உரிமை (உறுப்புரை 12)**

*"சிறுவர்களினை பாதிக்கக் கூடியதான தீர்மானங்களினை வயது வந்தோர் எடுக்கின்ற போது, சிறுவர்கள் என்ன நடக்க வேண்டும் என்று நினைக்கின்றார்களோ அதனைச் சொல்வதற்கும் அவர்களுடைய கருத்துக்களினைக் கவனத்திலெடுத்துக் கொள்ளப்படுவதற்கும் உரிமையுடையவர்கள். என்ன செய்ய வேண்டும் என பெற்றோருக்குச் சொல்லுவதற்கான உரிமை தற்போது சிறுவர்களுக்கு உண்டென்பது இதனுடைய அர்த்தமில்லை."*

இவ் உறுப்புரையானது பிள்ளையின் கருத்துக்களுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்ற கொள்கையினை ஆதரிக்கின்றது.

மேலும் **கருத்துச் சுதந்திரம் தொடர்பான உறுப்புரை 13** ஆனது பின்வருமாறு வலியுறுத்துகின்றது; தகவல்களைப் பெறவும் பகிர்ந்து கொள்ளவும் சிறுவர்களுக்கு உரிமை உண்டு. கருத்துச் சுதந்திரமானது அவர்கள் விரும்புகின்ற எந்நவொரு விதத்திலும், கதைத்தல், வரைதல் அல்லது எழுதுதல் உள்ளடங்கலாக அவர்கள் தேர்ந்தெடுக்கும் எந்தவொரு வடிவத்திலும் தகவலினை வெளியிடுவதற்கான உரிமையினையும் உள்ளடக்குகின்றது.

## 1.3 சிறுவர்களின் உரிமைகள்

**உறுப்புரை 4 (பாதுகாப்பு உரிமைகள்)**

சிறுவர்களின் உரிமைகள் மதிப்பளிக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டு நிறைவேற்றப்படுகின்றன என்பதனை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான அனைத்து சாத்தியமான நடவடிக்கைகளினையும் எடுக்க வேண்டியது அரசுகளினுடைய பொறுப்பாகும்.

**உறுப்புரை 6 (உயிர்வாழுதல் மற்றும் விருத்தி)**

சிறுவர்களுக்கு உயிர்வாழும் உரிமை உண்டு. சிறுவர்கள் உயிர்வாழ்கின்றார்கள் மற்றும் ஆரோக்கியமான வகையில் விருத்தியடைகின்றார்கள் என்பதனை அரசு உறுதிப்படுத்த வேண்டும்.

**உறுப்புரை 9 (பெற்றோரிடமிருந்தான பிரிவு)**

அவர்களின் சிறந்த நலன்களுக்கு பாதகம் ஏற்படாத வரையில் சிறுவர்களுக்கு அவர்களுடைய பெற்றோருடன் வாழ்வதற்கான உரிமை உண்டு.

**உறுப்புரை 11 (ஆட்கடத்தல்)**

சிறுவர்கள் அவர்களின் சொந்த நாட்டிலிருந்து சட்ட விரோதமான முறையில் வெளியில் எடுத்துச் செல்லப்படுவதனை தடுப்பதற்கு அரசுகள் அனைத்து நடவடிக்கைகளினையும் எடுக்க வேண்டும். இவ் உறுப்புரையானது விசேடமான பெற்றோரினால் செய்யப்படும் ஆட்கடத்தல்கள் தொடர்பில் கவனஞ் செலுத்துகின்றது.

**உறுப்புரை 16 (அந்தரங்கத்திற்கான உரிமை)**

சிறுவர்களுக்கு தனிப்பட்ட விடயங்களில் அந்தரக்கத்தன்மை பேணப்படுவதற்கான உரிமை உண்டு. அவர்களுடைய வாழ்க்கை முறை, அவர்களுடைய நற்பெயர், அவர்களுடைய குடும்பம் மற்றும் அவர்களுடைய இல்லங்கள் என்பன தாக்குதலிலிருந்து பாதுகாக்கப்படுவதனை சட்டம் உறுதிப்படுத்த வேண்டும்.

**உறுப்புரை 19 ( அனைத்து வகையான வன்முறைகளிலிருந்தும் பாதுகாப்பினை பெறுவதற்கான உரிமை)**

சிறுவர்கள் ஊறுபடுத்தப்படுவதிலிருந்தும் உடலியல் பாதிக்கப்படுவதிலிருந்து அல்லது உளரீதியில் தவறாக நடாத்தப்படுவதிலிருந்தும் பாதுகாக்கப்படுவதற்கு உரிமை உடையவர்கள்.

**உறுப்புரை 27 (போதுமான வாழ்க்கைத்தரம்)**

அவர்களுடைய உடலியல் மற்றும் உள ரீதியிலான தேவைகளினைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான வாழ்க்கைத்தரத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு சிறுவர்களுக்கு உரிமை உண்டு.

**உறுப்புரை 28 (கல்வி கற்பதற்கான உரிமை)**

அனைத்துச் சிறுவர்களுக்கும் ஆரம்பக் கல்வியினைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமை உண்டு. செல்வந்த நாடுகளானவை வறிய நாடுகளுக்கு இவ் உரிமையினை அடைவதற்கு உதவி செய்ய வேண்டும்.

**உறுப்புரை 29 (கல்விக் குறிக்கோள்கள்)**

சிறுவர்களின் கல்வியானது ஒவ்வொரு பிள்ளையினதும் ஆளுமை, திறன்கள் மற்றும் ஆற்றல்கள் என்பவற்றை முழுவதுமாக விருத்தி செய்யும் வகையில் அமைய வேண்டும்.

**உறுப்புரை 31 (ஓய்வு, விளையாட்டு மற்றும் கலாசாரம்)**

சிறுவர்களுக்கு ஓய்வெடுக்கவும், விளையாடவும் மற்றும் பல்வேறுபட்ட கலாசார, கலை மற்றும் பிற பொழுதுபோக்கு நடவடிக்கைகளில் ஈடுபடவும் உரிமை உண்டு.

**உறுப்புரை 32 (சிறுவர் ஊழியம்)**

ஆபத்தான அல்லது அவர்களின் உடல் நலத்திற்கு தீங்கு விளைவிக்கும் அல்லது அவர்களின் கல்வியைப் பாதிக்கும் வேலைகளில் சிறுவர்கள் ஈடுபடுவத்தப்படுவதிலிருந்து சிறுவர்களை அரசாங்கம் பாதுகாக்க வேண்டும்.

**உறுப்புரை 34 (பாலியல் சுரண்டல்)**

அனைத்துவிதமான பாலியல் சுரண்டல் மற்றும் துஷ்பிரயோகம் என்பவற்றிலிருந்து சிறுவர்களினை அரசாங்கமானது பாதுகாக்க வேண்டும்.

**உறுப்புரை 35 (கடத்தல், விற்பனை மற்றும் இழிதொழில் வாணிபம்)**

பிள்ளைகள் கடத்தப்படவோ, விற்கப்படவோ அல்லது இழிதொழில் வாணிபத்தினுள் உள்ளடக்கப்படவோ இல்லை என்பதனை உறுதிப்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளினையும் அரசு மேற்கொள்ள வேண்டும். சமவாயத்தின் இவ் ஏற்பாடானது சிறுவர்களினை விற்பனை செய்தல், சிறுவர் விபச்சாரம் மற்றும் சிறுவர் ஆபாசப்படமெடுத்தல் தொடர்பான விருப்புரிமைப் பின்னேட்டினால் மேலும் விரிவாக்கப்படுகின்றது.

**உறுப்புரை 36 (வேறு விதமான சுரண்டல்கள்)**

சிறுவர்களினை சுரண்டுகின்ற அல்லது அவர்களின் நலன்கள் அல்லது விருத்தியினை பாதிப்புக்குள்ளாக்குகின்ற அனைத்து விதமான நடவடிக்கைகளிலிருந்தும் சிறுவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும்

**உறுப்புரை 37 (தடுப்புக்காவல் மற்றும் தண்டனை)**

சிறுவர்களினை கொடூரமாக அல்லது தீங்கு விளைவிக்கும் வகையில் தண்டிப்பதற்கு யாரும் அனுமதிக்கப்படுவதில்லை. சட்டத்தினை மீறுகின்ற சிறுவர்கள் கொடூரமான வகையில் நடாத்தப்படக் கூடாது.

**உறுப்புரை 39 (பாதிப்படைந்த சிறுவர்களுக்கான புனர்வாழ்வு)**

புறக்கணிக்கப்பட்ட, துஷ்பிரயோகத்திற்குள்ளான அல்லது சுரண்டப்பட்ட சிறுவர்களுக்கு அவர்கள் உடல் ரீதியாகவும் உளவியல் ரீதியாவும் மீண்டும் சமூகத்தினுள் ஒன்றிணைக்கப்படும் வகையில் சிறப்பு உதவிகள் அளிக்கப்பட வேண்டும்.

**உறுப்புரை 40 (சிறுவர் நீதி)**

சட்டத்தினை மீறியதற்காகக் குற்றஞ்சாட்டப்படும் சிறுவர்களுக்கு அவர்களின் உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் வகையில் சட்ட உதவி மற்றும் நீதிமன்ற முறைமையில் நியாயமான நடாத்துகை என்பவற்றினைப் பெறுவதற்கான உரிமை உண்டு.

**உறுப்புரை 42 (உரிமைகள் தொடர்பான அறிவு)**

சிறுவர்கள் மற்றும் வயதுவந்தோருக்கு இச் சமவாயத்தினை அரசு தெரியப்படுத்த வேண்டும்.



'சிறுவர் இழி தொழில் வாணிபம்' தொடர்பில் கலந்துரையாடுவதற்கு முன்னர் சிறுவர் உரிமைகள் என்பதனை விளங்கிக் கொள்வது முக்கியமானதாகும்.

இக் கற்கையின் முடிவில் இக் குற்றத்தினால் சிறுவர் உரிமைகள் எவ்வாறு பாதிப்படைகின்றன என்பதனை எங்களால் விளங்கிக் கொள்ளக் கூடியதாயிருக்கும்.

ஆம்! நீங்கள் சொல்வது மிகச் சரியானது. சிறுவர்கள் உள்ளடங்கலாக அனைவரும் சிறுவர் உரிமைகள் தொடர்பில் தெளிவுடன் இருக்க வேண்டும். தற்போது, எங்களுடைய தலைப்பான 'சிறுவர் இழிதொழில் வாணிபம்' (Child Trafficking) என்பதற்கு நேரடியாகச் செல்வதற்கான நேரம் வந்து கிட்டியுள்ளது.

## 1.4 முடிவுரை

ஆகவே சிறுவர் இழிதொழில் வாணிபமானது சிறுவர்களுக்கெதிரான குற்றம் என்பதுடன் அது அவர்களின் உரிமைகளினை மீறுவதாகவும் அமைகின்றது. இலங்கையும் இத் தீவிரப் பிரச்சினையினால் பாதிக்கப்பட்டுள்ளது.




**<u>உங்களுக்குத் தெரியுமா?</u>**

**ஐக்கிய நாடுகளின் போதைப் பொருள் மற்றும் குற்றத்திற்கான அலுவலகத்தினால் (UNODC) இனால் 2016 இல் வெளியிடப்பட்ட இழி தொழில் வாணிபம் பற்றிய உலகளாவிய அறிக்கையானது** 2014 இல் கண்டறியப்பட்டதற்கமைவாக உலகளாவிய ரீதியில் மனித இழிதொழில் வாணிபத்தினால் பாதிக்கப்பட்டோரில் 28 சதவீதமானோர் சிறுவர்கள் என வெளிப்படுத்துகின்றது. (பக்கம் 6 இல்)

அறிக்கையிடப்பட்டதற்கு அமைவாக, பாலியல் சுரண்டுதல், கட்டாய ஊழியம், கட்டாயத் திருமணம், சட்டமுரணான மகவேற்பு அல்லது பிச்சையெடுக்க வைத்தல் ஆகிய காரணங்கள் உள்ளடங்கலாக பல்வேறுபட்ட காரணங்களுக்காக சிறுவர்கள் இழிதொழில் வாணிபத்திற்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

### மேலதிக வாசிப்பிற்கு

- 1989 ஆம் ஆண்டின் சிறுவர் உரிமைகள் சமவாயம்
- 1948 ஆம் ஆண்டின் அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம்
- பெண்கள் மற்றும் சிறுமியரை பாதுகாப்பதற்கான இலங்கையின் சட்ட வழிகாட்டி, சிறுவர் மேம்பாடு மற்றும் மகளிர் விவகார அமைச்சு, 2012
- தொழில், பாலியல் மற்றும் பிற சுரண்டல்களுக்கான சிறுவர் இழிதொழில் வாணிபத்திற்கு எதிராக போராடுவதற்கான பயிற்றுனர் பயிற்சிக் கையேடுஇ சர்வதேச தொழிலாளர் தாபனம் (ILO மற்றும் UNICEF), 2009, பின்வரும் வலைத்தளத்தில் பெற முடியும்; https://www.unicef.org/protection/Facilitator_guide.pdf



**<u>கற்றற் கருவிகள்</u>**

**பயிற்சி**

**வழங்கப்படும் முறை**[6]:

1. **நேருக்கு நேரான விரிவுரைகள் - (ஒன்றரை மணித்தியாலங்கள்)**

   தத்துவார்த்தப் பிரிவுகள், சர்வதேச ஒப்பந்தச் சட்டம் மற்றும் செயல் வடிவப் பயிற்சிகள் என்பவற்றுக்கிடையில் இலகுவான பரிமாற்றமானது உறுதிப்படுத்த வேண்டியது முக்கியமாகும். கற்கையலகின் நோக்கங்கள் முதலில் விளங்கப்படுத்தப்படுதல் வேண்டும். அறிமுகப்பகுதியானது சிறுவர் இழிதொழில் வாணிபமானது மனிதவுரிமைகள் மற்றும் சிறுவர் உரிமைகளினதும் மீறுகை என்பதனை வலுவாக வலியுறுத்துகின்றது. அதுவொரு குற்றவியற் குற்றம் என்பதுடன் சட்டத்தினால் தண்டிக்கப்படவும் கூடியது.

---

[6] இப் பரிந்துரைக்கப்பட்ட முறையானது தொழில், பாலியல் மற்றும் வேறு வகையான சுரண்டல்கள் என்பவற்றிற்கெதிராக போராடுவதற்கான பயிற்சிக் கையேட்டிலிருந்து பெறப்படுகின்றதுஇ வளவாளர்களின் வழிகாட்டி, ILO and UNICEF> 2009

**2. காட்சிப்படுத்தல் ஏதுக்கள்**

பவர் பொயின்ட் (Power Point) விளக்கக்காட்சிகள் / பதாதைகள் / வீடியோ அல்லது வேறேதேனும் பொருத்தமான காட்சிப்படுத்தல் முறைகள் உள்ளடங்கலாக காட்சிப்படுத்தல் உதவிகள் பயன்படுத்தப்படலாம்.

**3. கலந்துரையாடல் முறை**

நெறிவுறுத்தல்களுக்கு ஊடாடும் முறை பயன்படுத்தப்பட வேண்டும். கோட்பாடுகள் மற்றும் தத்துவங்களினைத் தெளிவுபடுத்துவதற்கு உதாரணங்கள் வழங்கப்பட வேண்டும். தொழிநுட்ப ரீதியான சொற்கள் பொருத்தமான உதாரணங்களுடன் இலகுவான மொழிநடையில் விளங்கப்படுத்தப்படுதல் வேண்டும். இக் கற்கையலகின் தொழிநுட்பச் சொற்கள் வரைவிலக்கணப்படுத்தபட்டு கற்கையின் உள்ளடக்கத்தினுள் அல்லது அடிக்குறிப்புக்களினுள் எளிமையாக விளங்கப்படுத்தப்பட்டுள்ளன.

**4. கேள்வி மற்றும் பதில்**

பங்கேற்பாளர்கள் கேள்விகள் கேட்டு தெளிவினைப் பெறுவதற்கான வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்.

**5. விசேட அறிவுறுத்தல்கள்**

இக் கற்கையலகின் கற்கை நோக்கங்கள் மற்றும் அடைய எதிர்பார்க்கப்படுகின்ற பயன் விளைவுகள் என்பன பங்கேற்பாளர்களுக்கு தெரிவிக்கப்படுதல் வேண்டும். அத்துடன் பங்கேற்பாளர்களுக்கு கற்றல் விடயங்களான மனிதவுரிமைகள் மற்றும் சிறுவர் உரிமை தொடர்பில் விரிவுரைக்கு முன்னர் ஆழமான அறிவு காணப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படவில்லை என்பதும் கவனத்திலெடுக்கப்பட வேண்டும். பயிற்றுவிப்பாளர் குழு அங்கத்தவர்களின் கல்விப் பின்னணி மற்றும் விளங்கிக் கொள்ளும் ஆற்றல் என்பவற்றினைக் கவனத்திலெடுத்துப் பொருத்தமான கற்றல் ஏதுமுறைமையினைப் பயன்படுத்தலாம்.

## மதிப்பீட்டிற்கான செயற்றிட்டம்
## முதலாவது கற்கை அலகின் முடிவில்

---

1. **முன்னாயத்தம்**

பயிற்சிக் கையேட்டின் தார்ப்பரியத்தினைப் புரிந்து கொள்வதற்காக பங்கேற்பாளர்களினை அவர்களை பற்றியும் அவர்களது பணி பற்றியும் குறிப்பாக அவர்கள் சிறுவர் இழிதொழில் வாணிபத்துடன் தொடர்புபடும் விடயத்தில் பணி புரிந்துள்ளார்களா அல்லது பணிபுரிகின்றார்களா என்பது பற்றியும் விபரிக்குமாறு கேட்பது பொருத்தமானதாக அமையும். **(கால அளவு - 10 நிமிடங்கள்)**

2. **முறைமை**

ஐந்து அல்லது அதற்குக் குறைந்த எண்ணிக்கையினை உள்ளடக்கும் வகையில் பங்கேற்பாளர்களினை குழுக்களாகப் பிரித்துக் கொள்ளவும். 'சிறுவர் உரிமைகளின் மிக மோசமான மீறுகையொன்றாக ஏன் சிறுவர் இழிதொழில் வாணிபம் கருதப்படுகின்றது' என்ற தலைப்பில் சிறு கட்டுரையொன்றை வரையுமாறு பங்கேற்பாளர்களைக் கோருக. **(கால அளவு – 10 நிமிடங்கள்)**

**3. மதிப்பீடு**

குழுக்கள் தம் கண்டறிதல்களையும் கருத்துக்களினையும் வகுப்பறையில் சமர்ப்பணம் செய்ய வேண்டும். பயிற்றுவிப்பாளர் மற்றும் ஏனைய பங்கேற்பாளர்கள் அச் சமர்பணங்கள் தொடர்பில் கருத்துக்களை தெரிவிக்க முடியும். **(கால அளவு – 10 நிமிடங்கள்)**

**4. செயற்பாட்டினுடைய நோக்கம் (பங்கேற்பாளர்களுக்கு)**

இப் பயிற்சியானது பங்கேற்பாளர்கள் சிறுவர் இழிதொழில் வாணிபத்தின் தீவிரத்தன்மையினை விளங்கிக் கொள்வதற்கும் அதனைச் சிறுவர் உரிமை மீறுதலொன்றாகத் தொடர்பு படுத்துவதற்கும் மற்றும் சட்டத்தினை அமுலாக்கும் அதிகாரிகளின் கடமையினையும் அரசானது சிறுவர் இழிதொழில் வாணிபத்திற்கு எதிராக செயற்பட வேண்டியதனையும் விளங்கிக் கொள்வதற்கும் உதவி புரியும்.

**5. செயற்பாட்டினுடைய நோக்கம் (பயிற்றுவிப்பாளருக்கு)**

இது தனிப்பட்ட தேவைகளுக்கமைய பயிற்சியினை மாற்றியமைப்பதற்கு, பங்கெடுப்பவர்களின் புரிந்துணர்வு நிலை மற்றும் சம்பந்தப்பட்ட துறையில் குழு உறுப்பினர்களின் அனுபவம் ஆகியவற்றை அடையாளங் காண பயிற்றுவிப்பாளர்களுக்கு உதவும்.

**6. கவனிக்க வேண்டிய விடயங்கள்**

செயற்பாட்டின் போது ஆவணங்கள் மற்றும் அவர்களின் குறிப்புக்களினை வாசிப்பதற்கும் கேள்விகள் கேட்பதற்கும் பங்கேற்பாளார்கள் அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

# இரண்டாவது கற்கையலகு

## சிறுவர் இழிதொழில் வாணிபத்தினையும் அதனுடைய அடிப்படைக் காரணங்களையும் விளங்கிக் கொள்ளுதல்

| | | |
|---|---|---|
| | **விரிவுரைகளின் கால அளவு மணித்தியாலங்கள்** | 4 |
| | **மதிப்பீட்டு முறைகள்** | வகுப்பறைக் கலந்துரையாடல் |
| | **கற்றலின் பயன்விளைவுகள்** | கற்கையின் முடிவில் பங்கேற்பாளர்களுக்குப் பின்வருவன இயலுமானதாயிருக்கும்:<br>➢ நபர்கள் தொடர்பான இழிதொழில் வாணிபஞ் செய்தலினைத் தடுப்பதற்கும் அடக்குவதற்கும் மற்றும் தண்டிப்பதற்குமான ஐக்கிய நாடுகள் சபையின் பின்னேட்டில் வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளதற்கு அமைய இழிதொழில் வாணிபஞ் செய்தற் குற்றத்தின் அடிப்படை அம்சங்களினை விளங்கிக் கொள்ளுதல்<br>➢ இழிதொழில் வாணிபஞ் செய்தற் குற்றம் மற்றும் ஏனைய குற்றங்களான கடத்தல் மற்றும் சட்ட விரோதக் குடியேற்றம் ஆகியவற்றுக்கிடையிலான ஒற்றுமைகள் மற்றும் வேற்றுமைகளினை அடையாளங் காணங் கூடியதாக இருத்தல்.<br>➢ குறிப்பாக இலங்கையில் சிறுவர் இழிதொழில் வாணிபஞ் செய்தலுக்கான மூல காரணங்களின் சிக்கல்களைக் கண்டறித்து விளங்கிக் கொள்ளுதல். |

### அ. சிறுவர் இழிதொழில் வாணிபஞ் செய்தலினை விளங்கிக் கொள்ளுதல்


இழிதொழில் வாணிபஞ் செய்தற் குற்றத்திற்கும் ஏனைய குற்றங்களுக்குமிடையிலான ஒற்றுமைகள் மற்றும் வேற்றுமைகளினைக் கண்டறிதல்

## 2.1 இழி தொழில் வாணிபஞ் செய்தல்

இழி தொழில் வாணிபஞ் செய்தலுக்கான விரிவான சர்வதேச வரைவிலக்கணமானது ஐக்கிய நாடுகள் சபையின் மனித இழி தொழில் வாணிபஞ் செய்தலினை தடுத்தல், ஒடுக்குதல் மற்றும் தண்டித்தலுக்கான பின்னேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. (பலேர்மோ பின்னேடு)

| மனித இழி தொழில் வாணிபஞ் செய்தலினை பலேர்மோ பின்னேட்டின் உறுப்புரை 3 (அ) ஆனது பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்துகின்றது: | |
|---|---|
| **செயல்** | • ஆட்சேர்ப்பு, போக்குவரத்து, பரிமாற்றம் மற்றும் ஆட்களுக்கு அடைக்கலம் கொடுத்தல் அல்லது ஆட்களைப் பெற்றுக் கொள்ளுதல், |
| **வழிமுறைகள்** | பின்வரும் வழிமுறைகள் காணப்படுகின்றன:<br>• பயமுறுத்தல் அல்லது பலவந்தத்தினை பயன்படுத்தல் அல்லது வேறு ஏதேனும் வகைகளிலான கட்டாயப்படுத்தல்,<br>• கடத்தல்,<br>• மோசடி,<br>• ஏமாற்றதல்<br>• அதிகார துஷ்பிரயோகம் அல்லது இலகுவாகப் பாதிப்படையக் கூடிய நிலை அல்லது<br>• நபரொருவர் மீது கட்டுப்பாட்டினைக் கொண்டுள்ள பிறிதொரு நபரின் சம்மதத்தினைப் பெறுவதற்காக கொடுப்பனவுகளை அல்லது நன்மைகளை வழங்குதல் அல்லது பெற்றுக் கொள்ளல், |
| **நோக்கம்** | துஷ்பிரயோக நோக்கத்திற்காக செய்யப்படுதல். |
| **துஷ்பிரயோகம்** | துஷ்பிரயோகம் என்பது ஆகக் குறைந்தளவிற்கு,<br>• பிறரினை விபச்சார சுரண்டுதலுக்குள்ளாக்குதல் அல்லது வேறு விதமான பாலியல் சுரண்டுதல்கள்,<br>• கட்டாய ஊழியம் அல்லது சேவைகள்<br>• அடிமைத்தனம் அல்லது அடிமைத்தனத்திற்கு ஒப்பான செயற்பாடுகள்<br>• சேவகம் அல்லது<br>• உடலுறுப்புக்களினை அகற்றுதல். |

- மேற்கூறப்பட்ட வரைவிலக்கணத்தில் பயன்படுத்தப்பட்ட முறைகளில் ஏதேனுமொன்றின் ஊடாக செய்யப்படுகையில் எண்ணத்துடனான சுரண்டுதலுக்கு மனித இழி தொழில் வாணிபஞ் செய்தலினால் பாதிக்கப்படுபவரின் **சம்மதம்** காணப்பட்டதென்பது **தேவையற்றது**.
- மேற்கூறப்பட்ட வரைவிலக்கணத்திலுள்ள வழி முறைகளுள் உள்ளடக்கப்படாத ஏதேனும் முறைகளிலான சுரண்டுதலுக்கான நோக்கத்திற்காக பிள்ளையினை ஆட்சேர்த்தல், போக்குவரத்துச் செய்தல், இடம்மாற்றுதல் மற்றும் அடைக்கலம் கொடுத்தலும் பெற்றுக் கொள்ளலும் ஆகிய நடவடிக்கைகள் மனித இழிதொழில் வாணிபஞ் செய்தல் என்பதனையே குறிக்கும்.
- **'18 வயதிற்குக் குறைந்த'** எந்வொரு நபரும் **'சிறுவர்'** என அழைக்கப்படுவர்.





**உங்களுக்குத் தெரியுமா?**

தண்டனைச் சட்டக் கோவையின் பிரிவு 360 ஆ இற்கமைவாக இழிதொழில் வாணிபமானது இலங்கையில் தண்டனைக்குரிய குற்றமொன்றாகும்





**செயற்பாடு**

3 அல்லது 4 பேர் கொண்ட குழுக்களாகப் பிரிந்து கொள்ளுங்கள்.

மனித இழி தொழில் வாணிபம் என்பதற்கான தொழிற்படும் வரைவிலக்கணமொன்றை 50 சொற்களுக்குள் இணங்கி உருவாக்குக.

## 2.2 கடத்தல்

**கடத்தல் என்பதும் மனி இழி தொழில் வாணிபம் என்பதும் அடிக்கடி குழப்பிக் கொள்ளப்படுகின்றன.**

"**மனித இழிதொழில் வாணிகமென்பது கடத்தலல்ல!**"

| | |
|---|---|
| 2000 ஆம் ஆண்டின் நாடு கடந்து ஒழுங்கமைக்கப்படுகின்ற குற்றங்களுக்கு எதிரான ஐக்கிய நாடுகளின் சமவாயத்திற்கு துணை வலுச் சேர்க்கின்ற நிலம், கடல் மற்றும் வான் மார்க்கங்களின் ஊடாக புலம்பெயர்பவர்களினைக் கடத்துதல் செய்தலுக்கு எதிரான பின்னேட்டினுடைய உறுப்புரை 3 (அ) இற்கமைய புலம்பெயர்பவர்களினைக் கடத்துதல் என்பது பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்தப்படுகின்றது: | |
| **செயல்** | • ஆட்களைப் பெறுதல் |
| **முறைகள்** | • நாடொன்றில் தேசியத்துவம் அல்லது நிரந்தர வாழுமை அற்ற நபரொருவர் சட்ட விரோத வழிமுறைகளின் ஊடாக அரசொன்றினுள் உள்நுழைதல் |
| **நோக்கம்** | • நேரிடையாக அல்லது மறைமுகமான நிதியியல் அல்லது வேறு ஏதேனும் நன்மையினை அனுபவித்தல் |
| **சட்ட முரணான உள்நுழைவு** | பெற்றுக் கொண்ட நாட்டினுடைய சட்ட ரீதியான உழ்நுழைவிற்குத் அவசியமான தேவைப்பாடுகளை பூர்த்தி செய்யாது அந்நாட்டின் எல்லைகளுள் உட்பிரவேசித்தல் |
| **மோசடியான போக்குவரத்து அல்லது அடையாள ஆவணம்** | ஏதேனும் பயண அல்லது அடையாள ஆவணம்,<br>i. அரசின் சார்பாக போக்குவரத்து அல்லது அடையாள ஆவணத்தினை வழங்குவதற்கு சட்ட ரீதியாக அதிகாரமளிக்கப்பட்டுள்ள நபரொருவர் அல்லது முகவரினை தவிர வேறு நபர்களினால் அடிப்படையில் மாற்றப்பட்டுள்ள அல்லது பிழையாக உருவாக்கப்பட்டுள்ள ஆவணம். அல்லது<br>ii. பிறழ்பகர்வு,மோசடி அல்லது வற்புறுத்தல் அல்லது வேறு ஏதேனும் சட்டமுரணான வழிகளில் வழங்கப்பட்ட அல்லது பெறப்பட்ட ஆவணங்கள் அல்லது<br>iii. சட்டரீதியான உடமையாளர் தவிர வேறொருவரினால் பயன்படுத்தப்படல் |

| | |
|---|---|
| **கப்பல் அல்லது கலன்** | போர்க்கப்பலொன்று, கடற்படை அல்லது துணைப்படை போன்ற அரசிற்குச் சொந்தமாக இயக்கப்படும் கப்பல்கள் தவிர இடப்பெயர்ச்சி அல்லாத படகு மற்றும் சீப்பிளேன்கள் உள்ளிட்ட எந்தவொரு நீர் படகு வகைகளும் இதனுள் உள்ளடங்கும். |




| மனித இழிதொழில் வாணிபம் | கடத்தல் |
|---|---|
| **மனித இழி தொழில் வாணிபமென்பது ஆகக் குறைந்தளவிற்கு ஆட்சேர்ப்பு, போக்குவரத்து, பரிமாற்றம், ஆட்களைப் பெற்றுக் கொள்ளல் அல்லது அடைக்கலம் கொடுத்தல் என்பவற்றுடன் தொடர்புபடுகின்ற செயல்முறையாகும்** | பொதுவாக கடத்துதல் என்பது நபர்களினைப் கொண்டு செல்லுதலுடன் மற்றும் செய்தலுடன் தொடர்புபடும் |
| | |
| **மனித இழி தொழில் வாணிபம் என்பது பொதுவாகக் குறைந்த பட்சமான அச்சுறுத்தல், வற்புறுத்தல், ஏமாற்றுதல், அதிகார துஷ்பிரயோகம் செய்தல், பாதிப்பு, மோசடி, அல்லது கடத்தல் என்பவற்றைக் குறிக்கின்றது.** | கடத்தப்படுபவரின் சம்மதத்துடனேயே பொதுவாக கடத்தல் மேற்கொள்ளப்படுகின்றது.   |
| | |
| **இழி தொழில் வாணிபமானது உள்ளக ரீதியில் அல்லது வெளியக ரீதியில் மேற்கொள்ளப்படலாம்.** | கடத்தலானது நாடுகளின் எல்லைகளுக்கிடையில் தொடர்புபடும் |
| | |

| | |
|---|---|
| **ஏமாற்றப்பட்டு அல்லது வேறு ஏதேனும் அவ்வாறான வழிகளைப் பயன்படுத்தி அல்லது சிறுவர் எனின் பெற்றுக் கொண்ட சம்மதமானது பொருத்தமற்றதாக அமையும்.** | அநேகமான சந்தர்ப்பங்களில் கடத்தலானது கடத்தப்படுபவரின் சம்மதத்துடனேயே மேற்கொள்ளப்படுகின்றது. |
| | |
| **இழி தொழில் வாணிபத்திற்குட்பட்ட நபர் அல்லது சிறுவர் பாதிக்கப்பட்டவராக கருதப்படுவதுடன் அரசின் உதவிக்கு உரித்துடையவர்.** | கடத்தப்பட்டவர் சட்டத்தினை மீறியவராகக் கருதப்படுவதுடன் சட்டத்தினால் தண்டிக்கப்படவும் கூடியவாராகக் காணப்படுவார். |
| | |
| **எடுத்துக்காட்டு 1**<br><br>பதினான்கு வயதான 'அ் என்ற சிறுவன் நிலக்கரிச் சுரங்கத்தில் வேலை செய்வதற்கு வற்புறுத்தப்பட்டான். சுரங்க வேலையானது அபாயகரமானதாக கருதப்படுவதுடன் அங்கீகரிக்கப்படுவதுமில்லை. இதுவொரு சுரண்டல் என்பதுடன் நகர்வுடன் சேர்த்துப் பார்க்கின்ற போது இழி தொழில் வாணிபமாகவும் அமைகின்றது.<br><br>அச் சிறுவனானவன் பெற்றோரின் விருப்பமின்றி நாட்டிற்கு வெளியில் எடுத்துச் செல்லப்பட்டிருப்பின் அங்கு ஏமாற்று அல்லது பலவந்தத்திற்கான அம்சமொன்று காணப்படுகின்றது. இது எடுத்துக் காட்டப்பட முடியுமெனின் அச் சிறுவன் இழிதொழில் வாணிபத்திற்குட்பட்டுள்ளான். 'அ' இற்கு வேலை வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக ஆட்சேர்த்தவர் அவனுக்கு சம்பளம் வழங்குவதற்குப் பதிலாக அவனின் குடும்பத்தவரிடம் பணம் பெற்றுக் கொண்டார் என்பது எந்த விதமான வித்தியாசத்தினையும் ஏற்படுத்தாது.[7] | **எடுத்துக்காட்டு 2**<br><br>நாட்டை விட்டு வெளியேறுவதற்கு விருப்பம் கொண்டிருந்த கணேஷ் என்பவன் திருகோணமலையிலுள்ள மாணவனொருவனாவான். அவனுக்கு சுப்பர் மார்க்கெட்டில் விற்பனைச் சிறுவனாக பையனாக மாதம் ரூபா 60 000 இற்கு அவுஸ்திரேலியாவில் தொழில் வாய்ப்பொன்று கொழும்பிலுள்ள பிரயாண முகவரொருவரினால் வழங்கப்பட்டது. விசாவிற்கும் டிக்கெட்டிற்குமாக முற்பணத் தொகையொன்றும் மற்றும் அதற்குச் சமமான தொகையொன்று சென்றடையும் இடத்திலும் செலுத்துமாறு அவன் வேண்டப்பட்டான். ஆவணங்கள் எதுவும் வழங்கப்படவில்லை. திருகோணமலையிலிருந்த முகவர் தான் கணேஷினை கடல் மார்க்கமாக அவுஸ்திரேலியாவிற்கு ரூபா 1 000 000 இற்குக் கடத்திச் செல்வதாகக் கூறினான். அவன் முற்பணமான ரூபா 25 000 இனைச் செலுத்தினான். மொத்தமாக அவன் ரூபா 250 000 இனை முற்பணமாகச் செலுத்துவதற்கு வேண்டப்பட்டான். வேறு 50 பேருடன் இணைத்து சிறு படகொன்றின் மூலம் அவன் ஆழ் கடலுக்கு அனுப்பப்பட்டான். |
| **எவ்வாறாயினும் கடத்தலுக்கும் மனித இழி தொழில் வாணிபத்திற்கும் இடையில் மெல்லிய வித்தியாசமே உண்டு. கடத்தலொன்றாக ஆரம்பிக்கின்ற விடயமொன்று மனித இழி தொழில் வாணிபமாக முடிவடையலாம் என்பதாகும்.** | |



**பயிற்சி 2**

[7] Training Manual to Fight Trafficking in Children for Labour, Sexual and Other Forms of Exploitation – isn't there a reference for this please?

சாரா என்பவள் 'M' என்ற நாட்டில் வசிக்கின்ற 20 வயதான பெண்ணொருத்தியாவாள். அவள் திருமணஞ் செய்யவில்லை என்பதுடன் அவளின் இரு சிறு பிள்ளைகளையும் மரக்கறி வியாபாரம் செய்து காப்பாற்றி வந்தாள். 'M' என்ற நாட்டில் தற்போதைய நிலையினை விட பத்து மடங்கு அதிக வருமானம் ஈட்டக் கூடி ஆயா வேலையினைப் பெற்றுக் கொள்ள முடியும் என கூறிய நண்பியொருத்தி அவளை அணுகினாள். 'M' நாட்டில் புதிய வேலையினை ஆரம்பித்தவுடன் அவள் திருப்பிச் செலுத்துவதற்கு இணங்கி அவளது பயணச் செலவுகள் அனைத்தையும் தானே ஏற்பதாகவும் அவ் நண்பி உத்தரவாதம் அளித்தாள். அவளது மேலதிக வருமானமானது குடும்பத்திற்கு மேலும் பல நன்மைகளை அளிக்கும் என நம்பிய சாரா தன் குழந்தைகளை தாயாரின் பராமரிப்பில் விட்டு விட்டு அவளின் நண்பியுடன் பேருந்தில் பிரயாணத்தினை ஆரம்பித்தாள். சாராவிடம் கடவுச் சீட்டொன்று இல்லாதிருந்ததுடன் அவளது நண்பியானவள் அவளுக்கு நாட்டின் எல்லைகளில் நண்பர்கள் இருப்பதனால் அவளுக்கு கடவுச் சீட்டொன்று தேவையற்றது என கூறினாள்.

ஒரு நாள் முழுவதும் பிரயாணம் செய்த பின்னர் அவளை 'ஆ' நாட்டிற்கு அழைத்துச் செல்வான் எனக் கூறுகின்ற படகோட்டியொருவரின் பராமரிப்பின் கீழ் அவளை நண்பி கையளித்தாள். சாராவின் போக்குவரத்திற்காக அவளது நண்பியே பணம் செலுத்த வேண்டும் என அவள் நினைத்துக் கொண்டிருக்கையில் அவளது நண்பிக்கு அந்நபர் ஒரு தொகையான விலைச் சீட்டுக்களினை கொடுப்பதனை கண்ட சாரா ஆச்சரியமடைந்தாள். அவளுக்குத் தொடர்பில்லாத வணிக ஒப்பந்தமொன்றில் அவளது நண்பி பணியாற்றியிருக்கலாம் என ஊகித்து அது பற்றி சாரா எதுவும் கேட்கவில்லை.

படகோட்டி நட்பாக இருந்ததுடன் மற்றைய நாட்டினுள் உள்நுழைவதில் பிரச்சினைகள் ஏற்படுவதனை தவிர்க்கும் பொருட்டு சாரா படகின் மூடிய அறைகளில் பயணிக்க வேண்டும் என அவர் கேட்டுக் கொள்கின்றார். அவ்வறையானது மிகவும் இருட்டாகவும் வெப்பமாகவும் வசதிக் குறைவானதாகவும் இருந்ததுடன் சாராவிடம் கடவுச் சீட்டு இல்லாததனால் அவனுடைய ஆதரவினையும் நல்லெண்ணத்தினையுமே நம்ப வேண்டும் என்றெண்ணி சாரா அதற்குச் சம்மதித்தாள். ஒரு நாள் முழுவதும் பயணித்ததன் பின்னர் அவன் தனிமைப்படுத்தப்பட்ட இடமொன்றில் படகை நிறுத்தி அறையினை திறந்து அவளை பாலியல் வன்புணர்விற்கு உட்படுத்தினான். பின்னர் அவள் மீண்டும் அவ் அறைக்குள் பலவந்தமாக அனுப்பப்பட்டதுடன் மூடியும் வைக்கப்பட்டாள். நீண்டதொரு பயணத்தின் பின்னர் துறைமுகமொன்றில் சாராவின் பயணம் முடிவுக்கு வந்தது. அங்கு படகோட்டிக்கு அதிகளவான பணத்தினை வழங்குகின்ற நான்கு பேரினை அவன் சந்தித்தான். அவள் தற்போது 'M' நாட்டில் இருப்பதாக சாராவிற்கு கூறப்பட்டது. மரமொன்றின் கீழ் சில மணி நேரங்கள் காத்திருந்ததன் பின்னர் வாகனமொன்று வந்ததுடன் அவ் வாகனத்தின் பின் பக்கத்தில் ஏறுமாறு அவள் பணிக்கப்பட்டாள். ஏற்கனவே தாக்கப்பட்டதற்கான அறிகுறிகளினை உடைய வேறு பல இளம் பெண்கள் அங்கு அமர்ந்திருந்தனர். அவளுக்கு உறுதியளிக்கப்பட்டதற்கமைய அவளுக்கு தொழில் கிடைக்காது எனப் பயந்த சாரா மறுப்புத் தெரிவித்த போது துப்பாக்கியினை காட்டிய ஆண்களால் மிரட்டப்பட்டாள்.

நகரொன்றிலிருந்த வீடொன்றிற்கு சாராவும் பிற பெண்களும் அழைத்துச் செல்லப்பட்டனர். பல வாரங்களாக அப் பெண்கள் உடல் ரீதியாகவும் பாலியல் ரீதியாகவும் அவ் நான்கு ஆண்களினாலும் துன்புறுத்தபட்டதுடன் அவர்கள் அவ் வீட்டினை விட்டு வெளியேற அனுமதிக்கப்படவில்லை. அவள் தப்பியோடினால் கடவுச் சீட்டின்றி 'M' நாட்டினுள் உள்நுழைந்ததற்காக சாராவினை அந்நாட்டின் பொலிஸார் சிறையிலடைப்பார்கள் எனவும் அவளின் பிள்ளைகளை அவள் ஒருபோதும் பார்க்க முடியாது எனவும் அவளுக்குச் சொல்லப்பட்டது. அவள் தப்பிக்க முயற்சிப்பின் அவளின் பிள்ளைகளின் இருப்பிடம் கண்டறியப்பட்டு அவர்கள் துன்புறுத்தப்படுவார்கள் என அவளுக்குச் சொல்லப்பட்டது.

நாளடைவில் வேறு பல ஆண்கள் அவ் வீட்டிற்கு வருகை தந்ததுடன் சாரா அவர்களுடன் பாலியல் உறவு கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டதுடன் அதற்காக

அவ் ஆண்கள் பெருந் தொகையான பணத்தினை அவ் நான்கு ஆண்களுக்கும் அளித்தனர். நாளடைவில் சாரா விபச்சாரத்திற்காக விற்கப்பட்டதுடன் அத் தொழிலைச் செய்வதற்கும் பலவந்தப்படுத்தப்பட்டாள். அவளின் ஊதியமானது விபச்சார விடுதியின் சொந்தக்காரரினால் எடுக்கப்பட்டது. ஒரு நாளிரவு அவ் விடுதி பொலிஸாரினால் சுற்றி வளைக்கப்பட்டது. சாரா முறையான ஆவணங்களின்றி அங்கிருப்பது

கண்டுபிடிக்கப்பட்டு நாடுகடத்தப்பட்டாள்.[8]

**வினாக்கள்:**

1) தரப்பட்டுள்ள சம்பவ கற்றலை வாசித்துத் தரப்பட்டுள்ள சூழ்நிலையானது இழி தொழில் வாணிபமா அல்லது ஆட்கடத்தலா எனத் தீர்மானிக்க

2) உமது விடைக்கான காரணங்களைத் தருக.

## 2.3 சட்ட முரணான புலம்பெயர்வு



**உங்களுக்குத் தெரியுமா?**
**நடமாடும் சுதந்திரமானது மனிதவுரிமையொன்றாகும்.**




[8] ஐடினை. 84.

**நடமாடும் சுதந்திரத்திற்கான மனிதவுரிமையானது மூன்று அடிப்படை மூலங்களை உள்ளடக்கியுள்ளது:**[9]

| | | |
|---|---|---|
| 1) நாட்டின் ஆள்புலத்திற்குட்பட்ட நடமாடும் சுதந்திரம் | 1948 ஆம் ஆண்டின் அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனத்தின் உறுப்புரை 13 (1) | 'ஒவ்வொரு அரசுகளினதும் எல்லைகளுக்குள்ளும் அனைவருக்கும் நடமாடும் சுதந்திரமும் வாழிடத்திற்கான சுதந்திரமும் உள்ளது' |
| 2) எந் நாட்டிலிருந்தும் வெளியேறிச் செல்லும் உரிமை மற்றும் | | |
| 3) அவனுடைய அல்லது அவளுடைய சொந்த நாட்டிற்குத் திரும்பி வருவதற்கான சுதந்திரம் | 1948 ஆம் ஆண்டின் அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனத்தின் உறுப்புரை 13 (2) [10] | அனைவருக்கும் அவர்களது சொந்த நாடு உள்ளடங்கலாக எந்தவொரு நாட்டிலிருந்தும் வெளியேறிச் செல்வதற்கும் அவர்களது சொந்த நாட்டிற்குத் திரும்பி வருவதற்கும் உரிமை உண்டு. |

**புலம்பெயர்தல் என்பது** அரசொன்றினுள் அல்லது சர்வதேச எல்லைகளைத் தாண்டிய நபரொருவரின் அல்லது நபர் குழாமொன்றின் நகர்வு ஆகும். எவ்வகையானதேனும் அளவு, சேர்மானம் மற்றும் காரணங்களுக்கான மக்களுடைய எவ்வகையானதேனும் நகர்வினை உள்ளடக்குகின்ற மக்கள் நகர்வு ஆகும்.

இதனுள் பின்வருவன உள்ளடங்கும் :

***அகதிகளின் புலப்பெயர்வு***
***இடம்பெயர்ந்தோர்***
***பொருளாதார புலம்பெயர்ந்தோர் மற்றும்***
***குடும்ப மீள் சேர்தல் உள்ளடங்கலாக வேறு நோக்கங்களுக்காக புலம் பெயர்ந்தோர்***

**சட்டமுரணாண அல்லது ஒழுங்கற்ற புலம்பெயர்வு என்பது** 'அனுப்புதலும், கொண்டு செல்லுதலும் மற்றும் பெற்றுக் கொள்ளுதலும் நாடுகளுடைய நெறிவுறுத்தல் ஒழுங்கு விதிகளை மீறி நடைபெறுகின்ற நகர்வுகளாகும். பொதுவாக சட்ட முரணான புலம்பெயர்வானது குறித்தவொரு நாட்டின் குடியேற்றச் சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு முரணாக நபரொருவரினால் எந்தவொரு காரணத்திற்காகவும் செய்யப்படும் புலப்பெயர்வினைக் குறிக்கும். தேவையான போக்குவரத்து ஆவணங்களான வலிதான வீசா மற்றம் கடவுச் சீட்டு என்பனவின்றி எல்லைகளினைக் கடப்பதனை இது உள்ளடக்கலாம். இழி தொழில் வாணிபத்தினால் பாதிக்கப்பட்டடோர் அடிக்கடி சட்ட முரணான அல்லது ஒழுங்கற்ற புலம்பெயர்ந்தோராக குழப்பிக் கொள்ளப்படுவதால் குடியேற்றம் தொடர்பான குற்றங்கள் அல்லது மீளவும் சொந்த நாட்டிற்குத் திருப்பியனுப்பப்படல் என்பவற்றினை அவர்கள் எதிர் நோக்குகின்றனர்.

[9] https://www.iom.int/key-migration-terms
[10] 1966 ஆம் ஆண்டின் பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் தொடர்பான சர்வதேசக் கட்டுறுத்து இன் உறுப்புரை 12 இனையும் பார்க்க.

## 2.4 ஆட்கவர்தல்



ஆட்கவர்தல் இலங்கையில் குற்றமொன்று என்பதுடன் அது தண்டனைச் சட்டக் கோவையின் பிரிவுகள் 350, 351 மற்றும் 352 இல் வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளது.[11] இலங்கையிலிருந்து ஆட்கவர்தல் மற்றும் பாதுகாவலரிடமிருந்து ஆட்கடத்தல் என இருவகையான ஆட்கவர்தல் காணப்படுகின்றன.

| பிரிவு | குற்றத்தின் பெயர் |
|---|---|
| **பி. 351**<br>இலங்கையிலிருந்து ஆட்கவர்தல் | யாரேனுமொரு நபரினை அவரின் சம்மதமின்றி அல்லது சட்ட ரீதியாக சம்மதத்தினை வழங்குவதற்கு அங்கீகாரமளிக்கப்பட்ட நபரின் சம்மதமின்றி அந் நபரினை இலங்கையின் எல்லைகளைத் தாண்டிக் கூட்டிச் செல்லுதல் இலங்கையிலிருந்து ஆட்கடத்தல் எனப்படும். |
| | |
| **பி. 352**<br>சட்டப்படியான பாதுகாவலரிடமிருந்து ஆட்கவர்தல் | 14 வயதிற்குக்குக் குறைவான ஆண் பிள்ளையினை அல்லது 16 வயதிற்குக் குறைவான பெண் பிள்ளையினை அல்லது சித்த சுவாதீனமற்ற ஆளொருவரை அப் பிள்ளை அல்லது சித்த சுவாதீனமற்றவரின் சட்டப்படியான பாதுகாவலரின் சம்மதமின்றி **எடுத்தல் அல்லது கவர்ந்து செல்லுதல்** அப் பிள்ளையினை அல்லது அச் சித்த சுவாதீனமற்ற நபரினை சட்டப்படியான பாதுகாவலரிடமிருந்து ஆட்கடத்தல் எனப்படும்.<br><br>**விளக்கம்** - இப் பிரிவின் கீழ் 'சட்டரீதியான பாதுகாவலர்' எனும் பதமானது அப் பிள்ளை அல்லது வேறு நபரின் கட்டுக்காவல் அல்லது கவனிப்பு சட்டரீதியாக வழங்கப்பட்டுள்ள நபர் என்பதனை உள்ளடக்குகின்றது.<br><br>**விலக்களிப்பு** - இப்பிரிவானது அறவொழுக்க கோட்பாடுகளுக்கு முரணாக அல்லது சட்ட முரணான நோக்கங்கள் தவிர நெறிமுறையற்ற பிள்ளையொன்றின் தந்தை தானென நல்லெண்ணத்துடன் எண்ணுகின்ற நபரொருவருக்கு அல்லது அப்பிள்ளையின் சட்டரீதியான பாதுகாவலினை கொண்டிருப்பதற்கு தனக்கு அதிகாரமுண்டு என நினைக்கின்ற நபருக்கு இப் பிரிவின் ஏற்பாடுகள் விரிவாக்கப்படுவதில்லை. |
| தண்டனைச் சட்டக் கோவையின் பிரிவு 354 இற்கமைவாகஇ[12] இலங்கையிலிருந்து அல்லது சட்ட ரீதியான பாதுகாவலரிடமிருந்து நபரொருவரை ஆட்கடத்தல் செய்கின்ற எவரேனுமாள் **ஏழு வருடங்களுக்கு மேற்படாத சிறைத் தண்டனைக்கும் மற்றும் தண்டப் பணத்திற்கும்** உள்ளாகுவர். | |
| நபரொருவரின் சம்மதமின்றி அல்லது சம்மதம் வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட நபரின் சம்மதமின்றி இலங்கையிலிருந்து நபரொருவரினை அகற்றுதல் ஆட்கவர்தல் எனப்படும். சிறுபராயத்தவரொருவரை அவரது சட்ட ரீதியான பாதுகாவலரின் சம்மதமின்றி அவரிடமிருந்து நீக்குதலினையும் இது உள்ளடக்குகின்றது. | |

**ஆட்கவர்தல் குற்றமானது சிறுவர் இழி தொழில் வாணிபஞ் செய்தல் என்பதிலிருந்து வேறுபட்டது.**

[11] 1883 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க தண்டனைச் சட்டக் கோவை
[12] ஐடினை.

| ஆட்கவர்தல் | இழி தொழில் வாணிபஞ் செய்தல் |
|---|---|
| ஆட்கடத்தலானது பிள்ளையொன்றினை அவரது சட்டரீதியான பாதுகாவலரிடமிருந்தோ அல்லது நபரொருவரை அவரது சம்மதமின்றி நீக்கும் நபரை அல்லது நபர்களை குற்றவாளியாக்குகின்றது. | இழி தெழில் வாணிபஞ் செய்தலானது ஆட்சேர்ப்பு, கொண்டு செல்லல், கைமாற்றுதல், நீக்குதல் போன்ற பல கட்டங்களாகச் செயற்படும் ஆட்களைக் கொண்ட வலையமைப்புடன் தொடர்பு கொண்டது (பி. 360 (இ)) |
| | |
| சிறுபிராயத்தவர் என்பது 14 வயதிற்குக் குறைவான ஆண் பிள்ளையினையும் மற்றும் 16 வயதிற்குக் குறைவான பெண் பிள்ளையினையும் உள்ளடக்கும் என வரைவிலக்கணப்படுத்துகின்றது. | இழி தொழில் வாணிபஞ் செய்தற் குற்றமானது 18 வயதிற்குக் குறைவான அனைவரையும் சிறுவர்கள் என வரைவிலக்கணப்படுத்துகின்றது. |
| | |
| சிறுவரொருவரை சுரண்டுவதற்காகச் செய்யப்படும் . | இழி தொழில் வாணிபத்திற்கான உத்தியொன்றாக ஆட்கவர்தல் பயன்படுத்தப்படலாம் |
| | |
| சட்ட ரீதியான பாதுகாவலரின் இணக்கம் பெறப்பட்டிருப்பின் குறித்த நபர் பொறுப்புடமையிலிருந்து விலக்களிக்கப்படுவார். | எவ்வாறாயினும், மனிதர்களினை இழி தொழில் வாணிகஞ் செய்கையில் அந் நபரின் சம்மதமானது மோசடி, வற்புறுத்தல், வஞ்கனை என்பவை பயன்படுத்தப்படும் போது தேவையற்றதாகும். மேலும் சிறுவரொருவரினை இழி தொழில் வாணிபஞ் செய்திருப்பின் சம்மதம் என்பது முற்று முழுதாகத் தேவையற்றதாகவே இருக்கும். |

## 2.5 ஆட்கடத்தல்

**ஆட்கடத்ததலானது இலங்கையின் குற்றவியற் சட்டத்தின் கீழான குற்றமொன்றாகும்.**




| பிரிவு | குற்றத்தின் பெயர் |
|---|---|
| **பி. 353**<br>**ஆட்கடத்தல்** | எவரேனும் நபரொருவர் மற்றொரு நபரை பலவந்தமாக கட்டாயப்படுத்தி அல்லது ஏமாற்றுகின்ற முறைகளைக் கையாண்டு அல்லது அதிகாரத்தினை துஷ்பிரயோகப்படுத்தி அல்லது வேறேதேனும் கட்டாயப்படுத்தும் முறைகளைக் கையாண்டு வேறிடத்திற்கு செல்லத் தூண்டுதல் ஆட் கடத்தல் எனப்படும். |
| | |
| **பி. 355**<br>**படுகொலை செய்வதற்காக ஆட்கவர்தல் அல்லது ஆட்** | எவரேனும் நபரொருவரினை அவர் கொல்லப்படுவதற்கு அல்லது அவரை அகற்றுவதால் அவர் கொல்லப்படுவதற்கு உட்படக்கூடிய சந்தர்ப்பத்தினை உருவாக்கக் கூடிய வகையில் அவரைக் கடத்துதல் அல்லது கவர்தலினைப் புரிந்த நபர் 20 வருடத்திற்கு மேற்படாத கடுழிய சிறைத் தண்டனைக்கும் |


| | |
|---|---|
| **கடத்தல்** | தண்டப்பணத்திற்கும் பொறுப்பாக்குவார். |
| | |
| **பி. 356**<br>**இரகசியமாக மற்றும் தவறாக நபரொருவரை சிறைப்படுத்தும் நோக்கத்துடன் கடத்தல் அல்லது கவர்தல்** | எவரேனும் ஒருவர் பிறிதொருவரினை இரகசியமாகவும் தவறாகவும் சிறைப்படுத்திக் கொள்ளும் நோக்கத்துடன் அவரைக் கவர்ந்து அல்லது கடத்தியிருப்பின் அதனைப் புரிந்த நபர் 7 ஆண்டுகளுக்கு மேற்படாத சிறைத்தண்டனைக்கும் தண்டப்பணத்திற்கும் பொறுப்பாவார். |
| | |
| **பி. 357**<br>**பெண்ணொருவரை கட்டாயத் திருமணம் செய்வதற்காக கடத்தல் அல்லது கவர்தல்** | எவரேனும் நபரொருவர் பெண்ணொருவரின் விருப்பத்திற்கு மாறாக அந் நபரை அவளுக்குத் திருமணம் செய்து வைப்பதற்காகவோ அல்லது கட்டாயப்படுத்தி அல்லது தவறாகக் கையாண்டு அவளை உடற்புணர்விற்கு உட்படுத்துவதற்காகவோ கடத்தியோ அல்லது கவர்ந்தோ இருப்பின் அந் நபர் 10 வருடத்திற்கு மேற்படாத சிறைத் இரண்டிலொரு வகையான தண்டனைக்கும் தண்டப் பணத்திற்கும் பொறுப்பாக்கப்படுவார். |
| | |
| **பி. 358**<br>**நபரொருவரை பாரதூரமான காயத்திற்குள்ளாக்குதல் அல்லது அடிமைப்படுத்துதல் முதலிய நோக்கங்களுக்காகக் கடத்துதல் அல்லது கவர்தல்** | எவரேனும் நபரொருவர் பிறிதொருவரை பாரதூரமான காயத்திற்குள்ளாக்க அல்லது அடிமைப்படுத்த அல்லது இயற்கைக்கு மாறான சிற்றின்பத்தற்கு உள்ளாக்க அல்லது அவரை அத்தகைய அபாயத்திற்கு உட்படுத்துமாறு அகற்றுதல் என்பவற்றுக்காக அவரைக் கடத்துதல் அல்லது கவர்தலினைப் புரிகையில் அந்ந நபருக்கு 10 ஆண்டுகளுக்கு மேற்படாத இரண்டிலொரு வகையான சிறைத் தண்டனைக்கும் தண்டப் பணத்திற்கும் பொறுப்பாக்கப்படுவர். |
| | |
| **பி. 359**<br>**கடத்தப்பட்ட நபரை தவறாக மறைத்து வைத்தல் அல்லது சிறைப்படுத்தி வைத்தல்** | எவரேனும் நபரொருவர் பிறிதொருவர் கடத்தப்பட்டவர் அல்லது கவரப்பட்டவர் என அறிந்து கொண்டே அவரை தவறாக மறைத்து அல்லது சிறைப்படுத்தி வைத்திருப்பின் அந்நரும் கடத்தல் அல்லது கவர்தல் என்பவற்றை செய்தவராகவும் அதே எண்ணத்துடன் அல்லது அறிவுடன் மறைத்து அல்லது சிறைப்படுத்தி வைத்திருந்ததாகவும் கருதப்பட்டு அதேவாறாக தண்டிக்கப்படுவர். |
| | |
| **பி. 360**<br>**10 வயதிற்குக் குறைவான பிள்ளையொன்றை அச் சிறுவனின் அசையாத ஆதனத்தினை திருடும் நோக்கத்திற்காக கடத்துதல் அல்லது கவர்தல்.** | 10 வயதிற்குக் குறைவான பிள்ளையொன்றை அச் சிறுவனின் அவனிடமிருந்து ஏதேனும் அசையா ஆதனத்தினை நேர்மையற்ற முறையில் கைப்பற்றிக் கொள்வதற்காக கடத்தி அல்லது கவர்ந்திருப்பின் அதனைச் செய்த நபர் 10 வருடங்களுக்கு மேற்படாத சிறைத் தண்டனையும் தண்டப் பணத்திற்கும் பொறுப்பாவார். |

மேற் கூறப்பட்ட சான்றாதாரத்திற்கு அமைவாக குறிப்பிட்ட நபரொருவரின் அல்லது சிறுவனின் ஆட்கடத்தலானது தண்டனைச் சட்டக் கோவையின் விரிவான ஏற்பாடுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளது. தண்டனைச் சட்டக் கோவையானது இவற்றைக் குற்றமாக்கியுள்ளது. ஆட்கவர்தல், படுகொலை செய்யும் நோக்கத்திலான ஆட்கவர்தல், இரகசியமாக அல்லது தவறாக ஒருவரைச் சிறைப்படுத்துவதற்காக ஆட்கவர்தல், பெண்ணொருவரைக் கட்டாயத் திருமணம் செய்விப்பதற்காக ஆட்கவர்தல், பாரதூரமான காயத்தை ஏற்படுத்தி அடிமைப்படுத்தும் நோக்கில் அல்லது தவறாக சிறைப்படுத்தும் நோக்கில் ஆட்கவர்தல் அல்லது 10 வயதிற்குக் குறைவான பிள்ளையின் ஆதனத்தினை திருடும் நோக்கில் அவனை அல்லது அவளை ஆட்கவர்தல் போன்ற மேற்கூறிய வகைகளிலான ஆட்கவர்தல்களினை தண்டனைச் சட்டக் கோவையானது குற்றமாக்கியுள்ளது. வெறுமனே ஆட்கவர்தல் என்பது இழி தொழில் வாணிபமாக அமையாது. எனினும், ஏமாற்றி நபரொருவரை இடம் பெயர வைத்தல், கட்டாயத் திருமணம், அடிமைப்படுத்தல் மற்றும் சுரண்டும் நோக்கங்களுக்காக கட்டாயப்படுத்தி ஆட்கவர்தல் என்பன இழி தொழில் வாணிபமாகக் கருதப்படலாம்.

## 2.6 அடிமைத்தனம்

**1926 ஆம் ஆண்டின் அடிமைத்தனத்திற்கு எதிரான சமவாயம்**

அடிமைத்தனம் என்பதனை 'சொந்தத்திற்கான உரிமையுடன் இணைந்தான அதிகாரங்கள நபரொருவரின் மீது பிரயோகிக்கப்படும் அந்தஸ்து அல்லது நிலை' என்பதனைக் குறிப்பதாக உறுப்புரை 1 (1) ஆனது வரைவிலக்கணப்படுத்துகின்றது.



மேலும் இச் சமவாயமானது, அடிமை வாணிபத்தினை நபரொருவரை அடிமைத்தனத்திற்கு அளிப்புச் செய்யும் வகையில் கைப்பற்றல், சுவீகரித்தல் மற்றும் அகற்றுதல் ஆகிய அனைத்துச் செயற்பாடுகளும் உள்ளடங்கலான சுவீகரிப்பின் மூலம் அடிமையை விற்கவும், பரிமாற்றிக் கொள்ளவும் செய்யவும் மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து செயல்களும் உள்ளடங்கலான; அடிமையை விற்பனை செய்யவும் பரிமாற்றவும் செய்யப்படும் அனைத்துச் செயல்களும் உள்ளடங்கலான விற்கவும் பரிமாற்றப்படுவதற்கும் அடிமை தொடர்பில் செய்யப்படும் எந்தவொரு வணிகமும் அல்லது போக்குவரத்தும் ஆகும் என வரைவிலக்கணப்படுத்துகின்றது. (உறுப்புரை 1(2)).

கட்டாய ஊழியமானது பொது நோக்கங்களுக்காக மட்டுமே வழங்கப்படலாம் என கட்டாய தொழிலிருந்து வேறுபடுத்துவதன் மூலம் இச்சமவாயமானது அடிமைத்தனத்திற்கு இணையான நிபந்தனைகளுக்கு ஒப்பாக விருத்தி செய்யப்படக் கூடிய கட்டாய தொழிலினை தடுக்குமாறு அரசுகளினை தேவைப்படுத்தியுள்ளது. (உறுப்புரை 5).

அடிமைத்தனத்தினை நீக்குவதற்கான துணைச் சமவாயம், 1956 அடிமைத்தனத்திற்கு இணையான அடிமை வாணிபம் மற்றும் நிறுவனங்கள் மற்றும் வழக்கங்கள்.

துணைச் சமவாயமானது வரைவிலக்கணத்தினை விரிவுபடுத்தியதுடன் அடிமைத்தனத்திற்கு மேலதிகமாக, பின்வரும் நிறுவகங்கள் மற்றும் வழக்கங்களை அரச பங்காளிகள் நீக்க வேண்டும் எனக் கட்டாயப்படுத்துவதுடன் அவற்றை ஒருங்கே 'அடிமைத்தன அந்தஸ்து' என அடையாளப்படுத்துகின்றது:

(a) கடன் முறி[13],

(b) பண்ணைமுறைமை[14]

(c) ஏதேனும் நிறுவகங்கள் அல்லது வழக்கங்கள்:

*I. பெண்ணொருவருக்கு மறுப்பதற்கான உரிமையினை வழங்காது அவளது பெற்றோருக்கு அல்லது பாதுகாவலருக்கு,குடும்பத்திற்கு அல்லது வேறு யாருக்கேனும் அல்லது குழுவுக்கு பணரீதியான*

---

[13] The status or condition arising from a pledge by a debtor of his personal services or of those of a person under his control as security for a debt, if the value of those services as reasonably assessed is not applied towards the liquidation of the debt or the length and nature of those services are not respectively limited and defined;

[14] that is to say, the condition or status of a tenant who is by law, custom or agreement bound to live and labour on land belonging to another person and to render some determinate service to such other person, whether for reward or not, and is not free to change his status;

*பிரதிபலனினை அல்லது அதனையொத்த வகையானவற்றினை வழங்கி திருமணம் செய்து கொள்ளல் அல்லது வாக்குறுதி வழங்குதல் அல்லது*

II. *பெண்ணொருவரின் கணவனுக்கு, அவனது குடும்பத்திற்கு அல்லது அவனது குலத்தவருக்கு அவளை பிறருக்கு பெறப்பட்ட பணப் பெறுமதிக்காக அல்லது வேறேதேனுக்குமாக பரிமாற்றிக் கொள்ளவதற்குள்ள உரிமை அல்லது*

III. *பெண்ணொருத்திக்கு அவளது கணவனின் இறப்பின் நிமிர்த்தம் வேறொரு நபரினால் மரபுரிமை கொள்ளப்பட்டக் கூடிய பொறுப்புடமைக்குள்ளாகியிருத்தல்*

(d) 18 வயதிற்குக் குறைவான பிள்ளையை அல்லது இளம் பராயத்தொருவரினை அவரது இயற்கைப் பெற்றோர் இருவரும் அல்லது ஒருவர் அல்லது அவரின் பாதுகாவலர் பிறிதொருவருக்கு வெகுமதிக்காகவோ் அல்லது இல்லாமலேனும் அப் பிள்ளையினை வழங்கி இளம் பிராயத்தவரினை சுரண்டும் அல்லது அவரின் ஊழியத்தினை சுரண்டும் வகையிலான ஏதேனும் செயற்பாடுகள் அல்லது நிறுவகங்கள்.

**2006 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டதற்கமைவாக தண்டனைச் சட்டக் கோவையின் பிரிவு 358அ**

(1) எவரேனும் நபரொருவர் —

*(அ) எவரேனும் நபரொருவரை கடன் முறி அல்லது பண்ணை அடிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்படுவதற்கு அல்லது காரணமாகி இருப்பின்*

*(ஆ) கட்டாய அல்லது பலவந்த தொழிலுக்கு உட்படுத்த அல்லது காரணமாகி இருப்பின்'*

*(இ) எவரையேனும் அடிமைத்தனத்திற்கு உட்படுத்த அல்லது காரணமாகி இருப்பின் அல்லது*

*(ஈ) பிள்ளையொன்றினை ஆயுத மோதலில் பயன் படுத்துவதற்காக ஆட் சேர்த்திருத்தல்.*

என்பவற்றைச் செய்யின் குற்றமொன்றிற்குப் பொறுப்பாவார்.



எவரேனும் நபரொருவர் மேற் கூறப்பட்ட உபபிரிவு (1) இன் பிரிவுகள் (அ),(ஆ), (இ) ஆகியவற்றுள் உள்ளடங்கும் ஏதேனும் குற்றத்திற்கான குற்றச் சாட்டிற்கு உட்படின் 20 வருடத்திற்கு மேற்படாத காலம் வரையான ஏதேனுமொரு வகையினதானதாக சிறைத் தண்டனைக்கும் தண்டப்பணத்துடனான உள்ளாவார். எவரேனும் நபரொருவர் பிள்ளையொன்று தொடர்பில் மேற் கூறப்பட்ட உபபிரிவு (1) இனுடைய (அ), (ஆ),(இ) பந்திகளில் கூறப்பட்ட ஏதேனும் குற்றத்தினைப் புரிந்திருப்பின் அல்லது உபபிரிவு (1) இன் கீழான பந்தி (ஈ) இன் புரியப்பட்ட குற்றமானால் **30 வருடங்களுக்க மேற்படாத** ஏதேனுமொரு வகையான **சிறைத்தண்டனைக்கும்** தண்டப் பணத்திற்கும் பொறுப்புடையவராவார்.

**பிரதான வரைவிலக்கணங்கள்**

| | |
|---|---|
| **கடன் முறி** | கடனாளியின் வாக்குறுதி மூலம் உருவாகும் அவரது தனிப்பட்ட சேவைகள் அல்லது அவரின் கட்டுப்பாட்டின் கீழுள்ள நபரை கடனுக்காக ஈடாக வைத்து சேவைகள் நியாயமான மதிப்பீட்டினால் ஒழுங்கமைக்கப்படாது கடனுக்கு எதிரானதாக மற்றும் சேவை நீடிக்கும் காலம் மற்றும் சேவையின் இயல்பு பற்றி எதனையும் வரைவிலக்கணம் செய்யாத அந்தஸ்து அல்லது நிபந்தனையாகும். |
| **பலவந்த அல்லது கட்டாய ஊழியம்** | **நபரொருவரால் தன்னிச்சையாக முனைந்து செய்யாது அவரை தண்டிப்பதாக அச்சுறுத்தி செய்யப்படும்** அனைத்து வேலைகளும் அல்லது சேவைகளும் பலவந்த அல்லது கட்டாய ஊழியம் ஆகும். இதற்கான விதிவிலக்குகளாக,<br>(அ) ஏதேனும் சட்டத்திற்குக் கீழான கட்டாய இராணுவ சேவையுடன் தொடர்புடைய வேலைகள் அல்லது முற்றிலும் இராணுவ தன்மையுடையதான சேவைகள்.<br>(ஆ) சுயாட்சியுள்ள நாடொன்றின் பிரஜைகளால் செய்யப்பட வேண்டிய சாதாரண குடியியல் பொறுப்புடமைகளின் பகுதியான ஏதேனும் சேவைகள் அல்லது வேலைகள்<br>(இ) நீதிமன்றத்தினால் தண்டனைக்குட்படுத்தப்பட்ட எவரேனும் நபரொருவரினால் தண்டனையாக செய்யப்பட வேண்டிய சேவைகள் அல்லது வேலைகள். ஆயினும் குறித்த நபரின் வேலைகள் மற்றும் சேவைகள் பகிரங்க அதிகாரமொன்றின் மேற்பார்வை மற்றும் கட்டுப்பாட்டின் கீழ் இடம் பெற வேண்டும் என்பதுடன் குறித்த நபரானவர் தனிப்பட்ட ஆட்களுக்கும் நிறுவனங்களுக்கும் மற்றும் கூட்டுத்தாபனங்களுக்கும் வேலைககமர்த்தப்பட்டவர்களல்ல<br>(ஈ)பேராபத்தான போர் நிகழ்வு அல்லது தீப்பிழம்பு, வெள்ளம், பஞ்சம், பூமியதிர்ச்சி, பயங்கர தொற்று நோயொன்றின் தற்காலிக தாக்க நோய்கள், விலங்கு மற்றும் பூச்சிகளின் படையெடுப்பு அல்லது காய்கறிகளை அழிக்கும் உயிரினத் தாக்குதல் போன்ற பேராபத்தான அச்சுறுத்தலான வேலைகள் மற்றும் வாழும்,வாழ்ந்து வரும் மக்களின் ஒரு பகுதியினை அல்லது அனைவரையும் ஆபத்துக்குள் தள்ளக் கூடிய பொதுவான சூழ்நிலைகள் போன்ற அவசர நிலைமையொன்றினால் நிறைவேற்றப்படும் ஏதேனும் வேலைகள் அல்லது சேவைகள்.<br>(உ) சமூகமொன்றின் நேரடியான நலன்களுக்காக அல்லது அக்கறைகளுக்காக அச் சமூக அங்கத்தவர்களுக்கான சாதாரண குடியியல் கடப்பாடுகளாக கருதப்படக் கூடியதாக உள்ள சிறிய வகையான சேவைகள். ஆயினும் அச் சமூகத்தின் அங்கத்தவர்களுடன் அல்லது அவர்களின் நேரிடையான பிரதிநிதிகளுடன் அவ்வாறான சேவைகளின் அவசியத்தை பற்றி கலந்தாலோசிக்க உரிமை கொண்டவர்கள் |
| **பண்ணை அடிமை** | சட்டம், வழக்காறு அல்லது உடன்படிக்கையினால் பிணிக்கப்பட்டு வெகுமதிக்காகவோ அல்லது இல்லாமலோ மற்றொருவரின் காணியில் வாழ்வதுடன் முடிவின்றி அவர் கொடுக்கும் வேலைகளை நிறைவு செயவதுடன் அவர் கொண்டுள்ள அந்தஸ்தை மாற்ற முடியாத நிபந்தனை. |
| **அடிமைத்தனம்** | சொந்தத்துடன் இணைந்ததான அதிகாரங்கள் அனைத்தையும் நபரொருவர் மீது பிரயோகிக்கின்ற நிலை அல்லது நிபந்தனை ஆகும். |
| **சிறுவர்** | **18 வயதிற்குக் குறைவான** ஆளெவரும். |

பாலியல் இழிதொழிலுக்கான வாணிபம் மற்றும் கட்டாய தொழிலுக்கு உட்படுத்தல் என்பவற்றைக் குறிப்பிடும் பதங்களான ‘மனித இழிதொழில் வாணிபம்’, ‘மனிதர்களில் இழி தொழில் வாணிபம‘, மற்றும் நவீன

அடிமைத்தனம் என்பன பொது பதங்களாகப் பயன்படுத்தப்படுகின்றன.[15] பலேர்மோ பின்னேடானது அடிமைத்தனம் அல்லது அடிமைத்தனத்தினை ஒத்த செயற்பாடுகள், கட்டாய ஊழியம் அல்லது சேவைகள் மற்றும் சேவகங்கள் என்பவற்றை சுரண்டலின் வடிவங்களாக அடையாளப்படுத்துகின்றது.

## b. சிறுவர் இழி தொழில் வாணிபத்தின் தள்ளல் மற்றும் இழுத்தற் காரணிகள்

பலேர்மோ பின்னேடானது இழிதொழில் வாணிபத்தின் **தள்ளல் மற்றும் இழுத்தற் காரணிகளை** இல்லாதொழிப்பதற்கான முக்கியத்துவத்தினைக் கூறுவதுடன் சட்டங்களை அறிமுகப்படுத்தி நிறைவேற்றுதல் மற்றும் வாணிபத்தில் ஈடுபடுவோர் மீது வழக்கிடுதல் என்பன மூலம் மட்டுமன்றி கல்வியியல், சமூகவியல் மற்றும் கலாசாரவியல் நடவடிக்கைகள் போன்ற விடயங்களை ஏற்றுக் கொள்ளுதல் மற்றும் சட்டத்தை வலுப்படுத்துதல் என்பவற்றுக்காக இருசார் மற்றும் பல்சார் ஒத்துழைப்பு உள்ளடக்கப்பட்டு அனைத்து விதமான மனித சுரண்டல்களையும் குறிப்பாக வாணிபத்திற்கு இட்டுச் செல்லும் பெண்கள் மற்றும் பிள்ளைகளுக்கு எதிரான சுரண்டலுக்கான வளர்ச்சியை ஏற்படுத்தும் கேள்விகளையும் ஏற்படுத்த ஊக்கமளிக்காது அல்லது நிராகரித்து அல்லது அதைரியப்படுத்தி எதிர்க்க வேண்டும் என்கின்றது.

**தள்ளல் மற்றும் இழுத்தற் காரணிகள் என்பவை யாவை**?



இழிதொழில்வாணிபத்திற்கு நபரொருவரை பாதிப்புறச் செய்யத்தக்கதான பெருமளவான சிக்கலான காரணிகள் உள்ளன. இவை பொதுவாக **'தள்ளல்' அல்லது 'விநியோக – வழி' மற்றும் 'இழுத்தல்' அல்லது 'கேள்வி வழி'** காரணிகள் எனும் பதங்களினால் வர்ணித்துக் கூறப்படுகின்றன. சொற்பிரயோகங்கள் பரிந்துரைப்பதன் படி தள்ளல் காரணிகள் இழிதொழில் வாணிபத்திற்குள் தள்ளப்படுவதற்கான அதிகளவான இடரினை நோக்கி இழுக்கின்ற அதேவேளையில் இழுத்தற் காரணிகள் என்பது ஏற்கனவே ஆபத்தான சூழ்நிலைகளில் வாழ்கின்ற மக்களை தங்களுக்கு தற்போது தம் சமுதாயத்தில் கிடைக்கப் பெற்றுள்ள வாழ்வை விட வாழத்தகு அல்லது விரும்பத்தகு வாழ்வை நாட மக்களை வைக்கின்றது


வறுமை, பால்நிலைப் பாரபட்சம், மோதல், மற்றும் இயற்கைச் அழிவுகள் என்பன உள்ளக பெரிய மட்ட பாதிப்பக்களுக்கான தள்ளற் காரணிகளாக அமையும். அதேவேளை, இழுத்தற் காரணிகளாக வர்த்தக பாலியல் தொழி'லுக்கான உலகளாவிய ரீதியில் அதிகரித்து வரும் கேள்வி மற்றும் வீட்டுப் பணியாளர்களுக்கான கேள்வி என்பவை அமைகின்றன. வறுமையும் செல்வமும் பாதிக்கப்பட்டவர்கள் தீவிரமான வறுமையான நிலையிலிருந்து குறைந்தளவிலான வறுமை நிலைக்கு விலகுவதற்காக புலம்பெயர்வு அல்லது இழிதொழில் வாணிப முறைமையில் ஈடுபடக் காரணமாகின்றன. இச் சூழ்நிலையில் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் மத்தியில் காணப்படுகின்ற இணையம் உள்ளடங்கலாக விரைவானதும் விரிவானதுமான ஒலிபரப்பு மற்றும் தொலைத் தொடர்பு ஊடக அபிவிருத்தியானது அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கு புலம் பெயர்வதற்கான விருப்பத்தினை அதிகரிப்பதுடன் அவ்வாறான புலம் பெயர்பவர்களை இழிதொழில் வாணிபஞ் செய்வோரின் பாதிப்பிற்குள் உள்ளாகுவதற்கும் காரணமாகின்றது.[16]

எனினும் ஒரேயொரு காரணியானது மனித இழிதொழில் வாணிபத்திற்கு காரணமாக அமைய முடியாது. மாறாக, அடிக்கடி ஒன்றையொன்று வலுப்படுத்துபவையாக இவை சிக்கலானதாகவும் ஒன்றையொன்று மீள்நிலைப்படுத்துபவையாகவும் காணப்படும்.

---

[15] https://www.state.gov/j/tip/what/

[16] மனித இழிதொழில் வாணிபத்திற்கெதிராகப் போரிடுவதற்கான கையேடு, UNODC https://www.unodc.org/documents/human-trafficking/Toolkit-files/08-58296_tool_9-2.pdf




**மூலம்:** https://hopenow.dk/what-is-human-trafficking/?lang=en

**பயிற்சி 3**



- இழிதொழில் வாணிபத்திற்கான 3 அல்லது 4 மூல காரணங்களைக் குழுக்களாகக் கலந்துரையாடுக.
- ஒவ்வொரு குழுவும் கண்டுபிடித்த தள்ளல் மற்றும் இழுத்தற் காரணிகளை பட்டியற்படுத்துக.
- ஏதேனும் காரணியொன்று மற்றைய காரணிகளை விட முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகின்றதா?

இலங்கையில் சிறுவர் இழி தொழில் வாணிபத்தினை உருவாக்கும் தள்ளல் மற்றும் இழுத்தற் காரணிகளை இனங் கண்டு பின்வரும் நிரலில் நிரப்புக.

| தள்ளற் காரணிகள் | இழுத்தற் காரணிகள | ஏனைய காரணிகள் |
|---|---|---|
| | | |

**குறிப்பு:** புவியியல் இருப்பிடம், பொருளாதார நிலைமை அல்லது அந்தஸ்து, கல்வியியல் அந்தஸ்து, இனம் அல்லது மதம் போன்ற அனைத்துக் காரணிகளும் சிறுவர்கள் தொடர்பான தள்ளல் அல்லது இழுத்தற் காரணிகளுக்குப் பொதுவானவை. இவை குறித்து வைக்கப்படலாம். குழுவின் ஏனைய அங்கத்தவர்களுடன் கலந்துரையாடி அப் பட்டியலினை நிறைவு செய்யுங்கள். இனங்கண்ட தள்ளல் மற்றும் இழுத்தற் காரணிகளுக்கு சுருக்கமான விளக்கங்களை முன்வையுங்கள்.

### c. இழிதொழில் வாணிபத்தினை தூண்டுகின்ற காரணிகள்

## 2.7 பாலியல் சுரண்டுதல் அல்லது ஆபாசப் படமெடுத்தல்

விபச்சாரம் மற்றும் பாலியல் சுரண்டுதலுக்காக வாணிபம் செய்தலே உலகளவில் வியாபித்திருக்கும் மனித இழிதொழில் வாணிபத்தின் முக்கிய வடிவங்களிலொன்றாகும். எல்லா வருடங்களும் பெண்களும் பிள்ளைகளும் பாலியல் துறையில் வர்த்தக ரீதியில் சுரண்டப்படுகின்றனர். பாலியல் இழிதொழில் வாணிபமானது வெளியிலும் நாட்டினுள்ளேயும் இடம் பெற முடியும்.

**2002 ஆம் ஆண்டின் பெண்களையும் சிறுவர்களையும் விபச்சாரத்திற்காக வாணிபத்திற்குட்படுத்துதலினை முறியடிக்கும் மற்றும் தடுக்கும் சார்க் சமவாயமானது** பெண்களையும் சிறுவர்களையும் விபச்சாரத்திற்காக வாணிபம் செய்வதனை சிறப்பாக அல்லது பிரத்தியேகமாக அடையாளப்படுத்துகின்றது.

சிறுவர்களைச் சுரண்டுதலுக்காக இழி தொழில் வாணிபஞ் செய்தலுடன் மற்றும் அதனுடன் தொடர்புடைய குற்றங்கள் தொடர்பில் இலங்கையில் பல சட்டங்கள் உள்ளன:

- தண்டனைச் சட்டக் கோவை
- 1889 ஆம் ஆண்டின் விலைமாதர் விடுதிகள் கட்டளைச் சட்டம்
- அலைந்து திரிபவர்கள் தொடர்பான கட்டளைச் சட்டம்
- ஆபாசப் பிரசுரங்கள் தொடர்பான கட்டளைச் சட்டம்
- சிறுவர்கள் மற்றும் இளம் பிள்ளைகள் (தீங்குமிகு பிரசுரங்கள்) தொடர்பான சட்டம்

**2018 ஆம் ஆண்டின் மனித இழிதொழில் வாணிபஞ் செய்தல் தொடர்பான அறிக்கை (Trafficking in Persons Report 2018)**

*2018 ஆம் ஆண்டின் மனித இழிதொழில் வாணிபஞ் செய்தல் தொடர்பான அறிக்கையானது உள்நாட்டுச் சமூகங்களானவை எவ்வாறு முன்னெச்சரிக்கையாகவும் வினைத்திறனாகவும் மனித இழி தொழில் வாணிபத்திற்கு தீர்வு காண முடியும் எனவும் தேசிய அரசாங்கம் எவ்வாறு அவர்களை ஊக்குவித்து ஒத்துழைப்பை வழங்க முடியும் எனவும் கவனஞ் செலுத்துகின்றது.*

ஆண்கள், பெண்கள் மற்றும் சிறுவர்களை கட்டாயத் தொழிலுக்குட்படுத்தல் மற்றும் பாலியற் தொழிலுக்கான வாணிபஞ் செய்தல் என்பவற்றுக்காக போக்குவரத்துச் செய்யும் நாடாக முதன்மையான மூலமாக பயண இலக்காக மற்றும் குறைந்தளவில் பரிமாற்றஞ் செய்யும் நாடாகஇலங்கை அமையப் பெற்றுள்ளது. மத்தியகிழக்கு, தென்கிழக்காசியா மற்றும் ஆப்கானிஸ்தான் முதலிய நாடுகளுக்கு கட்டட வேலை, ஆடைத் தொழில் மற்றும் வீட்டுப் பணிகளுக்காக இலங்கையிலிருந்து புலம் பெயரும் ஆண்கள், பெண்கள் மற்றும் சிறுவர் என்போரில் சிலர் அங்கு கட்டாயத் தொழிலுக்கு உட்படுத்தப்படுகின்றனர். அவ் நாடுகளுக்குள் பெண்கள் மற்றும் சிறுவர்கள் விபச்சாரத்திற்கான பாலியல் இழி தொழில் வாணிபத்திற்குள்ளாகின்றனர்.

அவ் அறிக்கையானது இலங்கை அரசாங்கம் இழிதொழில் வாணிபத்தினை இல்லாதொழிக்கும் குறைந்த பட்சத் தராதரங்களையேனும் முன்னெடுக்கவில்லை எனக் குறிப்பிட்டுள்ளது. எவ்வாயினும் இலங்கை குறிப்பிடத்தக்க சில முயற்சிகளினை எடுக்கின்றது.[17]

அரசாங்கமானது வாணிபத்தினால் பாதிக்கப்பட்டவர்களாக சாத்தியப்படுபவர்களை அடையாளம் காண்பதன் ஊடாக மிகுதியான முயற்சிகளை செயற்படுத்துவதாகவும் மற்றும் சர்வதேச ஒழுங்கமைப்பின் பங்குடமையுடன் உள்ளூர் மட்ட மற்றும் மாவட்ட மட்டத்திலும் பாதிக்கப்பட்டவரை அரசாங்க

[17] இலங்கையினுடைய மனித இழிதொழில் வாணிப அறிக்கை இ 394

உத்தியோகத்தர்கள் மற்றும் சிவில் சமூக அங்கத்தவர்கள் ஊடாகக் கண்டறிந்து குறிப்பெடுத்து நடபடிமுறைகளுக்குப் பணிபுரியும் அளவில் பயிற்சிகளையும் விழிப்புணர்வுப் பட்டறைகளையும் நடாத்தி அறிவூட்டல்களை வழங்குவதாகக் குறிப்பிட்டிருந்தது. 29 கூற்றுக்களின் விளைவால் மனித இழிதொழில் வாணிபம் தொடர்பான குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் மேலதிக விசாரணையுடன் தொடர்புபடும் கடல்கடந்து பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளின் வாக்கு மூலங்களை பெறவும் மற்றும் சாட்சிகளை பதிவு செய்யவும் இராஜ தந்திரப் பணிகளை அனுமதிக்கின்ற விதமாக சட்டங்களை அரசாங்கம் திருத்தியமைத்ததானது.

எவ்வாறாயினும், அரசாங்கமானது சில அடிப்படை விடயங்களுக்கான குறைந்த பட்சத் தராதரங்களை அடைவதில் தோல்வியடைந்துள்ளது. அரசாங்கத்தின் இழி தொழில் வாணிபம் தொடர்பான நியதிச்சட்டத்தின் கீழ் எந்தவொரு வாணிபம் புரிந்தவரையும் தொடர்ச்சியாக நான்காவது ஆண்டிலும் கூட நீதிமன்றம் தண்டிக்கவில்லை. குறைந்தளவான தண்டனையுடைய ஆட்சேர்ப்பு சட்டத்தின் கீழ் சாத்தியப்படும். இழிதொழில் வாணிப வழக்குகளை தொடர்ச்சியாக நடாத்துவதனை எவ் வழக்கும் கொண்டுவரப்படவில்லை. அரசாங்கமானது புலம்பெயர்ந்து சென்று பாதிக்கப்படுகின்ற ஆண்கள் குறிப்பாகச் செய்ய வேண்டிய சேவைகளென எதனையும் வழங்கவில்லை என்பதுடன் வீட்டுப் பணிப் பெண்களாக புலம் பெயர்ந்து செல்லும் பெண்களுக்காக பிரத்தியேகமான அல்லது குறிப்பான தேவைப்பாடுகள் எதனையும் உருவாக்கவுமில்லை. இந்த வாய்ப்பானது பெண்கள் சட்ட விரோதமாகப் புலம் பெயருவதற்கான வாய்ப்பினை அதிகரிப்பதுடன் அதன் நிமிர்த்தமாக மனித இழி தொழில் வாணிப பாதிப்புக்கு உட்படும் நிலைப்பாடும் உச்சமடைகின்றது என அவதானிப்பாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

| வழக்கிடுதல் | பாதுகாப்பு |
|---|---|
| மனித இழிதொழில் வாணிபத்தினை அடையாளப்படுத்துகின்ற சட்ட நிறைவேற்றுனர்களின் முயற்சிகள் மிகக் குறைந்தவையென அறிக்கை கூறுகின்றது. பாதிக்கப்பட்டவர்களை முன்னெச்சரிக்கையாக அடையாளப்படுத்துதலில் உள்நாட்டு அதிகாரிகள் தகைமைக் குறைவாக இருப்பதுடன் விபசாரம் அலைந்துதிரிதல் மற்றும் குடியகல்வுக் குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டு அல்லது தண்டிக்கப்பட்ட வாணிபத்தில் ஈடுபட்ட தனிநபர்கள் பற்றிய குறிகாட்டிகளுக்குப் போதுமானளவான முயற்சிகள் எடுக்கப்படவில்லை. அத்தோடு வெளிநாட்டுக்குப் பயணிப்பதனை இலகுபடுத்துவதற்காக சில துணைவர்கள் அரச அதிகாரிகளுடன் இணைந்து மோசடியான அல்லது பிழையான தரவுகளைக் கொண்ட ஆவணங்களை விருத்தி செய்வதாகவும் அவ் அறிக்கை குறிப்பிட்டது. | சாதாரண விருத்திகளை பாதுகாப்பிற்கான முயற்சிகளாக அரசாங்கம் செய்வதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. 2016 இல் இனங்காணப்பட்ட 23 பாதிக்கப்பட்டவர்களை விட அதிகமாக 46 பேரினை அரசாங்கம் அடையாளப்படுத்தியுள்ளது. சாத்தியமான பாதிக்கப்பட்டோரை அடையாளங் காணுதல் மற்றும் குறிப்புச் சேவைகள் என்பவற்றுக்காக இயங்கும் நடபடி முறைகள் தொடர்பாக தராதரங்களை (SOPs) அரசாங்கம் பயன்படுத்தியுள்ளதுடன் மற்றும் சர்வதேச ஒழுங்கமைப்புக்களின் பங்குடமையுடன் சிவில் சமூக அங்கத்தவர்கள், உள்ளுர் மற்றும் மாவட்ட அங்கத்தவர்கள் மற்றும் சுகாதார மற்றும் நன்னடத்தைத் திணைக்களம், பொலிஸ், குடியகல்வு, பொலிஸ் புலனாய்வுப் பிரிவு (CID), தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை அரச அதிகாரிகள் என்போரை உள்ளடக்கிய 875 அங்கத்தவர்களுக்கு பாதிக்கப்பட்டவரை அடையாளங் காணுதல் மற்றும் ஆற்றுப்படுத்துதல் தொடர்பான பயிற்சிகள் பல நடாத்தப்பட்டன. எவ்வாறாயினும், தொடர்புடைய முகவர்களின் அலுவலர்களை SOPs இனைப் பின்பற்றுமாறு வழிநடாத்தும் சுற்றறிக்கைகளையோ அல்லது |

| | |
|---|---|
| | கட்டளை விதிகளையோ அரசாங்கம் வெளியிடவில்லை. அத்துடன் இழிதொழில் வாணிபத்தினால் பாதிக்கப்பட்டவரை அடையாளங் காண்பதற்கான பொறுப்புள்ள அதிகாரிகளின் தகைமை குறைவாக இருப்பதாக சிவில் சமூகம் குற்றச் சாட்டுக்களினை முன்வைக்கின்றது. |

**பின்வரும் பரிந்துரைகள் இலங்கை அரசுக்காக உருவாக்கப்பட்டன**

சட்டத்திற்கமைய, குற்றத்திற்கு உடந்தையாக இருந்த அதிகாரிகள் உட்பட இழி தொழில் வாணிபத்தினை மேற்கொள்பவர்களென சந்தேகம் கொள்ளுகின்ற நபர்களினை விசாரணை செய்தல் மற்றும் வழக்கிடுதல், குற்றவாளிகள் செய்த குற்றத்திற்கு ஈடான தண்டனைகளை அல்லது உறுத்தங்களை வழங்கித் தண்டித்தல் மற்றும் குற்றஞ்சாட்டுதல் என்பவற்றுக்காக அரசாங்க முயற்சிகளினை விருத்தி செய்வதற்கான நடைமுறையினைப் பின்பற்ற வேண்டும்

- இழிதொழில் வாணிபத்தினால் பாதிக்கப்பட்டோரை முன்னெச்சரிக்கையாக அடையாளப்படுத்தக் கூடிய மற்றும் ஆற்றுப்படுத்தும் நடபடி முறைகளுக்கான முயற்சிகளை அதிகரித்தல். குறிப்பாக மனித இழிதொழில் வாணிபத்திற்குட்பட்டு அதன் நேர் விளைவினால் குடியகல்வு மீறல்கள் மற்றும் விபச்சாரம் முதலிய நடத்தைகள் போன்ற சட்ட முரணான நடத்தைகளினால் பாதிக்கப்பட்டவர்கள் தடுத்து வைக்கப்படவோ அல்லது தண்டிக்கப்படவோ இல்லை என உறுதி செய்தல்.இதனுள் அடங்கும்

- ஆண்கள் பெண்கள் உட்பட பாதிக்கப்பட்டவர்கள் விஷேட கவனிப்பு சேவைகளைப் பெறுவதனை உறுதிப்படுத்த பாதுகாப்பு சேவைகளை முன்னேற்றுவதுடன் வேலையில் சேர்ப்பதற்காக அதனைச் செய்யும் நபரினால் பெற்றுக் கொண்ட அனைத்து விதமான கட்டணங்களையும் இல்லாதொழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆயினும் தொழில்தருனர் வேலையில் சேர்த்தவர்களுக்கு கட்டணம் செலுத்தியுள்ளமையினை உறுதிப்படுத்த வேண்டும்.
- துணை முகவர்களுக்கான ஒழுங்கு விதிகளை உள்ளடக்கியதாக வெளிநாட்டு வேலை வாய்ப்புத் திணைக்களத்தின் கட்டளை விதிகளை விருத்தி செய்தல்.

பாதுகாப்பானதும் சட்ட முறையானதுமான புலம்பெயர்வினை ஊக்கப்படுத்தல் மற்றும் பால்நிலை வேறுபாட்டின் அடிப்படையில் புலம் பெயர்விற்கான விதிமுறைகளால் பாரபட்சம் காட்டப்படவில்லை என்பதனை உறுதி செய்தல் மற்றும் உறுதி செய்யப்பட்ட அரசாங்க ஒத்துழைப்புக்கான முயற்சிகளை நிறுவனப்படுத்தும் பணிப்படையின் முயற்சிகளை அதிகரித்தல்.

## 2.8 தொழில்சார் அல்லது பொருளாதார சுரண்டல்




தொழிலுக்காகவும் பொருளாதாரத்திற்காகவும் சுரண்டப்படுவதற்காக நாட்டிற்கு உள்ளேயும் வெளியேயும் சிறுவர்கள் வாணிபஞ் செய்யப்படுகின்றனர். பிச்சையெடுத்தல் அல்லது அபாயகரமான தொழில் மற்றும் கடந்த கால செய்திகளில் அறிக்கையிடப்பட்டதற்கமைவாக மத்திய கிழக்கு நாடுகளில் ஒட்டகப் பணியாளர்கள் உள்ளடங்கலான முறைகளில் அல்லது வடிவங்களில் சிறுவர்கள் சுரண்டப்படுகின்றனர். கைவிடப்பட்ட சிறுவர்கள் அல்லது வீதியோரச் சிறுவர்கள் அல்லது மோதலில் வாழ்கின்ற சிறுவர்கள் என்போர் சுலபமாகப் பாதிக்கப்படுபவர்களாகக் காணப்படுகின்றனர்.


2017 இல் அமெரிக்காவின் மாநில அலுவல்கள் திணைக்களம் மனிதர்களை வாணிபஞ் செய்வதனை முறியடித்தல் மற்றும் கண்காணிப்புச் செய்தல் தொடர்பில் அறிக்கையொன்றை வெளியிட்டது. அவ் அறிக்கையில் இலங்கையின் நிலைமையானது பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது[18]

[18] https://www.state.gov/j/tip/rls/tiprpt/countries/2017/271284.htm

*“கட்டடத் தொழில், ஆடைத் தொழில் மற்றும் வீட்டுப் பணி என்பவற்றுக்காக மத்திய கிழக்கு, தென்கிழக்காசியா மற்றும் ஆப்கானிஸ்தான் முதலிய நாடுகளுக்கு புலம் பெயர்ந்து செல்லும் இலங்கையின் ஆண், பெண் மற்றும் சிறுவர்கள் கட்டாயத் தொழிலுக்கு உட்படுகின்றனர். பெண்களும் சிறுவர்களும் நாட்டுக்குள்ளேயே விபச்சாரத்திற்காக பாலியல் இழி தொழில் வாணிபம் செய்யப்படுகின்றனர். கரையோர பிரதேசங்களில் சிறுவர் பாலியல் சுற்றுலாவில் வர்த்தக பாலியற் தொழிலுக்கு பெண் பிள்ளைகளை விட ஆண் பிள்ளைகளே அதிகம் சுரண்டப்படுவகின்றனர். சிறுவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் மற்றும் இலகுவாக சமூக ரீதியில் பாதிப்படையக் கூடியோர் போன்ற குழுக்களைச் சேர்ந்தவர்கள் கட்டாயப்படுத்தப்பட்டு பிச்சையெடுக்க வைக்கப்படுகின்றனர் அல்லது இலங்கையின் பெரிய நகரங்களில் குற்றவியல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.”*

எனவே, இக் கண்காணிப்பு அறிக்கையானது இலங்கையில் சிறுவர் இழி தொழில் வாணிபத்தினை தடுப்பதற்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் வீட்டுப் பணிப்பெண் முகவர்களால் கொண்டு நடாத்தப்படும் அடிப்படையான விடயங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டும் எனக் குறிப்பிடுகின்றது.

2018 இன் மனித இழி தொழில் வாணிப அறிக்கையின் அடிப்படையில் அறிக்கை தயாரிக்கப்பட்ட காலத்தில் பொலிஸாரும் குற்றப்புலனாய்வுப் பிரிவினரும் இணைந்து 15 இழி தொழில் வாணிபம் தொடர்பான விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர். அவற்றுள் 10 கட்டாயத் தொழிலுக்குட்படுத்தல் என்னும் வகையினுள்ளும், 4 பாலியல் வாணிப விடயங்களாகவும் மற்றையதொன்று சுரண்டுதலுக்கான சிறுவர்களை விற்பனை செய்வதாகவும் அமைந்திருந்தது.[19]




**1883 ஆம் ஆண்டின் 2 இலக்க தண்டனைச் சட்டக் கோவையின் ஏற்பாடுகள்**

**2006 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டதற்கமைவாக பிரிவு 360 (இ) (ஆ)**

எவரேனும் நபரொருவர் மற்றைய நபரொருவரை ‘அடைத்து வைத்தல், பலாத்கார அல்லது கட்டாயத் தொழிலுக்குட்படுத்தல், அல்லது சேவைக்குட்படுத்தல், அடிமைத்தனம், சேவகம், உடல் உறுப்புக்களைக் கவர்தல், விபச்சாரம் அல்லது வேறு வடிவங்களிலான பாலியல் சுரண்டல் அல்லது ஏதேனும் சட்டத்தின் கீழே குற்றமாக அமையும் ஏதேனும் செயலைச் செய்யும் நோக்கத்திற்காக அச்சுறுத்தல், பலவந்தப்படுத்தல், மோசடி, வஞ்சனை அல்லது தூண்டுதல் பாதிப்படையும் தன்மையிலான சுரண்டுதல் எனும் உத்திகளில் ஆட்சேர்த்தல், கொண்டு செல்லல் அல்லது கூட்டிச் செல்லல், கைமாற்றுதல், வைத்திருத்தல் மற்றும் பெற்றுக் கொள்ளுதல் என்பன இழி தொழில் வாணிபமாகும்.

[19] ஐடினை.



எவரேனும் நபரொருவர் இழி தொழில் வாணிப குற்றவாளியாக தீர்ப்பளிக்கப்பட்டால் **2 வருடங்களுக்குக் குறையாததும் 20 வருடங்களுக்கு மேற்படாததுமான சிறைத்தண்டனையையும்** அத்துடன் தண்டப் பணத்தினையும் செலுத்த வேண்டி ஆளாகலாம். அத்துடன் குறித்த குற்றங்களை சிறுவர் தொடர்பில் செய்திருப்பின், 3 வருடங்களுக்குக் குறையாததும் 20 வருடங்களுக்கு மேற்படாததுமான சிறைத்தண்டனையுடன் தண்டப்பணத்தினையும் செலுத்த வேண்டிய பொறுப்புடமைக்கு ஆளாகலாம்.

<table>
<tr><td colspan="2">1956 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க பெண்கள், இளம் நபர்கள் மற்றும் சிறுவர்கள் வேலைக்கமர்த்தல் சட்டம்</td></tr>
<tr><td>பி. 34<br>பொருள்கோடல் பிரிவு</td><td>‘சிறுவர்’ என்பது பதினான்கு வயதிற்கு கீழானவர்களாவார்கள்.</td></tr>
<tr><td>2003 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டதற்கமைவாக பிரிவு. 14(1)</td><td>பின்வரும் விடயங்கள் தவிர்ந்த வேறு எதற்காகவேனும் பிள்ளையொருவர் தொழிலுக்குட்படுத்தப்படலாகாது<br>(அ) வழமையான பாடசாலை நேரங்களுக்கு முன்னரோ அல்லது பின்னரோ பெற்றோர் அல்லது பாதுகாவலரினால் நடாத்தப்படுகின்ற அல்லது குடும்ப அங்கத்தவர்கள் செய்கின்ற இலகு விவசாயம் அல்லது பழச்செய்கை<br>(ஆ) தொழிசுட்பக் கல்வி அல்லது வர்த்தக தொழிலை பயிற்றுவிக்கும் நோக்கில் பாடசாலையொன்றோ அல்லது நிறுவனமொன்றோ பகிரங்க அதிகார சபையொன்றின் மேற்பார்வையின் கீழ் தொழில் புரியச் செய்தல்.</td></tr>
<tr><td colspan="2">மேற் கூறப்பட்ட உபபிரிவின் (1) இன் படி எவரேனும் பிள்ளையொருவரினை பணிக்கமர்த்தியிருப்பின், வேலைதருனரோ அல்லது (சிறுவர் தொழிலாளர் தவிர) வேறு நபரோ சட்டத்தினை மீறிய குற்றத்தினைப் புரிந்ததாக கருதப்படுவதுடன் அக்குற்றச்சாட்டிற்கான சுருக்க முறையான விளக்கம் நீதவான் நீதிமன்றில் நடாத்தப்பட்டு 10 000 இற்கு அதிகரிக்காத தண்டப்பணத்திற்கு அல்லது பன்னிரண்டு மாதங்களுக்க மேற்படாத சிறைத் தண்டனைக்கு அல்லது இரண்டிற்கும் அதற்கு மேலதிகமாக நீதிமன்றம் தகுந்ததெனக் கருதும் நட்டயீடொன்றையும் பாதிக்கப்பட்ட சிறுவனுக்கு செலுத்த வேண்டி ஏற்படலாம்.</td></tr>
<tr><td>2006 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டதற்கமைவாக பிரிவு 20 அ(1)</td><td>18 வயதிற்கு குறைந்த எவரும் அபாயகரமான தொழிலில் ஈடுபடுத்தப்படலாகாது.</td></tr>
<tr><td colspan="2">பிரிவு 20 இன் உபபிரிவு (1) இன் படி எவரேனும் நபரொருவர் 18 வயதிற்குக் குறைவான ஒருவரிடத்தே விஞ்சி வேலையினைப் பெறுவாராயின் அவர் குற்றமொன்றைப் புரிந்தவராவார். நீதவானிற்கு முன்னர் நடாத்தப்படும் சுருக்க முறையான விளக்கத்திற்குப் பின்னர் 10000 இற்கு மேற்படாத தண்டப்பணத்தினைச் செலுத்தவோ அல்லது 12 மாதங்களுக்கு மேற்படாத சிறைத்தண்டனைக்கோ அல்லது சில சந்தர்ப்பங்களில் இரண்டிற்குமோ பொறுப்பாக்கப்படுவதுடன் இதற்கு மேலதிகமாக நீதவானினால் தீர்மானிக்கப்படும் தொகையினை அச் சிறுவனிற்கு நட்டஈடாகச் செலுத்த வேண்டி ஏற்படலாம்.</td></tr>
<tr><td colspan="2">1939 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க சிறுவர் மற்றும் இளம் பிராயத்தவர் கட்டளைச் சட்டம்</td></tr>
</table>

## 2.9 சிறுவர் போராளிகள்




**ஆயுதப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும் நபரொருவருக்கு 18 வயது பூர்த்தியடைந்திருக்க வேண்டும் என சர்வதேச மனிதவுரிமைகளுக்கான பொருத்தனைகள் ஏற்பாடு செய்கின்றன.**

**இலங்கையில் ஆயுதப்படைக்கு ஆட் சேர்க்கும் போது நபரொருவருக்கு குறைந்தபட்சம் 18 வருடங்கள் பூர்த்தியடைந்திருக்க வேண்டும்.**

2002 இலிருந்து ஏறத்தாழ 7000 சிறுவர்கள் இலங்கையில் சிறுவர் போராளிகளாக சேர்க்கப்பட்டுள்ளனர். 2009 மே மாதத்தில் மோதல்கள் முடிவிற்குக் கொண்டு வரப்பட்டதன் பின்னர் மொத்தமாக 12 மற்றும் 18 வயதிற்குட்பட்ட 594 சிறுவர்கள் ஆயுதப் படையினரிடம் சரணடைந்திருந்தனர். [20]

| **1989 ஆம் ஆண்டின் சிறுவர் உரிமைகள் சமவாயம்** | |
|---|---|
| **உறுப்புரை 38** | 15 வயதிற்குக் குறைவான சிறுவர்கள் போரில் நேரிடையாக பங்குபற்றாது இருக்க வேண்டிய சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் அரசுகள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதுடன் 15 இற்கும் 18 இற்கும் இடைப்பட்டவர்களில் வயது கூடியவர்கள் இணைத்துக் கொள்ளப்படுவதற்கே முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் |

| **சிறுவர் உரிமைகள் சமவாயத்திற்கான விருப்பப் பின்னேடு*** | |
|---|---|
| சிறுவர்களினை ஆயுத மோதலில் ஈடுபடுத்துவதுடன் தொடர்படைய விருப்பப் பின்னேடு 25 மே 2000 அன்று ஏற்று அங்கீகரிக்கப்பட்டது. இப் பின்னேடானது பொதுவாக ஆயத மோதலின் போது சிறுவர்களினைப் பாதுகாக்கின்றது. இப் பின்னேடானது 2000 ஆகஸ்ட் இல் இலங்கையினால் பின்னுறுதிப்படுத்தவுப்பட்டது. | |
| **உறுப்புரை 1** | அரசுத் தரப்புக்களானவை தமது ஆயுதப்படைகளில் உள்ள 18 வயதினைப் பூர்த்தி செய்யாத நபர்கள் நேரிடையான போர் நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை என்பதனை உறுதி செய்து கொள்ள அவசியப்படும் அல்லது சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் மேற் கொள்ள வேண்டும். |
| **உறுப்புரை 2** | 18 வயதிற்கு குறைவானவர்களை கட்டாய இராணுவத்தில் அல்லது கட்டாய ஆயுதப்படையில் ஆட்சேர்த்தல் தடை செய்யப்பட்டுள்ளது. |
| **உறுப்புரை 3** | அரச தரப்புக்கள் தன்னிச்சையான ஆட்சேர்த்தலுக்கான குறைந்த பட்ச வயதெல்லையாக 15 வருடங்களிலிருந்து அதிகரிக்கலாம். ஆயின் இவ்விதி இராணுவக் கல்விக்கு ஏற்புடையதாகாது அல்லது பிரயோகிக்கப்படக் கூடாது. |
| **உறுப்புரை 4** | தேசிய ஆயுத மோதல் படைகளிலிருந்து வேறுபட்ட ஆயுதமேந்திய குழுக்கள் எந்தவொரு சூழ்நிலையிலும் (கட்டாயப்படுத்தியோ அல்லது தன்னிச்சையான அடிப்படையிலோ) 18 வயதிற்குக் குறைவானவர்களை ஆட்சேர்க்கவோ போரில் பங்கேற்கவோ செய்யக் கூடாது. இவ்வாறான நடத்தைகளை குற்றமெ்ன தடை செய்து தண்டிக்க சட்ட நடவடிக்கைகளை அரச தரப்புக்கள் மேற் கொள்ள வேண்டும். |

[20] https://www.unicef.org/srilanka/reallives_7924.htm

* add from UPR report as release of child combatants

## 2.10 உடல் உறுப்புக்களைக் அகற்றுவதற்காக மனித இழி தொழில் வாணிபம் செய்தல்



உடல் உறுப்புக்களைக் அகற்றுவதற்காக மனித இழி தொழில் வாணிபம் செய்தல் புதிய விடயமொன்றல்ல. பலவருடங்களாக இக் குற்றமானது ஊடகங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், கல்வியியல் மற்றும் மனிதர்களை வாணிபம் செய்தல், தொடர்பான சர்வதேச மற்றும் பிராந்திய அறிக்கைகளில் குறிப்பாக

பெண்கள் மற்றும் சிறுவர்கள் விசேடமான கவனத்தினைப் பெற்றுள்ளது. இப்பிரச்சினை தொடர்பாக இவ்வாறான அக்கறைகள் இருந்த போதிலும் இக்குற்றமானது மறைவாக நடைபெறும், வெளியில் தெரியாத செயலாக மற்றும் பெரியளவில் அல்லது அதிகளவில் அறிக்கைப்படுத்தப்படாத குற்றமாகவே இருக்கின்றது. ஏலவே குறிப்பிட்டதனைப் போன்று மனித இழி தொழில் வாணிப நெறிமுறைகளுக்கமைவாக வாணிபத்தில் பாதிக்கப்பட்ட நபர் ஒரு பிள்ளையாக இருப்பின் அவரை வாணிபம் செய்ய கையாளப்பட்ட ஒழுங்கு முறையற்ற உத்திகள் (வஞ்சனை, பலாத்காரம், மற்றும் பாதிப்பாகும்தன்மையை துஷ்பிரயோகம் செய்தல்) எனும் தேவைப்பாடுகள் தொடர்பானவை தேவையற்றதாகும். அதன் கருத்தானது உடலுறுப்புக்களை அகற்றுவதற்காக பிள்ளைகளை வாணிபஞ் செய்தல் என்பதில் தேவைப்படுத்தப்படும் ஒரேயொரு செயற்பாடு (ஆட்சேர்த்தல், கொண்டு அல்லது கூட்டிச் செல்லல், கைமாற்றுதல், வைத்திருத்தல், அல்லது பிள்ளையை ஏற்றுக் கொள்ளுதல்) சிறுவரானவர் உடலுறுப்புக்களை கவரும் நோக்கத்திற்காக சுரண்டப்பட்டார் என்பதாகும். சிறுவர்களை விற்பனை செய்தல், சிறுவர் விபச்சாரம் மற்றும் சிறுவர் ஆபாசத் திரைப்படம் என்பன தொடர்பாக ஐக்கிய நாடுகள் சிறுவர் உரிமைகள் சமவாயத்திற்கு 2000 ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட விருப்புரிமை பின்னேட்டின் உறுப்புரை 3 (1) (அ) (1) (அ) சிறுவர்களை விற்பனை செய்தல் தொடர்பான உறுப்புரை 2 இல் கூறப்பட்டுள்ளதன் வரைவிலக்கணத்தின் படி கொடைமுனைதல், கையளித்தல் அல்லது ஏற்றுக் கொள்ளல் அல்லது எந்த உத்தியாக இருப்பினும் இலாபத்திற்காக உடலுறுப்புக்களை கவரும் நோக்கத்திற்கானதாக இருப்பின் இவையனைத்தையும் தடை செய்யுமாறு அரசுகளைத் தேவைப்படுத்துகின்றது.[21]

**உங்களுக்குத் தெரியுமா?**

உடலுறுப்புக்களுக்கான இழி தொழில் வாணிபம் என்பதும் மற்றும் மனிதர்களினை உடலுறுப்புக்களை நீக்குவதற்காக இழி தொழில் வாணிபஞ் செய்தல் என்பதும் பகிரங்க விவாதங்களிலும் சட்ட மற்றும் விஞ்ஞான சமூகங்களில் பொதுவாகக் குழப்பிக் கொள்ளப்படினும் இரு வேறுபட்ட குற்றங்களாகும். உடலுறுப்புக்களுக்கான இழி தொழில் வாணிபத்தில் குற்றத்திற்கான விடயமானது உடலுறுப்புக்களாக இருக்கின்ற அதே வேளையில் மனிதர்களினை உடலுறுப்புக்களை நீக்குவதற்காக இழி தொழில் வாணிபஞ் செய்தலில் குற்றத்திற்கான விடயமாக உள்ளது. உடலுறுப்புக்களுக்கான இழி தொழில் வாணிபம் என்பது மனிதர்களினை உடலுறுப்புக்களை நீக்குவதற்காக இழி தொழில் வாணிபஞ் செய்தலிருந்து தோற்றம் பெற்றிருக்க முடியும். எனினும் அவை அடிக்கடி மனித இழி தொழில் வாணிபத்துடன் தொடர்பற்ற வகையிலும் நடைபெற முடியும். இவ்விரண்டையும் குழப்பிக் கொள்வதானது அவ்விரண்டையும் முறியடிப்பதற்கான முயற்சிகளைப் பாதிப்பதுடன் ஒழுங்கமைக்கபட்ட பாதிக்கப்பட்டவருக்கான பாதுகாப்பு மற்றும் உதவிகள் வழங்கப்படுவதனையும் தடுக்கும் வகையில் அமைகின்றது.

[21] https://www.unodc.org/documents/human-trafficking/2015/UNODC_Assessment_Toolkit_TIP_for_the_Purpose_of_Organ_Removal.pdf>

**மனிதவுறுப்புத் திருட்டுக் காரணமாகப் பெண்ணொருவர் பலியானதாக இலங்கையினைச் சேர்ந்த குடும்பத்தினர் குற்றஞ் சாட்டுகின்றனர்.**

வீட்டுப் பணிப்பெண்ணாக தொழில் செய்வதற்காக சோமலதா சதாரசிங்க எனும் பெண் குவைத் சென்றார். 41 வயதான அப் பெண் குவைத்தில் இறந்ததுடன் அவருடைய பூதவுடலானது இரு சிறுநீரகங்கள் மற்றும் விழி வெண்படலங்கள் என்பவையின்றி அம்பாறையிலிருந்த அவரின் வீட்டிற்குத் திருப்பியனுப்பப்பட்டிருந்தது. 'கொலம்பு பேஜ்' இன் கருத்திற்கமைவாக, அப் பெண் உறுப்புக்களுக்காக கொல்லப்பட்டதாக அவரின் உறவினர்கள் குற்றஞ் சாட்டுகின்றனர். அவரின் மரணம் சம்பவித்து 35 நாட்களின் பின்னரே அவரின் பூதவுடல் உறவினர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.
யூலை 10 ஆம் திகதி திருமதி சாரசிங்க மயக்கமடைந்ததால் குவைத் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகப் பாதிக்கப்பட்டவரின் உறவினர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டது. அவர் இரு நாட்களில் மரணமடைந்ததுடன் அவர் தன் சிறுநீரகங்களை தானமாக வழங்கியதாக யூலை 28 ஆம் திகதியன்று குடும்பத்தினருக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

எனினும், வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் துணைப் பொது முகாமையாளர் எல். கே ருகுணுகேயினால் *சண்டே ரைம்ஸ்* இற்கு வழங்கப்பட்ட செவ்விக்கமைய பாதிக்கப்பட்டவர் நோய்வாய்ப்பட்டு கோமா நிலைக்குச் சென்று மூளைச் சாவு அடைந்தமையினால் அவர் தன்னிச்சையாக உறுப்புத் தானம் செய்திருக்க வாய்ப்பில்லை எனத் தெரிவித்தார். 'குவைத் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த இரு நோயாளிகளுக்கு சிறுநீரகங்கள் தேவைப்பட்டதால் சிறுநீரக மாற்றானது குவைத் சட்டத்திற்கு அமைவாக செய்யப்பட்டதாக தமக்கு அறியத் தரப்பட்டதாக ருகுணுகே தெரிவித்தார்.[22]

## 2.11 மகவேற்பு

**1883 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க தண்டனைச் சட்டக் கோவை**

**பி. 360 ஈ**

மகவேற்புடன் தொடர்புடைய குற்றங்கள்

ஆளெவரும், பிறிதொருவரை மகவேற்பச் செய்யும் நோக்கத்திற்காக,

(i) பெற்றோருடைய அல்லது சட்டரீதியான பாதுகாவலரின் சம்மதமின்றி சிறுவரொருவர் வெளிநாட்டுக்குச் செல்ல ஏற்பாடு செய்தல் அல்லது உதவி செய்தல்

(ii) பணம் அல்லது வேறு ஏதேனும் பங்களிப்புக்களின் நிமிர்த்தமாக தாய்மையடைந்துள்ள பெண்ணொருவரின் பிரசவிக்காத சிசுவினை மகவேற்புச் செய்வதற்காக அப் பெண்ணின் சம்மதத்தினைப் பெறுதல்.

(iii) பெண்ணொருத்தியை அல்லது தம்பதியினரை சிசுவை கர்ப்பத்தில் சுமப்பதற்காகப் பணிக்கு அமர்த்தல்

(iv) பிறப்பினைப் பதிவதில் சம்பந்தப்பட்ட நபரொருவர் தெரிந்து கொண்டே பிறப்பினைப் பதிவு செய்வதற்குப் பயன்படுத்தப்படும் எந்தவொரு பதிவையும் அல்லது அத்தகைய பதிவேட்டில் உள்ள எந்தவொரு பதிவையும் பொய்யாக்குவதற்கு அனுமதித்தல்.

(v) தாயினை அல்லது வேறு யாரையேனும் மிரட்டுவதன் மூலம் அல்லது வைத்தியசாலைகள், பெண்களுக்கான காப்பிடங்கள், கிளினிக்குகள், நேசரிகள் மற்றும் பகல் நேர பராமரிப்பு மையங்கள் அல்லது ஏனைய சிறுவர் பராமரிப்பு அல்லது நலன் புரி மையங்கள் என்பவற்றிவிலிருந்து பணம் அல்லது வேறு பங்களிப்புக்களுக்காக அந் நிறுவனம் அல்லது நிலையத்திலிருந்து சிறுவர்களினைப் பெறுதல்; அல்லது

[22] <https://www.wsws.org/en/articles/2002/08/orga-a30.html>

| | |
|---|---|
| (vi) | தாயாக ஆள்மாறாட்டம் செய்தல் அல்லது அதற்கு உதவுதல் குற்றமொன்றைப் புரிந்தவராகும். |
| **தண்டனை** | - இருபது வருடங்களுக்கு மேற்படாத ஏதேனுமொரு வகையினதான சிறைத்தண்டனை அல்லது தண்டப்பணம் அல்லது இவையிரண்டும். |

- **1941 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க மகவேற்புக் கட்டளைச் சட்டம்**

## 2.12 திருமணம்

- **1907 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க பொது திருமணக் கட்டளைச் சட்டம்**

| | |
|---|---|
| **1995 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டதற்கமைவாக பொதுத் திருமணக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 15** | திருமணம் புரியும் கட்சிக்காரர்களில் இருவரும் 18 வயதினை பூர்த்தி செய்திருக்காவிடின் அத் திருமணம் வலிதற்றதாகும். |
| **பி. 20**<br>**திருமணத்திற்காக கட்டாயப்படுத்தும் வழக்கிடல்கள் தடை செய்யப்பட்டுள்ளன.** | திருமணத்திற்கான வாக்குறுதியின் காரணமாகவோ அல்லது பெண்ணொருவரை திருமண வாக்குறுதியளித்து உறவு கொண்டதன் காரணமாகவோ அல்லது வேறேதேனும் காரணங்களின் நிமித்தமாக திருமணம் செய்யுமாறு கட்டாயப்படுத்துகின்ற வழக்குகள் எதுவும் நீதிமன்றங்களில் முற்போடப்பட முடியாது. |

- **1962 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க கண்டிய திருமண மற்றும் விவாகரத்துச் சட்டம்**

இதற்கு மேலதிகமாக, 1995 ஆம் ஆண்டு கண்டியத் திருமண மற்றும் விவாகரத்துச் சட்டமானது திருமணத்திற்கான ஆகக் குறைந்த வயதெல்லையினை ஆண் மற்றும் பெண் என இருபாலாருக்கும் 18 ஆக உயர்த்தும் வகையில் திருத்தப்பட்டதுடன் அவ்வயதிற்குக் குறைந்தவர்களிடையேயான திருமணத்தினை வலிதற்றது எனவும் ஏற்பாடு செய்கின்றது.[23]

அதனால் சட்டத்திற்கமைவாக பாலியல் விடயங்களுக்கு சம்மதம் வழங்குவதற்கான ஆகக் குறைந்த வயதெல்லையாக முஸ்லிமல்லாத பெண்களுக்கு 16 வயது காணப்படுவதுடன் திருமணத்திற்கான சட்ட பூர்வ வயதாக 18 காணப்படுகின்றது. சட்டரீதியான பாலியல் வன்புணர்பு சம்பந்தப்பட்ட இணக்கத்தினை வழங்குவதற்கான வயதெல்லையாகவும் திருமணத்திற்கான ஆகக் குறைந்த வயதெல்லையாகவும் முஸ்லிம் சிறுமிகளுக்கு 12 வயதானது காணப்படுகின்றது.[24]

- **1951 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க முஸ்லிம் திருமண மற்றும் விவாகரத்துச் சட்டம்**

அதனையொத்த சம சட்டங்களான பொது திருமணக் கட்டளைச் சட்டம் மற்றும் கண்டிய திருமண மற்றும் விவாகரத்துச் சட்டம் என்பவற்றைப் போலல்லாது முஸ்லிம் சட்டமானது திருமணத்திற்கான ஆகக் குறைந்த வயதெல்லையொன்றைத் தீர்மானிக்கவில்லை. தேவையெனக் கருதப்படுகின்ற போது, அப்பிரதேசத்திற்கான காதியின் அனுமதியின்றி 12 வயதிற்குக் குறைவான முஸ்லிம் சிறுமியொருத்தியின் திருமணமானது பதிவு செய்யப்படுதலினை பிரிவு 23 ஆனது தடை செய்கின்றது. தெரிந்து கொண்டே அவ்வாறான திருமணத்தினை பதிவு செய்கின்ற பதிவாளர் அல்லது அவ்வாறான செயலொன்றை ஊக்குவிக்கின்ற அல்லது அதற்கு

[23] இலங்கையில் சிறுவர் திருமணத்தின் போருக்குப் பிந்தைய போக்குகள், பொகுஸ் வுமன், 2015
[24] Ibid

உடந்தையாக இருக்கின்ற ஆளெவரும் குற்றமொன்றை புரிந்தவர்களாகக் கருதப்படுவர்.[25] எனினும், அக் குற்றத்திற்கான தண்டப்பணமானது குறைவாகவும் போதுமற்றதாகவும் உள்ளது. அதற்கு மேலதிகமாக பொதுத் திருமணக் கட்டளைச் சட்டம் அல்லது கண்டிய திருமண மற்றும் விவாகரத்துச் சட்டம் என்பவற்றினால் தேவைப்படுத்தப் படுவதனைப் போன்று வயது தொடர்பான விபரங்கள் திருமணப் பதிவின் போது தேவைப்படுத்தப்படவில்லை. எனினும், தண்டனைச் சட்டக் கோவையின் [26] பிரிவு 363 ஏற்பாடு செய்வதற்கமைவாக திருமணம் செய்திருப்பினும் கூட 12 வயதிற்கு குறைவான பெண்ணுடன் பாலியல் உறவு வைத்தல் குற்றமொன்றாக அங்கீகரிக்கப்படுவதால் இவ் தற்றுணிபு ஏற்பாடானது நடைமுறையில் வழக்கொழிந்துள்ளது. அதன் விளைவாக, முஸ்லிம்களுக்கான திருமணத்திற்கான ஆகக் குறைந்த வயது 12 ஆகும்.[27]

### இலங்கையின் திருமணச் சட்டத்தினால் பாதிக்கப்பட்டோர்

இலங்கையில் திருமணத்திற்கான சட்டரீதியான வயது 18 ஆகும். எனினும், பல தசாப்தங்களாக பழமையான சமூகச் சட்டத்தின் கீழ் மிகவும் இளம் பிராயத்தவர்களான முஸ்லிம் பெண்கள் திருமணம் செய்து கொள்ளக் கூடியதாக இருந்தது. இச் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் அதிகரிக்கப்படுகின்ற அதே வேளையில் சிங்கள பிபிசியினுடைய சரோஜ் பத்திரன அவர்கள் அவளது விருப்பத்ததிற்கு மாறாக திருமணம் செய்வதற்கு கட்டாயப்படுத்தப்பட்ட இளம் பெண்ணொருத்தியினைச் சந்திக்கின்றார்.[28]

ஷபா[29] என்பவள் கட்டாயப்படுத்தப்பட்டு திருமணஞ் செய்து வைக்கப்பட்ட போது அவளுக்கு 15 வயதாகியிருந்தது. *“பரீட்சைகளுக்குப் படித்துக் கொண்டிருந்த போது நான் பிறிதொரு ஆணுடன் காதல் வயப்பட்டேன்.”* எனத் தெரிவிக்கையில் அவளது கன்னங்களில் கண்ணீர் வழிந்தோடியது. *“எனது பெற்றோருக்கு அது பிடிக்கவில்லை. அவர்கள் என்னை எனது மாமாவின் வீட்டிற்கு அனுப்பினார்கள். நான் அங்கு படித்துக் கொண்டிருந்த போது, அங்கு வழமையாக வருகை தரும் வருகையாளனொருவர் என்னைத் திருமணம் செய்ய விரும்புவதாக எனது மாமாவிற்கும் மாமிக்கும் தெரிவித்தார்.”*

மிகவும் பின்தங்கிய இலங்கையின் கிராமமொன்றிலே முஸ்லிம் குடும்பத்தைச் சேர்ந்த ஷபா அதற்கு மறுப்புத் தெரிவித்தாள். தன்னுடைய இரண்டாம் நிலைப் பாடசாலைக் கல்வியினை முடித்த பின்னர் தான் காதலித்த ஆணை திருமணம் செய்ய அவள் விரும்பினாள். அவளின் மறுப்புக்களுக்குப் புறம்பாக அவளுடைய மாமாவும் மாமியும் தங்களுடைய நண்பருக்கு அவளைத் திருமணம் செய்து வைத்தனர். திருமணத்திற்கு மறுப்புத் தெரிவித்த போதெல்லாம் அவள் அடிக்கப்பட்டாள். அவர்கள் சொல்வதைக் கேட்காது விடின் தாம் தம்மை மாய்த்துக் கொள்வோம் என அவளின் மாமாவும் மாமியும் மிரட்டினர்.

*“எனக்கு வேறு வழிகள் இல்லாமையினால் நான் எனது கைகளை வெட்டிக் கொண்டேன்,”* என தழும்புகளைக் காட்டுவதற்காக தன்னுடைய சட்டையின் கைகளினை மேலிழுத்தவாறு ஷபா தெரிவித்தாள். *“நான் எனது மாமாவின் வீட்டிலிருந்த மாத்திரைகள் சிலவற்றை உட்கொண்டேன். நான் வைத்தியசாலையில் சிகிச்சைக்குட்படுத்தப்பட்ட போது, அவர்கள் வைத்தியருக்கு கையூட்டு வழங்கி விட்டு சேலைன் போத்தலுடன் சேர்த்து என்னை தனியார் வைத்தியசாலைக்கு இடம் மாற்றினர். சில நாட்களின் பின்னர் அவர்கள் என்னை அம் மனிதனுக்கு பலவந்தமாகத் திருமணம் செய்து வைத்தனர்.”*

---

[25] முஸ்லிம் திருமண மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் பிரிவ 82 ஆனது 100 ரூபாவிற்கு மேற்படாத தண்டப்பணத்தினையும் 6 மாதங்களுக்கு மேற்படாத சிறைத் தண்டனையையும் பிரிவுகள் 22,23 மற்றும் 24 இனை மீறுகின்ற பதிவாளர் அல்லது அவ்வாறான திருமணங்களை பதிவு செய்வதற்கு உதவி செய்கின்ற அல்லது உடந்தையாக இருக்கின்ற ஆளெவருக்கும் சுமத்துகின்றது.

[26] Penal Code Act No.16 of 2006

[27] Post War Trends in Child Marriage, FOKUS Women, 2015

[28] <https://www.bbc.com/news/world-asia-39898589>

[29] Shafa's name has been changed to protect her privacy.

தப்பிக்க வழியேதுமில்லாத காரணத்தினால் ஷபா தனது இளங் கணவருடன் சேர்ந்திருக்க முடிவு செய்தாள். எனினும் , அவள் தன் காதலனுடன் உறவைத் தொடர்வதாக அவன் சந்தேகித்தான்.

*“அவன் என்னை நாளாந்தம் அடித்தான்,”* என அவள் தெரிவித்தாள். *”நான் கர்ப்பமாக இருப்பதாக அவனிடம் சொன்ன போது அவன் என்னைப் பிடித்து நிலத்தில் எறிந்தான். அத்துடன் அவனுக்கு நான் ஒருநாளிரவிற்கு மாத்திரமே தேவைப்பட்டதாகவும் அது தனக்கு கிடைத்து விட்டதாகவும் இனி தனக்கு அவள் தேவையில்லை எனவும் அவன் தெரிவித்தான்.”*

வன்முறையினால் அவள் தன்னுடைய குழந்தையினை இழந்தமையினை அவள் வைத்தியசாலையில் வைத்தே தெரிந்து கொண்டாள். ஷபா பொலிஸ் நிலையத்திற்குச் சென்ற போது அவளின் முறைப்பாட்டினை அவர்கள் தீவிரமாக எடுத்துக் கொள்ளவில்லை. ஒரு நாள் கிராமத்திலிருந்த பள்ளிவாசலிலிருந்து அவளுக்குத் தொலைபேசி அழைப்பொன்று வந்தது. அங்கு, அவளின் கணவன் திருமணத்தினை தொடர்ந்து கொண்டு செல்வதற்கு சம்மதித்திருப்பினும் அவள் அதற்கு மறுப்புத் தெரிவித்தாள். சில நாட்களின் பின்னர், இனந்தெரியாதோரிடமிருந்து நாளொன்றுக்கான அவளின் கட்டணம் என்ன என்று வினவி தொலைபேசி அழைப்புக்களும் குறுஞ் செய்திகளும் வரத் தொடங்கின.

தன்னுடைய கணவனே தனது புகைப்படத்தினையும் தொலைபேசி இலக்கத்தினையும் சமூக வலைத்தளத்தில் பகிர்ந்திருப்பதனை ஷபா தெரிந்து கொண்டாள். அழைப்பெடுத்தவர்கள் அவளை இழி சொற்களால் பயமுறுத்தியதுடன் ‘*உனது கணவனிடமிருந்தே உன் தொலைபேசி எண்ணைப் பெற்றுக் கொண்டோம்*’ எனக் கூறினர்’

*“நான் அத் தொலைபேசி அழைப்புக்களை பதிவு செய்தேன். என்னிடம் அக் குறுஞ் செய்திகள் இன்னமும் உள்ளன’* அழுகையினை கட்டுப்படுத்த முடியாத ஆனாலும் தன்னுடைய கதையினை வெளியில் சொல்லுவதற்கு தீர்மானித்த ஷபா சொன்னாள். நடைபெற்ற விடயங்களுள் தொடர்புபடுவதற்கு ஷபாவின் தந்தை விரும்பவில்லை. ஆயினும் அதிர்ச்சிகரமான அத்திருமணத்திலிருந்து மீள்வதற்கான உளவியல் மற்றும் சட்ட உதவிகளைப் பெறுவதற்காக அவளது தாயார் அவளை சமூக மையங்களுக்கு அழைத்துச் செல்கின்றார். வெளிப்படையாக உளவியல் உதவிகளைப் பெறுவது இன்னமும் இலங்கையில் தவிர்க்கப்படுமொன்றாக இருப்பதால் அவர்கள் மையத்திற்கு இரகசியமாகவே வருகை தருகின்றனர். ஷபாவின் தாயார் கிராமத்தில் நாளாந்த கூலி வேலைகள் செய்து தன்னுடைய ஐந்து பிள்ளைகளையும் காப்பாற்றி வருகின்றார். 1990 இல் தமிழ் விடுதலைக் கிளர்ச்சியாளர்களால் அவர் தன் சொந்த ஊரிலிருந்து வெளியேற்றப்பட்டிருந்தார்.

*“சம்பவமொன்றின் காரணமாகவே நான் எனது மகளை எனது சகோதரனின் வீட்டிற்கு அனுப்பினேன். அவளுக்கு இவ்வாறு நடக்கும் என நான் ஒரு போதும் நினைக்கவில்லை,”* என அவர் தெரிவித்தார். தனது மகள் திருமணத்திற்காக வற்புறுத்தப்படுவதனை தான் எதிர்த்த போதிலும் தனது சகோதரன் தன்னுடைய எதிர்ப்பினை செவிமடுக்கவில்லை என அவர் தெரிவித்தார்.

***“அதுவொரு கட்டாயத் திருமணம்”*** என அவள் கூறினார் *“அவளைப் பற்றி அவளின் கணவன் பரப்பிய பொய்களினால் அவளின் பாதுகாப்பு மற்றும் கல்வி தொடர்பில் நான் கவலை கொள்கின்றேன். அவளுக்கு வகுப்புக்களுக்கு போக முடியவில்லை. அவளால் பேருந்தில் பயணிக்க முடியவில்லை. அவளது மொத்த எதிர் காலமும் நிச்சயமற்றதாகியுள்ளது.”*



**பயிற்சி 4**

மேற்போந்த சம்பவக் கற்கையின் விபரங்களை கருத்திற் கொண்டு இந் நிகழ்வானது திருமணத்திற்காக இழி தொழில் வாணிபமாக கருதப்பட் முடியுமா எனக் குழுக்களாக கலந்தாலோசிக்க. உமது முடிவிற்கான காரணங்களைத் தருக.


## மூன்றாவது கற்கையலகு

| வடிவங்கள் காரணங்கள் மற்றும் விளைவுகள் | | |
|---|---|---|
|  | **விரிவுரைகளின் எண்ணிக்கை மணித்தியாலங்கள்** | 4 |
|  | **மதிப்பீட்டு முறைகள்** | வகுப்பறைக் கலந்துரையாடல் |
| | **கற்றலின் பயன்விளைவுகள்** | கற்கையின் முடிவில் பின்வருவன பங்கேற்பாளர்களுக்கு இயலுமானதாயிருக்கும்<br><br>• ஏன் வயது வந்தவர்களை விட சிறுவர்கள் இழிதொழில் வாணிபத்தினால் பாதிக்கப்படக் கூடியவர்கள் என்பதை விளங்கிக் கொள்வதுடன், வாய்ப்பான கடத்தற்காரர்களை அடையாளம் காண்பர்.<br>• சிறுவர் இழிதொழில் வாணிபத்தின் பல்வேறுபட்ட அமைப்புகளை அடையாளம் காண்பர்.<br>• சிறுவர் இழிதொழில் வாணிபத்துடன் தொடர்புடைய குற்றங்களை விளங்கிக் கொள்வர்.<br>• எவ்வாறு சிறுவர் இழிதொழில் வாணிபம் சிறுவரையும், சமூகத்தையும் பாதிக்கின்றது என்பதை அறிவர். |

### 3.1 சிறுவர் இழிதொழில் வாணிபம் எவ்வாறு செயற்படுகிறது.

**சிறுவர் இழிதொழில் வாணிபத்தினை இல்லாதொழிப்பதற்கு, எவ்வாறு சிறுவர் இழிதொழில் வாணிபம் இடம்பெறுகின்றது எனவும், சிறுவர் இழிதொழில் வாணிபத்தில் ஈடுபடும் திறத்தவர்களை விளங்கிக் கொள்ள வேண்டியது அவசியமாகும்.**

1. *சிறுவர்கள், வளர்ந்தோரைக் காட்டிலும் இழிதொழில் வாணிபத்திற்கு உள்ளாக்கப்பட மிகவும் பலவீனமானவர்களாவர்.*
   எவ்வாறு சிறுவர் இழிதொழில் வாணிபம் இடம்பெறுகின்றது என ஆராய்வதற்கு முன்னர், ஏன் சிறுவர்கள் இழிதொழில் வாணிபத்திற்கு எளிதில் பாதிப்படையக் கூடியவர்களாக இருக்கின்றார்கள் எனவும், சமூகத்தின் பொறுப்பினையும் முதலில் விளங்கிக் கொள்வது முக்கியமானதாகும்.




**ஏன் சிறுவர்கள் இழிதொழில் வாணிபத்திற்கு மிகவும் பாதிப்படையக் கூடியவர்களாக இருக்கின்றனர்?**

மூலம் : எழுத்தாளரினால் வடிவமைக்கப்பட்டது.

சிறுவர்கள் மட்டுமே இழிதொழில் வாணிபத்திற்கு உள்ளாகி பாதிப்படைகின்றார்கள் எனக் கொள்ளலாகாது என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும். எனினும், வயது வந்தவர்கள் பாதிப்படைவதைப் பார்க்கிலும் அவர்கள் வேறுபட்ட வழிகளில் பாதிப்பிற்கு உள்ளாகின்றார்கள். சிறுவர்கள் ஒருபோதும் வயது வந்த இளையோராகக் கருதப்படக் கூடாது.

மேற்குறித்த காரணிகள் எவரேனும் சிறுவருக்கு பொதுவானவை எனபது நினைவில் கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும். பின்வரும் காரணிகள் சிறுவரின் மீதான பாதிப்பினை மேலும் அதிகரிக்கக் கூடியதாகும்.

- பாலப்பருவமும் குழந்தைப் பருவத்தின் ஆரம்பமும்
- உடல், உள இயலாமைகள்
- சிறுவனின் அல்லது அவரது குடும்பத்தின் உள்ளக இடப்பெயர்வு அல்லது அகதி நிலமை
- ஆயுத முரண்பாடு, சிவில் சமூகத்திலான அமைதியின்மை, இயற்கை அல்லது மனிதனால் உருவாக்கப்பட்ட அனர்தங்களுக்கு பாதிக்கப்பட்டவராயிருத்தல்.
- நோய்
- குழப்பமான குடும்பத்திலிருந்து வரும் சிறுவர்கள்
- கவனமும் பாதுகாப்பும் தேவைப்படும் சிறுவர்கள்.

### 2. சிறுவர் இழிதொழில் வாணிபத்தில் ஈடுபடும் நபர்கள்

இழிதொழில் வாணிபமானது பல நபர்களை அல்லது நிறுவனங்களை உள்ளடக்கிய ஒரு செயற்பாடாகும். இழிதொழில் வாணிபத்தில் ஈடுபடுபவர்களால் சிலர் நேரடியாகவே தொடர்புபட்டுள்ள அதேவேளை, மற்றையவர்கள் இழிதொழில் வாணிபத்தின் வேறுபட்ட படிநிலைகளில் இழிதொழில் வாணிபத்தில் ஈடுபடுபவர்களுக்கு அவ்விழிதொழில் வாணிபம் வெற்றியளிப்பதற்காக ஒத்துழைத்து வசதி வாய்ப்பளிப்பவர்களின் வகிபங்கினை வகிக்கின்றனர். எனினும், குறிப்பாக பெண்கள் மற்றும் சிறுவர் தொடர்பிலான இழிதொழில் வாணிபத்தினைத் தடுக்கவும், குறைக்கவும், தண்டிக்கவுமான பலேர்மோ பின்னேட்டிற்கு அமைய இழிதொழில் வாணிபத்தின் இடைநிலைகளில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ என்றில்லாமல், இழிதொழில் வாணிப செயற்பாட்டில் உள்ளடங்கும் ஒவ்வொரு நபர்களும் இழிதொழில் வாணிபக் குற்றத்திற்கே பொறுப்புடையவர்களாக்கப்பட வேண்டுமென்பது கவனத்திற் கொள்ளப்பட வேண்டியதாகும்.

அதற்கிணங்க இழிதொழில் வாணிபத்தில் ஈடுபடுபவர்கள் முக்கியமாக இரு வகைப்பாட்டிற்குள் உள்ளடங்குகின்றனர்.

**சிறுவர் இழிதொழில் வாணிபம்**

**இழிதொழில் வாணிபத்தில் ஈடுபடுபவர்கள்**

- சிறுவர் இழிதொழில் வாணிப செயற்பாட்டில் ஒன்று அல்லது பல கட்டங்களில பங்களிப்பு செய்யும் நபர
- சிறுவரை பொருளாதார, பாலியல், அல்லது வேறு ஏதேனும் வழியில் சுரண்டுவதற்காக எண்ணம் கொண்ட நபர்.

உதாரணம்

- ஆட்சேர்ப்பவர்கள்
- ஆவணங்கள் வழங்குபவர்
- போக்குரத்து செய்விப்பவர்.
- ஊழல் அதிகாரிகள்
- இழிதொழில் வாணிபத்திற்கு உட்பட்ட சிறுவர்களின் தொழில் தருனர்.

**இழிதொழில் வாணிபத்திற்கான இடைத்தரகர்கள்**

- கடத்தல் செயற்பாட்டில் நேரடியாக அல்லாமல் கடத்தற்காரர்களுக்கு உதவும் நபர்கள்
  உதாரணம்
- இழிதொழில் வாணிபத்தில் ஈடுபடுபவர்களுக்கு எல்லைக் கடப்புக்கள் எங்கு எப்போது திறந்திருக்கும் என தகவல் வழங்கும் நபர்கள்
- இழிதொழில் வாணிபத்தில் ஈடுபடுபவர்களுக்கு சிறுவர்களை போக்குவரத்து செய்விப்பதற்கான சிறந்த நேரம் தொடர்பில் அறிவுரை வழங்குபவர்கள்
- எல்லைக் காவலர், குடியகல்வு அதிகாரிகள், சட்ட அமுலாக்க அலுவலர் போன்றோருக்கு இலஞ்சம் வழங்கும் நபர்கள்

## 3.2 சிறுவர் இழிதொழில் வாணிபத்தில் முக்கிய வடிவங்கள்.

பல வழிகளில் சிறுவர்கள் இழிதொழில் வாணிபத்தினால் பாதிப்படைய முடியும். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் சிறுவர்கள் இழிதொழில் வாணிபத்தினை செயற்படுத்துபவர்களாலேயே கடத்தலினால் பாதிப்படைகின்றனர். சில சந்தர்ப்பங்களில் அயலவர்கள், நெருங்கிய உறவினர்கள், நண்பர்கள் அல்லது பெற்றோர்களால் கூட பாதிப்படைய முடியும்.

***எடுத்துக்காட்டு I: நண்பர்களால்***

*குமாரி, சமன் என்பவரை மணம் முடித்த 32 வயதுடையவராவார். சமன் மத்திய கிழக்கில் வேலை செய்கின்றார். அவருடைய பிரசன்னமின்மையின் போது, குமாரி அவரது மகளை தினமும் பாலர் பாடசாலைக்கு பயணம் செய்விக்கும் வாகனத்தின் சாரதியான பிரியந்தவுடன் காதல் வயப்படுகிறாள். பிரியந்தவுடனான குறித்த உறவினால் குமாரி கர்ப்பவதியாகிறாள். குமாரியோ பிரியந்தவோ குழந்தை பெற்றுக்கொள்ள விரும்பவில்லை. அவர்கள் குழந்தையை கருக்கலைப்பு செய்ய உத்தேசிக்கின்றனர். குமாரியை காப்பாற்ற அவரது நண்பி நளனி முனைகிறார். அவர் கருக்கலைப்பு செய்வது சட்ட விரோதமானது என குமாரிக்கு அறிவுரை கூறி குழந்தை பிரசவிக்கும் வரை தன்னுடன் வசிக்குமாறு கூறுகின்றார். மேலும் நளனி குழந்தை பிந்தவுடன் அதற்கு ஒரு திட்டம் வைத்திருப்பதாகக் கூறுகின்றார். குமாரி அதற்கு இணங்கி குழந்தை கிடைக்கும் வரை நளனியுடன் வசிக்கின்றார். பின்னர் நளனி குமாரிக்கு இதற்கான ஒரு நல்ல மாற்றாக பராமரிப்பு நிலையத்தில் குழந்தையை பராமரிப்பதற்காக விட முடியும் எனக் கூறுகின்றாள். நளனி பிள்ளையை ஒரு நபருக்கு விற்க, அந்நபர் பிச்சை எடுப்பதற்காக பயன்படுத்த பிறிதொரு நபருக்கு அக் குழந்தையை விற்கின்றார்.*

***எடுத்துக்காட்டு II: அயலவர்களால்***

*13 வயதான ரவி தனது பெற்றோரை விபத்தொன்றில் இழந்தமையினால் தனது மாமா, மாமியுடன் வாழ்கின்றான். ரவியினை பராமரிக்க அவனது மாமா விரும்பவில்லை. அவர் அவனை மோசமாக நடத்தினார். குறித்த குடும்பத்தினரால் ரவி எவ்வாறு மோசமாக நடத்தப்படுகின்றான் என்பதை அயலவரான சிறிசேன பார்க்கின்றார். ஒரு நாள் சிறிசேன சிறுநீரகம் கேட்டு ஒரு பத்திரிகை விளம்பரத்தினை காண்கிறார். சிறிசேன ரவியிடம் கொழும்புக்கு ஹொட்டல் ஒன்றில் ஒரு வேலை பார்க்க விரும்புகிறாயா எனக் கேட்கின்றார். மாமாவினால் மோசமாக நடத்தப்படுவதை தாங்கிக் கொள்ள முடியாத ரவி குறித்த பரிந்துரைக்கு சம்மதிக்கின்றான். சிறிசேன ரவியை கொழும்புக்கு கூட்டிச் சென்று சிறிநீரகமொன்றுக்கு விளம்பரம் செய்த நபரான பிரதீப்பிற்கு விற்கின்றார். பிரதீப் ரவியின் சிறிநீரகத்தை அகற்ற ஒரு வைத்தியசாலைக்கு மீள விற்கின்றார்.*

***எடுத்துக்காட்டு III: பெற்றோரால்***

*ஒரு குடும்பத்தில் மாலா 14 வயதான நான்காவது பிள்ளை. அவளுடைய பெற்றோர் அருகில் உள்ள கற்குழியில் தொழிலாளர்கள். அவள் படிப்பில் கெட்டிக்காரியாக இருந்தாலும், தரம் 5ற்குப் பின்னர் வறுமையின் காரணமாக அவளுடைய பெற்றோர் அவளை பாடசாலைக்கு அனுப்ப இயலவில்லை. அவளுடைய பெற்றோர் நந்தனிக்கு கடனாளிகள். நந்தனி ஒரு நாள் பணத்தினை வாங்க வந்த நந்தனி தனக்குத் தெரிந்த கொழும்பில் வதியும் செல்வந்த குடும்பமொன்று ஒரு பிள்ளையை தத்தெடுக்க இருப்பதாக மாலாவின் தாய்க்கு கூறுகின்றாள். மாலாவுக்கு நல்ல கல்வியும் வாழ்வும் கிடைக்கும் என நந்தனி கூறுகின்றாள். மாலாவை தத்தெடுக்க இருப்பவர்கள் கடன்களை அடைக்கவும் அதற்கு மேலதிகமாக மற்றைய பிள்ளைகளளை பராமரிப்பு தொகையொன்றை வழங்க இணங்கியிருப்பதாகவும் கூறுகின்றாள். இந்த ஆலோசனைக்கு பெற்றார் இணங்குகின்றனர். நந்தனி மாலாவின் பெற்றோருக்கு கொஞ்ச பணத்தினைக் கொடுத்து மாலாவை தன்னுடன் கூட்டித் செல்கிறாள். நந்தினி மாலாவை செல்வந்த குடும்பமொன்றுக்கு வீட்டுப் பணியாளாக விற்கிறாள்.*

எனினும், சில கணிசமானளவு சந்தர்ப்பங்களில் சிறுவர்கள் தாங்களாகவே, அதாவது வேலை தேடி செல்வது போன்ற தமது சொந்த நடவடிக்கையினால் இழிதொழில் வாணிபத்தினால் பாதிப்படைந்தவர்களாக ஆகின்றனர்.சிறுவர்கள் இழிதொழில் வாணிபத்தினை எதிர்கொள்ள சிறுவர் இழிதொழில் வாணிபத்தின் முக்கிய வடிவங்களைப் புரிந்து கொள்வது அவசியமாகும்.


❖ **விற்கப்படுதல்.**



சிறுவர் இழிதொழில் வாணிபத்தில் இழிதொழில் வாணிபத்தில் ஈடுபடுபவர்களிடம் வர்த்தக, பாலியல், அல்லது ஏதேனும் வகையாக சுரண்டலுக்காக பிள்ளைகளை விற்பது மிகவும் பொதுவானதாகும். இழிதொழில் வாணிபத்தில் ஈடுபடுபவர்களுக்கு பிள்ளைகள் விற்கப்படுவதற்கு பல காரணங்கள் இருப்பதுடன் அவர்கள் அவ்வாறு வாங்கப்படுவதற்கும் பல்வேறு காரணங்கள் காணப்படுகின்றன. வயதானவர்களை வாங்குவதை பார்கிலும் சிறுவர்களை வாங்க இழிதொழில் வாணிபத்தில் ஈடுபடுபவர்கள் விரும்ப பின்வருவன காரணமாக அமைகின்றன.

1. சந்தையில் தொழில் இடங்களில் இருந்து உயர்ந்த கேள்வி காணப்படல்.

   குற்றப் பொறுப்புக்கான வயது சிறுவர்களுக்கு வேறுபாடானதாகக் காணப்படுவதனால், இழிதொழில் வாணிபத்தில் ஈடுபடுபவர்கள் சிறுவர்களை போதைப்பொருட் கடத்தல், ஆயுதக் கடத்தல், பிச்சை எடுத்தல், ஆபாசப்படம் போன்ற சட்ட விரோதமான நடவடிக்கைகளில் ஈடுபடுத்த விரும்புகின்றனர்.




2. கட்டுப்படுத்த இலகுவாயிருத்தல்.



   சிறுவர்கள் அவர்களின் வயது மற்றும் பலவீனம் காரணமாக கட்டுப்படுத்த இலகுவானவர்களாய் இருக்கின்றனர்.

   சிறுவரை தேடுவதற்கோ அல்லது இழிதொழில் வாணிபத்தில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக பொலிசாரிடம் முறையிடவோ ஒருவரும் இல்லாத நிலையும் காணப்படலாம்.
   **உதாரணமாக**: வீதியோரச் சிறுவர்கள், கவனிப்பாரற்று விடப்பட்ட சிறுவர்கள்.



3. வஞ்சிக்கப்பட்டிருத்தல்/கட்டாயப்படுத்தப்படல்/இணங்குவித்தல்/பயமுறுத்தப்படல்.
   விற்கப்படுவதற்கும் மேலாக இழிதொழில் வாணிபத்திற்காய் சிறுவர்கள் வஞ்சிக்கப்பட்டிருக்கலாம், கட்டாயப்படுத்தப்பட்டிருக்கலாம், இணங்குவிக்கப்பட்டிருக்கலாம் அல்லது பயமுறுத்தப்பட்டிருக்கலாம்.

***எடுத்துக்காட்டு***
*16 வயதான சீதா தனது 66 வயதான பாட்டியுடன் புத்தளத்தில் வசித்தாள். பெற்றோர் விபத்தொன்றில் மரணித்து விட்டனர். பாட்டி சமுர்த்தி பயனாளியாயிருந்தார். க.பொ.த உ/த பரீட்சைக்கு தோற்றிய பின்னர் அவள் வேலை ஒன்றைத் தேடுகிறாள். குருநாகலையில் உள்ள ஆடைத் தொழிற்சாலையில் இணைந்தாள். ஆடைத் தொழிற்சாலையில் வேலை செய்தபோது 28 வயதான அனுரவை சந்தித்தாள். அனுரவினால் அவளது நம்பிக்கையை இலகுவாக காதலையும், பராமரிப்பினையும் காட்டுவதனால் வெல்ல முடிந்தது. அனுர தனக்கு இத்தாலியில் நல்ல வேலை கிடைத்திருப்பதாகவும் தன்னுடன் அவளை வருமாறும் அழைத்தான். அவளும் சம்மதித்து இத்தாலிக்கு அவனுடன் பயணித்தாள். இத்தாலிக்கு சென்றதும் அவன் அவளை ஒரு விபச்சார விடுதிக்கு விற்றான். சீத்தாவின் பாட்டி அவள் இன்னொரு நாட்டுக்குச் சென்றது தெரியாமல் அவள் குருநாகலையில் வதிவதாக நம்பிக்கொண்டிருக்கிறாள். ஆடைத் தொழிற்சாலையில் சீத்தாவின் நண்பர்கள் சீத்தா அனுரவுடனான காதலை அறிந்திருந்தனர். அவர்கள் சீத்தா அனுரவை திருமணம் செய்து கொண்டு வேறொரு நாட்டுக்கு சென்று விட்டதாக நம்புகின்றனர். எனவே சீத்தாவினை தேட எவரும் கருத்திற் கொள்ளவில்லை.*

## ❖ வஞ்சிக்கப்படுதல் அல்லது ஏமாற்றப்படுதல்.



பிள்ளையிடம் ஏதேனும்மொன்றை உண்மை என நம்ப வைப்பதற்காக புரியப்படும் வேண்டுமெனச் செய்யப்படும் செயல். வஞ்சிக்கப்படுதலுக்கான சாட்சியங்களானது ஏனையவர்களுள் பொய்யான உடன்படிக்கைகள், நம்ப வைக்கப்படும் கதைகள், பொய்யான வாக்குறுதிகளில் மூலமாக கண்டுபிடிக்கப்பட முடியும். மேலும் சிறுவர் முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ வஞ்சிக்கப்படலாம். இல்லாததொரு வாக்குறுதிக்காக சிறுவர் வஞ்சிக்கப்படுமிடத்து அது முழுமையான வஞ்சித்தலாகக் கொள்ளப்படலாம்.

**உதாரணம் :** அவன் அல்லது அவள் சிறுவரின் பெற்றோரினால் அவர்களது வீட்டிற்கு அழைத்துச் செல்லப்பட அனுப்பப்பட்டிருப்பதாகக் கூறுதல் அல்லது அவன் அல்லது அவளை சுயநினைவு இழக்கச் செய்யும் வகையில் ஏதேனும் சாப்பிடக் கொடுத்தல் அல்லது அவன் அல்லது அவளின் பெற்றோர் விபத்தில் சிக்கியிருப்பதாகக் கூறி அவர்களை வைத்தியசாலையில் பார்ப்பதற்காக அழைத்துச் செல்வதாகக் கூறி அழைத்துச் செல்லல்.
சிறுவர், குறிப்பாக வளரிளமைப் பருவத்தினர் வாக்குறுதியளிக்கப்படுவதன் மீதான வாய்ப்பு தொடர்பில் விழிப்புணர்வுடன் இருக்கலாம் ஆனால் நிபந்தனைகளால் அவர்கள் வஞ்சிக்கப்படுகின்றனர்.
**உதாரணமாக** ஒரு வளரிளமைப் பருவ சிறுவன் ஒரு உணவகத்தில் ஒரு சேவகனாக கிழமை நாட்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை நிச்சயிக்கப்பட்ட சம்பளத்திற்கு வேலை செய்யும் வாய்ப்பை ஏற்றுக்கொள்கின்றான். எனினும் அதன் யதார்த்தம் அவன் மது விநியோகஸ்தனாக அதே உணவகத்தில் இரவில் வேலை செய்ய வேண்டியவனாய் இருப்பான்.

## ❖ கட்டாயப்படுத்தப்படுவதால்



பிள்ளைக்கு எதிராக உடல் ரீதியான பலம் அல்லது வன்முறையினை அல்லது பயப்படுத்தலை பிரயோகிப்பதனால் அல்லது அவ்வாறு பிரயோகிப்பதற்காக அச்சுறுத்தி இழிதொழில் வாணிபத்தில் ஈடுபடுபடுவர்களுடன் பிள்ளை செல்ல நடவடிக்கை எடுத்தல்.

## ❖ இணங்கச் செய்தல்

பிள்ளைக்கு அல்லது குடும்பத்திற்கு இழிதொழில் வாணிபத்தில் ஈடுபடுபவர்களை நம்பச் செய்து இணங்கச் செய்தல்.

**உதாரணமாக** பிள்ளைக்கு அல்லது குடும்பத்தினருக்கு பரிசுப் பொருட்களை வழங்குதல் அல்லது பிள்ளைக்கு அறிவுரை அல்லது கவனத்தினை ஈர்த்தல் அல்லது பிள்ளைக்கு நல்ல கல்வி, நல் வாழ்வு போன்றவை வழங்குவதாக வாக்களித்தல்.

## ❖ கட்டாயப்படுத்தலால் அல்லது பயமுறுத்தலால்

இழிதொழில் வாணிபத்தில் ஈடுபடுபவர்கள் பிள்ளையை அல்லது குடும்பத்தினரை தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பதற்காக வாய்மூலம் பயத்தினை ஏற்படுத்தலாம்.

**உதாரணமாக** இழிதொழில் வாணிபத்துடன் ஈடுபடுபவர்களுடன் அனுப்பப்படாதவிடத்து பிள்ளை கொல்லப்படும் என குடும்பத்தினருக்குக் கூறுதல்.

❖ **ஆற்றல் அல்லது அதிகார துஸ்பிரயோகம்.**

ஒரு நபர் சிறுவரின் மீது அல்லது அவள் அல்லது அவனின் குடும்பத்தின் மீது கொண்டிருக்கின்ற அதிகாரம் (அதாவது ஒரு உறவினராக அல்லது தொழில் தருனராக) தங்கியிருக்கும் நிலமையினை ஏற்படுத்துகையில் அச்சிறுவரின் அல்லது அவனின் அல்லது அவளின் குடும்பத்தின் உரிமையை மறுப்பதனை அதிகார துஸ்பிரயோகம் உள்ளடக்குகின்றது. இழிதொழில் வாணிபத்தில் ஈடுபடுபவர்கள் அவனது அல்லது அவளது அதிகாரத்தினை பிள்ளையின் அல்லது குடும்பத்தின் மீது செல்வாக்குச் செலுத்தும் விதத்தில் பிரயோகிப்பார்.

## 3.3 சிறுவர் இழிதொழில் வாணிபத்துடன் தொடர்புடைய குற்றச் செயல்கள், இழிதொழில் வாணிபத்திற்கு முன்னரான அல்லது இணைந்த குற்றங்கள்.

பெரும்பாலான வேறு குற்றங்கள் போலன்றி, இழிதொழில் வாணிபமானது தனித்த ஒரு குற்றச் செயலல்ல. இழி தொழில் வாணிப குற்றச் செயலினைச் செய்வதற்கு இழிதொழில் வாணிபத்தில் ஈடுபடுவோரும், அவருக்கு துணை போவோரும் இழிதொழில் வாணிப செயற்பாட்டுமுறையின் போது பல்வேறு வேறு குற்றச்செயல்களைப் புரிகின்றனர். இவ்வாறான குற்றச் செயல்கள் இணைந்த குற்றங்களெனப்படுகின்றன. இழிதொழில் வாணிபம் மூலம் சிறுவருக்கு புரியப்பட்ட குற்றங்கள் தொடர்பிலும், இழிதொழில் வாணிபத்திற்கு வசதி வாய்ப்பளித்ததன் மூலம் புரியப்பட்ட குற்றச் செயல்களுக்கும் இடையிலான வித்தியாசத்தினை நீங்கள் தெளிவாக விளங்கிக் கொள்வது அவசியமாகும். இவ்வேட்டின் அலகு II முன்னையது கலந்துரையாடப்பட்டுள்ளது. இப்பிரிவு பாதிக்கப்பட்டவர்களை இணங்கச் செய்வதற்காக, அவர்களின் மீது கட்டுப்பாட்னைப் பேணுவதற்காக, இழிதொழில் வாணிபச் செயற்பாட்டுக்கு பாதுகாப்பளிப்பதற்காக அல்லது வருமானத்தினை அதிகரிப்பதற்காக புரியப்படும் குற்றச் செயல்களில் கவனம் செலுத்தும். இழிதொழில் வாணிப செயற்பாட்டின் எக் கட்டத்திலும் இவ் இணைந்த குற்றங்கள் புரியப்படலாம்.

- இழிதொழில் வாணிபத்திற்கு முன்னரான குற்றச்செயல்கள்.

சிறுவர் இழிதொழில் வாணிபமானது சிறுவரை ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குக் கொண்டு செல்வதனை உள்ளடக்குகின்றது. சில சந்தர்ப்பங்களில் இது ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டுக்கிடையிலானதாக இருக்கலாம். சிறுவரின் வெற்றிகரமான போக்குவரத்தினை உறுதி செய்வதற்கும் வசதிவாய்ப்பளிக்கவும், இழிதொழில் வாணிபத்தில் ஈடுபடுபவர்கள் அல்லது வசதிவாய்பளிப்பவர்கள் பின்வரும் குற்றச் செயல்களைப் புரியலாம்.

❖ பிள்ளை பராயமடையாதவர் இல்லை என்பதை வெளிப்படுத்த மோசடியான ஆவணங்கள் உதாரணமாக பிறப்புச் சான்றிதழ்கள், தேசிய அடையாள அட்டைகள், கடவுச் சீட்டுக்கள், மற்றைய குடியகல்வுக்கான ஆவணங்கள்.

❖ வாகன அனுமதிப் பத்திரம், வாகான இலக்கத் தகடுகள், திருமணப் பதிவுச் சான்றிதழ் போன்ற மோசடியான ஆவணங்கள்.

❖ சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எல்லை கடப்பிற்கான அனுமதி பெறுவதற்காக ஆவணங்கள் போன்றவற்றை மோசடியாக புனைவதற்கு இலஞ்சம்.

- இழிதொழில் வாணிபத்திற்குப் பின்னரான குற்றச் செயல்கள்.

- மோசடிப் பண தூய்தாக்குதல்

  குற்றச் செயலுக்காக குற்றவாளிகள் பெற்ற பணத்தினை சட்டமுறையான பணமாக மாற்றுவதே மோசடிப்பண தூய்தாக்கல் என வரைவிலக்கணப் படுத்தப்படுகிறது. இழிதொழில் வாணிபத்திற்குப் பின்னர் தொடர்புடைய முக்கியமாக குற்றச் செயலாக மோசடிப்பண தூய்தாக்கல் உள்ளது. இழிதொழில் வாணிபத்தில் ஈடுபடுபவர்கள் இம் முறையினை, தம்மால் சிறுவர் இழிதொழில் வாணிபத்தில் பெறப்பட்ட பணத்தினை சட்டமுறையானதாக மாற்றப் பயன்படுத்துகின்றனர். எவ்வாறு பண மோசடி இடம்பெறலாம் என்பதை பின்வரும் வரைபடம் வெளிப்படுத்துகின்றது.


சிறுவர் வியாபாரம் செய்தல் மற்றும் பண மோசடி செய்தல்

↓

சிறுவர் வியாபாரத்தினூடாக கறுப்புச் சந்தையில் பணம் சம்பாதித்தல்

↓

இது பணத்தின் இலஞ்ச மூலாதாரங்கள் இல்லாது முதலீடுகள் செய்தல் கறுப்புச் சந்தையின் சாதாரண நீரோட்டத்தில் சுற்றிவரும். இதற்கு மேலாக அந்தப்பணம் குற்ற மூலாதாரத்துடன் பராமரிப்பு செய்தல் தொடர்பாக இனங்கண்டு கொள்ளுதல் கடினமானதாகும்




உலகில் உள்ள பல்வேறு நாடுகளைப் போல் இலங்கையிலும் மோசடிப் பண தூய்தாக்கலானது 2006ம் ஆண்டின் 5ம் இலக்க மோசடிப்பணத் தூய்தாக்கல் சட்டத்தின் கீழ் ஒரு குற்றமாகும்

***பிரிவு 3(1) எவரேனும் நபர்,***

*(அ) நேரடியாகவோ அல்லது மறைமைமுகமாகவோ ஏதேனும் சட்டவிரோதமான நடவடிக்கையினால் அல்லது சட்ட விரோதமாக நடவடிக்கையில் இருந்து பெற்ற இலாபத்தினால் பெறப்பட்ட அல்லது செயலுருவாக்கப்பட்ட ஏதேனும் சொத்தை நேரடியாகவோ அவ்வது மறைமுகமாகவோ ஏதேனும் கொடுக்கல் வாங்கலுக்கு ஈடுபடுத்துவராயின்,*

*(ஆ) நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஏதேனும் சட்டவிரோதமான நடவடிக்கையினால் அல்லது சட்ட விரோதமாக நடவடிக்கையில் இருந்து பெற்ற இலாபத்தினால் பெறப்பட்ட அல்லது செயலுருவாக்கப்பட்ட ஏதேனும் சொத்தை தெரிந்து கொண்டு அல்லது நம்பத்தகுந்த காரணம் இருந்தும் பெறுதல், உடமையில் வைத்திருத்தல், மறைத்து வைத்திருத்தல் அல்லது இலங்கைக்கு கொண்டு வருதல், இலங்கைக்கு வெளியில் அனுப்புதல் மோசடிப்பண தூய்தாக்கல் என்னும் குற்றத்திற்கு ஆளாகுதல் வேண்டும்.*

- சட்டமுறையற்ற பணத்தினைக் கைமாற்றுதல்.

சுட்டமுறையற்ற பணத்தினைக் கைமாற்றுவதானது மோசடிப்பண தூய்தாக்கலில் இருந்து மாறுபட்டதாகும். சட்டமுறையற்ற பணத்தினைக் கைமாற்றுவது இரு வழிகளில் நடைபெறலாம்.

- இழிதொழில் வாணிபத்துடன் தொடர்புடைய நபர்களுக்கு இழிதொழில் வாணிபத்தின் மூலம் சட்ட முறையற்ற விதத்தில் பெறப்பட்ட பணத்தினை கைமாற்றுதல் ஒரு வழியாகும்.

- இழிதொழில் வாணிபத்திற்கு உதவியைப் பெற்றுக் கொள்ள அல்லது சேவையினைப் பெற்றுக் கொள்ள நபர்களுக்கு லஞ்சமாக பணத்தினை கைமாற்றுதல் மற்றைய வழியாகும்.

மேற்குறித்த இழிதொழில் வாணிபத்திற்குப் பின்னரான குற்றச்செயல்களுக்கும் மேலதிகமாக பின்வரும் குற்றச் செயல்களும் இழிதொழில் வாணிபத்திற்குப் பின்னரான குற்றச் செயல்களாகக் கொள்ளப்படலாம். சில சந்தர்ப்பங்களில் பாதிக்கப்பட்டவர்கள் இழிதொழில் வாணிபத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் மீளவும் பாதிக்கப்படுவதற்கான அபாயம் காணப்படுகின்றது. எடுத்துக்காட்டாக,

- மீள் இழிதொழில் வாணிபத்திற்கு உள்ளாகுதல் - ஒரு சிறுவன் உடல் உறுப்பு எடுக்கப்படுவதற்காக இழிதொழில் வாணிபத்திற்கு உள்ளாக்கப்பட்டதன் பின்னர், அவன் அல்லது அவள் சிறுவர் வேலைக்காக அல்லது பிச்சை எடுக்க மீள இழிதொழில் வாணிபத்திற்கு உள்ளாக்கப்படலாம்.

- உடல் ரீதியான துன்புறுத்தல் அல்லது கொலை – அவனை அல்லது அவளை கட்டுப்படுத்த கடினமாகக் காணுமிடத்து அல்லது சிறுவன் பொலிசாருக்கு முறையிட வாய்ப்புள்ளதாக சந்தேகிக்குமிடத்து சிறுவர் இழிதொழில் வாணிபத்தின் போது அல்லது அதன் பின்னர் ஒரு சிறுவன் துன்புறுத்துதலுக்கு, மனிதாபிமானமற்ற கீழ்த்தரமான நடத்துகைக்கு, உடலியல் துன்புறுத்தலுக்கு சில சந்தர்ப்பங்களில் கொலையும் செய்யப்படலாம்.

- சட்டமுறையற்ற தடுப்பு அல்லது பிழையான கட்டுக்காவல் - பிள்ளை தப்பிக்க முயற்சி செய்யுமிடத்து இழிதொழில் வாணிபத்தில் ஈடுபவர்கள் அவன்/ அவளின் நகர்வினை மட்டுப்படுத்தலாம் பிழையாக கட்டுக்காவலுக்கு உட்படுத்தலாம். உதாரணமாக விபசாரத்திற்காக பெண் பிள்ளைகள் இழிதொழில் வாணிபத்திற்கு உட்படுத்தப்படல்.

- இழிதொழில் வாணிபத்திற்காகவே அவர்களையும் ஈடுபடுத்துதல். – இழிதொழில் வாணிபத்தில் ஈடுபடுபவர்கள் தமது தொழிலுக்கிடையில் சிறுவர்களை இணைத்தல்.

- சிறுவர்களை குற்றச் செயல்களுக்கு ஈடுபடுத்துதல். – இழிதொழில் வாணிபத்தில் ஈடுபடுபவர்கள் கட்டுக்காவலில் இருக்கையில் ஆயுத, போதைப்பொருள் கடத்தல்களுக்காக சிறுவர்களைப் பயன்படுத்துவது பொதுவானதாகும்.

மேலே கலந்துரையாடப்பட்ட குற்றச்செயல்களை விடுத்து, பின்வரும் குற்றச் செயல்கள் இழிதொழில் வாணிபத்துடன் தொடர்புடைய குற்றச் செயலகள் அல்லது இழிதொழில் வாணிபத்தினைப் புரியும் செயற்பாட்டின் போது புரியப்பட்ட குற்றச் செயல்களாக கவனிக்கப்படுதல் வேண்டும்.

- ஒரு பாதிகப்பட்ட பிள்ளையை ஒரு இழிதொழில் வாணிபத்தில் ஈடுபடுபவருக்கு கையளிப்பதற்காக சிறு தூர இடைவெளியான போக்குவரத்து.
- இழிதொழில் வாணிபச் செயற்பாட்டின் போது சமயற்காரராக அல்லது வீட்டுக் காவலாளியாக வேலை செய்தல்.
- இழிதொழில் வாணிபச் செயற்பாட்டுக்கு பயன்படும் என்பதைத் தெரிந்து கொண்டு வாடகை வசதி வாய்ப்புக்கனை வழங்குதல்.

- இழிதொழில் வாணிபத்திற்குட்பட்ட சிறுவர்களை போக்குவரத்து செய்ய பயன்படும் எனத் தெரிந்து கொண்டு வாகனங்களை வாடகைக்கு வழங்கல்.

## 3.4 சிறுவர் இழிதொழில் வாணிபத்தினால் ஏற்படுத்தப்படும் தாக்கங்கள்.

இழிதொழில் வாணிபத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர் குடும்பம் மற்றும் நண்பர்களிடமிருந்து தனிமைப்படுத்தப்படுவதுடன் உடலியல் ரீதியானதும், உள ரீதியானதுமாக துன்புறுத்தலுக்கு உள்ளாகின்றனர். சில சமயங்களில், சிறுவரின் உயிர் அல்லது அவள் அல்லது அவனின் குடும்பத்தின் உயிர்களும் அச்சுறுத்தலுக்குள்ளாகின்றது. சிறுவர் இழிதொழில் வாணிபம் என்பது குற்றவியல் குற்றம் ஒன்று மட்டுமன்றி சிறுவர் உரிமை மீறலொன்றுமாகும். இழிதொழில் வாணிபத்தினாலும், இழிதொழில் வாணிபத்தின் தாக்கத்தினாலும் தனிநபர், குடும்பம், சமூகம் மற்றும் அரசு என்ற விதத்தில் பலர் பாதிக்கப்படுகின்றனர்.

- **தனிநபர்**

  பாதிக்கப்பட்ட சிறுவரின் மீது கட்டுப்பாட்டினை பேணும் நோக்குடன் இழிதொழில் வாணிபத்தில் ஈடுபடுபவர்கள் பயமூட்டும் செய்றபாடுகளான நடமாடுவதை மட்டுப்படுத்தல், மோசமான நிலையில் வாழ்தல், வேலை செய்தல் போன்ற நிபந்தனைகளை ஏற்படுத்துகின்றனர். பிள்ளைகளின் உடல், உள எதிர்ப்புக்களை இல்லாமலாக்குவதன் மூலம் சிறுவர் தப்பித்துச் செல்லுவதைத் தடுக்கின்றனர். இது பிள்ளையில் உடல், உள ஆரோக்கியம், நலம், விருத்தியின் மீது பாரிய தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது.

- **உடல் ஆரோக்கியப் பிரச்சினைகள்**
  - இழிதொழில் வாணிபத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் ஆரோக்கியமான பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு என்ற அடிப்படை மனித உரிமையை இழக்கும் சூழ்நிலையை அனுபவிக்கின்றார்கள். இழிதொழில் வாணிபத்திற்கு ஈடுபடுத்தப்பட்டசிறுவர்கள் மனிதாபிமானமற்ற வாழ்வாதார நிலமையில் பேணப்படுகின்றார்கள். போதுமானதும், போசாக்கானதுமான உணவுகள் அவர்களுக்கு கிடைப்பதில்லை. உடல் மற்றும் பாலியல் ரீதியாக துன்புறுத்தப்படுவதுடன் துஸ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்படுகின்றார்கள். இது நீண்ட கால விளைவுகளை ஏற்படுத்துகின்றது. அவையாவன,
  - போதை மற்றும் மதுபான அடிமைப்படல்: இழிதொழில் வாணிபத்தில் ஈடுபடுபவர்களால் போதைப் பொருள் உபயோகிக்க நிர்ப்பந்திக்கப்படல் அல்லது தனிமைப்படுத்தப்பட்ட நிலமையினை மனோரீதியாக எதிர்கொள்வதற்கு போதைப் பொருள் உபயோகித்தல்.
  - உராய்வு, தழும்புகள், எரி காயங்கள், மற்றும் உடலியல் ரீதியான துஸ்பிரயோகம் மற்றும் துன்புறுத்தலின் அடையாளங்கள்.
  - ஞாபக சக்தியினை இழக்கக் கூடிய அளவுக்காக மூளையில் காயத்தினை ஏற்படுத்தக் கூடிய உடலியல் ரீதியான வன் செயல்கள்.
  - மயக்க உணர்வு, தலைவலி, உணர்வின்மை
  - காச நோய் மற்றும் ஈரல் அழற்சி போன்ற நுரையீரல் நோய்கள்.
  - தூய்மையின்மையாலும், இழிதொழில் வாணிபத்தில் ஈடுபடுபவர்களால் புரியப்பட்ட மோசமான மருத்துவ நடவடிக்கைகளினாலும் தொற்றுக்கள் மற்றும் உருச் சிதைவுகள்.
  - ஆபாயகரமான விவசாயம், கொத்தடிமைத்தனம், நிர்மாண வேலைகளினால் தீராத முதுகுவலி, கேட்டல், இருதயம், சுவாசம் சம்பந்தமான பிரச்சனைகள்
  - வெளிச்சம் குறைவன இடத்தில் தொடர்ச்சியாக வேலை செய்வதனால் ஏற்படும் பார்வைக்குறைபாடு.
  - போசாக்கின்மை மற்றும் தீவிர பற் பிரச்சனைகள். பாதிக்கப்பட்ட பிள்ளைகள் ஒழுங்காக வளராத, மோசமாக உருவாகிய சொத்தை பற்களினால் அவதிப்படுகின்றார்கள்.

*உதாரணமாக, 2003ல் தாய்லாந்தின் மனித உரிமைகள் ஆணைக்குழு கிட்டத்தட்ட 100 ஆண் கடற்றொழிலாளர்களைக் கொண்ட குழு உடத்தப்பட்ட 3 வருட சுரண்டலின் பின்னர் 39 பேர் இறந்தனர். மிகுதி வீடுசேர்ந்தவர்களில் தீவிரமான நோய்த்தாக்கத்திற்கும், உள ரீதியாக பாதிக்கப்பட்டும், பார்வை முடியாதவர்களாகவும், சரியாக நடக்க முடியாதவர்களாகவும் உள்ளாகி இருந்தனர் என அறிக்கையிடப்பட்டது.*

மேற்குறித்த நிரலுக்கு மேலதிகமாக, பாலியல் சுரண்டலுக்காக இழிதொழில் வணிகத்திற்கு உள்ளான சிறுவர்கள் பின்வரும் சுகாதார பிரச்சனைகளினால் துன்பப்படலாம். அவையாவன,

- பாலியல் மூலம் தொற்றும் நோய்களான எயிட்ஸ்/எச்.ஐ.வி
- கருச் சிதைவு அல்லது கட்டாயப்படுத்தப்பட்ட கருக் கலைப்பு (வன்புணர்வு அல்லது விபச்சாரம், பாதுகாப்பற்ற கருக்லைப்பு போன்றவற்றால் ஏற்படும் தேவையற்ற கர்ப்பத்தினால் அதிகரிக்கும் அபாயம்)
- தொடர்ச்சியான உயர்ந்த ஆபாத்துள்ள கர்ப்பத்தினால் ஏற்படும் சிக்கல்கள்.

*இந் நபர்களுக்கு முற் தடுப்புக்கான சுகாதார கவனிப்புக்கள் காணப்படுவதில்லை. சுகாதாரப் பிரச்சனைகள் அதன் ஆரம்ப கட்டத்தில் சிகிச்சைக்கு உட்படுத்தப்படுவதில்லை. அவை தீவிரமாகும் வரை, உயிராபத்து வரும் வரை விடப்படுகின்றன.*

- **உள ரீதியான சுகாதாரப் பிரச்சனைகள்.**

பாதிக்கப்பட்ட சிறுவர்கள், குடும்பம், நண்பர்கள் மற்றும் சமூகத்தில் இருந்து பிரிக்கப்பட்டு தனிமையாக பயத்தில் இருந்ததன் காரணமாக உளரீதியானதும், உணர்வு ரீதியானதுமான பாதிப்பினை அனுபவிக்கின்றனர். மேலும், இழிதொழில் வாணிபத்தில் ஈடுபடுபவர்களின் கட்டுக்காவலில் இருக்கும் போது உள ரீதியான துன்புறுத்தல் மற்றும் அச்சுறுத்தலினை அனுபவிக்கின்றனர். இது இழிதொழில் வாணிபத்திற்கு உள்ளாக்கப்பட்டு பாதிக்கப்பட்ட சிறுவர்களின் ஆரோக்கியம் மற்றும் நலத்திலும், உள ஆரோக்கியத்திலும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது.

**பின்வருவன இழிதொழில் வாணிபத்தின் காரணமாக ஏற்படும் அத்தகைய சில நேர்மறையாக மனத் தாக்கங்களாகும்.**

- நாளாந்த மன ரீதியான துஸ்பிரயோகம் மற்றும் சித்திரவதை, மனவழுத்தம் மற்றும் அமுத்தம் சார்ந்த குழப்பங்கள், குழப்பம், பயங்கள், பயத்தினால் வரும் உளத் தாக்கங்கள்.
- தன்னையே குறை கூறல், தாழ்வு மனப்பான்மை, தற்கொலை, தற்கொலைக்கான சிந்தனை போன்றவற்றுக்குத் தூண்டும் நம்பிக்கை இழப்பு
- உதவியிழப்பு, வெட்கம், அவமானம், அதிர்ச்சி, பின்னணி, பயங்கரம், நிராகரிப்பு அல்லது நம்பிக்கையின்மை போன்ற உணர்வுகள்.
- ஒரு அந்நிய நாட்டில் இருப்பதால் தம்மை காணும் கலாசார அதிர்ச்சி.

**இவ்வகையான பிள்ளைப் பருவ பல்வேறுபட்ட பாதிக்கப்பட்ட அனுபவங்கள், மன நோய், உள ரீதியான பிரச்சனைகளை அப் பிள்ளைகள் வளர்ந்தோராகும் போது ஏற்படுத்தி விடுகிறது.**

- அபிவிருத்தி சார் தாக்கங்கள்.

  உடல், உள மற்றும் பாலியல் துஸ்பிரயோகம், பட்டினி, பயத்தினாலும், ஊட்டக்குறைவு தனிமைப்படுத்தலாலும் ஏற்பட்டவை போன்றவற்றை உள்ளடக்கிய நீண்டகால சிறுவர் துஸ்பிரயோகம், வளர்ச்சினை நிரந்தரமாக பாதிக்க கூடியதாகும். மேலும் பிள்ளைப் பருவத்தின், கௌரவத்தின் இழப்பு மற்றும் அவர்களின் தனிப்பட்ட உணர்வு ரீதியான நலம் குறைவு தனிப்பட்ட குறிக்கோள்களை வரையறுக்கவும், நல்ல உறவுகளை உருவாக்கவும் அவர்களை இயலாமல் ஆக்கும்.

சிறுவர்களாக அடிப்படைக் கல்வியினை பூர்த்தி செய்யாமையினால் கற்றறியாதவர்களாக தொடர்ந்திருக்க வேண்டி ஏற்படுவதுடன் தமது எதிர்காலத்தினை மேம்படுத்த உதாரணமாக ஒரு மதிப்பான வாழ்வை அமைப்பதற்கு, ஒரு குடும்பத்திற்கு ஆதரவளிப்பதற்கு, தமது தேவைகளை பூர்த்தி செய்வதற்கு ஒரு வாய்ப்பினை பெற முடியாதவர்களாக அவர்களை ஆக்கும்.

சிறுவர் இழிதொழில் வாணிபமானது சிறுவரின் நலன், மனநலம் (மனோரீதியாக தாக்கங்கள்) சிறுவரின் விருத்தியில் மட்டும் தாக்கம் செலுத்துவதில்லை. மாறாக மேலும் சிறுவர் உரிமைகள் சமவாயத்தில் உள்ள சிறுவர் உரிமைகளை மீறுவதாகவும், அமைகிறது. அவையயாவன,

- உடல் கௌரவத்திற்கான உரிமை
- குருரம், சுதந்திர இழப்பிலிருந்து தவிர்ந்து கொள்வதற்கான உரிமை,
- ஓய்வுக்கான உரிமை
- குடும்பமொன்றுக்கான உரிமை
- கல்விக்கான உரிமை
- அந்தரங்கத்திற்கான உரிமை

## a. *குடும்பம்*

குடும்பம் என்னும் கருப்பொருள் பல வழிகளில் வரைவிலக்கணப்படுத்தப்படலாம். குடும்பம் எப்போது நாகரீகத்தினதும், சமூகத்தினதும் அடிப்படை அலகாக வரைவிலக்கணப்படுத்தப்படுகின்றது. பாரம்பரியமாக, குடும்பத்தின் மூலமாகவே சிறுவர்கள் மதிக்கவும், அன்பு செய்யவும், கருணை உணர்வு கொள்ளவும், மன்னிக்கவும், மற்றவர்களுடன் உறவுகொள்ளவும் பயில்கின்றனர். குடும்பம் பாதுகாப்பு, உடல் உளத்திற்கான ஊட்டம், நிபந்தனையற்ற அன்பு என்பவற்றை வழங்குகின்றது. சிறுவர் இழிதொழில் வாணிபம் பல்வேறு வழிகளில் குடும்பத்தினை தாக்கத்திற்குட்படுத்துகின்றது. அவையாவன,

- சிறுவர் இழிதொழில் வாணிபத்திற்கு உள்ளாகுவதானது குடும்பத்தின் மீது சொல்லொணா அழுத்தத்தினை ஏற்படுத்துகின்றது, இது குடும்பம் பிளவடைவதற்கும் காரணமாகலாம். பயம், அங்கலாய்ப்பு, பாதிப்பு உணர்வு, இழப்பு ஆகியவை குடும்ப வாழ்வின் இயல்பினை இழக்கச் செய்யலாம் என்பதுடன் அது அடுத்த தலைமுறையினருக்கும் கடத்தப்படலாம்.
- இழிதொழில் வாணிபத்திற்கு உள்ளாக்கப்படுவோம் என மற்றைய குடும்ப அங்கத்தவர்களும் அச்சத்தில் இருப்பர்.
- இழிதொழில் வாணிபத்திற்கு உள்ளான பிள்ளைகள் ஆபாசப் படம் அல்லது வீடியோ போன்றவற்றுக்கு பயன்படுத்தப்படுவார்களாயின் அது சமூக அழுத்தத்திற்கு குடும்பத்தினை உள்ளாக்கும். சமூக அழுத்தத்திலிருந்து தவிர்ந்து கொள்வதற்கு குடும்பம் தமது சொந்த இடத்தினை விட்டு தனிமையான, தெரியாத இடத்திற்கு இடம்பெயர வேண்டி ஏற்படும்.
- பாதிக்கப்பட்டவரை கண்டுபிடிப்பது முதன்மை பெறுவதால் குடும்பத்தின் சாதாரண வாழ்வு பாதிக்கப்படுவதுடன், அனைத்து குடும்ப அங்கத்தவர்களிலும் தாக்கம் செலுத்தும்.
- இழிதொழில் வாணிபத்தினால் அடைந்த அனுபவத்தினை அடக்கி வைத்திருப்பதானது அங்கலாய்ப்பு, அழுத்தமான சூழலை குடும்பத்தில் ஏற்படுத்துவதுடன் அடுத்த தலைமுறைக்கு உள ரீதியான தாக்கத்தினையும் ஏற்படுத்தும்

**b.** ***சமூகம்***

சிறுவர் இழிதொழில் வாணிபத்தின் எதிர் மறையான தாக்கம் தனிநபர், குடும்பம் என்பதைத் தாண்டிச் செல்கின்றது. இது சமூகத்தினை முழுமையாக பாதிப்பிற்கு உள்ளாக்குகின்றது. பின்வருவன சமூகத்தின் மீதான குறிப்பான பாதிப்புகளாகும்.

- பாதிக்கப்பட்டவர், அவரது குடும்பம் மற்றும் நண்பர்களை சமூகம் அங்கீகரியாமை. இது பாதிக்கப்பட்டவர் சமூகத்தில் மீளிணைக்கப்படுவதில் இருந்து பாதிக்கின்றது.
- ஒரு இழிதொழில் வாணிபத்திற்கு உள்ளான சிறுவர் பாலியல் ரீதியான சுரண்டலினால் அல்லது விபசாரத்திற்கு நிர்ப்பந்திக்கப்பட்டமையினால் ,எயிட்ஸ் தொற்றுக் உள்ளாயிருக்கலாம்
- ஒரு சமூகத்திலிருந்தான ஒரு சிறுவனின் வெற்றிகரமான கட்டத்தில், குறித்த சமூகத்திலிருந்து ஏனைய சிறுவர்களைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பான வளமாக காணப்படுவதனால் அச் சமூகத்தில் அனைத்து சிறுவர்களுக்கும் அபாயமாக அமைகிறது.
- ஓவ்வொரு வெற்றிகரமான இழிதொழில் வாணிபமும் வாய்பான வளர்ச்சியைக் காட்டுவதனால் அனைத்து சிறுவர்களுக்கும் அபாயகரமானமாக மாறுகின்றது. .

**c.** ***அரசு***

*பின்வரும் காரணகளினால் சிறுவர் இழிதொழில் வாணிபம் அரசிற்கு மறையான தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது.*

***அரச பாதுகாப்பு*** *: சிறுவர் இழிதொழில் வாணிபத்தினை உள்ளடக்கிய ஆட்கடத்தலானது நாட்டின் சட்ட ஆட்சிக்கு சவாலாக அமைகிறது. இது அரசின் உள்ளக, வெளியக பாதுகாப்பினைப் பாதிக்கின்றது.*

***அரசின் பொருளாதாரச் செலவு*** *: சட்ட அமுலாக்கம், மீட்பு, மறுவாழ்வளித்தல் மற்றும் சிறுவர்களுக்கான மீளிணைத்தல், விசாரணை, வழிக்காடல், இழிதொழில் வாணிபத்தில் ஈடுபடுபவர்களின் மீதான தண்டனைகளை ஏற்படுத்துவது போன்ற நேரடியான செலவுகள். (உதாரணமான தடுத்து வைத்தலின் போதான செலவு)*

***சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தி :*** *மனித வளத்திற்கு சிறுவர் இழிதொழில் வாணிபமானது ஈடுசெய்ய முடியாதா இழப்பான அமைகிறது. இது எதிர்காலத்தில் வேலை வாய்ப்பிலும், உற்பத்தியிலும் பாதிப்பினை ஏற்படுத்துகின்றது. இழிதொழில் வாணிபத்திற்கு உள்ளான சிறுவரின் திறன், சக்தி, அறிவு, அனுபவம் நாட்டின் சமூக-பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்யக் கூடியதாய் இருந்திருக்கும். மேலும் அரசு மேலதிகமாக நிதி, மனித வளங்களை சிறுவர் இழிதொழில் வாணிபத்தினை தடுக்கவும், சுகாதார பிரச்சனைகளை இல்லாதொழிக்கவும், பாலின சமப்படுத்தலை பேணவும் ஒதுக்கிட வேண்டி ஏற்படும்*

***நாட்டின் மதிப்பில் நேர்மறையான தாக்கம் :*** *சிறுவர் இழிதொழில் வாணிப அபாயம் கொண்ட ஒரு நாடு சர்வதேச சமூகத்தின் குற்றச்சாட்டுக்கு உள்ளாகும். இது அரசுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் இடையிலாக தொடர்புகள் மற்றும் வணிகத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும். சர்வதேச மற்றும் பிராந்திய ரீதியாக சர்வதேச மற்றும் பிராந்திய சாசனங்களின் அரசு ஏற்றுக்கொண்ட சர்வதேச மற்றும் பிராந்திய பங்களிப்பு அமுலாக்க அரசு சர்வதேச சமூகத்திற்கு பொறுப்புக் கூற வேண்டி ஏற்படும்.*



**<u>கற்றற் கருவிகள்</u>**

**பயிற்சி**

**பயிற்சி 1: தனிநபர் செயற்பாடு**

**உண்மை அல்லது பொய் என பின்வரும் கூற்றுக்களை அடையாளமிடுவதற்கு பங்கு பற்றுவோரை கோருதுடன் பொய்யாக கூற்றை திருத்தவும் கோரவும்**

| | | |
|---|---|---|
| 1 | சிறுவர் இழிதொழில் வாணிபமானது அரசுகளுக்கிடையிலான அல்லது தேசிய எல்லைகளுக்கிடையிலான போக்குவரத்தின் பயணத்தின் அல்லது இடம்பெயர்வின் ஏதேனும் ஒரு வடிவத்தை உள்ளடக்கியதாகும். | |
| 2 | சிறுவர் இழிதொழில் வாணிபமானது விபச்சாரத்தினை மட்டுமன்றி சுரண்டப்படக்கூடிய தொழில், பொதுவாக அபாயகரமான தொழில் குறைவான அல்லது சம்பளமின்றிய நிலைமையான மோசமான நிபந்தனைகள் என்பதுமாகிறது. | |
| 3 | சிறுவர் இழிதொழில் வாணிபமானது சிறுவர் சுரண்டலில் இருந்து இலாபம் பெறுவதற்கான நோக்கம் கொண்டதாகும் | |
| 4 | சிறுவர் இழிதொழில் வாணிபமானது உடல் ரீதியான வலுக்கட்டாயம், மட்டுப்பாடு அல்லது வன்முறையினை கட்டாயமாக உள்ளடக்கியதாகும். | |
| 5 | இழிதொழில் வாணிபத்தில் ஈடுபடுபவர்கள் எப்போதும் அந்நியர்களாவர். | |
| 6 | இழிதொழில் வாணிபத்தில் ஈடுபடுத்தப்பட்ட நிலையில் குற்றச் செயல் புரிந்த சிறுவர்கள் குற்றவாளிகளாக பார்க்கப்படாமல் பாதிக்கப்பட்டவர்களாக நோக்கப்பட வேண்டும் என்பதுடன் நீதிமுறையினால் மீண்டும் பாதிப்பிற்குள்ளாக்கபட கூடாது. | |
| 7 | சிறுவர் இழிதொழில் வாணிபமானது எப்போதும் அனுபவம் வாய்ந்த நிறுவனமயப்படுத்தப்பட்ட குற்றவாளிகளினாலேயே புரியப்படுகின்றது. நன்கு கற்றவர்கள் நடுத்தர வர்க்கத்தினர், மதிப்பு வாய்ந்தோர் இழிதொழில் வாணிபத்தில் ஈடுபடுபவர்கள் அல்லர். | |
| 8 | கடத்தற்காரர்கள் ஆண்களாக இருக்க வேண்டுமென்பதில்லை என்பதுடன் கடத்தலினால் பாதிக்கப்படுவோர் பெண்களாக இருக்க வேண்டும் என்பதுமில்லை | |
| 9 | சிறுவர் இழிதொழில் வாணபத்தில் பாலியல் ரீதியான துஸ்பிரயோகத்திற்கு உள்ளாகி பாதிப்படைந்தவர் எப்போதும் உடலில் துஸ்பிரயோகத்திற்கான அடையாளங்களைக் கொண்டு காணப்படுவார். | |

**செயற்பாடு 2 : பிரச்சனைத் தீர்வு**

களுகம நகரத்தில் சிறுவர்கள் ஒளித்து வைக்கப்பட்டுள்ளதாக அயலவரிடம் இருந்த பல முறைப்பாடுகன் கிடைக்கப் பெற்றதன் மீது சிறுவர் உரிமை பாதுகாப்பு அலுவலர் பொலிசாருடன் ஒரு அதி சொகுசு தொடர்மாடிக்கு சென்றிருந்தார். குறித்த தொடர்மாடியில் ஒரு அறை வெளியில் பூட்டப்பட்ட நிலையில் கண்டனர். பொலிசார் பலோத்காரமக உள்நுழைய வேண்டி ஏற்பட்டது. குறித்த அறையில் சிறுவர் உரிமை பாதுகாப்பு அலுவலரும் பொலிசாரும் 10 சிறுவர்களை (6 பெண் 4 ஆண்) கண்டனர். அறை இருட்டாகவும், தூசி நிறைந்ததாகவும் காணப்பட்டது. குறித்த அறையுடன் ஒரு மலசலகூடமே இணைந்ததாகக் காணப்பட்டது.

16 வயதாக நிர்மாலா பொலிசாருக்கு தான் மாமாவினால் களுகம நகரத்திற்கு கொண்டு வரப்பட்டதாகவும், அவர் அவளது பெற்றோருக்கு, தனது நண்பர் ஒருவரின் கடையில் நல்ல சம்பளமுடைய வேலையொன்றை தேடியிருப்பதாகத் தெரிவித்திருப்பதாகவும் கூறினார். அவர் நிர்மலாவை நகரத்திற்குக் கூட்டிக்கொண்டு வந்து விபச்சார வீடொன்றை நடத்தி வந்த பெண் ஒருவுருக்கு விற்றதாகவும், படுப்பதற்கு கொஞ்சமே விசாலமான இடத்திற்காகவும், எப்போதாவதான உணவுக்காகவும் விபச்சாரத்திற்கு கட்டாயப்படுத்தியதாகவும் கூறினாள். அவள் தான் இந்த இரு வருடங்களில் மிகுந்த கோபக்காரியாக மாறியதாகவும் பொலிசாருக்கு கூறினாள். தனது சொந்தப் பெயரினை பொலிசாரோ சிறுவர் உரிமை பாதுகாப்பு அலுவலரோ தனது கடந்த கால அவமானப் பெயர் கருதி வெளியிட வேண்டாம் எனவும் கேட்டுக் கொண்டார்.

14 வயதான பனிதா சிறுவர் உரிமை பாதுகாப்பு அதிகாரிக்கு தானும் அதே நகரத்தை சேர்ந்தவள் எனவும், அவளுடைய பெற்றோர் வைத்தியர்கள் எனவும் கூறினாள். மூன்று மாதங்களுக்கு முன்னர், பாடசாலை வாயிலில் பாடசாலை போக்குவரத்திற்காக காத்திருக்கையில், ஒரு வான் பாடசாலை கதவுக்கு அருகாமையில் நிறுத்தப்பட்டதாகவும், ஒரு மனிதன் வானுக்குள் தன்னை தள்ளி இவ்விடத்திற்கு கொண்டு வந்ததாகவும் தெரிவித்தாள். இரு மாதங்களில் அவளுக்கு நடக்க இருக்கும் திருமணத்திற்கு ஆயத்தம் செய்யுமாறு தன்னைக் கேட்டதாகவும் கூறினாள். மேலும் 45 வயதான ஒரு மனிதர் தன்னை வாரம் இரு முறை சந்திப்பதாகவும், தன்னை அவர் முன்னிலையில் ஒரு சில ஆடையுடன் ஆட நிர்பந்திப்பதாகவும் கூறினாள். மேலும் ஒவ்வொரு முறையும் நடனத்தினை கானொளி (வீடியோ) ஒளிப்பதிவு செய்ததாகவும் கூறினாள்.

தனது குடும்பத்தினருக்கு உதவி செய்யும் வகையில் நகரத்திற்கு வேலை தேடி வந்த நீல் 15 வயதான ஒரு சிறுவனாவான். வீதியில் அவனைக் கண்ட ஒரு மனிதர் அவனுக்கு ஒரு ஹொட்டலில் வேலை எடுத்துத் தருவதாக வாக்களித்ததாகக் கூறுகின்றான். அந்த மனிதரே தன்னை தொடர்மாடி சொந்தக்காரருக்கு விற்றதாகக் கூறுகின்றான். குறித் தொடர்மாடி சொந்தக்கார் ஒரு சுற்றுலா வழிகாட்டியவார். அந்த தொடர்மாடி உரிமையாளர் தன்மை ஒவ்வொரு மாலை வேளையிலும் வெவ்வேறு ஹோட்டல்களுக்கு அழைத்துச் சென்று சுற்றுலாப் பயணிகளுக்கு விற்றதாகக் கூறுகின்றான். ஒரு வருடமாக அவன் பாலியல் சுரண்டலுக்கும் துஸ்பிரயோகத்திற்கும் ஆளாகியதாகக் கூறுகின்றான். வெளிநாட்டு பிரஜைகள் அதிகளவான பணத்தினை வழங்கிய போதும் குறித் தொடர் மாடி உரிமையாளர் அவற்றை நீலின் பெயரில் சேமிப்பதாகக் கூறி எடுத்துக் கொண்டதாகவும் கூறுகின்றான்.

தரப்பட்ட சந்தர்ப்பத்தினை கவனமாக வாசித்து பின்வரும் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்,

1. மேற்குறித்த ஒவ்வொரு சந்தர்பத்திலும், ஒரு முதற்தோற்றளவான இழிதொழில் வாணிபத்திற்கானசூழ்நிலை உள்ளதா?
2. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலுமான இழிதொழில் வாணிபத்திற்கான எல்லா அம்சங்களை (செயல், மூலமும் காரணமும்) தனித்தனியாக அடையாளம் காணுக?
3. மேற்குறித்த சந்தர்ப்பங்களில் இழிதொழில் வாணிபத்திற்கு முன்னரானதும், இழிதொழில் வாணிபத்தின் போது, அதன் பின்னரும் புரியப்பட்ட குற்றங்களை அடையாளங் காணுக.

# நான்காவது கற்கையலகு

| கோட்பாட்டு வரையறையும் வேறு தொடர்புடைய ஆவணங்களும் | | |
|---|---|---|
|  | **விரிவுரை எண்ணிக்கை மணித்தியாலங்கள்** | 4 |
|  | **மதிப்பீட்டு முறைமை** | வகுப்பறைக் கலந்துரையாடல் |
| | **கற்றலின் பயன்விளைவுகள்** | கற்கையின் முடிவில் பின்வருவன பங்கேற்பாளர்களுக்கு இயலுமானதாயிருக்கும்<br><br>• பொதுவான மனித உரிமை ஆவணங்கள் மற்றும் சிறுவர் இழிதொழில் வாணிபத்துடன் தொடர்புடைய குறிப்பான ஆவணங்கள் தொடர்பிலும் சிறுவர் உரிமைகள் தொடர்பிலான சர்வதேச மற்றும் பிராந்திய மனித உரிமை ஆவணங்கள் மீதாக ஒரு அடிப்படை புரிதலை மேம்படுத்துதல்.<br>• சர்வதேச மற்றும் பிராந்திய கோட்பாட்டு வரையறைக்குள்ளாக முக்கிய கருத்தேற்புகள் மற்றும் வரையறுக்கப்பட்ட விதிகள் தொடர்பில் அறிந்திருப்பர்.<br>• அரசுகளினால் சர்வதேச மற்றும் பிராந்திய ஆவணங்கள் அதன் அமுலாக்கத்திற்கும் மேற்பார்வைக்கும் மேற்கொள்ளப்படும் பொறிமுறையினை புரிந்து கொள்ளுதலும் இது எவ்வாறு பங்குபற்றுபவர்களுடன் தொடர்புபடுகிறது என்பதனை புரிந்து கொள்ளுதலும் |

## *a. சர்வதேச சட்ட கட்டமைப்பு*

**அறிமுகம்**

சர்வதேச மனித உரிமைகள் சட்டவியலானது சர்வதேச மனித உரிமைகள் சம்பந்தமான ஆவணங்களினால் சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்திற்கு (**UDHR**) முன்னரான காலத்திலே சர்வதேச மனித உரிமைகள் சம்பந்தமான ஆவணங்களின் சேர்க்கையுடன் வளர்ச்சியடைந்தது. அவற்றில் பல உடன்படிக்கைகளும், பிரகடனங்களும் சுரண்டலுக்காக சிறுவர்கள் இழிதொழில் வாணிபத்தினை எதிர்கொள்வது தொடர்பானதாகும். இந்த அலகானது சிறுவர் உள்ளடங்கலாக இழிதொழில் வாணிபத்துடன் தொடர்புடைய குறிப்பான சர்வதேச ஆவணங்களையும், சிறுவர் உரிமை தொடர்பில் பொதுவாக அடையாளங்காண முக்கியமான சர்வதேச ஆவணங்களையும் ஆராய்வதில் கவனம் செலுத்துகிறது.

## 4.1 இலங்கையில் சிறுவர் இழிதொழில் வாணிபம் தொடர்பிலான ஆவணங்களின் பின்னுறுதிப்படுத்தல் நிலைமை

**ஐநாவின் தேசங்களுக்கிடையிலான ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்களுக்கு எதிரான உடன்படிக்கை (UNTOC) மற்றும் குறிப்பாக பெண்கள் மற்றும் சிறுவர்கள் தொடர்பிலான சிறுவர் இழிதொழில் வாணிபத்தை அடக்கவும் தடுக்கவுமான பலேர்மோ பட்டயம் (2000) (இழிதொழில் வாணிப பட்டயம் அல்லது பலேர்மோ பட்டயம் என குறித்துரைக்கப்படுவதும் உண்டு)**

**UNTOC பற்றி**

**UNTOC** இன் நோக்கம் வினைத்திறனான முறையில் தேசங்களுக்கிடையிலான ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களை தடுக்கவும், எதிர்கொள்ளவும் ஒத்துழைப்பை மேம்படுத்துவதாகும் (உறுப்புரை 1). இது பிரதானமாக ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியல் குழு பங்கேற்றலை குற்றமாக்குதல், அத்தகைய குழுவின் பண வஞ்சக் இழிதொழில் வாணிபம், இலஞ்சத்தினை குற்றமாக்குதல், நீதிக்கு தடையேற்படுத்துவதை குற்றமாக்குதலுடன் தொடர்புபடுகிறது.

இலங்கை இதில் 13.12.2000ம் திகதியன்று கையொப்பமிட்டதுடன் 22.09.2006ல் பின்னுறுதிப்படுத்தியது.[30]

**ஒரு குற்றச்செயல் தேசங்களுக்கிடையிலானதாக எப்போது வரையறுக்கப்படுமெனில்,**

a) ஒரு அரசிற்கும் மேலான இடங்களில் புரியப்படுதல்.

b) ஒரு அரசில் புரியப்பட்டாலும் அதன் முக்கியமான பகுதியான ஆயத்தம், திட்டமிடல், நெறிப்படுத்தல் அல்லது கட்டுப்படுத்தல் வேறொரு அரசில் நடாத்தப்பெறுதல்.

c) ஒரு அரசில் புரியப்பட்டாலும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியல் குழுவின் குற்றவியல் நடவடிக்கைகள் ஒன்றிற்கும் மேற்பட்ட அரசுகளில் ஈடுபட்டிருத்தல் அல்லது

d) ஒரு அரசில் புரியப்பட்டாலும் அதன் விளைவு வேறு அரசிற்கு தாக்கத்தினை ஏற்படுத்தல்.
(உறுப்புரை 3.2)

ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியல் குழு என்பது மூன்று அல்லது அதற்கும் அதிகமான நபர்களை கட்டமைவாகக் கொண்ட, குறிப்பிட்ட காலத்திற்கு வலுவிலிருந்து, ஒன்று அல்லது பல தொடர்ச்சியான குற்றச்செயல்களை புரியும் நோக்கத்தோடு அல்லது UNTOC இனால் அல்லது பலேர்மோவினால் தாபிக்கப்பட்ட குற்றச்செயல்களை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஒரு நிதிசார் அல்லது வேறு ஏதேனும் பொருள் சார் நன்மையடைய புரிதல் என UNTOC வரையறுக்கின்றது

UNTOC ஆனது இரு பின்னேடுகளை பிற்சேர்க்கையாகக் கொண்டதாகும். அதன் உறுப்புரை 37 பின்னேட்டினது திறத்தவராவதற்கு, ஒரு அரசானது மூல உடன்படிக்கையின் ஒரு திறத்தவராக இருக்க வேண்டும். எனினும், ஒரு பின்னேட்டிற்கு அரச திறத்தவர் கட்டுப்படுவதற்கு குறித்த பின்னேட்டின் திறத்தவராக இருந்தால் மட்டுமே கட்டுப்படுத்தப்படுவர். UNTOC ன் பட்டயங்கள் UNTOC உடன் இணைத்தே குறித்த பின்னேட்டின் நோக்கத்தினை கருத்திற் கொண்டு பொருள் கொள்ளப்பட வேண்டும்.

[30] https://www.unodc.org/documents/middleeastandnorthafrica/organized-crime/UNITED_NATIONS_CONVENTION_AGAINST_TRANSNATIONAL_ORGANIZED_CRIME_AND_THE_PROTOCOLS_THERETO.pdf

## 4.2. பலேர்மோ பின்னேடு பற்றி

பலேர்மோ பின்னேட்டின் முன்னுரையானது இழிதொழில் வாணிபத்தை, குறிப்பாக பெண்கள் மற்றும் சிறுவர்கள் இழிதொழில் வாணிபத்தினை ஆரம்பிக்கும், பயணிக்கும், அடையும் நாடுகளில் முழுஅளவினதான சர்வதேச அணுகுமுறையின் மூலம் தடுக்கவும் எதிர்கொள்ளவும், வினைத்திறனான செயற்பாட்டினை முன்னெடுத்து இழிதொழில் வாணிபத்தைத் தடுக்கவும், இழிதொழில் வாணிபர்களுக்கு தண்டனையளிக்கவும் பாதிக்கப்பட்டவர்களை பாதுகாக்கவும் வேண்டுமென்பதை தேவைப்படுத்துகின்றது. இழிதொழில் வாணிபத்திற்கான அம்சங்களை உள்ளடக்கிய ஒரு உலகளாவிய ஆவணத்தின் வெற்றிடத்தை இப்பட்டயம் குறித்துக்காட்டுவதுடன் அத்தகையதொரு ஆவணமாக பலேர்மோ பின்னேடு திகழும் எனவும் எண்ணப்பட்டிருக்கின்றது.

இலங்கை இதில் 13.12.2000இல் கையொப்பமிட்டதுடன், 15.06.2015இல் பின்னுறுதிப்படுத்தியது. இப்பின்னேட்டின் நோக்கங்களாக பின்வருவனவற்றை அடையாளங்காணலாம்.[31]

a) *பெண்கள் மற்றும் சிறுவர்களின் மீது குறிப்பான கவனம் செலுத்தி இழிதொழில் வாணிபத்தை தடுத்தலும் எதிர்கொள்ளுதலும்.*


b) *மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் விதத்தில் அத்தகைய இழிதொழில் வாணிபத்தினால் பாதிக்கப்பட்டவர்களை பாதுகாத்தலும் உதவியளித்தலும். மற்றும்,*

c) *குறித்த நோக்குகளை அடைவதற்கு அரச திறத்தவர்களுக்கிடையிலான ஒத்துழைப்பினை மேம்படுத்தல். (உறுப்புரை 2)*

### 4.2.1 வரைவிலக்கணங்கள்.

| பலேர்மோ பின்னேட்டின் உறுப்புரை 3(அ) இழிதொழில் வாணிபத்தை பின்வருமாறு வரைவிலக்கணம் செய்கிறது. | |
|---|---|
| **செயல்** | • ஆட்சேர்த்தல், போக்குவரத்து, கைமாறல், வைத்திருத்தல் அல்லது ஆட்களைப் பெற்றுக் கொள்ளல். |
| **வழிகள்** | • பின்வரும் வழிகள் மூலம் நடைபெறலாம்,<br>• பயமுறுத்தல் அல்லது வற்புறுத்தலை பிரயோகித்தல் அல்லது கட்டாயப்படுத்தலுக்கான வேறு வடிவங்கள்.<br>• ஆட்கவர்தல்,<br>• மோசடி,<br>• ஏமாற்றுதல்<br>• அதிகாரத் துஸ்பிரயோகம் அல்லது இயலாமைக்குரிய ஒரு நிலை அல்லது<br>• கொடுப்பனவுகளை அல்லது நலன்களை வழங்குதல் அல்லது பெற்றுக் கொள்ளல் அல்லது (இன்னொரு நபரின் மீது கட்டுப்பாடுடைய ஒரு நபரின் இணக்கத்தினை பெறுவதற்காக) |
| **காரணம்** | ண்டலுக்கான காரணத்திற்காக. |
| **சுரண்டப்படுதல்.** | • சுரண்டப்படுதலானது மிகக் குறைந்தளவில் இவற்றை உள்ளடக்கும்.<br>• மற்றவர்களால் பாலியல் சுரண்டலுக்கு ஆளாகுதல் அல்லது வேறு வகையினதாக பாலியல் சுரண்டல்.<br>• கட்டாயப்படுத்தப்பட்ட வேலை அல்லது சேவைகள்<br>• அடிமைத்தனம் அல்லது அடிமைத்தனத்திற்கு ஒப்பான செயற்பாடுகள்<br>• சேவகம் அல்லது<br>• உடலுறுப்பு அகற்றல். |


[31] Sri Lanka ratified the Palermo Protocol with the reservation "… [T]he Government of the Democratic Socialist Republic of Sri Lanka does not consider itself bound by paragraph 2 of Article 15 as provided for in paragraph 3 of Article 15."




**உங்களுக்கு தெரிந்திருந்ததா?**

இத்தகைய சந்தர்ப்பங்களில் குற்றப் பொறுப்பிலிருந்து விலகிக் கொள்ள **இணக்கம் என்னும் எதிர்வாதத்தினை** எடுக்க முடியாது. இது ஒரு நபரும் தன்னை சுரண்டலுக்கு ஒப்புக் கொடுக்க மாட்டார் என்ற கோட்பாட்டில் தங்கியுள்ளது.

- வயது வந்தவர்கள் தொடர்பில், சரியான வழிகளில்லாத முறைகள் பயன்படுத்தப்படுவதனால் இணக்கம் புறக்கணிக்கப்படுகிறது.
- சிறுவர்களை பொறுத்தவரையில், அவர்களில் இயலாத் தன்மையின் நிலையினால் இணக்கத்தினை வழங்க முடியாது என்பதாகும்.




## 4.2.2 பலேர்மோ பின்னேட்டின் பிரயோகம்

இழிதொழில் வாணிபம் சம்பந்தமான பின்னேடானது பின்வருமாறு பிரயோகிக்கப்படும்:

- உறுப்புரை 5ன் கீழாக குற்றமானது தேசங்களுக்கிடையிலானதான இயல்பினதாயும், ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட குற்றவியல் குழுவின் ஈடுபாட்டுடனும் காணப்படுமிடத்து தடுப்பு, விசாரணை மற்றும் வழக்கிடுதல்.
- பாதிக்கப்பட்டவர்களை பாதுகாத்தல்.

உறுப்புரை (4)

UNTOC மற்றும் பலேர்மோ பின்னேடுகள் இழிதொழில் வாணிபத்துடன் சம்பந்தப்பட்ட ஒரு சர்வதேச பொறிமுறையினை மேம்படுத்துவதற்கான குறிக்கோளுடையது என்பது கவனிக்கத்தக்கதாகும். அது தனித்த நாடொன்று தேசிய சட்டங்களை ஆக்கி தனிப்பட்ட இழிதொழில் வாணிபர்களை அந்நாட்டில் தண்டிப்பதை தடுக்கவோ மட்டுப்படுத்தவோ இல்லை.

### 4.2.3. இழிதொழில் வாணிபத்தின் மூலமாக பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாத்தல்.

பலேர்மோ பின்னேட்டின் உறுப்புரை 6 ஒவ்வொரு அரச திறத்தவரையும் பின்வருவனவற்றுக்கு தேவைப்படுத்துகின்றது.

- இழிதொழில் வாணிபத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் அந்தரங்கம் மற்றும் அடையாளத்தினை பாதுகாத்தல். உதாரணமாக அத்தகைய இழிதொழில் வாணிபத்துடன் தொடர்புடைய இரகசியமான முறையிலான சட்ட நடைமுறையினைப் பின்பற்றுதல்.
- பாதிக்கப்பட்டவர்களுக்கு பொருத்தமான நீதிமன்றம், நிர்வாக நடவடிக்கை தொடர்பில் தகவல்களை, உதவிகளை (சட்டப் பிரதிநிதித்துவம் உள்ளடங்கலாக) வழங்கல்.
- பின்வருவனவற்றை சிவில் சமூகம் மற்றும் அரசசாரா நிறுவனங்களினதும் ஒத்துழைப்பினைப் பெற்று, பாதிக்கப்பட்டவர்களின் வயது, பால், சிறுவர்களின் விசேட தேவைகளை கருத்திற் கொண்டு உடல், உள, சமூக நிவாரணங்களை வழங்குதல்.
    - பொருத்தமான உறைவிடம்
    - ஆற்றுப்படுத்தல், சட்ட, மருத்துவ, உளவியல், பொருள் ரீதியான உதவி.
    - வேலை வாய்ப்பு, கல்வி மற்றும் பயிற்சி வாய்ப்புக்கள்.
- பாதிக்கப்பட்டவர்களுக்கு உடற் பாதுகாப்பினை வழங்குதல்.
- பாதிக்கப்பட்டவர்களினால் அனுபவிக்கப்பட்ட துன்பத்திற்கு நட்டஈடு பெற்றுக் கொடுக்கக்கூடிய வாய்ப்பினை உறுதிப்படுத்தல்.

## 4.3. சிறுவர்கள் உரிமைகள் மற்றும் சிறுவர் இழிதொழில் வாணிபம் தொடர்பில் தொடர்புபடும் வேறு சர்வதேச சமவாயங்கள்

வரைபடம் 4.3.1

| ஆவணம் | பின்னுறுதிப்படுத்தப்பட்ட திகதி |
|---|---|
| 1926ம் ஆண்டின் ஐநாவின் அடிமைத்தன சமவாயம் UN Slavery Convention, 1926 | 21 மார்ச் 1958 |
| ஊ029 சர்வதேச தொழில் தாபன வலிந்த வேலை பற்றிய சமவாயம், 1930 C029 International Labour Organisation Forced Labour Convention, 1930 | 5 ஏப்ரல் 1950 |
| 1949ம் ஆண்டின் ஆள் இழிதொழில் வாணிபத்தினையும் மற்றவர்களின் விபச்சாரச் சுரண்டலினையும் அடக்குவதற்கான ஐநாவின் சமவாயம் UN Convention for the Suppression of the Traffic in Persons and of the Exploitation of the Prostitution of Others, 1949 | 15 மார்ச்1958 |
| 1956ம் ஆண்டின் ஐநாவின் அடிமைத்தனம், அடிமை வர்த்தகம், அடிமைத்தனத்தினை ஒத்த நிறுவன மற்றும் பழக்கங்களை இல்லாதாக்குவதற்கான பின்னிணைப்புச் சமவாயம் UN Supplementary Convention on the Abolition of Slavery, the Slave Trade and Institutions and Practices Similar to Slavery, 1956 | 20 மார்ச் 1958 |

| ஆவணம் | பின்னுறுதிப்படுத்தப்பட்ட திகதி |
|---|---|
| 1966ம் ஆண்டின் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச ஒப்பந்தம் International Covenant on Civil and Political Rights, 1966 | 11 யூன் 1980 |
| C143 சர்வதேச தொழில் தாபனத்தின் துஸ்பிரயோக நிலமையிலான புலம்பெயர்வில் அக்கறை கொண்டதும், புலம்பெயர் வேலையாட்களின் சமத்துவம், வாய்ப்புகள், நடத்துகைகளை மேம்படுத்துவதற்குமான சமவாயம் 1975 C143 International Labour Organisation Convention Concerning Migration in Abusive Conditions and the Promotion of Equality of Opportunity and Treatment of Migrant Workers, 1975 | பின்னுறுதிப்படுத்தப்படவில்லை |
| 1979ம் ஆண்டின் ஐநாவின் பெண்களுக்கு எதிரான அனைத்து பராபட்சங்களையும் இல்லாதொழிப்பதற்கான சமவாயம் UN Convention on Elimination of All Forms of Discrimination Against Women, 1979 | 5 ஒக்ரோபர் 1981 |
| 1989ம் ஆண்டின் ஐநாவின் சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம் UN Convention on the Rights of the Child, 1989 | 12 யூலை1991 |
| சிறுவர்களை பாதுகாப்பதற்கும், நாடுகளுக்கிடையிலான மகவேற்பு தொடர்பிலான ஒத்துழைப்பு பற்றியதுமான சமவாயம் (ஹேக் சமவாயம்) Convention on Protection of Children and Co-operation in Respect of Inter-country Adoption (‘Hague Adoption Convention’ 1993) | 23 ஜனவரி 1995 |
| 1991ம் ஆண்டின் அனைத்து புலம்பெயர் வேலையாட்கள் மற்றும் அவர்களின் குடும்ப அங்கத்தவர்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கான ஐநாவின் சமவாயம் UN Convention on the Protection of the Rights of All Migrant Workers and Members of Their Families, 1991 | 11 மார்ச் 1996 |
| C138 சர்வதேச தொழில் தாபனத்தின் வேலைக்கு அனுமதிக்கப்படுவதற்கான குறைந்தபட்ச வயது பற்றிய சமவாயம், 1973 C138 International Labour Organisation Minimum Age for Admission to Employment Convention, 1973 | 11 பெப்ரவரி 2000 |
| ஆயுத முரண்பாடுகளில் ஈடுபடுத்தப்படும் சிறுவர்கள் தொடர்பில் சிறுவர் உரிமைகள் சமவாயத்திற்கான விருப்பத்தேர்வான பின்னேடு, 2000 Optional Protocol to the Convention on the Rights of the Child on the involvement of children in armed conflict, 2000 | 2000 |
| C182 சர்வதேச தொழில் தாபனத்தின் சிறுவரை வேலைக்குட்படுத்தலின் மோசமான வடிவங்களை இல்லாதொழித்தல் பற்றிய சமவாயம், 1999 C182 International Labour Organisation Convention to Eliminate the Worst Forms of Child Labour, 1999 | 1 மார்ச் 2001 |

| ஆவணம் | பின்னுறுதிப்படுத்தப்பட்ட திகதி |
|---|---|
| 2002ம் ஆண்டின் பெண்கள் மற்றும் சிறுவர்கள் விபச்சாரத்திற்காக இழிதொழில் வாணிபத்திற்கு உட்படுத்தப்படுவதனை தடுக்கவும் எதிர் கொள்ளவுமான சார்க் சமவாயம்<br><br>SAARC Convention on Preventing and Combating Trafficking in Women and Children for Prostitution, 2002 | ஜனவரி 2002 |
| தெற்காசியாவில் சிறுவர் சேமநலனை மேம்படுத்துவதற்கான பிராந்திய ஒழுங்குபடுத்தல்கள் பற்றிய சார்க்க சமவாயம் SAARC Convention on Regional Arrangements for the Promotion of Child Welfare in South Asia, 2002 | ஜனவரி 2002 |
| ஊ105 சர்வதேச தொழில் தாபனத்தின் வலிந்து வேலைக்குட்படுத்தலை இல்தொழிப்பதற்கான சமவாயம் 1957 International Labour Organisation Abolition of Forced Labour Convention, 1957 | 7 துயரெயசல் 2003 |
| 2000ம் ஆண்டின் சிறுவரை விற்பனைப்படுத்தல், சிறுவர் விபச்சாரம், சிறுவர் பாலியல் படங்கள்பற்றிய சிறுவர் உரிமைகள் சமவாயத்திற்கான விருப்பத்தேர்வான பின்னேடு Optional Protocol to the Convention on the Rights of the Child on the sale of children, child prostitution and child pornography, 2000 | 2006 |
| 2000 ஆண்டின் குறிப்பான பெண்கள் மற்றும் சிறுவர்கள் மீதான இழிதொழில் வாணிபத்தினை தடுக்கவும், அடக்கவும், தண்டிக்கவுமான ஐநாவின் பின்னேடு, இது ஐநாவின் நிலைமாறான ஒழுங்மைக்கப்பட்ட குற்றங்களுக்கு எதிரான சமவாயத்தின் பிற்சேர்க்கையாகும். 1998 UN Protocol to Prevent, Suppress and Punish Trafficking in Persons Especially Women and Children, 2000, which supplemented UN Convention Against Transnational Organized Crime, 2000 (யடநசஅழ °சழவழஉழட) | 15 யூன் 2015 |
| 1998ம் ஆண்டின் நடவடிக்கைக்கான திட்டமும் பாங்கொக் பொருத்தனையும் Bangkok Accord and Plan of Action, 1998 | பின்னுறுதிப்படுத்தல் தேவைப்படுத்தப்படவில்லை |

## 4.4 மனித உரிமைகள் தொடர்பிலான உலகலாவிய பிரகடனம் Universal Declaration of Human Rights




UDHRஆனது மனித உரிமைகள் வரலாற்றில் ஒரு மைற் கல்லாகும். இது 10.12.1948ல் பாரிஸில் நடைபெற்ற ஐநாவின் பொதுச்சபையில அனைத்து மக்களினதும், அனைத்து தேசங்களினதும் பொதுவான தராதரமாக (பொதுச் சபை தீர்மானம் 217அ) பிரகடனப்படுத்தப்பட்டது. இது முதன் முதலாக உலகளாவிய ரீதியில் அடிப்படை மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என வகுத்ததுடன் 500க்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்ப்பும் செய்யப்பட்டது. உறுப்புரை 4 மற்றும் 5 சிறுவர் இழிதொழில் வாணிபத்துடன் மிகவும் தொடர்புடையதாகும்.

- **உறுப்புரை 4-** எவரும் அடிமைத்தனத்திகோ அல்லது சேவகத்திற்கோ ஆளாகுதலாகாது, அடிமைத்தனமும் அடிமை வியாபாரமும் அதன் அனைத்து வடிவங்களிலும் தடுக்கப்பட வேண்டும்.
- **உறுப்புரை 5** – எந் நபரும் சித்திரவதை அல்லது கொடூரமான மனிதாபிமானமற்ற நடத்தை அல்லது தண்டனைக்கு ஆளாகுதலாகாது.

## 4.5. பெண்களுக்கு எதிரான பாராபட்சத்தின் அனைத்துவிதமான வடிவங்களையும் இல்லாதொழிப்பதற்கான சமவாயம் (1979) (CEDAW)

### 4.4.1 CEDAW பற்றி

குறிப்பாக பலவீனமானவர்களான பெண்கள், சிறுவர்களைக் கொண்ட இழிதொழில் வாணிபமானது ஒரு குற்றமாகும்.[32] 1975ல் மெக்சிக்கோ நகரில் நடைபெற்ற முதலாவது பெண்கள் மாநாட்டிலேயே பெண்கள் உரிமைகள் தொடர்பிலான விசேட ஆவணத்திற்கான ஆலோசனை எழுப்பப்பட்டது. இதன் விளைவாக, CEDAW உருவாக்கப்பட்டு 1979ல் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுக் கூட்டத்தில் தீர்மானம் 34/180 ஆக கையொப்பத்திற்கும், அமுலாக்கத்திற்கும், இணக்கத்திற்காகவும் முன்வைக்கப்பட்டது. இது பெண்களுக்கான உரிமைகளின் சர்வதேச சாசனம் என விபரிக்கப்படுகின்றது. இது உறுப்புரை 27(1)க்கு அமைவாக 03.09.1981ல் வலுவுக்கு வந்ததுடன் 2017 ஆகஸ்டில் 99 நாடுகளினால் கையொப்பமிடப்பட்டும், 189 நாடுகளினால் பின்னுறுதிப்படுத்தப்பட்டும் உள்ளது. இலங்கை CEDAW 17.07.1980ல் கையொப்பமிட்டதுடன், அவ்வுடன்படிக்கையினை 05.10.1981ல் பின்னுறுதிப்படுத்தியதன் மூலம் அதன் ஒரு திறத்தவருமாகியது.[33]

CEDAWý இழிதொழில் வாணிபம் தொடர்பில் உறுப்புரை 6ஆனது “ பெண்களை வாணிபஞ்செய்தல், விபச்சாரத்திற்காக பெண்களை சுரண்டுதல் போன்ற அனைத்து வடிவங்களையும் அடக்க அரச திறத்தவர்கள் சட்டவாக்கம் உள்ளடங்கலாக அனைத்துப் பொருத்தமான நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் என்கிறது.

---

[32] See Article 9(4) of The Palermo Protocol to Prevent, Suppress and Punish Trafficking in Persons, especially Women and Children (2000)

[33] https://treaties.un.org/Pages/ViewDetails.aspx?src=TREATY&mtdsg_no=IV-8&chapter=4&lang=en

### 4.5.1 CEDAW வின் விருப்பத் தேர்வான பின்னேடு

CEDAW வின் விருப்பத் தேர்வான பின்னேடு 06.10.1999ல் கொண்டுவரப்பட்டதுடன் 22.12.2000இல் வலுவுக்கு வந்தது.[34] CEDAW வின் அரச திறத்தவர்கள், தானாகவே விருப்பத் தேர்வான பின்னேட்டிற்கு திறத்தவர்களாக முடியாது. அப்பின்னேட்டிற்கு திறத்தவராகுவதற்கு அதில் கையொப்பமிட்டு பின்னுறுதிப்படுத்த வேண்டும்.

இலங்கை CEDAW வின் விருப்பத் தேர்வான பின்னேட்டிற்கு 15.10.2002ல் இணங்கி ஒரு திறத்தவராகியது. விருப்பத்தேர்வான பின்னேட்டில் இரண்டு முக்கிய நடபடிமுறைகள் குறித்துரைக்கப்பட்டுள்ளன.

- உடன்படிக்கையின் கீழாக பாதுகாக்கப்படும் உரிமைகளின் மீறல்களை கோரிக்கையாக்கி குழுவிற்கு தனிப்பட்ட பெண்களாகவோ அல்லது பெண்களின் குழுக்களாகவோ சமர்ப்பிக்க ஒரு தொடர்பாடல் நடைமுறை.
- பாரிய அல்லது திட்டமிட்ட பெண்கள் உரிமை மீறல் நிலமைகள் பற்றி உடனடியாக விசாரணைகளை ஆரம்பிக்க குழுவினை இயலுமானதாக்கும் ஒரு விசாரணை நடைமுறை.


இரு சந்தர்ப்பங்களிலும், அரசு CEDAW சமவாயத்திற்கும் விருப்பத் தேர்வான பின்னேட்டிற்கும் திறத்தவராக இருக்க வேண்டும்.

### 4.5.2 பெண்களுக்கு எதிரான பாராபட்சங்களின் அனைத்து வடிவங்களையும் இல்லாதொழிப்பதற்கான குழு

பெண்களுக்கு எதிரான பாராபட்சங்களின் அனைத்து வடிவங்களையும் இல்லாதொழிப்பதற்கான குழு (**the CEDAW Committee**) CEDAWஅமுலாக்குவதற்கான கண்காணிப்பாளர். இக் குழு CEDAW விடயத்தில் தேர்ச்சியுடைய 23 நிபுணர்களை கொண்டதாகும். இந் நிபுணர்கள் அரச திறத்தவர்களினால் முன்மொழியப்பட்டு இரு வருட காலத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாவர்.

இக்குழு அமுலாக்கத்திற்கான ஒரு அமைப்பு அல்ல. இது அரசுகளை CEDAW க்கு இணங்கவோ, இணங்க மறுத்த அரசினை தண்டிக்கவோ கட்டாயப்படுத்த முடியாது. எனினும் இது அரச திறத்தவருடன் ஆக்கபூர்வமாகப் பணிபுரிந்து அவர்களை CEDAW வினை முழுமையான அமுலாக்க வலியுறுத்துகின்றது.

### 4.5.3 CEDAW அறிக்கையிடல் நடபடிமுறை




CEDAW ன் அரச திறத்தவர்கள், அதற்கு இணங்க பாராபட்சமான சட்டங்கள், கொள்கைகள் மற்றும் வழக்காறுகளை திருத்துதல் உள்ளடங்கலாக அதனை அமுலாக்குவதற்கு பொறுப்பெடுத்துள்ளனர். அதனை அமுலாக்குவதற்கு ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியில் அறிக்கையிடல் முறையின் மூலம் சர்பார்த்தலை CEDAW குழு மேற்கொள்கின்றது. இதற்கேற்ப, அரச திறத்தவர்கள் பின்னுறுதிப்படுத்தியதன் ஒரு வருடத்தில் ஒரு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்பதுடன் பின்னர் ஒவ்வொரு நான்கு வருடங்களுக்கும் ஒருமுறை அறிக்கையிடல் வேண்டும். இவ்வறிக்கையில் அரச திறத்தவர்கள் தாம் எவ்வாறு உடன்படிக்கையினை அமுலாக்கல் தொடர்பிலான வளர்ச்சி மற்றும் படிநிலைகளை விபரித்தல் வேண்டும். அரச திறத்தவரினால் உத்தியோகபூர்வ அறிக்கை சமர்ப்பிக்கப்படுவதற்கு மேலாக, அரசு சாரா நிறுவனங்கள் ஒரு அரசினால் இணங்கிக்கொள்ளப்பட்ட பொறுப்புக்கள் தொடர்பிலான அமுலாக்கம் தொடர்பில் தமது பார்வையினை நிழல் அறிக்கையாக சமர்ப்பிக்க அனுமதிக்கப்படுகின்றனர். இவ்வறிக்கைகளை கவனத்தில் எடுத்ததன் பின்னர் குழு மேற்குறித்தவற்றை உடன்படிக்கையின் அமுலாக்கம் தொடர்பில் மதிப்பாய்வு செய்து முடிவுகளையும் பரிந்துரைகளையும் சொந்த அறிக்கையாக வெளிவிடும்.

[34] http://www.ohchr.org/EN/ProfessionalInterest/Pages/OPCEDAW.aspx

## 4.6 ஐநாவின் சிறுவர் உரிமைகள் தொடர்பிலான உடன்படிக்கையும் பின்னேடுகளும்.
**UN Convention on the Rights of the Child (1989) and Protocols**

### 4.6.1 CRC பற்றி

சிறுவர் உரிமைகள் தொடர்பிலான ஐக்கிய நாடுகள் சபையின் சமவாயமானது சிறுவர்களின் சிவில், அரசியல், பொருளாதார, சமூக, சுகாதார மற்றும் கலாச்சார உரிமைகளை விபரிக்கும் மனித உரிமைகள் சமவாயமாகும். ஐக்கிய நாடுகள் சபையின் பொதுக கூட்டத்தில் 44/25ம் இலக்க தீர்மானமாக 1989ல் வெளிவந்து கையொப்பத்திற்காகவும், பின்னுறுதிப்படுத்துவதற்காகவும் இணக்கத்திற்காகவும் திறந்துவிடப்பட்டது.[35] உறுப்புரை 49க்கு ஏற்ப 02.09.1990 வலுவுக்கு வந்தது. இது தேசங்களுக்கிடையிலாக சர்வதேச ரீதியில் அங்கீகாரத்திற்குள்ளான உடன்படிக்கையாகும். இச்சமவாயத்தினை பின்னுறுதிப்படுத்திய தனிப்பட்ட தேசங்கள், அவர்களின் நாட்டில் சிறுவர் உரிமைகளை உறுதிப்படுத்த பொறுப்பு வாய்ந்தவர்களாவர். 2017 ஆகஸ்ட் வரை இதில் 140 நாடுகள் கையெழுத்திட்டுள்ளதுடன் 194 நாடுகள் செல்லுபடியானதாக்கியுள்ளது.[36]

இலங்கை இதில் 27.01.1990ல் கையொப்பமிட்டுள்ளதுடன் 12.07.1991ல் பின்னுறுதிப்படுத்தியும் உள்ளது.

இது 54 உறுப்புரைகளைக் கொண்டுள்ளது. இது சிறுவர் உரிமைகளையும் அந்த உரிமைகளினை வயது வந்தோர் பாதுகாப்பதற்கான பொறுப்புடைமையினையும் வரையறை செய்கிறது. இவ்வுரிமைகள் நான்கு வகைகளாகப் பிரிக்கப்படலாம்.

- ***உரிமைகளின் பாதுகாப்பு*** – உரிமைகளின் பாதுகாப்பானது அனைத்து வடிவத்திலுமான துஸ்பிரயோகம், பாராபட்சம், சுரண்டல் மற்றும் கொடுரம் ஆகியவற்றுக்கு எதிரான பாதுகாப்பினை உறுதிப்படுத்துகின்றது.

- ***உயிர் வாழ்க்கைக்கும் அபிவிருத்திக்கானதுமான உரிமைகள்*** - இவ்விரு வகைப்பாட்டின் கீழ், சிறுவர்களின உயிர்வாழ்க்கைக்கும் அபிவிருத்திக்கும் அவசியமான வளங்களுக்கான உரிமைகள் திறமைகள் ஒத்துழைப்புக்கள் உறுதிப்படுத்தப்படுகின்றது. இவ்விரு வகைப்பாட்டிற்குள்ளும் போதுமான உணவு, உறைவிடம், தூய நீர், முறையான கல்வி, அடிப்படை சுகாதார கவனிப்பு, ஓய்வும் விடுப்பும், கலாச்சார செயற்பாடுகள், உரிமைகள் தொடர்பிலான தகவல்கள் ஆகியன தொடர்பிலான உரிமைகள் உள்ளடங்கும்.

- ***பங்குபற்றும் உரிமைகள்*** - சிறுவர்களுக்கு அவர்களின் சமூக, பொருளாதார, சமய, கலாசார மற்றும் அரசியல் ஆகியவற்றை பாதிக்கும் விடயங்கள் தொடர்பில் கருத்துக்களை தெரிவிக்க உரிமையுண்டு. இவ்வகைப்பாட்டினுள் கருத்துத் தெரிவிப்பதற்கும், கேட்கப்படுவதற்குமான உரிமை, தகவலுக்கான உரிமை, ஒன்றுசேர்வதற்கான உரிமை ஆகியவை உள்ளடங்கும் என்பதுடன் இவ்வுரிமைகள் சிறுவர்கள் தமது உரிமைகளை அடையாளங் கண்டு கொள்ளவும், சமூகத்தில் அவற்றை அனுபவிக்கவும் உதவும்.

- ***பிள்ளையின் மீதான அதி சிறந்த அக்கறை***

  இச் சமவாயம் சிறுவர் தொடர்பிலான முக்கிய கோட்பாடான பிள்ளையின் மீதான அதி சிறந்த அக்கறை கோட்பாட்டினை அங்கீகரிக்கின்றது. சிறுவர்களை தொடர்பிலான தீர்மானங்களை மேற்கொள்ளும் போதும், அமுலாக்கும் போதும் அவர்கள் மீதான அதி சிறந்த அக்கறையினை கருத்திற் கொள்ளுவது அவசியமானதாகும். எனவே, வயது வந்தோர் இக் கோட்பாட்டினை தமது பகிரங்க மற்றும் தனிப்பட்ட சிறுவர்களை நேரடியாக அல்லது மறைமுகமாக உள்ளடக்கும்

[35] http://www.ohchr.org/EN/ProfessionalInterest/Pages/CRC.aspx
[36] https://treaties.un.org/Pages/ViewDetails.aspx?src=IND&mtdsg_no=IV-11&chapter=4&lang=en

தீர்மானமெடுத்தல்களின் போதும், சட்டவாக்கம், நீதித்துறை, நிதி, மற்றும் நிர்வாகம் தொர்பிலான விடயங்களிலும் பிரயோகித்தல் வேண்டும். உதாரணமாக,

- வயது வந்தவர்கள் பகிரங்க அலுவலர்களாக ஒழுங்குவிதிகள், வழக்காறுகள், அல்லது வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகள் தொடர்பிலாக நிர்வாக ரீதியான தீர்மானங்களை ஆக்குதல்.
- சட்டங்கள் மற்றும் கொள்கைகள் சட்டவாக்குனர்களால் வகுக்கப்படுதல்.
- நீதிபதிகள் தீர்ப்புரைத்தல், பெற்றோர் நாளாந்த செயற்பாடுகளில் பிள்ளைகள் நேரடியாக அல்லது மறைமுகமாக பாதிக்கும் வகையிலான செயற்பாடுகளில், தீர்மானமெடுப்பவர் பிள்ளைகளின் மீதான அதி சிறந்த அக்கறைக்கு முக்கியத்துவம் கொடுப்பதை கவனத்திலெடுத்தல் வேண்டும்.

### 4.6.2 CRCக்கு விருப்பத் தேர்வான பின்னேடுகள்



ஊசுஊக்கு விருப்பத் தெரிவான மூன்று பின்னேடுகளும் காணப்படுகின்றன.

***1. ஆயுத முரண்பாடுகளில் சிறுவர்களை ஈடுபடுத்தல் தொடர்பான விருப்பத் தேர்வான பின்னேடு Optional Protocol on the Involvement of Children in Armed Conflict (2002)* (OPAC)**

இப்பட்டயமானது 18 வயதுக்கும் குறைவான சிறுவர்களை ஆயுத படையினராக நாடுகள் சேர்க்கக் கூடாது என்பதனை உறுதிப்படுத்துகின்றது. இது 12.07.2002 அன்று நடைமுறைக்கு வந்தது. இலங்கை 2000ம் ஆண்டு அதனை கையெழுத்திட்டு பின்னுறுதிப்படுத்தியது.[37]

***2. சிறுவர் விற்பனை, சிறுவர் விபச்சாரம், சிறுவர் ஆபாசப்படம் தொடர்பிலான விருப்பத் தேர்வுப் பின்னேடு Optional Protocol on the Sale of Children, Child Prostitution and Child Pornography (2002)* (OPSC)**

இப்பின்னேடானது சிறுவர் விற்பனை, சிறுவர் விபச்சாரம், சிறுவர் ஆபாசப்படம் போன்றவற்றை திறத்தவர்கள் தடுக்க வேண்டுமென தேவைப்படுத்துகின்றது. இது 18.01.2001 அன்று நிறைவேற்றப்பட்டு வலுவுக்கு வந்தது. இலங்கை இப்பட்டயத்தில் 2002இல் கையெழுத்திட்டதுடன் 2006ல் பின்னுறுதிப்படுத்தியது.[38]

***3. சிறுவர் உரிமைகள், தொடர்பாடல் நடபடிமுறை தொடர்பிலான சமவாயத்திற்கான விருப்பத் தேர்வுப்பின்னேடு Optional Protocol to the Convention on the Rights of the Child on a Communications Procedure (2014)* (OPIC)**

இப் பின்னேடு சிறுவர் உரிமைகளின் மீறல் தொடர்பில் சிறுவர்கள் அல்லது அவரது பிரதிநிதிகள் தனிப்பட்ட முறைப்பாடுகளை மேற்கொள்ள ஏற்பாடு செய்தது. இது 14.04.2014ல் நடைமுறைக்கு வந்ததுடன் இலங்கையினால் கையெழுத்திடப்படவோ, பின்னுறுதிப்படுத்தவோ இல்லை.[39]

### 4.6.3 சிறுவர் உரிமைகள் சமவாயத்தின் மீதான குழு.

CRC மீதான குழுவானது 18 நிபுணர்களைக் கொண்ட சிறுவர் சமவாயத்தினை அரச திறத்தவர்கள் அமுலாக்குவதை மேற்பார்வை செய்வதற்காக நியமிக்கப்பட்ட அமைப்பொன்றாகும். இது OPAC மற்றும் OPSC ஆகிய இரு விருப்பத் தெரிவான பின்னேடுகள் தொடர்பிலான அமுலாக்கம் தொர்பிலும் மேற்பார்வை செய்கின்றது.

[37] http://www.ohchr.org/EN/ProfessionalInterest/Pages/OPACCRC.aspx
[38] http://www.ohchr.org/EN/ProfessionalInterest/Pages/OPSCCRC.aspx
[39] http://www.ohchr.org/EN/ProfessionalInterest/Pages/OPICCRC.aspx

### 4.6.4 CRC இன் அறிக்கையிடல் நடபடிமுறை

அனைத்து அரச திறத்தவர்களும் CCR குழுவிற்கு எவ்வாறு உரிமைகள் அமுலாக்கப்படுகின்றது என்பது தொடர்பில் கிரமமான அறிக்கைகள் சமர்ப்பிக்க கடமைப்பட்டவர்களாவர். உடன்படிக்கைக்கு இணக்கத்தைத் தெரிவித்து இரண்டு வருடத்தில் ஒரு ஆரம்ப அறிக்கையினையும், ஒவ்வொரு ஐந்து வருடத்திற்கும் ஒருமுறை கிரமமான அறிக்கையையும் சமர்ப்பித்தல் வேண்டும். CRC ஒவ்வொரு அறிக்கைகளையும் ஆராய்ந்து முடிவான அவதானங்கள் என்னும் வடிவத்தில் தனது அக்கறைகளையும் பரிந்துரைகளையும் வழங்கும்.

இக் குழு சிறுவர் உரிமைகள் சமவாயத்தினதும், அதன் முதலிரு விருப்பத் தேர்வான (OPAC மற்றும் OPSC) பின்னேடுகளினதும் அரச தரப்பினரின் மீறுகை தொடர்பிலாக OPIC ற்கு செய்யப்படும் தனிப்பட்ட முறைப்பாடுகளை கருத்திற் கொள்ள இயலுமானதாகும். மேலும் பாரிய அல்லது திட்டமிட்ட சிறுவர் உரிமைகள் சமவாயம், விருப்பத் தெரிவான பின்னேடுகள் தொடர்பிலான மீறுகைகள் தொடர்பில் விசாரணையினையும் முன்னெடுக்கலாம்.

## 4.7 இழிதொழில் வாணிபத்தையும் மற்றையவர்களின் விபச்சாரச் சுரண்டலினையும் அடக்குவதற்கான ஐநாவின் சமவாயம்

**UN Convention for the Suppression of the Traffic of Persons and of the Exploitation of the Prostitution of Others (1949)**

இழிதொழில் வாணிபம் தொடர்பிலான சர்வதேசத்தின் முதலாவது தலையீட்டின் போதான பார்வையானது பாலியல் சுரண்டலுக்காகவும், அடிமைத்தனத்திற்காகவும் பெண்கள் வாணிபஞ் செய்யப்படுவதையே ஒரு முக்கிய பிரச்சனையாகவும், பாதிக்கப்பட்டவரின் நாட்டிற்கு வெளியில் சுரண்டல்கள் நடைபெறுவதையுமே நோக்கியது.

1949ம் ஆண்டின் சமவாயமானது அதற்கு முன்னரான பலவந்தமான விபச்சாரம் தொடர்பிலான பல சமவாயங்களை விட மேலோங்கிக் காணப்படுகிறது.[40] 1949ம் ஆண்டு சமவாயத்தில் கையெழுத்திட்டவர்கள் மீது மூன்று கடமைகள் சுமத்தப்பட்டது

.




- இழிதொழில் வாணிபத்தை தடுத்தல்
- குறிப்பான நிர்வாக மற்றும் அமுலாக்கல் நடவடிக்கைகள், மற்றும்,
- இழிதொழில் வாணிபத்திற்கு உள்ளான ஆட்களை பற்றியதான சமூக நடவடிக்கைகள்.

இலங்கை 1949ம் ஆண்டு சமவாயத்திற்கு 15.04.1958 அன்று இணக்கம் தெரிவித்தது.[41]

**1949ம் ஆண்டு சமவாயமானது இரண்டு வழிகளில் இழிதொழில் வாணிபப் பிரச்சனை தொடர்பிலான பார்வை கொண்டுள்ளது, அதாவது விபச்சார தரகர்களினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் முன்னைய சமவாயத்தின் விடயங்களான "வெள்ளைய அடிமைத்தனத்துக்கான இழிதொழில் வாணிபம்" மற்றும் "பெண்கள்" என்பதற்கு இனம், பாலின சமத்துவ மொழி பயன்படுத்தப்படுகின்றது.**

[40] International Agreement of 1904 for the Suppression of White Slave Traffic; International Convention of 1910 for the Suppression of White Slave Traffic; International Convention of 1921 for the Suppression of the Traffic in Women and Children; and International Convention of 1933 for the Suppression of the Traffic in Women of Full Age

[41] http://www.ohchr.org/EN/ProfessionalInterest/Pages/TrafficInPersons.aspx

1949ம் ஆண்டு சமவாயமானது முதல் முறையாக இழிதொழில் வாணிப நோக்கிலிருந்து விபச்சாரத்தினை பார்த்தது ஆனால் துரதிஸ்டவசமாக அதன் வரைவிலக்கணத்தில் **சிறுவர்களை உள்ளடக்கத் தவறியது**. 1949ம் ஆண்டின் சமவாயம் பற்றிய மற்றைய மட்டுப்பாடுகள் அதன் பின்னரான காலத்தில் எழுப்பப்பட்டு கலந்துரையாப்பட்டது. குறிப்பாக,

- இழிதொழில் வாணிபம் தொடர்பினதான குறுகிய வரைவிலக்கணமானது விபச்சாரச் சுரண்டலுக்கு மட்டுமாக மட்டுப்படுத்தப்பட்டது.
- பல நாடுகளில் சட்டரீதியாக ஒழுங்கமைக்கப்பட்ட தன்னிச்சையான விபச்சாரம் தொடர்பில் இதன் பிரயோகம் மற்றும்,
- இழிதொழில் வாணிபத்தினால் பாதிக்கப்பட்டவர்களை விபச்சாரம் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளையே 1949ம் ஆண்டின் உடன்படிக்கை குற்றமாகக் குறித்துரைத்தது என்பதுடன் மேற்பார்வை செய்தல் மற்றும் அமுலாக்கலில் காணப்பட்ட குறைபாடு இழிதொழில் வாணிபத்தினை எதிர்கொள்வதை இந்த 1949 சமவாயத்தை வினைத்திறனற்றதாக்கியது.

### 4.7.1. இழிதொழில் வாணிபத்தை தடுக்கவும் எதிர்கொள்ளவும் அரச திறத்தவரின் கடமைகள்

உறுப்புரை 9 அரச திறத்தவர்களை விரிவான கொள்கை, திட்டங்கள், மற்றும் வேறு நடவடிக்கைகளை தாபிக்க வேண்டி நிற்கின்றது.

- இழிதொழில் வாணிபத்தை தடுக்கவும், எதிர்க்கவும்,
- இழிதொழில் வாணிபத்தினால் பாதிக்கப்பட்டவர்களை குறிப்பாக பெண்கள் மற்றும் சிறுவர்களை மீள பாதிக்கப்படாமல் பாதுகாத்தல்.
- இழிதொழில் வாணிபத்தை தடுக்கவும் எதிர்க்கவும் ஆராய்சி, தகவல், மற்றும் ஊடக பரப்புரை மற்றும் சமூக, பொருளாதார முயற்சிகளை மேற்கொள்ள நடவடிக்கையெடுத்தல்.
- ஆட்களின் இழிதொழில் வாணிபத்தை குறிப்பாக பெண்கள் மற்றும் சிறுவர்களை நலிந்தவர்களாக ஆக்கும் காரணிகளை மாற்ற நடவடிக்கை எடுத்தல் அவையாவன, வறுமை, அபிவிருத்தியின்னை, சம வாய்ப்புக்கான குறைபாடு.
- சட்டவாக்கம் மற்றும் ஏனைய நடவடிக்கைகளை உள்வாங்குதலும் பலப்படுத்துதலும், அவையாவன குறிப்பான பெண்கள் மற்றும் சிறுவர் தொடர்பிலான கல்வி, சமூக, கலாச்சார செயற்பாடுகள், இழிதொழில் வாணிபம் மற்றும் சுரண்டலை தூண்டும் எவ் வடிவங்களுக்கும் ஆதரவளிக்காமை,

## 4.8 கட்டாயப்படுத்தி தொழில் புரிய வைத்தல் தொடர்பிலான ஐடுமு உடன்படிக்கைகள்

| **4.8.1 அடிமைத்தனத்தினையும், அடிமை வியாபாரம், அடிமைத்தனத்தை ஒத்த வழக்கங்களையும் இல்லாதாக்குவற்கான பிறசேர்க்கையான 1956 உடன்படிக்கை** | **4.8.2 சர்வதேச தொழில் தாபனத்தின் சிறுவர் வேலைக்கமர்தப்படலின் மோசமான வடிவங்கள் சமவாயம் 1999 (ILO இல 182) ILO Worst Forms of Child Labour Convention, 1999 (No.182) (ILOC No 182)** |
|---|---|

1956. Supplementary Convention on the Abolition of Slavery, the Slave Trade and Institutions and Practices Similar to Slavery, 1956

அடிமைத்தனம், அடிமை வியாபாரம், அடிமைத்தனத்திற்கு ஒப்பான வழக்கத்தினால் இல்லாதாக்க பிற்சேர்க்கையான இச் சமவாயம் சிறுவர் சுரண்டலை மையப்படுத்தியதாகும்.[42] இதன் உறுப்புரை 1(ஈ) அடிமைத்தனத்தினை “ ஏதேனும் நிறுவனத்தினால் அல்லது வழககத்தினால் 18 வயதிற்கு கீழான ஒரு பிள்ளை அல்லது இளம் ஆளை அவரது பொற்றோரினால், அல்லது அவர்களில் ஒருவரால் அல்லது பாதுகாவலரால் இன்னொரு நபருக்கு இப் பிள்ளையின் அல்லது இளம் ஆள் மீதான சுரண்டலுக்காக அல்லது வேலைக்கமர்த்தலுக்காக கொடுப்பனவொன்றுக்கு அல்லது அவ்வாறன்றிய ஒன்றுக்காக வழங்குதல்” என்கின்றது. இது கடனுக்கான பிணையம், வலிந்த திருமணம் ஆகிய வழக்காறுகள் அடிமைத்தனத்தினை உருவாக்குவதை அடையாளங் கண்டது.

இலங்கை இதில் 05.06.1957ல் கையொப்பமிட்டு 21.03.1958ல் பின்னுறுதிப்படுத்தியது.

ILOC இல. 182 ஆனது இழிதொழில் வாணிபத்திற்கு உள்ளான சிறுவர்கள் அனுபவிக்கும் பல்வேறு வடிவங்களிலான தொழிற் சுரண்டல்களுடன் தொடர்புபடுகின்றது. இதனை இலங்கை 2001ம் ஆணடு மார்ச்சில் பின்னுறுதிப்படுத்தியது.[43]

இதன் உறுப்புரை 3 “மோசமான வடிவங்களிலான வேலையை” பின்வருமாறு வரைவிலக்கணம் செய்கிறது.

a) விற்பனை மற்றும் சிறுவர் இழிதொழில் வாணிபம், கடன் பிணை, கொத்தடிமைத்தனம், வற்புறுத்தப்பட்ட அல்லது கட்டாய வேலை, ஆயுத முரண்பாடுகளுக்கு சிறுவர்களைச் வற்புறுத்தி அல்லது கட்டாயப்படுத்திச் சேர்த்தல் உள்ளடங்கலாக அனைத்து வடிவத்திலுமான அடிமைத்தனம் அல்லது அடிமைத்தனத்திற்கு நிகரான வழக்கங்கள்.

b) விபச்சாரம், ஆபாசப்படம் தயாரித்தல் அல்லது ஆபாசப்பட தயாரிப்பிற்காக சிறுவர்களைப் பயன்படுத்தல், கூட்டுதல், கொடுத்தல்,

c) சர்வதேச பொருத்தனைகளில் வரைவிலக்கணப் படுத்தப்பட்டபடி சட்டவிரோத நடவடிக்கைகளுக்காக சிறுவர்களைப் பயன்படுத்தர் அல்லது கூட்டிணைவு செய்தல் குறிப்பாக போதைப்பொருள் உற்பத்தி மற்றும் வாணிபஞ்செய்தல்.

d) சிறுவர்களின் நலன், பாதுகாப்பு, விழுமியங்கள் போன்றவற்றை அதன் இயல்பினாலும், சூழ்நிலைகளினாலும் பாதிக்கும் வகையில் கொண்டு நடாத்தப்படும் தொழில்கள்.

[42] http://www.ohchr.org/EN/ProfessionalInterest/Pages/SupplementaryConventionAbolitionOfSlavery.aspx
[43] http://www.ilo.org/dyn/normlex/en/f?p=NORMLEXPUB:12100:0::NO::P12100_ILO_CODE:C182

ILOC இல 182 உடன்படிக்கையின் ஏற்பாடுகளை வினைத்திறனாக்கும் வகையில் பொருத்தமான பொறிமுறைகளளை வடிவமைத்தல் தாபித்தல் (உறுப்புரை 5) வேண்டும் என்கின்றது. இதற்கேற்ப அரசுகள், சிறுவர்களை வேலைக்கமர்த்தலின் பாரதூரமான வடிவங்களை இல்லாதொழிப்பதற்கு தேவையான திட்டங்களை வகுத்து அமுலாக்கம் செய்ய முதன்மையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும் அவ்வாறு புரியப்படும் போது “பெண்கள் தொடர்பிலான விசேட நிலமைகளுக்கு” கூடிய கவனம் செலுத்தப்படல் வேண்டும். (உறுப்புரை 6) தண்டனை மற்றும் வேறு தடைகளும் கவனத்திற் கொள்ளப்படுதல் வேண்டும்.

### 4.8.3 ILO வின் சிறுவர்களை சிறுவர்களை வேலைக்கமர்தல் தொடர்பிலான பாராதூரமான வடிவங்கள் மீதான பரிந்துரைகள். 1999 (இல.190) ILO Worst Forms of Child Labour Recommendation, 1999 (No.190) (ILOR No 190)

இது ILOC மேழ 182ன் பிற்சேர்க்கையாகும்.[44] இது 17.06.1999ல் மேற்கொள்ளப்பட்டதுடன், ILOC No 182ல் குறித்துரைக்கப்பட்ட செயற்படுத்த வேண்டிய திட்டங்கள் தொடர்பிலான மேலதிக விபரங்களையும் வழங்குகின்றது. குறிப்பாக கவனத்தில் கொள்ளப்படும் திட்டமிடல், வடிவமைப்பு மற்றும் அமுலாக்கம் என்பவை பின்வருமாறு,

a) சிறுவர் வேலைக்கமர்த்தலின் பாரதூரமான வடிவங்களை அடையாளங்காணலும் இல்லாதொழித்தலும்.
b) சிறுவர் வேலைக்கமர்த்தலின் பாரதூரமான வடிவங்களில் இருந்து சிறுவரை

### 4.8.4 ILO வின் குறைந்தபட்ச வயது உடன்படிக்கை Minimum Age Convention, 1973 (No.138) (ILOC No 138)

ILOC மேழ 138ஆனது சர்வதேச தொழில் நிறுவனத்தினால் 1973ம் ஆண்டு முன்வைக்கப்பட்டது.[45] இதனை செல்லுபடியானதாக்கும் அரசுகளை “சிறுவர்களை வேலைக்கமர்த்துதலை வினைத்திறனாக இல்லாதொழிப்பதை உறுதிப்படுத்த ஒரு தேசிய கொள்கையை வடிவமைப்பதையும், வேலைக்கமர்த்த அனுமதிக்கின்ற குறைந்தபட்ச வயதினை படிப்படியாக உயர்த்தவும் அல்லது இளம் நபர்களின் முழுமையான உடல், உள வளர்ச்சிக்குத் தோதான ஒரு மட்டத்திலான வேலைகளை தேவைப்படுத்தி நிற்கின்றது.

[44] http://www.ilo.org/dyn/normlex/en/f?p=NORMLEXPUB:12100:0::NO::P12100_ILO_CODE:R190
[45] http://www.ilo.org/dyn/normlex/en/f?p=NORMLEXPUB:12100:0::NO::P12100_ILO_CODE:C138

ஈடுபடுத்தப்படுவதைத் தடுத்தல் அல்லது நீக்குதல், பழிவாங்கல்களில் இருந்து பாதுகாத்தல் மற்றும் அவர்களின் கல்வி, உடல் மற்றும் உள தேவைகளுக்கான நடவடிக்கைகள் மூலமாக எதிர்கொள்வதன் மூலம் அவர்களுக்கு மறுவாழ்வு மற்றும் சமூக மாண்பு வழங்குதல்.

c) பின்வருவனவற்றில் விசேட கவனம் செலுத்துதல்.
   a. இளம் சிறுவர்கள்
   b. பெண் பிள்ளைகள்
   c. பெண்கள் அதி ஆபத்தான நிலையில் காணப்படும் இரகசியமான தொழில் நிலமை தொடர்பிலான பிரச்சனைகள்.
   d. விசேட இயலாமைகள் அல்லது தேவைகளுடன் காணப்படும் வேறு வகைப்பாட்டில் அடங்கும் சிறுவர்கள்.

d) சிறுவர்கள் அதி அபாயத்துடன் காணப்படும் சமூகங்களை அடையாளம் காணுதல், தொடர்பினை ஏற்படுத்தல், இணைந்து பணியாற்றுதல்.

e) சிறுவர் மற்றும் அவர்களின் குடும்பங்கள் உள்ளடங்கலாக பொதுவான கருத்துக்களுக்கும், அக்கறையுள்ள குழுக்களுக்கும் அறிவுறுத்துதல், முக்கியப்படுத்துதல், ஆயத்தப்படுத்துத்துதல்.

(உறுப்புரை 1) இது பல்வேறு வேலைக்கமர்த்துதல் தொடர்பிலான குறிப்பிட்ட களநிலைகளைக் கொண்ட ஒத்த உடன்படிக்கைகளுக்கு ஒரு மாற்றாகவும் காணப்படுகின்றது.[46]

குறைந்தபட்சம் 15 வருடங்களுடன் ஒரு குறைந்தபட்ச வயதினை குறித்துரைக்க நாடுகளுக்கு சுதந்திரம் உண்டு. (உறுப்புரை 2(3)) எனினும் உறுப்புரை 4 பொருளாதாரம் கல்விக்கான வசதி வாய்ப்புக்கள் போதுமற்றதாய் அபிவிருத்தி செய்யப்பட்ட ஒரு அங்கத்தவர் தொழில் தருனர் நிறுவனங்களுடனும் தொடர்புடைய தொழிலாளர்களுடனும் (அவ்வாறு காணப்படுமாயின்) ஆரம்பத்தில் ஒரு குறைந்தபட்ச வயதாக 14 வருடங்களைக் குறித்துரைக்கலாம்.

13-15 வரையான சிறுவர்களுக்கு சொகுசு வேலைகளை சட்டங்களினால் அனுமதிக்கலாம். (ஆரோக்கியம் மற்றும் பாடசாலை வேலைகளை பாதிக்காத வகையில்) “இளம் நபர்களின் ஆரோக்கியம், பாதுகாப்பு அல்லது விழுமியங்களைப் பாதிக்காத வகையில் வேலைகளுக்காக 18 வயதினை தொழில் தருனர் நிறுவனங்களுடனும் தொடர்புடைய தொழிலாளர்களுடனும் (அவ்வாறு காணப்படுமாயின்) ஆரம்பத்தில் ஒரு குறைந்தபட்ச வயதாக 14 வருடங்களைக் குறித்துரைக்கலாம்.

இதனை இலங்கை 11.02.2000 அன்று செல்லுபடியாக்கியது. ஆதன் பிரகாரம் அடிப்படை வேலை செய்யக்கூடிய குறைந்தபட்ச வயதானது 14 வருடங்களாகும்.

[46] Minimum Age (Industry) Convention, 1919, the Minimum Age (Sea) Convention, 1920, the Minimum Age (Agriculture) Convention, 1921, the Minimum Age (Trimmers and Stokers) Convention, 1921, the Minimum Age (Non-Industrial Employment) Convention, 1932, the Minimum Age (Sea) Convention (Revised), 1936, the Minimum Age (Industry) Convention (Revised), 1937, the Minimum Age (Non-Industrial Employment) Convention (Revised), 1937, the Minimum Age (Fishermen) Convention, 1959, and the Minimum Age (Underground Work) Convention, 1965.

### 4.8.5 ILO வின் வலிந்து அல்லது கட்டாய வேலைக்கமர்த்தல் சமவாயம் 1930 (No.29) (ILOC No 29) Forced Labour Convention, 1930 (No.29) (ILOC No 29)

“வலிந்து அல்லது கட்டாய வேலைக்கமர்த்தல்” என்பது உறுப்புரை 2இனால் ஏதேனும் தண்டனைக்கான பயமுறுதத்தலின் கீழாக குறித்த நபரின் தன்னிச்சையான பங்களிப்பின்றி காணப்படும் அனைத்துவிதமான வேலைகளையும் சேவைகளும்” என உறுப்புரை 2 வரைவிலக்கணம் செய்கின்றது.

எனினும், விதிவிலக்குகள் பின்வருமாறு,

- முற்றுமுழுதான ஒரு இராணுவ இயல்புடைய இராணுவ சேவையுடன் தொடர்புபட்டிருத்தல்.
- சாதாரண குடியியல் கடமையொன்றினை நிறைவேற்றல்.
- ஒரு சட்ட ரீதியான நீதிமன்றத்தினால் குற்றஞ்சாட்டப்பட்டதன் மீது சுமத்தப்பட்ட ஒரு தண்டனையின் மூலமான வேலை.
- சிறிய சமூக சேவை, அல்லது
- அவசர காலத்தில் மேற்கொள்ளப்படும் ஏதேனும் வேலைகள்

உறுப்புரை 1(1) உடன்படிக்கையினை செல்லுபடியானதாக்கும் ஒவ்வொரு அங்கத்தவர்களும் வாய்ப்பான குறுகிய காலப்பகுதியில் அனைத்து வடிவத்திலுமான வலிந்த அல்லது கட்டாயமாக்கப்பட்ட வேலைக்கமர்த்தல்களின் பயன்பாட்டை அடக்குவதற்கு பொறுப்பேற்க தேவைப்படுத்துகின்றது. இலங்கை இதனை 05.04.1950ல் செல்லுபடியானதாக்கியது.[47]

வலிந்த வேலைக்கமத்துதலுக்கும் இழிதொழில் வாணிபத்திற்கும் இடையிலான தொடர்பானது, சுரண்டலுக்காக இழிதொழில் வாணிபம் மேற்கொள்ளப்படும் காரணங்கள் என்னும் வரைவிலக்கணத்தின் கீழ் அடங்குகின்றது. சுரண்டல் என்பது விசேடமாக வலிந்த வேலைக்கமர்த்தல் அல்லது சேவைக்கமர்த்தல், அடிமைத்தனம் அல்லது அதனை ஒத்த சேவைகள், சேவகம் மற்றும் பாலியல் சுரண்டல்கள் போன்ற வெவ்வேறு வடிவங்களை உள்ளடக்குகின்றது. இவ்வரைவிலக்கணத்திலிருந்து உருவாகும் வேலைக்கமர்த்தல் மூலமான சுரண்டல் என்றும் உட்கோள் பலேர்மோ பட்டயம் மற்றும் ILOC இல 29 ஆகியவற்றுடன் தொடர்பினை நிறுவ அனுமதித்து நிற்கின்றது.

### 4.9 1966ம் ஆண்டின் குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயம் International Covenant on Civil and Political Rights (1966)

குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயமானது சர்வதேச மனித உரிமைகளின் மூலக்கல்லாகும்.[48] இது அடிமைத்தனம் மற்றும் வலிந்த கட்டாயப்படுத்தப்பட்ட வேலையினை தடை செய்கிறது. இதன் உறுப்புரை 8 பின்வருவனவற்றை வழங்குகிறது.

- எவரும் அடிமைத்தனத்திற்கு உட்படலாகாது, அடிமைத்தனமும் அடிமை வியாபாரமும் அவற்றின் அனைத்து வடிவங்களும் தடை செய்யப்பட வேண்டும். (உறுப்புரை 1)
- எவரும் சேவகத்திற்கு உட்டபடலாகாது. (உறுப்புரை 2)
- எவரும் வலிந்த அல்லது கட்டாயமாக்கப்பட்ட வேலை புரிய தேவைப்படுத்தப்படலாகாது. (உறுப்புரை 3(அ))

இது பல நாடுகளில் உரிமைகள் பட்டியலுக்கான அடிப்படையாக அமைந்தது. அடிமைத்தன வழக்கமானது ஒரு அடிப்படை மனித உரிமை மீறல் என்னும் அடிப்படையில் தடைசெய்யப்பட்ட வழக்கமாகிறது.

---

[47] http://www.ilo.org/dyn/normlex/en/f?p=NORMLEXPUB:12100:0::NO::P12100_ILO_CODE:C029

[48] http://www.ohchr.org/EN/ProfessionalInterest/Pages/CCPR.aspx

### 4.10 ஐநாவின் அனைத்து புலம்பெயர் வேலையாட்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களின் உரிமைகள் தொடர்பிலான சமவாயம் UN Convention on the Rights of All Migrant Workers and Their Families (1990) (புலம்பெயர் வேலையாட்கள் சமவாயம்)

புலம்பெயர் வேலையாட்கள் சமவாயமானது புலம்பெயர் வேலையாட்கள் தமது சொந்த நாட்டில் அல்லாமல் வேறொரு நாட்டில் சமூகமாயிருப்பதால் சுரண்டலுக்கான இயலாமையுடையவர்களாய் இருப்பதனை அடையாளம் காணுகிறது. எனவே அவர்களை நடத்துதல் தொடர்பில் அடிப்படைக் கோட்பாடுகளுக்கு இணங்கிக் கொள்வதன் மூலம் விழுமியங்களைத் தாபிக்க நடவடிக்கைகளை வழங்குகின்றது. இது மேலும் புலம்பெயர் வேலையாட்கள் தமது சொந்த நாட்டில் இருந்து அகன்று வேலைக்கமர்த்தப்பட்ட நாட்டில் எதிர்கொள்ளும் இயலாமைகளிலான கஷ்ட நிலமைகளுக்கு எதிராக அவர்களைப் பாதுகாப்பதனை இது குறிக்கோளாகக் கொள்கின்றது. இது ஏனைய மற்றைய ஏற்பாடுகளுடன் சித்திரவதை, கொடூர நடத்தை, மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடத்துகை அல்லது தண்டனை, அடிமைத்தனம் அல்லது சேவகம், வலிந்த அல்லது கட்டாயப்படுத்தப்பட்ட வேலைக்கமர்த்தல் அல்லது கையகப்படுத்தல், அடையாள ஆவணங்கள் மற்றும் பயண ஆவணங்கள் அதிகாரமளிக்கப்படாத நபர்களினால் அழிக்கப்படுதல் போன்றவற்றிலிருந்தான தடுப்புக்களை உறுதி செய்கின்றது. இது மேலும் புலம்பெயர் வேலையாட்களுக்கான சுதந்திரம் மற்றும் பாதுகாப்பினையும், அவர்களின் தனிப்பட்ட விடயங்கள் மற்றும் சொத்துக்களின் பாதுகாப்பினையும் உறுதிப்படுத்த வேண்டி நிற்கின்றது. சட்ட விரோத கைதிலிருந்தான பாதுகாப்பு, அத்தகைய அரசின் தேசத்தவர்களுடனான சமத்துவமான உரிமை, சொந்த நாட்டின் கட்டுப்பாட்டு அதிகாரி, இராஜதந்திர அதிகாரிகளின உதவி பெறல் ஆகியனவற்றுக்கும் பாதுகாப்பளிக்கின்றது.

இலங்கை புலம்பெயர் சமவாயத்தினை 196ம் ஆண்டு பின்னுறுதிப்படுத்தியது.[49]

- பல நாடுகளில் சட்டரீதியாக ஒழுங்கமைக்கப்பட்ட தன்னிச்சையான விபச்சாரம் தொடர்பில் இதன் பிரயோகம் மற்றும்,
- இழிதொழில் வாணிபத்தினால் பாதிக்கப்பட்டவர்களை விபச்சாரம் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளையே 1949ம் ஆண்டின் உடன்படிக்கை குற்றமாகக் குறித்துரைத்தது என்பதுடன் மேற்பார்வை செய்தல் மற்றும் அமுலாக்கலில் காணப்பட்ட குறைபாடு இழிதொழில் வாணிபத்தினை எதிர்கொள்வதை இந்த 1949 சமவாயத்தை வினைத்திறனற்றதாக்கியது.

## 4.11 சர்வதேச வழிகாட்டல்களும் கோட்பாடுகளும்

### 4.11.1 OHCHR: மனித உரிமைகள் மற்றும் மனித இழிதொழில் வாணிபம் மீதான பரிந்துரைக்கப்பட்ட கோட்பாடுகள் மற்றும் வழிகாட்டல்கள், ஜெனீவா, 2002 Recommended Principles and Guidelines on Human Rights and Human Trafficking, Geneva, 2002 (OHCHR இழிதொழில் வாணிபம் மீதான வரையறைகள்)[50]


இது இழிதொழில் வாணிபம் தடை செய்வதற்கும் இழிதொழில் வாணிபத்தினால் பாதிக்கப்பட்டவர்களை பாதுகாக்கவும் பிரயோக ரீதியான உரிமைகள் அடிப்படையிலான கொள்கை வழிமுறை ஒன்றினை வளர்க்கும் நோக்குடன் அபிவிருத்தி செய்யப்பட்ட ஒன்றாகும். இவ்வாவணம் தேசிய, பிராந்திய, மற்றும் சர்வதேச ரீதியான இழிதொழில் வாணிபத்தினை ஒழிப்பதற்கான சட்டங்கள், மற்றும் தலையீடுகளை ஒரு மனித உரிமைகள் நோக்காக ஒருமைப்படுத்தி மேம்படுத்தி வசதிவாய்பளிப்பதற்கான நோக்குடன் 11 வழிகாட்டல்களை விதந்துரைக்கின்றது.

49 http://www.ohchr.org/EN/ProfessionalInterest/Pages/CMW.aspx
50 http://www.ohchr.org/Documents/Publications/Traffickingen.pdf

### 4.11.2 UNICEF: இழிதொழில் வாணிபத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் பாதுகாப்பு மீதாக வழிகாட்டல்கள் Guidelines on the protection of child victims of trafficking, New York, 2006 (UNICEF Child Trafficking Guidelines)[51]

இது இழிதொழில் வாணிபத்தினால் சிறுவர்கள் தொடர்பிலான பாதுகாப்பு மற்றும் உதவியளிப்புகள் தொடர்பிலான நல் வழங்கங்களுக்கான தராதரங்களை விதந்துரைக்கின்றது. இவ் வழிகாட்டல்கள் சர்வதேச மனித உரிமைகள் ஆவணங்களின் அடிப்படையிலானது என்பதுடன் இழிதொழில் வாணிபத்திற்கு உட்படுத்தப்பட்ட பிள்ளைகளை அடையாளங்காணல் தொடக்கம் அவர்களை மீட்டு, அவர்களின் சமூகத்துடன் இணைப்பது வரையான பாதுகாப்பில் கவனம் செலுத்துகின்றது. இவ்வழிகாட்டல்கள் உள்ளுர் சூழ்நிலைகளையும், கட்டுப்பாடுகளையும், வளங்களையும் கருத்திற் கொண்டு தேசிய, பிராந்திய மட்டங்களிலாக வளர்த்தெடுக்கப்பட வேண்டிய கொள்கைகள், வழக்கங்களுக்கான களங்களைப் பயன்படுத்துவதற்கு வேண்டிநிற்கின்றது. இந்த வழிகாட்டல்கள் அரசாங்கங்கள், அரச செயற்படுத்துனர்கள், சர்வதேச நிறுவனங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் அல்லது ஏனைய சேவை வழங்குனர்களுக்கு பாதிக்கப்பட்ட சிறுவர்களை பாதுகாப்பது தொடர்பில் உதவியளிப்பதை குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

### 4.11.3 UNICEF: ஐரோப்பாவில் இழிதொழில் வாணிபத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் மீதான உசாத்துணை வழிகாட்டி, ஜெனீவா, 2006 Reference Guide on protecting the rights of child victims of trafficking in Europe, Geneva, 2006



**கற்றற் கருவிகள்:**

**சர்வதேச ஆவணங்களை கையொப்பமிடல்,**
**பின்னுறுதிப்படுத்துதல் மற்றும் இணங்கி ஏற்றல்**

| | |
|---|---|
| **பின்னுறுதிப்படுத்துதல், இணங்குதல் அல்லது அங்கீகரித்தலுக்கு அமைவான கையொப்பமிடல்** | பின்னுறுதிப்படுத்துதல், இணங்குதல் அல்லது அங்கீகரித்தலுக்கு அமைவான கையொப்பமிடலானது தம்மைக் கட்டுப்படுத்திக் கொள்வதற்கான இணக்கத்தினை வழங்குவதாகும். எனினும் சமவாயத்தின் உருவாக்கம் தொடர்ந்த நடவடிக்கையின் மீது கையொப்பமிடும் நாட்டினது அங்கீகாரத்தினையும், விருப்பத்தின் வெளிப்பாட்டினையும் இது வெளிக்காட்டுகின்றது. இக் கையொப்பம் கையொப்பமிடும் நாட்டிற்கு செல்லுபடியானதாக்கல், ஏற்றுக்கொள்ளல் அல்லது அங்கீகரித்தலுக்கான தகமையினை வழங்குகின்றது மேலும் இது சமவாயத்தின் நோக்கம் மற்றும் காரணங்களை எதிர்க்கும் நடவடிக்கைகளின் மீது நல்லெண்ண ரீதியான தடுக்கும் கடப்பாட்டினை உருவாக்குகின்றது.<br>உறுப்புரை 10 மற்றும் 12, சமவாயச் சட்டங்கள் மீதான வியன்னா உடன்படிக்கை 1969) |
| **பின்னுறுதிப்படுத்தல்** | பின்னுறுதிப்படுத்தல் என்பது சர்வதேச நடத்தையின் மூலம் ஒரு சமவாயத்தினால் ஒரு அரசு தன்னை கட்டுப்படுத்துவதற்கான இணக்கத்தினை குறிக்கிறது. (அவ்வாறானதொரு நடத்தையினால் திறத்தவர்கள் அவர்களின் இணக்கத்தினை வெளிக்காட்ட கோரப்படுமிடத்து). இரு தரப்பு சமவாயங்கள் தொடர்பிலான சந்தர்ப்பங்களில், செல்லுபடியானதாக்குதல் என்பது பொதுவாக தேவைப்படுத்தப்படும் ஆவணங்களை கைமாற்றுவதன் மூலம் அடையப்படுகின்றது. பல் தரப்பு சமவாயங்கள் தொடர்பிலான சூழ்நிலைகளில் அனைத்து அரசுகளிடம் இருந்தும் ஏற்புக்களை சேகரித்து, அனைத்து திறத்தவர்களுக்கும் நிலைமைகளை அறிவுறுத்திப் பேணுவது பொதுவான |

[51] https://www.unicef.org/eca/0610-Unicef_Victims_Guidelines_en.pdf

நடைமுறையாகும். பின்னுறுதிப்படுத்தல் அரசுகளுக்கு உள்ளக மட்டத்தில் சமவாயத்தினை வினைபயனுடையதாக்குவதற்கு அவசியமான சட்டவாக்கத்தினை ஏற்படுத்துவதன் மூலம் சமவாயங்களினால் தேவைப்படுத்தப்பட்ட அங்கீகாரத்திற்கான அவசியமான கால எல்லையினை வேண்டி நிற்கின்றது.

உறுப்புரை 2(1)(ஆ) மற்றும் 16, சமவாயச் சட்டங்கள் மீதான வியன்னா உடன்படிக்கை 1969.

**இணங்கி ஏற்றல்**

"இணங்கி ஏற்றல்" என்பது ஒரு அரசு, ஏனைய அரசுகளினால் ஏற்கனவே கலந்துரையாடப்பட்டு கையொப்பமிடப்பட்ட ஒரு சமவாயத்திற்கான ஒரு திறத்தவராகும் முனைவினை, அல்லது வாய்ப்பினை ஏற்றுக் கொள்ளுவதாகும். இது செல்லுபடியானதாக்கும் அதே சட்ட வலுவுடையதாகும். இணங்கி ஏற்றலானது பொதுவாக சமவாயம் வலுவுக்கு வந்ததன் பின்னர் நடைபெறுவதாகும்.

உறுப்புரை 2(1)(ஆ) மற்றும் 15, சமவாயச் சட்டங்கள் மீதான வியன்னா உடன்படிக்கை 1969)

## பயிற்சி 4.1

**பின்வருவனவற்றில் ஏதேனும் ஒரு சர்வதேச ஆவணம் ஒன்றிலிருந்தான உறுப்புரையினை தெரிவு செய்து விளக்குக.**

1. ஏன் இவை இழிதொழில் வாணிபத்தினை தடுப்பதற்கான முக்கிய கருவி.
2. இது எவ்வாறு இலங்கையில் அமுலாக்கப்படுகின்றது.

சந்தர்ப்பமுள்ள போது உங்கள் தனிப்பட்ட அல்லது உயர் தொழில் சொந்த அனுபவங்களில் இருந்தான உதாரணங்களை பயன்படுத்துக.

## சர்வதேச ஆவணங்களைப் பிரயோகித்தல்

***A. பலேர்மோ பின்னேடு (உறுப்புரை 5)***

"1. பட்டயத்தின் உறுப்புரை 3ல் விபரிக்கப்படும் (எ.கா: இழிதொழில் வாணிபம்) வேண்டுமெனப் புரியப்படும் குற்றவியல் குற்றச் செயல்களுக்கான நடத்தையினை குற்றமாக்குவதற்கு அவசியமான அத்தகைய சட்டவாக்கம் மற்றும் வேறு நடவடிக்கைகளை ஒவ்வொரு அரச திறத்தவர்களும் கடைப்பிடிக்க வேண்டும்.

---

"2. குற்றவியல் குற்றச் செயல்களுக்கான நடத்தையினை நிறுவுவதற்கு அவசியமான அத்தகைய சட்டவாக்க மற்றும் வேறு நடவடிக்கைகளை ஒவ்வொரு அரச திறத்தவர்களும் கடைப்பிடிக்க வேண்டும் (ஆ) இவ்வுறுப்புரையின் பந்தி 1க்கு இணங்க பங்குபற்றலானது ஒரு நிறுவப்பட்ட குற்றத்திற்கான ஒரு உடந்தையாகக் கொள்ளப்பட வேண்டும.

***B. சிறுவர் உரிமைகள் தொடர்பிலான ஐ.நா. சமவாயம் (1989) (உறுப்புரை 34)***

"அரச திறத்தவர்கள் சிறுவர்களை பாலியல் சுரண்டல், பாலியல் துஸ்பிரயோகம் போன்ற அனைத்து வடிவங்களில் இருந்தும் பாதுகாக்க பொறுப்பெடுத்துக் கொண்டுள்ளனர். இக்காரணங்களுக்காக அரச திறத்தவர்கள் அனைத்து தோதான தேசிய, இருதரப்பு மற்றும் பல் தரப்பு தடுத்தல் நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். டி) விபச்சாரம் அல்லது வேறு சட்டமுறையற்ற பாலியல் நடவடிக்கைகளுக்கான சிறுவர்களின் சுரண்டலுக்கான பயன்பாடு.

***C. ILO வின் சிறுவரை வேலைக்கமர்த்தலின் மோசமான வடிவங்கள் மீதான சமவாயம் ILO Worst Forms of Child Labour Convention, 1999 (இல.182) (உறுப்புரை 7(2)):***

"ஒவ்வொரு அங்கத்தவர்களும் கல்வியின் முக்கியத்துவத்தினை கவனத்திற் கொண்டு சிறுவர் வேலைக்கமர்த்தலை இல்லாதொழிக்க சிறுவர்

வேலைக்கமர்த்தலின் மோசமான வடிவங்களைத் தடுக்க கால வரையறையுள்ள வினைத்திறனான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

***D. ILO ஆக்க குறைந்த வயதுக்கானசமவாயம்இ 1973 (இல.138) (உறுப்புரை 3):***

"1. இள வயதினர் ஆரோக்கியம், பாதுகாப்பு, அல்லது விழுமியங்களை பாதிக்கும் இயல்பான அல்லது சூழ்நிலைகளை அல்லது இயல்பினைக் கொண்ட வேலை முறையினதும் அல்லது வேலையினதும் அனுமதிக்கான குறைந்தபட்ச வயது 18 வயதுக்கும் குறையாததாக இருத்தல் வேண்டும்.

## பயிற்சி 4.2

கீழ்வரும் சூழ்நிலைகளைக் கவனத்திற் கொள்க. சிறுவர் உரிமை தொடர்பில் ஐநாவின் சமவாயங்கள் தொடர்பில் மீறுப்பட்ட உரிமைகள் (ஏதும் இருப்பின்) கலந்துரையாடுக.[52]

## சிறுவர் உரிமைகளைப் பாதுகாத்தல்.

A. அர்ச்சுனா பெருந்தோட்டத்தில் தனது பெற்றோருடன் வதியும் 11 வயதான சிறுவன். அவனது தகப்பன் நோயினால் வாடுவதுடன் அவனது குடும்பம் பெருந்தோட்ட சொந்தக்காரரிடம் பணம் கடனாகப் பெற்றுள்ளது. அக் கடனை அடைப்பதற்காக அர்ச்சுனா பெருந்தோட்ட சொந்தக்காரரின் சேவகனாக வேலை பார்க்கின்றான்.

B. பிம்பா வறட்சியினால் பாதிக்கப்பட்ட பின்தங்கிய பிரதேசத்தில் வசிக்கும் ஒரு 10 வயதுச் சிறுமி. நகரத்தில் வதியும் அவளது வசதியுள்ள உறவினரான சித்தி பிம்பா தனது சில வீட்டுப் பணிகளையும் செய்து தன்னுடன் வந்து வாழும்படி கூறுகின்றார். சித்தி பாடசாலைக்கு அனுப்புவதாகவும் வாக்குக் கொடுக்கிறாள். அச்சிறுமி வாழும் நாட்டில் இந்நிலமையானது வழமையானதாகும். பிள்ளைகளை குடும்ப உறவினர்களுடன் வைத்திருப்பதானது பெரிய குடும்பங்களின் பிரச்சனைகளை தீர்ப்பதற்கு ஒரு சம்பிராயபூர்வமான வழிமுறையாக இக் குறிப்பிட்ட நாட்டில் காணப்படுகின்றது.

C. சிந்திக்க கே என்னும் நாட்டிலிருந்து வந்த 10-12 வயது மதிக்கத்தக்க ஆனால் இளைய தோற்றமுடைய (7-8 வயது போல) ஒரு இளம் சிறுவனாவான். பல்வேறு பட்ட தேசத்தைச் சேர்ந்த 10 சிறுவர்களுடன் ஜே என்னும் நாட்டின் சந்தையில் சிறு பொருட்களை விற்பனை செய்து கொண்டிருந்த போது அந் நாட்டுப் பொலிசாரினால் பிடிக்கப்பட்டான். பொலிசாரால் நடத்தப்பட்ட இரு மணி நேர விசாரணையின் பின்னவர் அவன் ஜே என்ற நாட்டில் தனது குடும்பத்தினருடன் வதிபவன் எனத் தெரிய வருகிறது. எனினும் அவனது குடும்ப சட்ட அந்தஸ்து பற்றி சந்தேகம் உள்ளது. எனினும் அவர் ஒரு பள்ளியில் பதிவு செய்யப்பட்டுள்ள போதும், அவன் தனது அனேகமான நேரத்தினை தனது பெற்றோருக்குரிய சிறிய தொகை பணத்தினை மாலையில் சந்தையிலிருந்து வீட்டுக்கு எடுத்து செல்லவே செலவிடுவான்.

[52] Source: *Training manual to fight trafficking in children for labour, sexual and other forms of exploitation / International Labour Office, International Programme on the Elimination of Child Labour (IPEC). - Geneva: ILO, 2009 - 4 v.*

D. ஹேசானி ரி என்னும் நாட்டை சேர்ந்த 14 வயதான சிறுமி ஆவார். ரி நாட்டின் மத்தியில் இருந்து தனது சகோதரனால் நாட்டின் தெற்கிற்கு அழைத்துச் செல்லப்பட சம்மதிக்கின்றார். இசற் நாட்டின் எல்லைக்கருகில் அவளது சகோதரன் மற்றும் மைத்துனியுடன் வசிக்கின்றாள். ‘இசற்’ நாட்டின் எல்லைக்கருகில் அவளது சகோதரனுடனும் மைத்துனியுடனும் வசிக்கின்றாள். ஒவ்வொரு நாளும் அவள் எல்லையினைக் கடந்து சென்று அவளது சகோதரனினால் அறிமுகப்படுத்தப்பட்ட 3ம் நபருக்கு பழம், முட்டைகளை விற்று வருவாள். அவள் பள்ளிக்குச் செல்வதில்லை. இசற் நாட்டின் தொழிற் சட்டத்திற்கு இணங்க அவள் அந்நாட்டின் பிரசையாய் இருக்குமிடத்து அபாயமற்ற நிலமையிலான வேலைக்கு அனுமதிக்கப்படுவாள். அவளோ தனது வருவாயுடன் சந்தோசமாக இருக்கிறாள். ஒவ்வொரு கிழமையும், தானே விரும்பி தனது வாழ்வாதார செலவுகளை ஈடு செய்ய கொஞ்ச பணத்தினை அவள் தனது சகோதரனுக்கு கொடுக்கிறாள்.

## b. பிராந்திய கட்டமைப்பு

**தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்புக்கான கூட்டுறவின விபச்சாரத்திற்கு பெண்கள் மற்றும் சிறுவர்கள் இழிதொழில் வாணிபத்தினை தடுப்பதற்கும் எதிர்கொள்வதற்குமான சமவாயம் (1997) மற்றும் சிறுவர்களின் சேமநலனை மேம்படுத்தலுக்கான பிராந்திய ஒழுங்கமைப்புக்கான சார்க் உடன்படிக்கை**


**அறிமுகம்**

சார்க்கின் இழிதொழில் வாணிபம் தொடர்பிலான சமவாயம்[53] மற்றும் சார்க்கின் சிறுவர் சேமநல சமவாயம்[54] ஆகியவை 05.01.2002 அன்று பதினொராவது சார்க் மாநாட்டில் (காத்மண்டு, 4-6.01.2002) கையெழுத்திடப்பட்டன. இவ்வுடன்படிக்கைகளானது பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, மாலைதீவு, நேபாளம், பாக்கிஸ்தான், இலங்கை ஆகிய நாடுகளினால் ஏகமனதாக ஏற்கப்பட்டு, அங்கத்துவ நாடுகளுக்கிடையில் விபச்சாரத்திற்காக பெண்கள் மற்றும் சிறுவர் இழிதொழில் வாணிபம் தொடர்பிலான தடுப்பு, விலக்கு மற்றும் அடக்குதலின் பல்வேறு நோக்குகளுடன் தொடர்புபட்டதும், இழிதொழில் வாணிபத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் மீட்பு மற்றும் புனர்வாழ்வுக்கான ஒத்துழைப்பு ஆகியவை தொடர்புபட்டதுமான ஒத்துழைப்பைத் தேவைப்படுத்துகின்றது.

53 http://un-act.org/publication/view/south-asian-association-for-regional-cooperation-saarc-convention-on-preventing-and-combating-trafficking-in-women-and-children-for-prostitution-2002/

54 http://www.ilo.org/wcmsp5/groups/public/---asia/---ro-bangkok/---sro-new_delhi/documents/genericdocument/wcms_251025.pdf

## 4.12 SAARC சமவாய விளக்கமளிப்பு




a) இழிதொழில் வாணிபத்திற்கு உள்ளாக்கப்படுபவரின் சம்மதத்துடனோ அல்லது இன்றியோ நாட்டினுள் அல்லது நாட்டிற்கு வெளியில் பணம் அல்லது வேறு பிரதிபயனுக்காக பெண்கள் மற்றும் சிறுவர்களை விபச்சாரத்திற்காக நகர்த்துதல், விற்றல், அல்லது வாங்குதல்.

b) விபச்சாரம் என்பது - வர்த்தக நோக்கிற்காக நபர்களை பாலியல் ரீதியாக சுரண்டுதல் அல்லது துஸ்பிரயோகப்படுத்தல்.

c) இழிதொழில் வாணிபத்திற்கு உள்ளான நபர்கள் என்பது - பாதிக்கப்பட்ட சிறுவர் அல்லது பெண்கள் இணக்கத்தினால், பயத்தினால், கட்டாயப்படுத்தலினால், கவரப்படுவதனால், விற்பனையினால், மோசடியான திருமணத்தினால், சிறுவர் திருமணத்தினால், அல்லது வேறு சட்டமுறையற்ற வழிகளினால் விபச்சாரத்திற்கு உள்ளாக்கப்படுவது அல்லது வற்புறுத்தப்படுதல்.

d) இழிதொழில் வாணிபத்தில் ஈடுபடுபவர் என்பது - இழிதொழில் வாணிபத்தின் எவ் வடிவத்திலும் ஈடுபடும் நபர்கள், முகவர்கள், நிறுவனங்கள்

e) சிறுவர் என்பது - 18 வயதை அடையாத எந்தவொரு நபரும் சிறுவர் ஆவார்.

| | |
|---|---|
| **றுப்புரை 11** | அங்கத்துவ அரசுக்கு தமது அரசில் இழிதொழில் வாணிபத்தினை குற்றமாக்குவதற்கு சட்டவாக்கம் மூலம் வினைத்திறனாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற கடமையினை சுமத்துகிறது. |
| **உறுப்புரை IV** | குற்றத்தினை பாரதூரமானதாக மாற்றும் சந்தர்ப்பங்களை நீதித்துறை கவனத்திற் கொள்ள வேண்டுமென விபரித்து நிற்கின்றது. அவையாவன,<br>a. ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட குற்றவியல் குழுவின் ஈடுபாடு.<br>b. இன்னொரு சர்வதேச ஒழுங்குபடுத்தப்பட்ட குற்றவியல் நடவடிக்கையில் குற்றவாளி ஈடுபட்டிருத்தல்.<br>c. குற்றவாளியினால் வன்முறை அல்லது ஆயுதம் பயன்படுத்தப்படல்.<br>d. பகிரங்க அலுவலகத்தை குற்றல் செயலில் ஈடுபடுத்துவதற்கென துஸ்பிரயோகம் செய்தல்.<br>e. சிறுவர்களை இழிதொழில் வாணிபத்திற்கு உட்படுத்தல் அல்லது பாதிக்கச் செய்தல்<br>f. பாதுகாவல் நிறுவனத்தின், கல்வி நிறுவனத்தின், சமூக வசதியின் கட்டுக்காவலில் இருக்கும் போது குற்றச் செயல் புரிதல்<br>g. குற்றவாளியின் இதே போன்ற முன்னைய குற்றமிழைப்புக்கள். |

| | |
|---|---|
| **உறுப்புரை V** | இழிதொழில் வாணிபத்தினால் பாதிப்புக்கு உள்ளான சிறுவர்கள் மற்றும் பெண்களின் இரகசியத்தன்மையினை உறுதிப்படுத்தல் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆற்றுப்படுத்தல் மற்றும் சட்ட சேவைக்காள ஏற்பாடுகளை உறுதிப்படுத்தலை கடமையாக்குதல். |
| **உறுப்புரை VI** | அங்கத்துவ நாடுகள் புலன் விசாரணைகள், விளக்கங்கள் அல்லது வேறு நடவடிக்கைகளுக்கான பரஸ்பர சட்ட உதவியினை வழங்க கடமைப்படுத்துதல். அத்தகைய சாட்சியம் பின்வருவனவற்றை உள்ளடக்கலாம்.<br>a. சாட்சியங்களையும், நபர்களிடம் இருந்து வாக்குமூலங்களையும் பெறுதல்.<br>b. குற்றவியல், நீதிமுறை ஆவணங்கள் உள்ளடங்கலாக தகவல்கள், ஆவணங்கள் மற்றும் வேறு பதிவேடுகளை வழங்குதல்<br>c. நபர்களின் இடம், சொத்துக்கள் மற்றும் அவைகளின் அடையாளத்தைக் கண்டறிதல்.<br>d. தேடுதலும் கைப்பற்றுதலும்<br>e. காட்சிப்படுத்தப்பட்டவை உள்ளடங்கலாக ஆதனங்களில் வழங்கல்.<br>f. கைது செய்யப்பட்ட நபர்கள் மற்றும் தேவையான வேறிடத்தில் இருந்து சாட்சியம் பெறவும், விசாரணைகளுக்கு உதவியளிக்கவும் ஆவனை செய்தல்.<br>நபர்களின் சமூகத்தினை கோரும் ஆவணங்கள் உள்ளடங்கலான ஆவணங்களின் சேர்ப்பிப்பு |
| **உறுப்புரைஏII** | இழிதொழில் வாணிபத்தினை ஒரு மீள் ஒப்படைக்க கூடிய குற்றமாக அங்கீகரிப்பதுடன், குற்றவாளியை அரச திறத்தவர்கள் அவர்களின் நாட்டிலேயே வழக்கிற்கு உட்படுத்தலாம் அல்லது அங்கத்துவ அரசிடம் ஒப்படைக்கலாம். |
| **உறுப்புரை VIII** | பின்வருவனவற்றை உள்ளடக்கிய பெண்கள், சிறுவர்கள் இழிதொழில் வாணிபத்தினைத் தடுப்பதற்கும், குற்றவழக்கிடுவதற்கும் நடவடிக்கை எடுப்பதற்கு அரசினை கடமைப்படுத்துகின்றது.<br>a. விளக்கங்கள், புலன் விசாரணைகள், இழிதொழில் சம்பந்தமாக வழக்காடல்கள் தொடர்பில் தோதான சட்ட அமுலாக்கல் அலுவலர்கள், நீதித்துறை அலுவலர்கள், மற்றைய இயைபான அலுவலர்களுக்கு பயிற்சி மற்றும் உணர்வுறுத்தும் நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்தல்.<br>b. சமவாயத்தின் அமுலாக்கலுக்கு வசதிவாய்ப்பளிக்க ஒரு பிராந்திய பணிக்குழுவினை தாபித்தல்.<br>c. சமவாயத்தின் அமுலாக்க இரு தரப்பு பொறிமுறைகளை தாபித்தல்.<br>d. நிலம், நீர், ஆகாய மூலம் இழிதொழில் வாணிபத்தில் ஈடுபடும் வழிகள் நிறுவனங்களினால் பயன்படுத்தப்படும் விசாரணை முறைமைகளை பரிமாறுதல்.<br>e. வேலைக்கமர்த்தும் போர்வையில் பெண்கள் மற்றும் சிறுவர்கள் இழிதொழில் வாணிபத்தில் ஈடுபடும் வேலைக்கமர்த்தும் முகவர்களை கண்காணித்தல் உள்ளடங்கலாக இழிதொழில் முறைகள் தொடர்பில் விழிப்புணர்வுடன் இருத்தல்.<br>f. இழிதொழில் வணிபத்திற்கான வழிவகைகளை இல்லாமலொழித்தல்.<br>g. ஊடகங்களின் உதவியுடன் இழிதொழில் வாணிபத்திற்கான காரணிகள் பற்றிய விழிப்புணர்வுகளை மேம்படுத்தல். |

| உறுப்புரை IX | பின்வருவன உள்ளடங்கிய இழிதொழில் வாணிபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பராமரிப்பு. சிகிச்சை, புனர்வாழ்வு, நாடு திரும்பல் ஆகியனவற்றை ஏற்பாடு செய்தல்.<br>a. பாதிக்கப்பட்டவரின் நாட்டுக்கு அவரை திருப்பி அனுப்புதல்.<br>b. நாடு திரும்பலுக்காக இருக்கையில் சட்ட ஆலோசனை, சுகாதார நலன்களை வழங்கல்.<br>c. பாதிக்கப்பட்டவர்களின் புனர்வாழ்வுக்கு அரச அனுசரணையில் அல்லது அரச சார்பற்ற அனுசரணையில் வாழ்விடம், பாதுகாப்பான இல்லங்களை தாபித்தல்.<br>d. பாதிக்கப்பட்டவர்களுக்கு சட்ட உதவி, சுகாதார நல வசதிகள், தொழிற் பயிற்சிகளுக்கான ஏற்பாடுகள். |
|---|---|

**இழிதொழில் வாணிபம் வரைவிலக்கணம் - ஒரு ஒப்பீடு**

| ***சார்க் சமவாயத்தின் உறுப்புரை 1*** |
|---|
| "இழிதொழில் வாணிபத்திற்கு உட்படுபவரின் சம்மதத்துடனோ அல்லது இன்றியோ நாட்டினுள் அல்லது நாட்டிற்கு வெளியில் பணம் அல்லது வேறு பிரதிபயனுக்காக பெண்கள் மற்றும் சிறுவர்களை விபச்சாரத்திற்காக நகர்த்துதல், விற்றல், அல்லது வாங்குதல்."<br><br>***பலேர்மோ பன்னேட்டின் உறுப்புரை 3***<br><br>இழிதொழில் வாணிபம் என்பது மற்றவர்களால் பாலியல் சுரண்டலுக்கு ஆளாகுதல் அல்லது வேறு வகையினதாக பாலியல் சுரண்டல், கட்டாயப்படுத்தப்பட்ட வேலை அல்லது சேவைகள், அடிமைத்தனம் அல்லது அடிமைத்தனத்திற்கு ஒப்பான செயற்பாடுகள், சேவகம் அல்லது உடலுறுப்பு அகற்றல் ஆகியவற்றை உள்ளடக்கிய **சுரண்டலுக்கான காரணத்திற்காக** பயமுறுத்தல் அல்லது வற்புறுத்தலை பிரயோகித்தல் அல்லது கட்டாயப்படுத்தலுக்கான வேறு வடிவங்கள், இழிதொழில் வாணிபம், மோசடி, ஏமாற்றுதல், அதிகாரத் துஸ்பிரயோகம் அல்லது இயலாமைக்குரிய ஒரு நிலை அல்லது கொடுப்பனவுகளை வழங்குதல் அல்லது பெற்றுக் கொள்ளல் அல்லது இன்னொரு நபர் மீது கட்டுப்பாடுடைய ஒரு நபர் நலன்களை அடைவதற்காக இணக்கத்தினை பெறுதல் ஆகிய வழிகளில் ஆட்சேர்த்தல் போக்குவரத்து, கைமாறல், தங்கிடம் கொடுத்தல் அல்லது நபர்களை பெற்றுக் கொள்ளல். |

a. இழிதொழில் தொடர்பிலான சார்க் சமவாயம், பலேர்மோ பின்னேட்டின் இழிதொழில் வாணிபம் தொடர்பில் பயன்படுத்தப்பட்ட பரந்த வரைவிலக்கணத்தை பின்பற்றவில்லை மாறாக வர்த்தக ரீதியான பாலியல் சுரண்டலுக்கான மட்டுப்படுத்தப்பட்ட வரைவிலக்கணத்தினையே உள்ளடக்குகிறது.

b. இழிதொழில் தொடர்பிலான வரைவிலக்கணமானது சார்க் சமவாயம் பெண்கள் மற்றும் சிறுவர்களை விபச்சாரத்திற்காக நகர்த்துதல், விற்றல், அல்லது வாங்குதலையே உள்ளடக்குகின்றது வேறு வழியிலான, ஆட்சேர்த்தல் போக்குவரத்து, கைமாறல், தங்கிடம் கொடுத்தல் அல்லது நபர்களை பெற்றுக் கொள்ளல் போன்றவைகளை உள்ளடக்கவில்லை.

c. சார்க் சமவாயமானது குறுகிய பார்வையில் விபச்சாரத்தில் மட்டுமே கவனம் செலுத்தியிருக்கின்றது. எனினும் சார்க் பிராந்தியத்தினுள் பெண்கள் மற்றும் சிறுவர்களின் மீதான இழிதொழில் வாணிபம் வேறு விதமான சுரண்டல்களான நிர்பந்திக்கப்பட்ட வேலை, உறுப்பு நீக்கம், திருமணம் போன்ற வடிவங்களிலானதாக இருக்கிறது. பலேர்மோ பின்னேடு சுரண்டலினை கட்டாயப்படுத்தப்பட்ட வேலை அல்லது சேவைகள், அடிமைத்தனம் அல்லது அடிமைத்தனத்திற்கு ஒப்பான செயற்பாடுகள், சேவகம் அல்லது உடலுறுப்பு அகற்றல் போன்ற பரந்த வகைக்குள் உள்ளடக்குகின்றது.

d. உடன்படிக்கையானது இழிதொழில் வாணிபத்தின் தோதான செயற்பாடுகளில் பெண்களும், சிறுவர்களும் பலவீனமானவர்கள் என்ற வகையிலாக குழுவாக நடத்துகின்றது. உடன்படிக்கை பெண்களை

வயதுவந்தவர்களாவும் சிறுவர்களை விசேட தேவை உள்ளவர்களாகவும் அடையாளம் காணவும் தவறியுள்ளது. இதற்கு வேறுபாடான முறையில் பலேர்மோ பின்னேடு வயதுவந்த ஆண்கள் மற்றும் பெண்களையும் 18வயதுக்கு கீழான சிறுவர்களையும் வேறுபடுத்துவதுடன் சிறுவர் இழிதொழில் வாணிபத்தினை ஆட்சேர்த்தல், போக்குவரத்து, கைமாறல், தங்கிடம் கொடுத்தல் அல்லது நபர்களை பெற்றுக் கொள்ளல் ஆகியதாக வரைவிலக்கணம் செய்கிறது. எனவே, வரைவிலக்கணங்களில் உள்ள வழிமுறைகளை பயன்படுத்துகையில் பாதிக்கப்பட்டவர் சிறுவராக இருக்குமிடத்து எண்ணப்பட்ட இழிதொழில் வாணிபத்திற்கான செய்கையினை செய்வதற்கு சிறுவரின் இணக்கம் அவசியமற்றதாகிறது.

e. சார்க சமவாயம் பெண்கள் மற்றும் சிறுவர் இழிதொழில் வாணிபம் தொடர்பிலேயே மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எனினும் ஆண்கள் பல்வேறு வடிவங்களில் இழிதொழில் வாணிபத்திற்கு உள்ளாவதனை உள்ளடக்கத் தவிர்த்துள்ளது.

**பயிற்சி 4.3**



பலேர்மோ பின்னேடு மற்றும் சார்க் சமவாயம் என்பனவற்றில் உள்ளடக்கப்பட்டுள்ள இழிதொழில் வாணிபம் தொடர்பான வரைவிலக்கணங்களை ஒப்பிட்டு மற்றும் வேறுபடுத்துவதுடன் ஓர் அட்டவணை வடிவில் ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் காட்டுக.

**2005ம் ஆண்டின் 30ம் இலக்க விபசாரத்திற்காக பெண்கள் மற்றும் சிறுவர் இழிதொழில் வாணிபத்திற்கு உள்ளாக்கப்படுவதனை தடுப்பதற்கும் எதிர்கொள்வதற்குமான உடன்படிக்கை**

**The Convention on Preventing and Combating Trafficking in Women and Children for Prostitution Act No. 30 of 2005.[55]**



தண்டனைச் சட்டகோவைக்கு மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்கு மேலதிகமாக, இலங்கை அரசாங்கம் 2005 செப்ரெம்பரில் சார்க் உடன்படிக்கையை முழுமைப்படுத்தும் விதத்தில் சட்டவாக்கத்தினை மேற்கொண்டது.

2005ம் ஆண்டின் 30ம் இலக்க பெண்கள் மற்றும் சிறுவர் இழிதொழில் வாணிபத்திற்கு உள்ளாக்கப்படுவதனை தடுப்பதற்கும் எதிர்கொள்வதற்குமான சட்டம் (சார்க் சட்டம்) வாணிபம் செய்யப்பட்ட பெண்கள் மற்றும் சிறுவர்கள் தடுத்து வைத்தல், புனர்வாழ்வளித்தல், நாடு கடத்துதல் போன்றவற்றுக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டது. மேலும் குற்றவியல் விடயங்கள் தொடர்பான பரஸ்பர உதவுதல் சட்டத்தின்[56] கீழ் பொதுநலவாய நாடுகளுடனும், குறித்த சட்டத்தின் விதிகளுக்கு ஏற்ப செய்யப்பட்ட உடன்படிக்கைக்கு அமைவாய பொதுநலவாயத்தில் அங்கம் வகிக்காத அரசாங்கங்களுடனும் எல்லைகளில் நடக்கும் இழிதொழில் வாணிபம் தொடர்பிலான விசாரணைகள் மற்றும் வழக்காடல்கள் தொடர்பில் ஒத்துழைப்பினை வலுப்படுத்துகின்றது.

[55] Act No. 30 of 2005.
[56] Act. No. 25 of 2002

**சட்டம் பின்வருவனவற்றுக்கு ஏற்பாடு செய்கின்றது.**

***a.*** **விபச்சாரத்திற்காக பெண்கள் மற்றும் சிறுவர் இழிதொழில் வாணிப குற்றத்தினை வரைவிலக்கணம் செய்கிறது.**

*a)* பேணும் அல்லது, முகாமை செய்யும், அல்லது தெரிந்துகொண்டு நிதியளிக்கும், அல்லது தெரிந்துகொண்டு வாடகைக்கு அல்லது குத்தகைக்கு வழங்கும் எவரேனும் நபர்,

*b)* ஒரு கட்டிடத்தை அல்லத வேறு இடத்தை,

*c)* பெண்களை அல்லது சிறுவர்களை விபச்சாரத்திற்காக அல்லது ஏதேனும் தொடர்புடைய விடயத்திற்காக வாணிபம் செய்யும் நோக்கத்திற்காக,

*d)* பெண்கள் மற்றும் சிறுவர்களை வாணிபம் செய்த குற்றத்திற்கு ஆளாதல் வேண்டும்.

*e)* மேலுள்ளவர்களுக்கு முயற்சிக்கும், உதவியளிக்கும், அனுசரணையளிக்கும் அல்லது சதித்திட்டம் வகுக்கும் எவரேனும் நபரும், அதே குற்றத்தைப் புரிந்தவர்களாவர்.

*f)* குறைந்தபட்சம் மூன்று வருட கட்டாய தண்டனைக்கும் அதிகபட்சம் பதினைந்து வருட தண்டனைக்கும் மற்றும் தண்ணடப்பணத்திற்கும் ஆளாதல் வேண்டும்.

a. சட்டம் மேலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈட்டினை ஏற்பாடு செய்வதுடன், குறித்த நட்டஈட்டை செலுத்தாத குற்றவாளிகளுக்கு மேலும் ஐந்து வருட தண்டனையினை ஏற்பாடு செய்கிறது.

b. இக் குற்றத்திற்காக குற்றஞ்சாட்டப்பட்ட இவ்வகையான வழக்குகளின் தேசத்தவர்களையும், தேசத்தவர்களல்லாதோரையும் விளங்க மேல் நீதிமன்றங்களுக்கு நியாயாதிக்கமுண்டு.

c. சட்டம் மேலும் (சார்க் உடன்படிக்கையில் விதந்துரைக்கப்பட்டதற்கு ஏற்ப) இழிதொழில் வாணிபத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகளுக்காகவும், விசேடமாக விபச்சாரத்திற்காக பெண்கள் மற்றும் சிறுவர் வாணிபத்தினை எதிர் கொள்வதற்காகவும், அத்தகைய மோசமான சூழ்நிலைகள் பற்றியும் ஏற்பாடு செய்கிறது.

**தெற்காசியாவில் சிறுவர் சேமநலத்தினை மேம்படுத்துவதற்கான பிராந்திய ஒழுங்கமைப்புக்கான சார்க் சமவாயம்**

**The SAARC Convention on Regional Arrangements for the Promotion of Child Welfare in South Asia**

தெற்காசியாவில் சிறுவர் சேமநலத்தினை மேம்படுத்துவதற்கான பிராந்திய ஒழுங்கமைப்புகளுக்கான சார்க் உடன்படிக்கை பிராந்திய சிறுவர்களின் சேமநலத்தினை உயர்த்தும் எண்ணம் கொண்டதாகும். உடன்படிக்கையின் உறுப்புரை IV, பந்தி 3(அ) மற்றையவற்றுடன் இழிதொழில் வாணிபத்தில் இருந்து சிறுவர்களை பாதுகாப்பதற்காக அரச திறத்தவர்களை பொருத்தமான சட்ட, நிர்வாக பொறிமுறைகள் மற்றும் சமூக பாதுகாப்பு வலையமைப்புகளை உறுதிப்படுத்த ஏற்பாடு செய்கிறது.

## 4.13 இழிதொழில் வாணிபத்துடன் தொடர்புடைய மற்றைய பிராந்திய உடன்படிக்கைகள்.

**உடன்படிக்கைகள்**

**a) மனித மற்றும் மக்கள் உரிமை பற்றி ஆபிரிக்க பட்டயத்திற்கான ஆபிரிக்க பெண்கள் உரிமைகள் பற்றிய பின்னேடு Protocol to the African Charter on Human and Peoples' Rights on the Rights of Women in Africa**

இதன் உறுப்புரை 4 அரச திறத்தவர்கள் பொருத்தமானதும், வினைத்திறனுமான நடவடிக்கைகளை பெண்கள் இழிதொழில் வாணிபத்திற்கு உள்ளாக்கப்படுவதனை தடுக்கவும் எதிர்க்கவும், அதன் காரணகர்த்தாக்கள் மீது வழக்கிடவும் அதி அபாயத்தில் காணப்படும் பெண்களை பாதுகாக்கவும் ஏற்பாடு செய்கிறது.

**b) மனித உரிமை தொடர்பிலான அமெரிக்க சமவாயம் American Convention on Human Rights**

"அடிமைத்தனத்தில் இருந்தான விடுதலை'' என தலைப்பிடப்பட்ட உடன்படிக்கையின் உறுப்புரை 6 பின்வருமாறு கூறுகின்றது.

(1) அடிமை வியாபாரம், பெண் வாணிபம் போன்ற அனைத்துவிதமான வடிவங்களுக்குள்ளாகவும் தடுக்கப்பட்ட அடிமைத்தனத்திற்கும், தன்னிச்சையற்ற சேவகத்திற்கு எவரும் உட்படுதலாகாது.

(2) எந் நபரும் வலிந்த அல்லது கட்டாயமாக்கப்பட்ட வேலை புரிய தேவைப்படுத்தப்படலாகாது.

**c) 2004ம் ஆண்டின் மனித உரிமை மீதான அரபிய பட்டயம் Arab Charter on Human Rights, 2004**

இவ்வொப்பந்தம் பின்வருமாறு கூறுகின்றது

(1) அனைத்து வடிவத்திலுமான அடிமைத்தனம், மனித இழிதொழில் வாணிபங்கள் தடைசெய்யப்படுவதுடன், சட்டத்தினால் தண்டிக்கப்படக் கூடியனவும் ஆகும். எச் சந்தர்ப்பத்திலும் எவரும் அடிமைத்தனத்திற்கோ, சேவகத்திற்கோ உள்ளாக்கப்படலாகாது.

(2) வலிந்த வேலை, விபச்சாரம், பாலியல் சுரண்டலுக்கான மனித இழிதொழில் வாணிபங்கள், வேறு நபர்கள் மீதான பாலியல் சுரண்டல் மற்றும் சுரண்டலின் ஏனைய வடிவங்கள், ஆயுத மோதல்களின் போதான சிறுவர்கள் மீதான சுரண்டல்கள் தடை செய்யப்படுகின்றன.

**d) 2005ம் ஆண்டின் மனித இழிதொழில் வாணிபத்திற்கு எதிரான நடவடிக்கைக்கான ஐரோப்பிய சமவாயம். Council of Europe Convention on Action against Trafficking in Human Beings 2005**

இச்சமவாயம் இழிதொழில் வாணிபத்தினை தடுத்தல், பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகளை பாதுகாத்தல், வாணிபம் செய்பவர்களை வழக்கிற்குட்படுத்தல் ஆகிய மூன்று குறிக்கோள்களைக் கொண்டுள்ளது.

**e) 1999ம் ஆண்டின் சிறுவர் உரிமைகள் மற்றும் சேமநலன் குறித்த ஆபிரிக்க உடன்படிக்கை The African Charter on the Rights and Welfare of the Child 1999**

அரச திறத்தவர்கள் பின்வரும் தடுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென உறுப்புரை 29 கூறுகின்றது.

(ய) எவரேனும் நபரினால், சிறுவரின் பெற்றோர், சட்ட பாதுகாவலர் உள்ளடங்கலாக எவராலும் ஏதேனும் காரணத்திற்காக, ஏதேனும் வடிவத்தினால் இழிதொழில் வாணிபத்திற்கு உள்ளாக்கப்பட்ட சிறார்களை விற்றல், இழிவு வியாபாரத்திற்கு உட்படுத்தல்.

(டி) சிறுவர்களை அனைத்து வடிவத்திலுமான பிச்சையெடுத்தலுக்கு பயன்படுத்தல்.

**பிரகடனங்கள்**

a. குறிப்பாக பெண்கள் மற்றும் சிறுவரை இழிதொழில் வாணிபத்திற்கு எதிரான ஆசிய பிரகடனம் 2004 ASEAN Declaration against Trafficking in Persons particularly Women and Children 2004

b. முறையற்ற / ஆவணப்படுத்தப்படாத குடியகல்வுகள் மீதான பாங்கொக் பிரகடனம் 1999. Bangkok Declaration on Irregular/Undocumented Migration 1999

c. மானிட இழிதொழில் வாணிபத்தை தடுப்பதற்கும் எதிர்கொள்வதற்குமான புறூசெல்ஸ் பிரகடனம் 2002 Brussels Declaration on Preventing and Combating Trafficking in Human Beings 2002

d. இழிதொழில் வாணிபத்திற்கு எதிராக போராடுவதற்கான மேற்கு ஆபிரிக்க அரசுகளின் பொருளாதாதார சமூகம். 2001 Economic Community of West African States Declaration on the Fight against Trafficking in Persons 2001

e. பிராந்திய பாதுகாப்புக்கான நசோனினி பிரகடனம் 2002 (பசுபிக் தீவுகளின் அமையம் 2002) Nasonini Declaration on Regional Security, 2002 (Pacific Islands Forum) 2002

# ஐந்தாவது கற்கையலகு

| உள்நாட்டுச்சட்டம் மற்றும் கொள்கைக் கட்டமைப்பு | | |
|---|---|---|
| | **விரிவுரை மணித்தியாலங்களின் எண்ணிக்கை** | 4 |
| | **மதிப்பீட்டு முறைமை** | வகுப்பறைக் கலந்துரையாடல |
| | **கற்றலின் பயன்விளைவுகள்** | கற்கையின் முடிவில் பின்வருவன பங்கேற்பாளர்களுக்கு இயலுமானதாயிருக்கும்<br>• சிறுவர்களை இழிதொழில் வாணிகஞ் செய்தல் தொடர்பிலான பிரத்தியேகமான மற்றும் ஏனைய பொருத்தமான தேசிய கொள்கைகள் மற்றும் சட்டங்களை விளங்கிக் கொள்ளல்<br>• நடபடிமுறை சட்டங்களின் பிரயோகம் பற்றி விளங்கிக் கொள்ளல் மற்றும்<br>• இழிதொழில் வாணிகஞ் செய்தலால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு கிடைக்கக்கூடிய நிவாரணங்கள் தொடர்பில் அறிந்து கொள்ளல். |

## 5.1 இழிதொழில் வாணிகஞ் செய்தல் தொடர்பான உள்நாட்டுச் சட்டங்களும் கொள்கைகளும்

**தேசிய கொள்கை**

| 1978ம் ஆண்டின் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு |
|---|
| அரசியலமைப்பின் அரச கொள்கைகளின் வழிகாட்டிக் கோட்பாடுகளும் அடிப்படைக் கடமைகளும் சட்டங்களை இயற்றும் கொள்கைகளையும் நாட்டின் ஆட்சிமுறைமையையும் உறுதிப்படுத்துகின்றன. இக்கோட்பாடுகள் தாராதரங்களை அரசின் மீது செயலுறுதிப்பாடான கடமைகளை சுமத்துவனவாக இருந்தபோதிலும் அவை சட்டத்தினால் நிர்ணயிப்பவையாகவும் அமுலப்படுத்த முடியாதவையாகும்.[57] குறித்த கொள்கைகள் கடமைகளில் பெரும்பாலானவை பிள்ளைகளின் பாதுகாப்பு மற்றும் சேமநலன் தொடர்பாக மேலும் பயன்படுத்தக்கூடியவையாகும்.<br><br>குறிப்பாக உறுப்புரை 27 (13) ஆனது பிள்ளைகளினதும் இளம் ஆட்களினதும் உடல், உள வளர்ச்சியை, ஒழுக்க வளர்ச்சியை, மத வளர்ச்சியை, சமூக வளர்ச்சியை, முழுமையாக சுரண்டலிலிருந்தும் ஓரங்கட்டப்படுவதிலிருந்தும் அவர்களைப் பாதுகாப்பதற்கும் என, அரசானது அவர்களின் நலன்களை விசேட கவனத்தோடு மேம்படுத்தல் வேண்டும் எனக் குறிப்பிடுகின்றது. |
| **தேசிய மனித உரிமைகள் செயல்திட்டம் 2017-2021 (NHRÅ)** |
| தேசிய மனித உரிமைகள் செயல் திட்டமானது 2017 -2021ம் ஆண்டு காலப்பகுதிகளுக்கான மனித உரிமைகள் பரப்புக்கான ஆவணநோக்குச் சார்ந்த செயற்பாடுகளை உருவாக்கியதுடன், மனித உரிமைகளை கணிசமானளவு அரசியலமைப்பு, சட்டவாக்கம், கொள்கைகள் மற்றும் நிர்வாகக் |

[57] உறுப்புரை 29

கட்டமைப்புக்களின் மூலம் பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்குமாக தேசிய செயல்முறைகள் மற்றும் பொறிமுறையமைப்புக்களைப் பலப்படுத்துகின்ற இலக்கைக் கொண்டமைந்ததாகும்.
குறித்த செயல் திட்டமானது பத்து ஆய்வுப்பகுதிகளை உள்ளடக்கியதுடன் ஒரு பகுதியானது சிறுவர் பாதுகாப்பிற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. தரமான தடுப்பு, பாதுகாப்பு மற்றும் சேவை மறு ஒருங்கிணைப்பு என்பவற்றை உள்ளடக்கிய உரிமைகளை அடிப்படையாகக் கொண்ட சிறுவர் பாதுகாப்பு முறையைப் பின்பற்றுவதே தேசிய மனித உரிமைகள் செயல் திட்டத்தின் பிரதானமான நோக்கம் ஆகும். மேலும் குறித்த திட்டமானது இழிதொழில் வாணிகஞ் செய்தலால் பாதிக்கப்பட்ட ஆட்களுக்கான நிவாரணங்களைப் பெற்றுக்கொள்ளும் வழிமுறைகளை அரசு உறுதிப்படுத்துவதற்காக பணிப்பாணையை வழங்குகின்றது.

### பிற இழிதொழில் வாணிகஞ் செய்தல் செயல் திட்டங்களும் கொள்கைகளும்

பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்காக 2017ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் இழிதொழில் வாணிகஞ் செய்தலுக்கு எதிராகப் போராடும் பொதுத் தகவல் பிரச்சாரமொன்று தொடக்கி வைக்கப்பட்டது. குறித்த பிரச்சாரமானது நீதியமைச்சின் இடப்பெயர்விற்கான சர்வதேச நிறுவனத்துடன் இணைந்து அவுஸ்ரேலிய அரசின் வெளிநாட்டு மற்றும் வர்த்தகத் திணைக்களகத்தின் நிதி உதவியுடன் அமுல்படுத்திய ஒரு திட்டத்தின் பகுதியாகும்.
குறித்த பிரச்சாரமானது தொலைக்காட்சி விளம்பரங்கள், மாவட்ட மற்றும் பிரதேச மட்ட அரச அலுவலர்கள் அத்துடன் சமூகஞ் சார்ந்த நிறுவனங்களினூடாக குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்தும் நோக்கத்தைக் கொண்டிருந்தது.

| | |
|---|---|
| **பெண்கள் பட்டயம்** | 1993 ஆம் ஆண்டு மார்ச் மாதம் பெண்களுக்கான பட்டயம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. குறித்த பெண்களுக்கான பட்டயமானது அரசானது *''சமத்துவத்துவம் எனும் அடிப்படையில் மனித உரிமைகள் மற்றும் அடிப்படைச் சுதந்திரத்தினை அவர்கள் அனுபவிப்பதனை உத்தரவாதம் அளிக்கும் நோக்கத்திற்காக முழுமையான வளர்ச்சி மற்றும் பெண்கள் முன்னேற்றத்தினை உறுதிப்படுத்தும் நியதிச்சட்டப் பிரகடனத்தினை உள்ளடக்கியதாக அனைத்துத் துறைகளிலும், குறிப்பாக அரசியல், சமூக, பொருளாதார மற்றும் கலாசாரத் துறைகளில், பொருத்தமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்''* எனக் குறிப்பிடுகின்றது. |
| **சிறுவர் பட்டயம்** | சர்வதேச மனித உரிமைகள் சமவாயங்களில் அங்கீகாரமளிக்கப்பட்ட உரிமைகளை வலியுறுத்துவதாகவும் 1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்பின் சிறுவர்களை மையமாக நோக்கும் அரச கொள்கைகளின் வழிகாட்டிக் கோட்பாடுகளான *'பிள்ளைகளினதும் இளம் ஆட்களினதும் உடல்வளர்சியை உள வளர்ச்சியை, ஒழுக்க வளர்ச்சியை, மத வளர்ச்சியை, சமூக வளர்ச்சியை, முழுமையாக சுரண்டலிலிருந்தும் ஓரங்கட்டப்படுவதிலிருந்தும் அவர்களைப் பாதுகாப்பதற்கும் என, அரசானது அவர்களின் நலன்களை விசேட கவனத்தோடு மேம்படுத்தல் வேண்டும்'* என்பதற்கு ஆதரவளிப்பதாகவும் 1992 ஆம் ஆண்டு சிறுவர் பட்டயமானது ஏற்றுக்கொள்ளப்பட்டது.<br>உறுப்புரை 33 ஆனது சிறுவர்களைச் சட்டவிரோதமான போதைப்பொருள் தயாரிப்பு மற்றும் கடத்தலில் ஈடுபடுத்துவதிலிருந்து பாதுகாப்பதற்கு சட்டவாக்கம், நிர்வாகம், சமூகம் மற்றும் கல்வி தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதற்கான பொறுப்பினை அரசின்மீது சுமத்துகின்றது.<br>பட்டயத்தின் உறுப்புரை 3 ஆனது பரந்தகன்ற கோட்பாடான **"பிள்ளையின் அதியுயர் நலன்"** என்பதன் முக்கியத்துவத்தினை அங்கீகரிக்கின்றது. |

**தண்டனைச் சட்டக்கோவை**

இலங்கையில் தண்டனைக் குற்றங்களை உருவாக்குகின்ற பிரதான நியதிச்சட்டம் தண்டனைச் சட்டக்கோவையாகும்.[58] 2018ம் ஆண்டிற்கு முன்னர், 8 வயதிற்குக் குறைந்த சிறுவர்கள் அனைத்துக் குற்றப் பொறுப்புக்களிலிருந்தும் விலக்களிக்கப்பட்டவர்களாகக் காணப்பட்டனர். தண்டனைச் சட்டக்கோவையின் அண்மைக்கால திருத்தமாக 2018 ஆம் ஆண்டில் குற்றவியற் பொறுப்புக்கான குறைந்தபட்ச வயது 12 ஆக உயர்த்தப்பட்டது.[59] தனது செய்கையின் தன்மை மற்றும் விளைவினை மதிப்பீடு செய்வதற்குப் போதிய புரிதலுக்குரிய முதிர்ச்சி அடையாத 12 வயது தொடக்கம் 14 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களும் பொறுப்பிலிருந்து விலக்களிக்கப்படுவார்கள்.[60]

1995 மற்றும் 2006ம் ஆண்டு தண்டனைச்சட்டக் கோவைக்கு அறிமுகம் செய்யப்பட்ட திருத்தங்களின் முன்னர் இழிதொழில் வாணிகஞ் செய்தலுக்குறிய குற்றமானது கூட்டிவிடுதல்[61], இயற்கைக்கு முரணான தவறுகள்[62], ஆட்கவர்தல்[63], ஆட்கடத்தல்[64] அல்லது நபர்களை அடிமைத்தனத்திற்காக வாங்குதல் அல்லது வழங்குதல்[65] என்பன உட்பட்ட தண்டனைச்சட்டக்கோவையின் பொது ஏற்பாடுகளால் நோக்கப்பட்டது.

இப் பிரிவுகளானவை ஏனைய தண்டனைக் குற்றங்களான வன்புணர்வு, ஆவணங்கள் மோசடி, ஆபாசப் பொருட்களை விற்றல் மற்றும் விநியோகித்தல், திருமணம் செய்யுமாறு வற்புறுத்தி ஒரு பெண்ணை ஆட்கவர்தல் அல்லது ஆட்கடத்தல், ஆளொருவரை பாரிய காயத்திற்கு உள்ளாக்குதல் அல்லது அடிமைத்தனம் என்பன மேலதிகமாகக் காணப்படுகின்றன.

1995[66] இலும் அதன்பின்னர் 1998[67] இலும் விபச்சாரம் உள்ளிட்ட சுரண்டல்களுக்காக ஆட்களை குறிப்பாக பெண்கள் மற்றும் சிறுவர்களை இழிதொழில் வாணிகஞ் செய்யும் நிகழ்வுகள் அதிகரித்தமையைச் சுட்டிக்காட்டுவதற்காக குறிப்பிடத்தக்க திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவு 360ஊ ஆனது இழிதொழில் வாணிகக் குற்றத்தினை ஏற்பாடு செய்துள்ளது. அப்பிரிவில் காணப்பட்ட தெளிவின்மை காரணமாக அது 2006ம் ஆண்டு[68] நீக்கம் செய்யப்பட்டதுடன் பலேர்மோ பின்னேடு மற்றும் ஏனைய மனித உரிமைகள் பிரகடனங்களின் கீழான கடப்பாடுகளை பிரதிபலிப்பதற்காக கடத்தல் தொடர்பில் புதிய பிரிவானது அறிமுகப்படுத்தப்பட்டது.

---

[58] திருத்தியவாறான 1883ம் ஆண்டின் 2ம் இலக்க சட்டம்.

[59] பிரிவு.75 1883ம் ஆண்டின் 2ம் இலக்க தண்டனைச்சட்டக் கோவை (2018ம் ஆண்டு 10ம் இலக்கச்சட்டத்தால் திருத்தப்பட்டது)

[60] பிரிவு 76, 1883ம் ஆண்டின் 02ம் இலக்கச்சட்டம்

[61] பிரிவு 360யு மே.கு

[62] பிரிவு 365

[63] பிரிவு 350, 351 மற்றும் 352 மே.கு

[64] பிரிவு 353 மே.கு

[65] பிரிவு 358 மற்றும் 358 யுஇ மே.கு

[66] 1995ம் ஆண்டின் 22ம் இலக்க திருத்தப்பட்ட தண்டனைச் சட்டக்கோவை

[67] 1998ம் ஆண்டின் 29ம் இலக்க திருத்தப்பட்ட தண்டனைச் சட்டக்கோவை

[68] கோவையானது கடத்தல் தொடர்பாக ஏற்பாடு செய்கின்ற ஒரே பிரிவு 360 ஊ (1)(ய) ஆனது பணம் மற்றும் ஏனைய பிரதிபலனுக்காக ஆட்களை விற்றல், வாங்குதல் மற்றும் பண்டமாற்றம் செய்தல் என்பவை தொடர்பானதாகும். குறித்த பிரிவானது எந்தக் நோக்கத்திற்காக இச் செயல்கள் புரியப்படுகின்றன எனக் குறிப்பிட்டுக் கூறாததனால் குறித்த பிரிவைப் பரந்த அளவிலான சந்தர்ப்பங்களிற்குப் பிரயோகிப்பது சாத்தியமாகும். எனவே குறித்த பிரிவின் சாதாரமான வாசிப்பானது ஆட்களை திருமணத்திற்காக வாங்குதல் விற்றல் அல்லது பண்டமாற்றம் செய்தல், பணம் அல்லது வேறு பிரதிபலனுக்காக தத்தெடுத்தல் அல்லது வேறுவிதமான சுரண்டல் போன்றவை கடத்தல் என்பதனை உள்ளடக்குவதாகத் தோற்றமளிக்கின்றது. எனினும் குறித்த பிரிவை உருவாக்கும் போது பிரிவு 360ஊ(1)(டி) தனித்து அதன் சொந்தமாக வாசிக்கப்படக்கூடியதா அல்லது சட்டமுறையற்ற தத்தெடுத்தல் தொடர்பான அதன் உபபிரிவு (ை) தொடக்கம்(எை) வரை கூறப்பட்ட நிகழ்வுகளுக்குள் மட்டுப்படுத்தப்பட்டதா எனும் குழப்பம் காணப்பட்டது. பொதுவான அபிப்பிராயமானது குறித்த பிரிவு360ஊ(1)(டி) ஆனது (ை) தொடக்கம்(எை) வரையான உபபிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டும் என்பதாகும் அவ்வாறாயின் குறித்த பிரிவின் நோக்கானது தத்தெடுப்பதற்காக சிறுவர்களைக் கடத்தல் என்பதனை நீக்குவதாக கொள்ளப்படும். இது குறித்த பிரிவின் நோக்கை தீவிரமாக மட்டுப்படுத்தும் - சிறுவர்கள் கடத்தல் தொடர்பான தேசிய சட்டம், மாற்றுக் கொள்கைகளுக்கான அமைப்பு, சித்திரை 2002.

## 5.2 சிறுவர்கள் உள்ளிட்ட இழிதொழில் வாணிகஞ் செய்தல்

### 5.2.1 2006ம் ஆண்டின் 16ம் இலக்க தண்டனைச்சட்டக் கோவை திருத்தம்

பிரிவு 360 (ஊ)1 பின்வரும் செயல்களைப் புரிகின்ற எவரேனும் ஓர் நபர் இழிதொழில் வாணிகக் குற்றத்தைப் புரிந்தவராவர்.

அ) பணம் அல்லது வேறு பிரதிபலனுக்காக ஆளொருவரை வாங்குதல், விற்றல் அல்லது பண்டமாற்றம் செய்தல் அல்லது ஆளொருவரை வாங்குதல், விற்றல் அல்லது பண்டமாற்றம் செய்தலுக்கு இன்னொரு நபரைத் துாண்டுவது அல்லது ஆளொருவரை வாங்குதல், விற்றல் அல்லது பண்டமாற்றம் செய்தல் தொடர்பாக ஊக்குவிப்பிற்காக எதையேனும் புரிவது, உதவியளிப்பது அல்லது துாண்டுவது

ஆ) பலவந்தமான அல்லது கட்டாயப்படுத்தப்பட்ட உழைப்பு அல்லது சேவைகள், அடிமைத்தனம், சேவகம், உடற்பாகங்களை நீக்குதல், விபச்சாரம் அல்லது வேறுவடிவிலான பாலியல் சுரண்டல்கள் அல்லது சட்டத்தின் கீழ் ஒரு குற்றமாகக் கொள்ளப்படும் வேறு ஏதாவது செயல்கள் போன்றவற்றிற்காக எவரேனுமொருவரை ஆட்சேர்ப்பு, இடப்பெயர்வு, இடமாற்றம், மறைத்து வைத்தல் அல்லது பெறுதல் அல்லது அச்சுறுத்தல், பலவந்தம் செய்தல், மோசடி செய்தல் அல்லது துாண்டுதல் அல்லது வேறொருவரின் பலவீனத்தில் சுரண்டல்

இ) பலவந்தமான அல்லது கட்டாயப்படுத்தப்பட்ட உழைப்பு அல்லது சேவைகள், அடிமைத்தனம், சேவகம், உடற்பாகங்களை நீக்குதல், விபச்சாரம் அல்லது வேறுவடிவிலான பாலியல் சுரண்டல்கள் அல்லது சட்டத்தின் கீழ் ஒரு குற்றமாகக் கொள்ளப்படும் வேறு ஏதாவது செயல்கள் போன்றவற்றிற்காக பிள்ளையொருவரை ஆட்சேர்ப்பு, இடப்பெயர்வு, இடமாற்றம், மறைத்து வைத்தல் அல்லது பெறுதல் அல்லது அப்பிள்ளையின் சம்மதத்துடன் அல்லது சம்மதமல்லாது வேறு ஏதாவது செயலைப்புரிதல்,

**இழிதொழில் வாணிகக் குற்றத்திற்கு குற்றவாளியாக்கப்படுவார்.**

**உங்களுக்குத் தெரியுமா?**

எவரேனும் ஆட்கடத்தல் தவறினைப் புரிகிறார் என்பதுடன் அவர் குற்றத் தீர்ப்பளிக்கப் படுவதுடன் இரண்டாண்டுகளுக்குக் குறையாததும் இருபதாண்டுகளுக்கு விஞ்சாததுமானவொரு காலப்பகுதிக்கு இரு வகையிலொரு வகை மறியற்றண்டனையால் தண்டிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் குற்றப்பணமொன்றுடனும் தண்டிக்கப்படலாம் அத்துடன் அக்குற்றமானது ஒரு பிள்ளை மீது புரியப்படும் போது மூன்றாண்டுகளிற்குக் குறையாததும் இருபதாண்டுகளுக்கு விஞ்சாததுமானவொரு காலப்பகுதிக்கு இரு வகையிலொரு வகை மறியற்தண்டனையால் தண்டிக்கப்படலாம் என்பதுடன் குற்றப்பணமொன்றுடனும் தண்டிக்கப்படலாம

**இப்பிரிவுகளாளவை பின்வரும் பதங்களுக்கான வரைவிலக்கணங்களைக் குறிப்பிடுகின்றன.**

- பலவந்தமான அல்லது கட்டாயமான ஊழியம் என்பது பிரிவு 358A உள்ளவாறான அர்த்தம் கொண்டது
- அடிமைத்தனம் என்பது பிரிவு 358A உள்ளவாறான அதே கருத்தைக் கொண்டது
- வேறொரு நபரின் பலவீனத்தில் சுரண்டுதல் என்பது அந்நபரின் பொருளாதார, கலாசார அல்லது பிற சூழ்நிலைகளைப் பயன்படுத்தி எந்தவொரு செயலுக்கும் அடிபணிய ஒரு நபரைத் துாண்டுதலைக் குறிக்கின்றது

**பிரிவு 360 C இற்கான விளக்கம்**

அ) குறித்த பிரிவானது எதேனுமொரு வகையில் எதேனுமொரு நோக்கத்திற்காக பணம் அல்லது வேறு பிரதிபலனுக்காக ஆளொருவரை வாங்குதல், விற்றல் அல்லது பண்டமாற்றம் செய்தல் அல்லது வாங்குதல், விற்றல் அல்லது பண்டமாற்றம் செய்தலுக்கு இன்னொரு நபரைத் தூண்டுதல் அல்லது ஊக்குவிப்பிற்காக எதையேனும் புரிவது, உதவியளிப்பது அல்லது வாங்குதல், விற்றல் அல்லது பண்டமாற்றம் செய்தலுக்குத் தூண்டுவது போன்ற செயல்களைப்புரியும் ஆளொருவரைக் இழிதொழில் வாணிகக் குற்றவாளி ஆக்குகின்றது.

**சம்பவ ஆய்வு -1**

ராணி என்பவளுக்கு முகவரொருவாரால் கொழும்பில் பணிப்பெண் வேலைக்கான வாக்குறுதியளிக்கப்படுகின்றது. அவள் கொழும்பினை அடைந்த போது குறித்த முகவர் அவளை இன்னொரு நபருக்கு விற்கின்றான். ராணி கொழும்பிலுள்ள விபச்சார இல்லமொன்றில் சேர்பிக்கப்படுகின்றாள்.

ஆ) குறித்த பிரிவானது பலவந்தமான அல்லது கட்டாயப்படுத்தப்பட்ட உழைப்பு அல்லது சேவைகள், அடிமைத்தனம், சேவகம், உடற்பாகங்களை நீக்குதல், விபச்சாரம் அல்லது வேறுவடிவிலான பாலியல் சுரண்டல்கள் அல்லது சட்டத்தின் கீழ் ஒரு குற்றமாகக் கொள்ளப்படும் வேறு ஏதாவது செயல்கள் போன்றவற்றிற்காக அச்சுறுத்தல், பலவந்தம் செய்தல், மோசடி செய்தல் அல்லது தூண்டுதல் அல்லது வேறொருவரின் பலவீனத்தில் சுரண்டல் மூலம் எவரேனுமொருவரை ஆட்சேர்ப்பு, இடப்பெயர்வு, இடமாற்றம், மறைத்து வைத்தல் அல்லது ஒரு நபரினைப் பெறுதல் போன்ற செயல்களைப்புரியும் ஆளொருவரைக் இழிதொழில் வாணிகக் குற்றவாளி ஆக்குகின்றது.

**சம்பவ ஆய்வு -2**

சீதா என்பவள மிகவும் வறுமை நிலையிலுள்ளவள் என்பதுடன் ஒரு கடைக்காரருக்கு கடனில் உள்ளாள். குறித்த கடைக்காரர் பொலிஸிடம் முறைப்பாடு செய்வதாக அவளை மிரட்டி குறித்த கடனானது செலுத்தும் வரை அவளை எவ்வித கொடுப்பனவோ ஓய்வோ அன்றி வேலை செய்யுமாறு கட்டாயப்படுத்துகின்றான்

இ) குறித்த பிரிவானது பலவந்தமான அல்லது கட்டாயப்படுத்தப்பட்ட உழைப்பு அல்லது சேவைகள், அடிமைத்தனம், சேவகம், உடற்பாகங்களை அகற்றுதல், விபச்சாரம் அல்லது வேறுவடிவிலான பாலியல் சுரண்டல்கள் அல்லது ஏதாவதொரு சட்டத்தின் கீழ் ஒரு குற்றமாகக் கொள்ளப்படும் வேறு ஏதாவது செயல்கள் போன்றவற்றிற்காக பிள்ளையொருவரை ஆட்சேர்ப்பு, இடப்பெயர்வு, இடமாற்றம், மறைத்து வைத்தல் அல்லது பெறுதல் அல்லது அப்பிள்ளையின் சம்மதத்துடன் அல்லது சம்மதமல்லாது வேறு ஏதாவது செயலைப்புரிதல் போன்ற செயல்களைப்புரியும் ஆளொருவரைக் இழிதொழில் வாணிகக் குற்றவாளி ஆக்குகின்றது.

**சம்பவ ஆய்வு -3**

வீட்டிலுள்ள துஷ்பிரயோகமான சூழ்நிலை காரணமாக சுனில் என்பவன் 16 வயதில் வீட்டை விட்டு தப்பி ஓடினான். ஒரு உள்ளூர் வேலைவாய்ப்பு நிறுவனமானது அவனுக்கு பகுதி நேர வேலை, உணவகமொன்றில் தங்குமிடம் மற்றும உணவு என்பவற்றை வழங்குவதுடன் பகல்நேரத்தில் அவன் பாடசாலைக்கு சமூகமளிக்க முடியுமென வாக்குறுதியளித்தது. சுனில் மேற்கூறியவற்றுடன் உடன்பட்டான். அங்கு வருகை தந்தபோது அவன் ஒரு சிறிய அளவிலான உணவுடன் வாரத்தின் 7 நாட்களும் நீண்ட மணித்தியாளங்கள் வேலைபுரியுமாறு நிர்பந்திக்கப்பட்டான். பாடசாலைக்குச் செல்லவும் அனுமதிக்கப்படவில்லை. இது தொடர்பாக முறைப்பாடு செய்தால் அல்லது ஓய்வெடுத்தால் அவன் தாக்கப்பட்டதுடன் வார்த்தைத் துஸ்ப்பிரயோகத்திற்கும் உள்ளானான். இரவில் ஒரு அறையில் அடைத்து வைக்கப்பட்டதுடன் எங்குசெல்லவும் அவன் அனுமதிக்கப்படவில்லை. தப்பியோட முயற்சித்தால் அவனைப் பொலிஸிடம் முறைப்பாடு செய்வதாக அவன் முதலாளி மிரட்டினான்.

**உங்களுக்குத் தெரியுமா?**

கடத்தப்பட்ட நபர் ஒரு சிறுவராயின் அவரின் **சம்மதம் முக்கியமற்றது**.

குறித்த வரைவிலக்கணமானது கீழே விளக்கப்பட்டவாறு முழுமையானதும் ளுயுயுசுஊ சமவாயத்தில் உள்ளடக்கப்பட்ட வரைவிலக்கணத்திலிருந்தும் பரந்தளவில் வளர்ச்சியடைந்ததொன்றாகும். தண்டனைச்சட்டக் கோவையில் கடத்தலுக்கான வரைவிலக்கணமானது பலேர்மோ வரைவேட்டில் குறிப்பிடப்படாத எவரேனுமொருவரை விற்றல் வாங்குதல் மற்றும் பண்டமாற்றம் செய்தல் போன்ற பல்வேறு செயல்களை (Palermo Protocol) உள்ளடக்கிய அதேவேளை கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட வழிமுறைகளானவை பலேர்மோ வரைவேட்டில் பரந்தளவில் காணப்படுகின்றது. உதாரணமாக குறித்த ஏற்பாடானது அதிகார துஷ்பிரயோகம் அல்லது பாதிக்கப்படக்கூடிய ஒரு நிலைமை என்பவற்றை வழிமுறையாகக் கொண்டு அதன் மூலம் கடத்தல் நடைபெறுவது தொடர்பான ஏதாவதொரு செயலையும் உள்ளடக்கவில்லை. சுரண்டல் என்பதன் நோக்கமானது பரந்துபட்டது அத்துடன் உதாரணமாக இது திருமணத்திற்காகப் பிள்ளைகளைக் கடத்துதலை வெளிப்படையாக உள்ளடக்கவில்லை எனினும், குறித்த வரைவிலக்கணமானது உழைப்பிற்காக அல்லது சேவைக்காக நிர்ப்பந்தித்தல், அடிமைத்தனம், சேவகம் அல்லது வேறு வகையிலான பாலியல் சுரண்டல்கள் போன்ற நிகழ்வுகளை உள்ளடக்க போதுமானளவு பரந்தது.

### 5.2.2 பிள்ளைகள் மற்றும் பெண்களை விபச்சாரத்திற்காக கடத்துதல் தடுத்தல் மற்றும் எதிர்த்தலுக்கான மகாநாடு[69]

இலங்கை அரசானது ஆட்கள் கடத்தப்படுவதனை மட்டுப்படுத்துவதற்கு, தண்டனைச்சட்டக் கோவையின் திருத்தங்களிற்கு மேலதிகமாக 2005 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் SAARC மகாநாட்டின் கீழான தனது கடப்பாடுகளை நிறைவேற்றும் பொருட்டு நியதிச்சட்டத்தினை நிறைவேற்றியது.

**பிள்ளைகள் மற்றும் பெண்களை விபச்சாரத்திற்காக இழிதொழில் வாணிகஞ் செய்தலைத் தடுத்தல் மற்றும் எதிர்த்தலுக்கான சமவாயச் சட்டம் (The SAARC Act)** ஆனது இழிதொழில் வாணிகத்திற்கு உட்பட்ட பிள்ளைகள் மற்றும் பெண்களின் தடுப்பு, மறுவாழ்வு மற்றும் ஒப்படைப்புக்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

மேலும் இது குற்றவியல் விடயங்கள் சட்டத்தில்[70] பரஸ்பர உதவிகளின் கீழ் பொதுநலவாய நாடுகளுடனான இணைக்கப்பட்டினை வலுப்படுத்துகின்றது அத்துடன் எல்லை கடந்த கடத்தல் வழக்குகள் மற்றும் விசாரணைகளில், அரசானது பொது நலவாய நாடுகளல்லாத நாடுகளுடனும் குறித்த சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய உடன்படிக்கை கைச்சாத்திட்டுள்ளது.

**குறித்த சட்டமானது பின்வருமாறு ஏற்பாடு செய்கின்றது.**

விபச்சாரத்திற்காக பிள்ளைகள் மற்றும் பெண்களைக் இழிதொழில் வாணிகஞ் செய்யும் தவறினை பின்வருமாறு வரையறை செய்கின்றது.

(அ) எவரெனும் ஆளொருவரை தான் வைத்திருத்தல், பராமரித்தல் அல்லது நிர்வகித்தல் அல்லது வேண்டுமென்று நிதியளித்தல் அல்லது நிதியளித்தலில் பங்களிப்பது அல்லது வேண்டுமென்று அனுமதியளித்தல் அல்லது வாடகைக்கு விடுதல்

(ஆ) ஒரு கட்டடம் அல்லது வேறு இடம்

(இ) விபச்சாரத்திற்காகவோ அல்லது அது தொடர்பான வேறுவிடயங்களுக்காகவோ பெண்கள் மற்றும் பிள்ளைகளைக் இழிதொழில் வாணிகஞ் செய்யும் நோக்கத்திற்காக
விபச்சாரத்திற்காக பெண்கள் மற்றும் பிள்ளைகளைக் இழிதொழில் வாணிகஞ் செய்யும் தவறொன்றுக்குக் குற்றவாளியாவார்.

[69] 2005ம் ஆண்டின் 30ம் இலக்கச் சட்டம்
[70] 2002ம் ஆண்டின் 25ம் இலக்கச் சட்டம்

(ஊ) எவரெனும் ஆளொருவர் தான் மேற்குறிப்பிட்ட செயல்களை செய்வதற்கு முயற்சி செய்தல், உதவியளித்தல் அல்லது உடந்தையாக இருத்தல் அல்லது இரகசிய திட்டம் தீட்டுதல் போன்றவற்றைப் புரிபவராயின் அவரும் அதே தவறொன்றுக்கு குற்றவாளியாவார்.மேலும் மூன்று ஆண்டுகளுக்குக் குறையாததும் பதினைந்து ஆண்டுகளை விஞ்சாததுமான காலப்பகுதியொன்றுக்கான கட்டாய தண்டனை மற்றும் குற்றப் பணத்துடன் தண்டிக்கப்படலாம்.

**கடத்தலினால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கும் உரிமைகள் உள்ளன என்பது உங்களுக்குத் தெரியுமா?**

**ஆ.** குறித்த சட்டமானது இழிதொழில் வாணிபத்தால் பாதிக்கப்பட்ட நபருக்கு நஷ்ட ஈட்டினை ஏற்பாடு செய்வதுடன் குறித்த நஷ்ட ஈட்டினைச் செலுத்தத் தவறும் பட்சத்தில் மேலும் ஐந்தாண்டு காலத்திற்கு மறியற்சிறைத்தண்டனையை சுமத்துகின்றது..

**இ.** குறித்த குற்றத்திற்கு குற்றம் சாட்டப்பட்டுள்ள உள்நாட்டவர் மற்றும் வெளிநாட்டவர் தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கான நியாயாதிக்கமானது மேல் நீதிமன்றத்திடம் வழங்கப்பட்டுள்ளது.

**ஈ.** மிகமோசமான சூழ்நிலைகளில், ளுயுயுசுஊ மகாநாட்டில் குறிப்பிட்டது போல் கடத்தலில் பாதிக்கப்பட்ட நபர்களின் உரிமைகள் மற்றும் விபச்சாரத்திற்காக பிள்ளைகள் மற்றும் பெண்கள் இழிதொழில் வாணிகஞ் செய்யப்படுவதனை எதிர்ப்பதற்காக எடுக்கப்பட வேண்டிய விசேடமான நடைவடிக்கைகள் என்பவற்றினை குறித்த சட்டமானது ஏற்பாடு செய்கின்றது



**<u>கற்றற் கருவிகள்</u>**

1. பிரிவு 360ஊ ஏற்பாடு செய்யும் இழிதொழில் வாணிகத் தவறுக்கான காரணிகளை ஆராய்வதுடன் வழங்கப்பட்ட வழக்கிற்கு அதனை பிரயோகிக்கவும்
2. உம்மிடமுள்ள வழக்கு அல்லது உள்ளடக்கத்தினைப் பயன்படுத்தி நிகழ்வு ஆய்வொன்றினை உள்ளடக்குக.
3. உடன்படுத்துதல் மற்றும் இழிதொழில் வாணிகஞ் செய்தல் குற்றங்களுக்கு இடையிலான வேறுபாடுகளை ஒப்பிட்டு வேறுபடுத்துக.
4. பின்வருவனவற்றில் எவற்றில் மனித இழிதொழில் வாணிகஞ் செய்தலானது உட்பட முடியும் (பொருத்தமான அனைத்தையும் குறிப்பிடுக)[71]

| | |
|---|---|
| 1) சர்வதேச எல்லைகளைச் சட்ட பூர்வமாகத் தாண்டுதல் | |
| 2) சர்வதேச எல்லைகளைச் சட்ட விரோதமாகத் தாண்டுதல் | |
| 3) போக்குவரத்திற்கான செலவுகள் செலுத்தப்படும் வரை ஊதியமற்று பணிபுரிதல் | |
| 4) அடையாள ஆவணங்கள் அல்லது கடவுச்சீட்டுக்களை எடுத்துச் செல்லல் | |
| 5) வன்முறை மற்றும் துஷ்பிரயோகம் | |
| 6) உள்நாட்டு இடம்பெயர்வு | |
| 7) அடிமைத்தனம் | |
| 8) வெளிநாட்டில் தன்னிச்சையான பாலியல் தொழில் செய்தல் | |
| 9) மறியல் | |
| 10) தனிமைப்படுத்தல் | |

[71] கடத்தலுக்கு எதிரான பயிற்சி குறிப்புக்கள் (இடப்பெயர்வு மேலாண்மைக்கான சர்வதேச நிறுவனம் , 7 ர்டைட ளுவசநநவஇ னுரடிடலை) 92 < http://iomireland.ie/wp-content/uploads/2016/04/Train-the-Trainer-Manual-Original.pdf> (டிசெம்பர் 20ம் திகதி 2018ம் ஆண்டு தேடப்பட்டது) பார்க்க

5. பலேர்மோ நெறிமுறையேட்டின் மனிதக் இழிதொழில் வாணிகம் எனும் வரையறையில் காணப்படும் அனைத்துப்பதங்களையும் வட்டமிடுக.[72]

பாலியல் சுரண்டல்கள், ஆள்க்கடத்தல், தாக்குதல், கடன், மிரட்டல், பாதிக்கப்படக்கூடிய நிலமை, தவறான நம்பிக்கை, ஒழுங்கமைக்கப்பட்ட குற்றம், சேவகம், அடிமைத்தனம், மறைத்து வைத்தல், கள்ளக்கடத்தல், விபச்சாரம், உழைப்புச் சுரண்டல்கள், நவீனகால அடிமைத்தனம், சிறுவர் ஆபாசப்படங்கள், உடற்பாகங்களை அகற்றுதல், நாடுகடத்தல், பயம், மோசடி, ஆட்சேர்ப்பு, எல்லை கடத்தல், இடமாற்றம், பலத்தினைப் பயன்படுத்தல், அதிகார துஸ்பிரயோகம்

### 5.2.3. இழிதொழில் வாணிகம் தொடர்பான தவறுகள் தொடர்பிலான பிற தண்டனைச் சட்டக் கோவை ஏற்பாடுகள்.

| சட்ட ஏற்பாடுகள் | தவறின் பெயர் | தண்டனை |
|---|---|---|
| **S. 286 A (1)**<br><br>**ஆபாசமான வெளியீடு, கண்காட்சி, போன்ற சிறுவர் தொடர்பானவை**<br><br> | **(1) (அ)** ஏதேனும் பிள்ளையை ஏதேனும் ஆபாசமான அல்லது இழிவான கண்காட்சியில் அல்லது காட்சியில் தோன்றுவதற்கு அல்லது நடிப்பதற்கு அல்லது ஏதேனும் ஆபாசமான அல்லது இழிவான புகைப்படத்திற்கு அல்லது திரைப்படத்திற்கு தோற்ற நிலையை அமைவிப்பதற்கு உருநிலைப்படிவம் கொள்ளுவதற்கு என வாடகைக் கொடுக்கின்ற, தொழிலுக்கமர்த்துகின்ற, உதவுகின்ற, தூண்டுகின்ற, பயன்படுத்துகின்ற தூண்டுதல் அளிக்கின்ற அல்லது வலுக்கட்டயப்படுத்துகின்ற அல்லது விற்பனை செய்கின்ற, அல்லது விநியோகிக்கின்ற அல்லது வேறு வகையில் வெளியிடுகின்ற அல்லது அத்தகைய ஏதேனும் புகைப்படத்தை அல்லது திரைப்படத்தை தம்மகத்தே வைத்திருக்கின்ற அல்லது<br><br>**(ஆ)** பிள்ளையொன்றின் பெற்றோராக, பாதுகாவலராக அல்லது அதனைக் கட்டுக்காப்பில் வைத்திருக்கின்ற ஆளொருவராக இருக்கையில் ஏதேனும் ஆபாசமான அல்லது இழிவான கண்காட்சியில் அல்லது காட்சியில் பங்கு பற்ற அல்லது அதற்குத்தோற்ற நிலையை அமைவிக்க அல்லது (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான ஏதேனும் அத்தகைய புகைப்படத்தில் அல்லது திரைப்படத்தில் தோற்றுவதற்கு அத்தகைய பிள்ளையை தொழிலுக்கமர்த்தப்பட, அல்லது பங்குபற்றச் செய்கின்ற அல்லது அனுமதிக்கின்ற<br><br>**(i)** பிள்ளையின் ஏதேனும் ஆபாசமான புகைப்படத்தைப் பிடிக்கின்ற அல்லது பிடிக்க உதவுகின்ற அல்லது | இரண்டாண்டுகளுக்குக் குறையாததும் பத்தாண்டுகளை விஞ்சாததுமானவொரு காலப்பகுதிக்கு இரு வகையிலொரு வகை மறியற்றண்டனையால் தண்டிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் குற்றப்பணத்துடனும் தண்டிக்கவும் படலாம். |

[72] Nk.F

| | | |
|---|---|---|
| | **(ii)** அத்தகைய புகைப்படங்கள் அடங்கிய ஏதேனும் அத்தகைய புகைப்படத்தை அல்லது ஏதேனும் வெளியீட்டை விநியோகிக்கின்ற அல்லது காண்பிக்கின்ற அல்லது<br><br>**(iii)** ஏதேனும் அத்தகைய புகைப்படத்தை அல்லது வெளியீட்டை விநியோகத்திற்கென அல்லது காண்பிப்பதற்கெனத் தம்மகத்தே வைத்திருக்கின்ற அல்லது<br><br>**(iv)** ஏதேனும் புகைப்படத்தை வெளியிடுகின்ற அல்லது வெளியிடச் செய்விக்கின்ற அல்லது விளம்பரத்தில் குறிப்பிடப்படுகின்ற, விநியோகிக்கின்ற செய்தியை எடுத்துரைக்கும் ஆற்றலுடைய ஏதேனும் விளம்பரத்தை வெளியிடுகின்ற அல்லது வெளியிடச் செய்கின்ற அல்லது அத்தகைய ஏதேனும் புகைப்படத்தை அல்லது வெளியீட்டை வெளியிடுகின்ற அல்லது அவ்வாறு செய்ய முயலுகின்ற,<br><br>ஆளெவரும் சிறுவர்கள் சார்பில் ஆபாசமான வெளியீடு மற்றும் கண்காட்சி என்னும் தவறைப் புரிகின்றார் | |
| | | |
| **S.286 A (2)** | புகைப்படங்களின் அல்லது நிழற்படச்சுருள்களின் உருவிளக்கப்படுத்துவதற்காகத் தமக்குத் தரப்பட்ட புகைப்படம் அல்லது நிழற்படச்சுருள் எதுவும், அல்லது பிள்ளையொன்றின் ஆபாசமான புகைப்படமாக அல்லது நிழற்படச்சுருளாக இருக்கின்றதெனக் காணுகின்றவரான ஆள் எவரும், அவ்வாறு கண்டு பிடித்தும், தம்வசம் அத்தகைய புகைப்படம் அல்லது நிழற்படச்சுருள் இருக்கின்றதென மிகச் சமீபத்தில் இருக்கின்ற பொலிசு நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலருக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும். | (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறி நடக்கின்ற ஆள் எவரும், இரண்டு ஆண்டுகளுக்கு நீடிக்கக் கூடிய காலமொன்றுக்கான இருவகையில் ஒருவகை மறியற்றண்டனையினால் அல்லது |
| | | |
| **S. 286 B பிள்ளையொன்றின் பாலியல் துஸ்பிரயோகத்தினை தடுக்க கணனி மூலம் சேவை வழங்கும் நபரின் கடமை** | (1) கணனியொன்றின் வாயிலாக சேவையொன்றை வழங்கும் ஆளொருவர் அத்தகைய கணனி வசதியானது பிள்ளையொன்றின் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பிலான தவறொன்று அமையும் செயலொன்றைப் புரிவதற்குப் பயன்படுத்தப்படாதிருப்பதனை உறுதிப்படுத்துவதற்கு அவசியமானதான அத்தகைய எல்லா நடவடிகளையும் எடுத்தல் வேண்டும். | ஓராம் அல்லது (2) ஆம் உட்பிரிவின் ஏற்பார்டுகளை மீறுகின்ற ஆளொருவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத் தீர்ப்பு அளிக்கப்படுவதன் மேல் இரண்டு ஆண்டுகளை விஞ்சாததுமானவொரு |

| | | |
|---|---|---|
| | (2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் அத்தகைய கணனி வசதி ஆனது பிள்ளையொன்றின் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பிலான தவறொன்றாக அமையும் செயலொன்றைப் புரிவதற்குப் பயன்படுத்தப்படுகின்றது என அறிந்து இருப்பவரான (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆளொருவர், உடனடியாக அந்நிகழ்வை அருகிலுள்ள பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாய் உள்ள அலுவலகருக்கு அறிவித்தலும் அத்தகைய செயல் தொடர்பில் தம்மகத்தே இருக்கக்கூடியவாறான அத்தகைய தகவலையும் குற்றஞ்சாட்டப்பட்ட தவறாளரின் ஆளடையாளத்தையும் கொடுத்தலும் வேண்டும் | காலப் பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது ஒரு குற்றப் பணத்திற்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும். |
| | | |
| **பிரிவு 286 C பிள்ளைத் துஷ்பிரயோகத்திற்குப் பயன்படும் வளவுகள் பற்றிய தகவலை வழங்கும் பொறுப்பு** | (1). ஏதேனும் வளவு பிள்ளைத் துஷ்பிரயோகமாக அமைகின்ற செயல் ஒன்றைப் புரிவதற்குப் பயன்படுத்தப்படுகின்றது என்பதனை அறிந்திருக்கின்றவரான அத்தகைய வளவுகளின் பெறுப்பை, பராமரிப்பை, கட்டுப்பாட்டை அல்லது ஆட்சியுடைமையைக் கொண்டுள்ள ஆளெவரும், அத்தகைய நிகழ்வுபற்றி அருகிலுள்ள பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாயுள்ள அலுவலகருக்கு அறிவித்தல் வேண்டும்.<br>(2) பிள்ளையொன்றின் துஷ்பிரயோகமாக அமையும் செயலொன்றைப் புரிவதற்கு அத்தகைய வளவு பயன்படுத்தப்படுகின்றது என்ற நிகழ்வைப்பற்றி அருகிலுள்ள பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாயுள்ள அலுவலகருக்கு அறிவிக்கத் தவறுகின்றவரான (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்படுகின்ற ஆளெவரும் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும். | இரண்டு ஆண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு இரு வகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது குற்றப்பணமொன்றுக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும். |
| **பிரிவு 288 பிள்ளையொன்றை பிச்சை எடுப்பதற்காகத் தூண்டுதல் அல்லது கூட்டிவிடல்** | பிச்சை எடுக்கும் அல்லது யாசகப் பொருள் பெற்றுக்கொள்ளும் நோக்கங்களுக்காக அல்லது யாசகப் பொருள் கொடுக்கப்படுவதைத் தூண்டும் நோக்கங்களுக்காக (பாடுதல், விளையாட்டுக்காட்டல், கேளிக்கை நிகழ்ச்சி நடாத்துதல், எதனையும் விற்பனை செய்வதற்காகக் கொடை முனைதல் அல்லது வேறு வகையில் செய்வதென்ற பாசாங்கு எதுவும் இருந்தாலென்ன, இல்லாவிட்டாலென்ன) பிள்ளை ஒன்றை ஏதேனும் தெருவில், வளவுகளில் அல்லது இடத்தில் நிற்கச்செய்கின்ற அல்லது கூட்டிவிடுகின்ற ஆள் எவரும் | குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், ஐந்தாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான இருவகையில் ஒரு வகையான மறியற்தண்டனையினால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அவர், குற்றப்பணம் ஒன்றுக்கும் ஆளாகலாம். |

| | | |
|---|---|---|
| **பிரிவு 308 A பிள்ளைகளைக் கொடுமைப்படுத்தல்**<br> | பதினெட்டு வயதிற்குக்கீழ்ப்பட்ட எவரேனும் ஆளைக்கட்டுக்காப்பில், பொறுப்பில் அல்லது பராமரிப்பில் வைத்திருக்கும் எவரும் அத்தகைய ஆளை (கண் பார்வைக்கு அல்லது செவிப்புலனுக்கு அல்லது அவயத்திற்கு அல்லது உடலுறுப்பிற்கு ஊறு அல்லது கண் பார்வை இழப்பு அல்லது ஏதேனும் உளவியல் சீர்குலைவு உட்பட) துயரத்தை, அல்லது உடல் நலப்பாதிப்பை ஏற்படுத்தும் சாத்தியமுள்ள முறையொன்றில் வேண்டுமென்றே தாக்குகின்ற, துன்புறுத்துகின்ற அசட்டை செய்கின்ற, கைவிடுகின்ற அல்லது அத்தகைய ஆளை தாக்குவிக்க, துன்புறுத்துவிக்க, கைவிடப்படுவிக்கச் செய்விக்கின்ற ஆள் எவரும் பிள்ளைகளைக் கொடுமைப்படுத்தல் என்னும் தவறைப் புரிகின்றார். | இரண்டாண்டுகளுக்குக் குறையாததும் பத்தாண்டுகளை விஞ்சாததுமானவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனையால் தண்டிக்கப்படுதல் வேண்டும், என்பதுடன் குற்றப்பணத்துடனும், தண்டிக்கப்படலாம் அத்துடன் எந்த ஆள் தொடர்பில் தவறுபுரியப்பட்டதோ அந்த ஆளுக்கு ஏற்படுத்தப்பட்ட ஊறுகளுக்கு நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்ட தொகையைக் கொண்ட நட்டஈடொன்றைச் செலுத்துமாறு கட்டளையிடவும் படலாம். |
| | | |
| **பிரிவு 358 A தனிசுத்தாள், பிணிப்பு,வலோற்கார அல்லது கட்டாய ஊழியம், அடிமைத்துவம் மற்றும் ஆயுதந்தாங்கிய போராட்டத்தில் ஈடுபடுத்துவதற்காக ஆட்திரட்டல்.**<br> | **(அ)** எவரேனும் ஆளை தனிசுத் தாளை அல்லது பிணிப்புக்கு உட்படுத்துகின்ற அல்லது உட்படுத்துவிக்கின்ற<br>**(ஆ)** எவரேனும் ஆளை வலோற்கார அல்லது கட்டாய ஊழியத்துக்குட்படுத்துகின்ற அல்லது உட்படுத்துவிக்கின்ற<br>**(இ)** எவரேனும் ஆளை அடிமைத்துவத்துக்குட்படுத்து கின்ற அல்லது உட்படுத்துவிக்கின்ற அல்லது<br>**(ஈ)** ஒரு பிள்ளையை ஆயுதந்தாங்கிய போராட்டத்தில் ஈடுபடுத்துகின்ற அல்லது அதில் பயன்படுத்தப்படுவதற்கென ஆட்திரட்டுகின்ற,<br>ஆளெவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும். | ஓராம் உட்பிரிவின் (அ), (ஆ) அல்லது (இ) என்னும் பந்தியின் கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாகும் ஆளெவரும் குற்றத்தீப்பளிக்கப்படுவதன் மேல் இருபது ஆண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கும் குற்றப் பணமொன்றுக்கும் ஆளாதல் வேண்டும். (1) ஆம் உட்பிரிவின் (அ), (ஆ) அல்லது (இ) என்னும் பந்தியின் கீழ் தவறுபுரியுமிடத்து, முப்பது ஆண்டுகளை விஞ்சாதவொரு |

| | | |
|---|---|---|
| | | காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கும் அத்துடன் குற்றப் பணமொன்றுக்கும் ஆளாதல் வேண்டும். |
| **பிரிவு 360 (B) 1 பிள்ளைகளைப் பாலியல் சுரண்டல்களுக்கு உள்ளாக்கல்**<br> | **(அ)** ஏதேனும் குழந்தையை, அக் குழந்தையைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்விக்கின்ற அல்லது ஏதேனும் விதமான பாலியல் செயலில் அல்லது ஏதேனும் ஆபாசமான அல்லது இழிவான கண்காட்சியில் அல்லது காட்சியில் பங்குபற்றச் செய்விக்கின்ற நோக்கங்களுக்கென அக்குழந்தையை எவையேனும் வளவுகளுக்குள் பிரவேசிக்க அல்லது தங்கியிருக்க, வேண்டுமென்றே அனுமதிக்கின்ற<br>**(ஆ)** பாலியல் உடலுறவின் நோக்கங்களுக்கு அல்லது ஏதேனும் விதமான பாலியல் துஷ்பிரயோகத்திற்கு குழந்தையொன்றைக் கூட்டி வருபவராகச் செயல்படுகின்ற<br>**(இ)** அச்சுப்பிரதி அல்லது வேறு தொடர்பு சாதனங்கள், வாய்மொழி விளம்பரங்கள் அல்லது அதேபோன்ற வேறுவழிகள் மூலம் பாலியல் உறவுக்கு அல்லது ஏதேனும் விதமான பாலியல் துஷ்பிரயோகத்துக்கு குழந்தையொன்றின் வாடிக்கையாளர் ஒருவராக இருக்க ஆணொருவரைத் தூண்டிவிடுகின்ற<br>**(ஈ)** அத்தகைய குழந்தையை பாலியல் உடலுறவுக்கு அல்லது ஏதேனும் விதமான பாலியல் துஷ்பிரயோகத்திற்குக் கூட்டிவிடுவதற்கு, அத்தகைய குழந்தை மேல் தமக்குள்ள செல்வாக்கை அல்லது அக்குழந்தையிடம் தமக்குள்ள உறவை அனுகூலமாகப் பயன்படுத்துகின்ற<br>**(உ)** ஒரு குழந்தையை பாலியல் உடலுறவுக்கு அல்லது ஏதேனும் விதமான பாலியல் துஷ்பிரயோகத்திற்குக் கூட்டிவிடுவதற்காக அக் குழந்தையைப் பயமுறுத்துவதன் மூலம் அல்லது அதன் மீது வன்முறை உபயோகிக்கின்ற அல்லது<br>**(ஊ)** ஒரு குழந்தையை பாலியல் உடலுறவுக்கு அல்லது ஏதேனும் விதமான பாலியல் துஷ்பிரயோகத்திற்குக் கூட்டிவிடும் எண்ணத்துடன் அத்தகைய குழந்தைக்கு | ஐந்து ஆண்டுகளுக்குக் குறையாததும் இருபது ஆண்டுகளை விஞ்சாததுமான காலப்பகுதியொன்றுக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனையுடன் தண்டிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் குற்றப் பணத்துடன் தண்டிக்கப்படலாம். |

| | | |
|---|---|---|
| | அல்லது அதன் பெற்றோருக்குப் பணம், பொருட்கள், அல்லது வேறு நன்மை கொடுக்கின்ற<br>ஆளெவரும் குழந்தை விபச்சாரத் தவறு புரிகின்றார் | |
| | | |
| **பிரிவு 360 (D)**<br>**மகவேற்புத் தொடர்பான தவறுகள**<br> | எவரேனும் ஆளை மகவேற்புக்காக வைத்திருக்கும் நோக்கத்திற்கென –<br>**(i)** பிள்ளையொன்று அதன் பெற்றோரின் அல்லது சட்டபூர்வமான பாதுகாவலரின் சம்மதமின்றி வெளிநாடொன்றுக்குப் பிரயாணம் செய்வதற்கு ஏற்பாடு செய்கின்ற அல்லது துணை புரிகின்ற<br>**(ii)** கர்ப்பம் தரித்திருக்கம் பெண் ஒருவரிடமிருந்து அத்தகைய பெண்ணின் இன்னமும் பிறக்காத பிள்ளையை பணத்துக்காக அல்லது வேறு பிரதிபயனுக்காக மகவேற்பு செய்வதற்காக அவரது சம்மதத்தை எழுத்திலாயினுஞ்சரி வாய் மூலமாயினுஞ்சரி பெறுகின்ற<br>**(iii)** குழந்தைகள் பெறுவதற்கென ஒரு பெண்ணை அல்லது ஆண், பெண் சோடியொன்றை அமர்த்துகின்ற.<br>**(iv)** பிறப்புக்கள் பதிவுடன் தொடர்புபட்ட ஆள் ஒருவராக இருந்து கொண்டு பிறப்புக்களைப் பதிவு செய்வதற்குப் பயன்படுத்தப்படும் ஏதேனும் இடாப்பை ஏதேனும் அத்தகைய இடாப்பில் அடங்கியுள்ள ஏதேனும் பிறப்புப் பதிவை தெரிந்து கொண்டே பொய்ப்புனைதலை அனுமதிக்கின்ற<br>**(v)** பணத்திற்காக அல்லது வேறு பிரதி பயனுக்காக ஆசுப்பத்திரிகளிலிருந்து, பெண்கள் புகலிடங்களிலிருந்து, சிகிச்சை நிலையங்களிலிருந்து, வளர்ப்பு நிலையங்களிலிருந்து, பகற்கவனிப்பு நிலையங்களிலிருந்து அல்லது வேறு பிள்ளை பராமரிப்பு நிறுவனங்களிலிருந்து அல்லது நலம் பேணல் நிலையங்களிலிருந்து பிள்ளைகளைப் பெறுவதில் ஈடுபடுகின்ற அல்லது தாயை அல்லது வேறு எவரேனும் ஆளை மிரட்டுவதன் மூலம் அத்தகைய ஏதேனும் நிறுவனத்திலிருந்து அல்லது நிலையத்திலிருந்து மகவேற்புக்காக பிள்ளையொன்றைப் பெறுகின்ற அல்லது | இருபது ஆண்டுகளை விஞ்சாததுமானவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை குற்றப்பணத்தால் அல்லது அத்தகைய மறியற்றண்டணை, குற்றப்பணம் ஆகிய இரண்டாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | **(vi)** தாயை ஆள்மாறாட்டம் செய்கின்ற அல்லது அத்தகைய ஆள்மாறாட்டத்திற்கு உதவி செய்கின்ற,<br>எவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் | |
| | | |
| **பிரிவு 360 E பிள்ளையொன்றின் பரிந்து கேட்டல்** | இலங்கைக்குள் ஆயினுஞ்சரி, இலங்கைக்கு வெளியிலிருந்தாயினுஞ் சரி எத்தன்மையதுமான வழிமுறையினால் -<br>**(அ)**பதினெட்டு வயதுக்குக் குறைவான ஆளொருவரை அல்லது<br>**(ஆ)**எவரேனும் ஆள் பதினெட்டு வயதுக்குக் குறைவானவர் என நம்பி அத்தகைய ஆளை.<br>**(இ)**பிள்ளையொன்றின் பாலியல் துஷ்பிரயோகத்தின் நோக்கத்துக்காக பரிந்து கேட்கின்ற எவரும், பிள்ளையொன்றின் பரிந்து கேட்கும் தவறொன்றைப் புரிகின்றார் | பத்து ஆண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது ஒரு குற்றப்பணத்திற்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை,குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும் |
| | | |
| **பிரிவு 365 B பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகம்** | **(1)** பாலியல் அவா நிறைவுக்காக அவரது பிறப்புறுப்பை அல்லது மனித உடம்பில் வேறு ஏதேனும் பாகத்தை அல்லது ஏதேனும் சாதனத்தை வேறு எவரேனும் ஆளின் ஏதேனும் துவாரத்தில் அல்லது உடம்பில் ஏதேனும் பாகத்தில் பயன்படுத்தி பின்வரும் விவரணங்களின் கீழ்வரும் ஏதேனும் சந்தர்ப்பங்களில் அதாவது–<br>**(அ)** மற்ற ஆளின் சம்மதமில்லாமல் மற்ற ஆளின் பதினாறு வயதுக்குக் குறைவாக இருக்கும் போது அவ்வாளின் சம்மதத்துடன் அல்லது சம்மதமில்லாமல்<br>**(ஆ)** அத்தகைய மற்ற ஆள் சட்ட முறையாக அல்லது சட்ட முறையற்ற விதத்தில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் போது அவ்வாளின் சம்மதத்துடன் அல்லது அச் சம்பவமானது, வலோத்காரத்தை அல்லது மிரட்டலை அல்லது தடுத்து வைக்கப்படுதல் என்னும் பயமுறுத்தலை உபயோகப்படுத்துவதன் மூலம் அல்லது மரணம் அல்லது ஊறு விளைவிக்கப்படும் என்னும் பயத்தை அத்தகைய மற்ற ஆளின் ஏற்படுத்துவதன் மூலம் பெறப்பட்டிருக்கின்ற<br>**(இ)** மற்ற ஆளின் சம்மதத்துடன், அதாவது, மற்ற ஆள் சித்தசுவாதீனமற்றிருந்த நேரத்தில் அல்லது மதுசாரத்தால் அல்லது போதைப் | பதினெட்டுவயதுக்கு குறைந்த எவரேனும் ஆளின் மீது பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகம் புரியும் ஆளெவரும் ஏழு ஆண்டுகளுக்குக் குறையாததும் இருபது ஆண்டுகளை விஞ்சாததுமானவொரு காலப்பகுதிக்கு கடூழிய சிறைத்தண்டனை உடனும் அத்துடன் குற்றப்பணத்துடனும் தண்டிக்கப்படுதல் வேண்டும் அத்துடன் எந்த ஆள் தொடர்பில் தவறுபுரியப்பட்டதோ அந்த ஆளுக்கு விளைவிக்கப்பட்ட ஊறுகளுக்காக அல்லது நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்ட தொகையொன்றின் இழப்பீடு ஒன்றை அத்தகைய ஆளுக்குச் |

| | | |
|---|---|---|
| | பொருளினால் தூண்டிவிடப்பட்ட வெறி நிலையிலிருந்த போது அத்தகைய சம்மதம் பெறப்பட்டு உள்ளவிடத்து<br>363 ஆம் பிரிவின் கீழ் கற்பழிப்பாக அமையாத செயலொன்றான ஏதேனும் செயலைப்புரிகின்ற ஆளெவரும் பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகத்தைப் புரிகின்றார்.<br>இதனகத்து பின்னர் இப்பிரிவில் ''பாதிப்புற்றவர்'' எனக் குறிப்பீடு செய்யப்படும் பிரிவு 345 அல்லது 360அ அல்லது பிரிவு 360ஆ அல்லது பிரிவு 363 அல்லது 364அ அல்லது 365 அல்லது பிரிவு 365 அ அல்லது பிரிவு 365ஆ என்னும் பிரிவின் கீழ் எந்த ஆளுக்கெதிராக ஒரு தவறு சார்த்துரைக்கப்பட்டதோ அல்லது குற்றம் புரிந்ததாகக் காணப்பட்டதோ அந்த எவரேனும் ஆளின் அடையாளத்தை அறியச் செய்யக்கூடியதாக பெயரை அல்லது ஏதேனும் விடயத்தை அச்சடிக்கும் அல்லது வெளியிடும் எவரேனும் ஒருவர் தவறொன்றுக்கு குற்றவாளியாகிறார | செலுத்துமாறுகட்டளை இடப்படுதலும் வேண்டும். |
| | | |
| **பிரிவு 365 C குறிப்பிட்ட தவறுகள் தொடர்பான விடயங்களை வெளியிடல்** | இதனகத்துப் பின்னர் இப்பிரிவில் ''பாதிப்புற்றவர்'' எனக் குறிப்பீடு செய்யப்படும் பிரிவு 345 அல்லது 360அ அல்லது பிரிவு 360ஆ அல்லது பிரிவு 363 அல்லது 364அ அல்லது 365 அல்லது பிரிவு 365 அ அல்லது பிரிவு 365ஆ என்னும் பிரிவின் கீழ் எந்த ஆளுக்கெதிராக ஒரு தவறு சார்த்துரைக்கப்பட்டதோ அல்லது குற்றம் புரிந்ததாகக் காணப்பட்டதோ அந்த எவரேனும் ஆளின் அடையாளத்தை அறியச் செய்யக்கூடியதாக பெயரை அல்லது ஏதேனும் விடயத்தை அச்சடிக்கும் அல்லது வெளியிடும் எவரேனும் ஒருவர் தவறொன்றுக்கு குற்றவாளியாகிறார | இரண்டு ஆண்டுகளுக்கு நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனையினால் தண்டிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், ஒருகுற்றப்பணத்திற்கும் ஆளாதலும் வேண்டும். |

**கூட்டிவிடுதல்**
**தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவு 360A ன் பிரகாரம்**

**(1)** எத்தகைய வயதினரான ஆளெவரையும், அவர் ஆணாக இருந்தாலென்ன, பெண்ணாக இருந்தாலென்ன, அவர் இலங்கைக்குள் அல்லது வெளியே விலைமகன் ஒருவராக அல்லது விலைமகள் ஒருவராக அத்தகைய ஆளினுடைய சம்மதத்துடனோ அல்லது சம்மதமின்றியோ வருவதற்கு உதவிபுரியும் அல்லது உதவிபுரிய எத்தனிக்கின்ற

**(2)** பதினாறு வயதுக்குக் குறைந்த ஆளெவரும், இலங்கைக்கு வெளியே எவரேனும் ஆளுடன் சட்டவிரோதமாக உடலுறவு கொள்வதற்கு (அத்தகைய ஆளினுடைய சம்மதத்துடன் இருந்தாலும் சரி, சம்மதம் இல்லாமல் இருந்தாலும் சரி) இலங்கையை விட்டு வெளியே செல்வதற்கு உதவிபுரிகின்ற அல்லது உதவிபுரிய எத்தனிக்கின்ற அல்லது, சொல்லப்பட்ட நோக்கத்துக்காக அத்தகைய எவரேனும் ஆளை (அத்தகைய ஆளின் சம்மதத்துடன் இருந்தாலும் சரி, சம்மதம் இல்லாமல் இருந்தாலும் சரி) இலங்கையிலிருந்து அகற்றிச் செல்கின்ற அல்லது அகற்றிச் செல்ல எத்தனிக்கின்ற.

**(3)** எத்தகைய வயதினரான ஆளெவரையும் (அத்தகைய ஆளின் சம்மதத்துடனோ அல்லது சம்மதமில்லாமலோ) வேறு எங்காகிலுமுள்ள விபசாரவிடுதியொன்றில் அத்தகைய ஆள் உடனுறைபவராக வருவதற்கான அல்லது அத்தகைய ஆள் அத்தகைய விபச்சார விடுதிக்கு விஜயம் செய்வதற்கான எண்ணத்துடன் இலங்கையைவிட்டுச் செல்ல உதவி புரிகின்ற அல்லது உதவிபுரிய எத்தனிக்கின்ற அல்லது சொல்லப்பட்ட நோக்கத்துக்காக அத்தகைய ஆள் எவரையும்(அவருடைய சம்மதத்துடனோ அல்லது சம்மதமின்றியோ) இலங்கையிலிருந்து அகற்றிச் செல்ல எத்தனிக்கின்ற.

**(4)** பதினாறு வயதுக்குக் குறைந்த வயதுடைய ஆளெவரையும், அவர் இலங்கைக்குள் அல்லது இலங்கைக்கு வெளியே வேறு எவரேனும் ஆணுடன் சட்டவிரோதமாக உடலுறவு கொள்ளும் நோக்கத்துடன் இலங்கைக்குள் கொண்டு வருகின்ற அல்லது கொண்டு வர எத்தனிக்கின்ற.

**(5)** எத்தகைய வயதுடையவருமான ஆளெவரும் ( அத்தகைய ஆளின் சம்மதத்துடனோ அல்லது சமம்தமின்றியோ) இலங்கைக்குள்ளாக அல்லது இலங்கைக்கு வெளியே சட்டவிரோதமான உடலுறவு கொள்ளும் நோக்குடன் இலங்கையிலுள்ள அத்தகைய ஆளின் வழமையான வசிப்பிடத்தைவிட்டு செல்வதற்கு உதவிபுரிகின்ற அல்லது உதவிபுரிய எத்தனிக்கின்ற.

**(6)** ஆளெவரையும் அத்தகைய ஆளின் சம்மதமின்றி எவையேனும் வளவுகளில் சட்டவிரோத உடலுறவு கொள்ளும் அல்லது பாலியல் துஷ்பிரயோகம் செய்யும் நோக்குடன் தடுத்து வைக்கின்ற.

ஆளெவரும், கூட்டிவிடுதல் என்ற தவறுக்குக் குற்றவாளியாவார்

### 5.2.4 பிள்ளைகளைக் கடத்துதல் தொடர்பான பிற சட்டங்கள்

**1841ம் ஆண்டின் 4ம் இலக்க அலைந்து திரிபவர்கள் தொடர்பிலான கட்டளைச்சட்டம்**

ஆலைந்து திரிபவர்களுக்கான கட்டளைச்சட்டமானது ஒரு தொன்மையான சட்டமென்பதுடன் அது அலைந்து திரிதலைக் குற்றமாக்குகின்றது.

பின்வரும் நபர்கள் குறித்த சுற்றித்திரிபவர்களுக்கான கட்டளைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்படலாம்:

- கலகத்தனமான அல்லது ஒழுங்கற்றமுறையில் நடந்து கொள்ளும் நபர்கள்:
- தன்னைப் பராமரிக்க மறுக்கும் அல்லது தவறும் ஆனால் தன்னைப் பராமரிக்கக்கூடிய நபர்கள் வெளியிடத்திலோ அல்லது பொது இடத்திலோ அல்லது வீதிகளிலோ பிச்சைக்காக அலைதல்:
- குடும்ப உறுப்பினர்களை பிச்சைக்காக கூட்டிவிடும் அல்லது ஊக்குவிக்கும் நபரெருவர்:
- பொது வீதிகள், இடங்கள் மற்றும் தங்குமிடங்களில் அலைந்தும் கலகத்தனமான அல்லது ஒழுங்கற்றமுறையில் நடந்து கொள்ளும் விபச்சாரியொருவர்:
- வெளியிடங்களில் அலையும் மற்றும் சொந்தக்காரரின் அனுமதியின்றி கொட்டகை, வாராண்டா போன்றவற்றில் உறையும் ஒரு நபர்:
- உரிமையாளரின் அனுமதியின்றி வீடு அல்லது கட்டடமொன்றினை உருக்குலைக்கும் நபரொருவர்
- வேண்டுமென்றே தன்னை அநாகரீகமாக வெளிப்படுத்துமொரு நபர்
- ஆபாசப்படமொன்றினை காட்சிப்படுத்தல் அல்லது பொது இடமொன்றில் அச்சிடுதல்
- காயங்களை வெளிப்படுத்துவதன் மூலம் அல்லது அல்லது வேறுவகையில் பிச்சையெடுப்பதற்கு முயற்சி செய்யும் நபரொருவர்
- தவறான பசாங்கின் கீழ் பிச்சை சேகரிக்குமொரு நபர்
- பொதுவில் வேண்டுமென்று அநாகரீகமான செயலினைப்புரியும் நபரொருவர்
- அனுமதியின்றி மறைப்புடன் மாநிலம், பொது அல்லது தனியார் இடத்தில் கண்டறியப்பட்ட நபரொருவர்
- பொதுவில் உடலுறவிற்காக எவரேனுமொரு நபரைப்பரிந்து கேட்டல்
- விபச்சாரம் மூலம் ஈட்டும் வருமானத்தில் தெரிந்தே வாழும் எந்தவொரு நபரும்
- சட்டவிரோதமான அல்லது இயற்கைக்கு மாறான உடலுறவிற்காக நபர்களை முறையாக வாங்கும் நபரொருவர்
- பாதுகாப்பில் அல்லது பொறுப்பில் அல்லது கட்டுக்காவலில் இருக்கும் பெண்பிள்ளை யொருத்தியைப் பாலுறவிற்கு உள்ளாக்கும் அல்லது ஊக்குவிக்கும், குற்றவாளியாக்கும் அல்லது முறையற்ற காமச்சேர்கைக்கான கருத்தை தெரியப்படுத்தும் எந்தவொரு நபர்.



**அலைந்துதிரிபவர்களுக்கான கட்டளைச்சட்டமானது பெண்பிள்ளை என்பதனை 16 வயதிற்கு உட்பட்ட பெண்பிள்ளை என வரைவிலக்கணப்படுத்துகின்றது.**

விபச்சாரம், பிற வடிவிலான பாலியற் சுரண்டல்கள், பிச்சையெடுத்தல் போன்றவற்றுக்காக பிள்ளைகளைக் கடத்தும் நபர்கள் மீது வழக்குத் தொடுப்பதற்கு சுற்றித்திரிபவர்களுக்கான கட்டளைச்சட்டமானது பயன்படுத்தப்படலாம். எனினும் இச்சட்டத்தினைப் பயன்படுத்தி இழிதொழில் வாணித்தினால் பாதிக்கப்பட்ட நபர்களைக் கைது செய்யப்படுகின்றது.

- நடைமுறையில் பெரும்பாலும் குறித்த சட்டமானது குழந்தைப் பாலியல் தொழிலாளர்கள் மற்றும் குழந்தைப் பிச்சைக்காரர் என்போரை பாதுகாப்பிற்காக கட்டுக்காவலில் எடுக்கின்றது
- இதேபோல் தெருவில் அசாதாரணமாக நடந்துகொள்ளும் ஒரு பிள்ளையை இக்கட்டளைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்ய முடியும்.

| | |
|---|---|
| **05ம் இலக்க 1889ம் ஆண்டு விலைமாதர் விடுதிக் கட்டளைச்சட்டம்** | |
| விலைமாதர் விடுதிக் கட்டளைச்சட்டத்தின் பிரிவு 2 இன் பிரகாரம்<br>அ. விபச்சார விடுதியொன்றினை வைத்திருக்கும், நிர்வகிக்கும் , நிர்வாகத்தினை செயற்படுத்தும் அல்லது துணைபுரியும் :<br>ஆ. குறித்த இடத்தினை அல்லது அது விபச்சார விடுதியாகப் பயன்படுத்தப்படும் எனும் திட்டத்தினை அல்லது வழக்கமான விபச்சார நோக்கத்திற்காக தெரிந்தே அனுமதிக்கும் எவ்விடத்தினதும் வாடகையாளர், குத்தகைக்காரர், குடியிருப்பாளர் அல்லது சொந்தக்காரராயிருக்கும்<br>இ. எவ்விடத்தினையும் அல்லது அவ்விடத்தின் ஏதாவதொரு பகுதியை அவ்விடம் அல்லது அதன் சில பகுதிகள் விபச்சாரத்திற்காகப் பயன்படுத்தப்படும் எனும் அறிவுடன் அல்லது அவ்விடத்தினை அல்லது அதனொரு பகுதியை தொடர்ச்சியாக விபச்சார விடுதியாக பயன்படுத்தப்படுவதற்கு வேண்டுமென்றே வாடகைக்குவிட்ட காணிச் சொந்தக்காரர் அல்லது குத்தகைக்காரராயிருக்கும் , அல்லது காணிச் சொந்தக்காரர் அல்லது குத்தைக்காரரின் முகவராயிருக்கும்<br>ஆளெவரும், தவறொன்றிற்குக் குற்றவாளியாவார் | |
| **எவ்வாறாயினும் விலைமாதர் விடுதிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் இவ்வாறான சட்டவிரோதமான மோசடியால் பாதிக்கப்பட்ட பிள்ளைகள் மற்றும் பெண்கள் குற்றவாளிகள் அல்ல.** | |
| பிரிவு 2 | அ. குறித்த பிரிவின் கீழ் குற்றவாளியாக அறியப்பட்ட ஆளொருவர் ரூபா.5000 இற்கு விஞ்சாத குற்றப்பணம் அல்லது நீதிமன்றத்தின் தற்துணிவதிகாரத்தில் ஆறுமாதங்களிற்கு விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனை அல்லது அத்தகைய மறியற்றண்டனை,குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.<br><br>ஆ. குற்றவாளியான அறியப்பட்ட ஆளொருவர் தனது இரண்டாவது அல்லது அதற்குப்பிற்பட்ட குற்றத்திற்க்கு ரூபா.1000 குற்றப்பணம் அல்லது ஒரு வருடத்திற்கு விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கான மறியற்றண்டனைக்கு ஆளாதல் வேண்டும். |
| பிரிவு 3 | அ. குறித்த கட்டளைச்சட்டத்தில் மிகக்குறைந்தளவிலான குற்றப்பணம் மற்றும் தண்டனையே நிர்ணயிக்கப்பட்டுள்ளது.<br>ஆ. இச்சட்டத்தின் கீழான அனைத்துத் தவறுகளும் பிணை வழங்கத்தக்கன மற்றும் குறித்த சட்டத்தின் கீழ் நபர்களைக் கைது செய்வதற்கு எழுத்தாணையானது பெறப்படல் வேண்டும்.<br><br>எனினும், வேசியம் என்னும் பதமானது பிரிவு 2 இல் காணப்படும் தவறு எனும் வரையறையின் கீழ் தவிர கட்டளைச்சட்டத்தில் வெளிப்படையாக வரையறுக்கப்படவில்லை. |
| | |

எனினும், தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவு 360 ஆ (1) கீழ் ஏதேனும் குழந்தையை, அக் குழந்தையைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்விக்கின்ற அல்லது ஏதேனும் விதமான பாலியல் செயலில் அல்லது ஏதேனும் ஆபாசமான அல்லது இழிவான கண்காட்சியில் அல்லது காட்சியில் பங்குபற்றச் செய்விக்கின்ற நோக்கங்களுக்கென அக்குழந்தையை எவையேனும் இடங்களிற்குள் பிரவேசிக்க அல்லது தங்கியிருக்க, வேண்டுமென்றே அனுமதிக்கின்றமை பிள்ளையைப் பாலியல் சுரண்டலிற்கு உட்படுத்துதல் எனும் குற்றமாகக் கருதப்படுகின்றது.

எனவே 'இடம்' என்னும் பதமானது விபச்சார விடுதிகள் உள்ளடங்கிய வகையில் பொருள்கோடல் செய்யப்படலாம் அத்துடன் குற்றம்புரிபவர் வேசியகக் கட்டளைச்சட்டத்திற்கு மேலதிகமாக தண்னைச் சட்டக்கோவையிலும் குற்றத்திற்கு உள்ளாக்கப்படலாம்.

**நடைமுறைச் சட்டங்கள்**

பிள்ளைகளுக்கான நீதியானது நியதிச்சட்டங்கள், கொள்கைகள், நடவடிக்கை முறைகள் மற்றும் குற்றத்தால் பாதிக்கப்பட்ட (மற்றும் சான்றளிக்கும்) சிறுவர்களுக்கு விஷேடமாக ஏற்புடையதாகும் பொறிமுறைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**1979ம் ஆண்டின் 15ம் இலக்க குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவை**

தண்டனைச் சட்டக்கோவையின் கீழான பிள்ளை கடத்தல் தொடர்பான விஷேட தவறுகளிற்கு மேலதிகமாக பாதிக்கப்பட்ட பிள்ளையின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக சில செயல்முறை சார்ந்த இடையீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஊதாரணமாக குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவையின் பிரிவு 453 ஆ ஆனது சிறுவர் துஸ்பிரயோகம் தொடர்பான வழக்குகளிற்கு முன்னுரிமை வழங்க ஏற்பாடு செய்கின்றது.

மேலும் 1998ம் ஆண்டின் 27ம் இலக்க நீதித்துறைத் திருத்தச் சட்டமானது நியதிச்சட்ட வன்புணர்வை (அதாவது 16 வயதுக்கு உட்பட்ட பெண்பிள்ளைகளை வன்புணர்ச்சிக்கு உள்ளாக்கல்) சுருக்க முறையற்ற குற்றத்திலிருந்து சுருக்கமுறைக் குற்றத்திற்கு மாற்றமடையச் செய்துள்ளது[73]. குறித்த திருத்தமானது பொருத்தமான சட்டமா அதிபர் குற்றப்பத்திரத்தினை மேல் நீதிமன்றத்திற்கு அனுப்புவதற்கான அனுமதியளிக்கின்றது, இதன்மூலம் கேள்விக்குரிய வழக்கினை விரைவாகத் தீர்ப்பதற்கு வழிவகுக்கின்றது.

**1895ம் ஆண்டின் 14ம் இலக்க சான்றுக்கட்டளைச் சட்டம்**

இந்தியாவின் 1872ம் ஆண்டு சான்றுக்கட்டளைச் சட்டத்தினை மாதிரியாகக் கொண்ட இலங்கையின் கட்டளைச்சட்டமானது இராணுவ நீதிமன்றம் மற்றும் தொழிற்துறை நடுவரின் முன்னுள்ள நடவடிக்கைகள் தவிர்ந்த எந்த நீதிமன்றிலும் அல்லது நீதிமன்றத்திற்கு முன்னுள்ள அனைத்து நீதிமன்ற நடைமுறைகளுக்கும் ஏற்புடையதாகும்[74]. கேள்வியறிவுச் சான்றினைத் தடைசெய்வதானது சான்றுச் சட்டத்தின் மிகவும் வேரூன்றிய கோட்பாடு ஒன்றாகும். கேள்வியறிவுச் சான்றிற்கு எதிரான விதியின் சாரமானது நடைவடிக்கைகளில் வாய்வழிச்சான்றுகளை வழங்கும் போது நபரொருவர் அளித்த அறிக்கை தவிர்ந்த வேறு ஒரு அறிக்கையானது கூறப்பட்ட ஏதாவது நிகழ்வினை ஏற்கத்தக்க சான்றாகும் என்பதாகும். வாய்வழிச்சான்றுகளை நீக்குதலுக்குப் பின்னுள்ள காரணமானது சான்றின் நம்பகத்தன்மையை அடிப்படையாகக் கொண்டதாகும்.

1995 மற்றும் 1999ம் ஆண்டின் சான்று விஷேட ஏற்பாடுகள் சட்டங்கள், இலத்திரனியல் மற்றும் கணனி

---

73 1998ம் ஆண்டின் 27ம் இலக்க நீதித்துறைத் திருத்தச் சட்டமானத்தின் பிரிவு 2(1) (b)

74 1895ம் ஆண்டின் 14ம் இலக்க சான்றுக்கட்டளைச் சட்டத்தின் பிரிவு 2(1)

சான்றுகளை ஏற்றுக் கொள்வதற்கான வழிவகுத்தன இது கேள்வியறிவுச் சான்று போன்ற ஆதாரங்களை சான்றாக ஏற்றுக் கொள்ளவதனை தவிர்த்த கேள்வியறிவுச் சான்றிற்கு எதிரான விதி போன்ற தடைகளை நீக்க வழிகோலியது. அதன் விளைவாக, சிறுவர் துஸ்பிரயோகம் தொடர்பான எந்தவொரு குற்ற நடைவடிக்கையிலும் சான்றுக் கட்டளைச்சட்டத்தின் பிரிவு 163 A(1)[75] ஆனது சிக்கலில் உள்ள விடயத்துடன் தொடர்புபடுமாயின் அது குறித்த பிள்ளைக்கும் குறித்த சட்ட நடவடிக்கையில் குற்றம்சாட்டப்பட்டவரல்லாத வயதுக்குவந்த ஒருவருவருக்குமிடையில் நடாத்தப்பட்ட ஏலவே பதிவுசெய்யப்பட்ட வீடியோக் காட்சி மூலம் சாட்சியமளிக்க சிறுவர்களிற்கு அனுமதியளிக்கின்றது. குறித்த முறையானது பிள்ளையின் பிரதான சாட்சியத்தினை திறந்த நீதிமன்றத்தில் முன் முன்வைக்கப்பட வேண்டும் எனும் தேவைப்பாட்டினை மாற்றீடு செய்வதுடன் சிறுவர் தோழமையானதாகும். எனினும் மேற்குறிப்பிட்ட ஏற்பாடானது பிரதான சாட்சியத்திற்கு மட்டுமே ஏற்பானதாகும் அத்துடன் சிறுவரின் குறுக்கு விசாரணை தொடர்பான விடயங்களிற்கு நீடிக்க முடியாததாகும் எனவே நீதித்துறை நடைவடிக்கைகளின் போது பிள்ளைக்கு ஏற்படும் உளவியல் பாதிப்புக்களைக் குறைப்பதில் அதன் தாக்கம் மிகக் குறைந்த அளவிலேயே காணப்படுகின்றது.

**1939ம் ஆண்டின் 48ம் இலக்க சிறுவர்கள் மற்றும் இளம்பிரயாத்தினருக்கான கட்டளைச் சட்டம்** (CYPO)

| | |
|---|---|
| சிறுவர்கள் மற்றும் இளம்பிரயத்தினருக்கான கட்டளைச் சட்டமானது விசேட சிறுவர் நீதிமன்ற முறையினை ஏற்பாடு செய்கின்றது.<br>ஊலீழு ஆனது பின்வரும் விபரணங்களை ஏற்பாடு செய்கின்றது. | |
| **பிரவு 02**<br>சிறுவர் நீதிமன்றமானது பிள்ளையொருவர் அல்லது இளம் பிராயத்தினருக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை கேட்கும் நோக்கத்திற்காக அல்லது சிறுவர் நீதிமன்றத்திக்கு வழங்கப்பட்ட பிற நியாயாதிக்கங்களை ஆற்றுவதற்காக அமரும் சுருக்க முறையிலான நியாயாதிக்கத்தைக் கொண்ட நீதிமன்றம். | **பிரிவு 88**<br>14 வயதிற்குக் குறைந்த ஆளொருவர் ‘பிள்ளை’ வரையறுக்கப்படுகின்றுது. 14 வயதிற்கும் 16 வயதிற்கும் இடைப்பட்ட ஆளொருவர் இளம் பிராயத்தினர் என வரையறுக்கின்றது. |
| CYPO ஆனது சாட்டப்படும் குற்றத்தின் உள்ளடக்கத்தினை குறித்த பிள்ளை அல்லது இளம் பிராயத்தினரனின் வயது மற்றும் முதிர்ச்சியின் அளவிற்கு பொருந்தும் மொழிநடையில் விளக்க வேண்டிய திட்டவட்டமான கடப்பாடொன்றினை நீதிவானுக்கு அளிக்கின்றது<br>மேலும் இது பிள்ளைகள் மற்றும் இளம் பிராயத்தினருடன் தொடர்புறும் ஒவ்வொரு நீதிமன்றமும் பிள்ளையின் நலவுரிமையை முதன்மையாக நோக்க வேண்டுமென பணிக்கின்றது. | |

**1985ம் ஆண்டின் 21ம் இலக்க வெளிநாட்டு வேலைவாய்பிற்கான இலங்கைப் பணியகச் சட்டம்**

வெளிநாட்டு வேலைவாய்பிற்கான இலங்கைப் பணியகமானது (SLBFE) 1985ம் ஆண்டின் 21ம் இலக்க பாராளுமன்ற சட்டத்தின் ஏற்பாடுகளிற்கு கீழ் தாபிக்கப்பட்டது. பிற்பாடு இச்சட்டமானது 1994 ம் ஆண்டின் 56ம் இலக்கச் சட்டம் மற்றும் 2009ம் ஆண்டின் 56ம் இலக்க சட்டம் என்பவற்றால் திருத்தப்பட்டது. SLBFE என்பது இலங்கையின் வெளிநாட்டு வேலைவாய்புத் துறையை ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையாகும்.

**அமைப்பின் பிரதான குறிக்கோள்கள்:**

- ஆட்சேர்ப்பு முறையின் ஒழுங்குமுறை
- புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களின் நலன்கள் மற்றும் மற்றும் நல்வாழ்வின் மீது கவனம் செலுத்தல்
- வேலை ஊக்கமளிப்பின் மூலம் இலங்கையர்களுக்கு மேம்பட்ட வேலைவாய்புக்களை வழங்குதல்.

[75] 1999ம் ஆண்டின் 32ம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1895ம் ஆண்டின் 14ம் இலக்க சான்றுக்கட்டளைச் சட்டம்

| பிரிவு | தவறின் பெயர் | தண்டனை |
|---|---|---|
| **பிரிவு 62 அங்கீகரிக்கப்படாத பணியமர்த்தம்** | (1) ஆளொருவர், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியவை தவிரந்த<br>அ. ஆளொருவருடன், குறித்த நபருக்கு அல்லது வேறு நபருக்கு உதவி செய்ய வேண்டுமென்பதற்காக அல்லது வேலையின் நிமிர்த்தம் இலங்கையிலிருந்து குடிபெயர்வதற்காக அல்லது புறப்படுவதற்காக அல்லது அத்தகைய ஆளிடமிருந்து எந்தவொரு பணத்தையும் பெறுவதற்காக அல்லது கோருவதற்காக ஏதாவது உடன்படிக்கை செய்தல் அல்லது செய்ய முனைதல்<br>ஆ. இலங்கையிலிருந்து தொழில் நோக்கத்திற்காக எந்தவொரு நபரையும் குடிபெயர அல்லது பறப்பட அல்லது குடிபெயர அல்லது பறப்பட முனைவது அல்லது ஏதாவது இடத்தித்தினை குடிப்பெயர்வு அல்லது இடப்பெயர்வு நோக்கங்களுக்காக விட்டுச் செல்ல செய்வது அல்லது உதவிபுரிவது அல்லது செய்வதற்கு அல்லது உதவிபுரிவதற்கு முனையும் ஒருவர் தவறொன்றுக்கு குற்றவாளியாவார். | இவ் வேற்பாட்டின் கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாகும் ஆளெவரும் ஆயிரத்திற்கு குறையாததும் ஆயிரத்து ஐந்நூறுக்கு விஞ்சாததுமான குற்றப் பணமொன்றிற்கும் மற்றும் பன்னிரண்டு மாதங்களிற்கு குறையாததும் இரண்டு ஆண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கும் ஆளாதல் வேண்டும். |
| | (2) இந்தச் சட்டத்தின் கீழ் அதற்காக வழங்கப்படும் அனுமதிப்பத்திரம் இல்லாது வெளிநாட்டு வேலைவாய்பு நிறுவன வியாபாரமொன்றினை மேற்கொள்ளும் ஒவ்வொரு நபரும் இச் சட்டத்தின் கீழுள்ள அனைத்துக் குற்றங்களுக்கும் குற்றவாளிகளாவார். | இருபதாயிரத்திற்கு குறையாததும் நூறாயிரத்திற்கு விஞ்சாததுமான குற்றப் பணமொன்றிற்கும் மற்றும் மேலதிக குற்றப்பணமாக குற்றத்தண்டனைக்கு பின்னர் இக்குற்றம் தொடரும் ஒவ்வொருநாளும் நாளொன்றுக்கு ஆயிரம ரூபாய் கூடுதல் அபராத்திற்கும் ஆளாதல் வேண்டும். |
| | | |
| **பிரிவு 63 மோசடி அல்லது தூண்டுதல்**<br><br> | அ. வேலைவாய்ப்பு நோக்கத்திற்காக எந்தவொரு நபரினதும் குடிபெயர்விற்குத் தேவையான அல்லது தொடர்புடைய ஏதாவது ஆவணத்தினை மாற்றம் செய்வது அல்லது மோசடி செய்வது அல்லது அவ்வாறான மாற்றம் அல்லது மோசடி நோக்கங்களுக்காக பயன்படக் கூடிய ஏதாவது உபகரணம் அல்லது பொருளினை தனது உடமையில் அல்லது கட்டுப்பாட்டில் வைத்திருப்பது | ஆயிரத்திற்கு குறையாததும் ஆயிரத்து ஐந்நூறுக்கு விஞ்சாததுமான குற்றப் பணமொன்றிற்கும் மற்றும் பன்னிரண்டு மாதங்களிற்கு குறையாததும் இரண்டு ஆண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கும் ஆளாதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | ஆ. போதை, வற்புறுத்தல், மோசடி அல்லது வேண்டுமென்ற பிறழ்கூற்று என்பவற்றின் மூலம் எந்தவொரு நபரையும் வேலை வாய்ப்பிற்காகக் குடிபெயர அல்லது குடிபெயர்விற்கான உடன்படிக்கையில் ஈடுபட அல்லது ஏதாவது இடத்தித்தினை குடிப்பெயர்வு நோக்கத்திற்காக விட்டுச் செல்ல செல்ல செய்யும் அல்லது தூண்டும் அல்லது செய்வதற்கு அல்லது தூண்டுவது முயலும்<br>ஆளெவரும் இந்தச் சட்டத்தின் கீழ் தவறொன்று புரிகின்றார். | |
| | | |
| **பிரிவு 64 அறவிடப்படும் கட்டணம்** | அ. அனுமதிப்பத்திரம் பெற்ற ஒருவர் எவரேனுமொரு நபருக்கு இலங்கைக்கு வெளியே தொழில் பெற்றுத்தரும் அல்லது வழங்கும் நோக்கத்திற்காக பிரிவு 51 இல் குறிப்பிட்டதற்கு மேலதிகமாகக் கட்டணங்களை வசூலிக்கும்<br><br>ஆ. அனுமதிப்பத்திரம் அற்ற ஒருவர் எவரேனுமொரு நபருக்கு இலங்கைக்கு வெளியே தொழில் பெற்றுத்தரும் அல்லது வழங்கும் நோக்கத்திற்காக தனக்காக அல்லது வேறு வேறு எந்த நபருக்காகவும் எந்தவொரு பணத்தையும் கோருவது அல்லது பெறுவது அல்லது பெற முயற்சிக்கும்<br>ஆளெவரும் இந்தச் சட்டத்தின் கீழ் தவறொன்று புரிகின்றார். | நீதவான் நீதிமன்ற சுருக்க முறை விளக்கத்தின் பின்னர் குற்றவாளி ஆயிரத்திற்கு குறையாததும் ஆயிரத்து ஐந்நூறுக்கு விஞ்சாததுமான குற்றப் பணமொன்றிற்கும் மற்றும் பன்னிரண்டு மாதங்களிற்கு குறையாததும் இரண்டு ஆண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கும் ஆளாதல் வேண்டும். மேலதிகமான நீதவான் நீதிமன்றானது குறித்த குற்றத்திற்கு உட்பட்ட பணத்தினை அல்லது கட்டணத்தினை அதனைப் யாரிடமிருந்து பெற்றுக் கொண்டாரோ அநத் நபருக்கு மீளச்செலுத்துமாறு கட்டளையிடும். |
| | | |
| **பிரிவு 68** | பிரிவு 63 அல்லது 64 இன் கீழ் தவறொன்றிற்குத் தண்டிக்கப்பட்ட ஆளொருவர் பிற்பாடு குறித்த அதே பிரிவுகளிக் கீழ் தவறொன்றிற்குத் தண்டிக்கப்படுவாரயின் , அவர் இரண்டாவது அல்லது அடுத்தடுத்த குற்றத்திற்கு அப்பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட தண்டனைக்கு இரட்டிப்பாக ஆளாதல் வேண்டும் | |

## 5.3 நிவாரண முறைகள்

குற்றவியல் சட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்ட பிள்ளைக்கு கிடைக்கக்கூடிய நிவாரணங்களிற்கு மேலதிகமாக, வேறு பல சட்டங்கள் குற்றத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான சலுகைள் நிவாரணங்கள் மற்றும் உரிமைகளை ஏறப்பாடு செய்கின்றன.

### அரசியலமைப்பு[76]

அரசியலமைப்பு அத்தியாயம் »»» இன் கீழ் அடிப்படை உரிமைகளுக்கு உத்தரவாதம் வழங்குவதுடன், ஆட்சித்துறை நடைவடிக்கையால் அல்லது நிருவாக நடைவடிக்கையால் மீறப்பட்ட பற்றிய அல்லது உடனடியாக மீறப்படவுள்ள அடிப்படை உரிமைக்கான நிவாரணங்களையும் வழங்குகின்றது. மனுதாரரொருவர் அரசின் செயல் அல்லது செய்யாமையினால் ஏற்பட்ட குறித்த மீறலுக்கு அத்திகதியிலிருந்து ஒருமாதத்திற்குள் உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யலாம். உயர் நீதிமன்றமானது பாதிக்கப்பட்டவருக்கு இழப்பீட்டுத் தொகை உள்ளடங்கிய ஒப்புரவுரீதியான நிவாரணங்களை வழங்கும் நியாயாதிக்கம் கொண்டது. இவ்வுரிமைகளின் வரையறையானது உயர் நீதிமன்றத்தினால் பல சந்தர்ப்பங்களில் விரிவாக்கம் செய்யப்பட்டது.

பின்வரும் அடிப்படை உரிமைகள் அரசியலமைப்பால் உத்தரவாதமளிக்கப்பட்டவை:

| உறுப்புரை | அடிப்படை உரிமைகள் |
|---|---|
| உறுப்புரை 10 | சிந்தனை செய்யும், மனச் சாட்சியைப் பின்பற்றும் மற்றும் மத சுதந்திரம் |
| உறுப்புரை 11 | சித்திரவதை, கொடூரமான மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடாத்துகை அல்லது தண்டனைக்கு உள்ளாகாமைக்கான சுதந்திரம் |
| உறுப்புரை 12(1) மற்றும் 14 | சமத்துவத்திற்கான உரிமை மற்றும் சமனான சட்டப்பாதுகாப்பினைப் பெறுவதற்கான உரிமை, இது குறைபாடுள்ள குழந்கைள் உள்ளிட்ட குழந்தைகள் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் நலன்களிற்கான உறுதியான நடவடிக்கைகளையும் உள்ளடக்கும் |
| பிரிவு 12(2) | பிரசைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டதான இனம், மதம், மொழி, சாதி, பால், அரசியற் கொள்கை உள்ளிட்டன அடிப்படையில் பாகுபாடு காட்டமை |
| பிரிவு 13 | எதேச்சையாகக் கைது செய்யப்படாமலும் தடுத்து வைக்கப்படாமலும் அத்துடன் தண்டிக்கப்படாமலும் இருப்பதற்கானதுமான சுதந்திரமும், கடந்த காலத்தினை உள்ளடக்கும் தண்டனைச் சட்டவாக்கங்களை தடைசெய்தலும். |
| பிரிவு 14 | பேச்சு, ஒன்று கூடுதல்,ஒருங்கு சேர்தல், முயற்சி செய்தல், தடையின்றி நடமாடுதல் முதலியவற்றுக்கான சுதந்திரம் |

14 (A – RTI - தகவலறியும் உரிமை)

சிறுவரொருவர் தனது அடிப்படை உரிமைகளிற்கு வயதுவந்தவரின் பதிலாட்பொறுப்பு மூலமல்லாது தனது சொந்த தகைமையில் உரித்துடையவர். எனவே கடத்தலினால் பாதிக்கப்பட்ட சிறுவரொருவர், அவனின் அல்லது அவளின் அரசியலமைப்பில் அங்கீகாரமளிக்கப்பட்ட ஏதேனுமொரு அடிப்படை உரிமைகள் மீறியுள்ளமைக்காக அரசாங்க அலுவலர்களுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யலாம். அரசியலமைப்பு சிறுவர்கள் கடத்தலுக்கு வெளிப்படையாக ஏற்பாடு செய்யவில்லையாயினும் சுரண்டல் நோக்கத்திற்காக சிறுவர்களைக் கடத்தல் போன்ற சுரண்டலிலிருந்து சுதந்திரதினைப் பெறுவதற்கான உரிமைகளை அங்கீகரிக்கும் சித்திரவதை, கொடூரமான மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடாத்துகைக்கு உள்ளாகாமைக்கான சுதந்திரம் போன்ற பல ஏற்பாடுகளைக் கொண்டுள்ளது. மேலும் தன்னிச்சையான கைது தடுத்து வைப்பு அத்துடன் தண்டனை முதலியவற்றிலிருந்தான சுதந்திரமானது குறிப்பாக பாலியல் சுரண்டல்களால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் மற்றும் சட்டத்திக் கீழ் ஒரு குற்றமாக விளங்கும் வேறு எந்த வகையான செயல்கள் தொடர்பாக அரசு தன்னிச்சையான செயல்களில் ஈடுபடுவதிலிருந்து சுதந்திரமளிக்கின்றது.

[76] 1978 ,d; ,yq;if [dehaf Nrhryprf; Fbaurpd; murpayikg;G

**மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் எழுத்தாணைக்கான நியாயாதிக்கம்**

உறுப்புரை 140 கீழ் மேன்முறையீட்டு நீதிமன்றமானது ஏதேனும் முதனிலை நீதிமன்றத்தின் அல்லது நியாயசபையின் அல்லது வேறு நிறுவனத்தின் பதிவேடுகளைச் சோதனையிடுவதற்கும் பரிசோதிப்பதற்கும் முழு அதிகாரத்தையும் கொண்டுள்ளதுடன் ஏதேனும் முதனிலை நீதிமன்றத்தின் அல்லது நியாயசபையின் அல்லது வேறு நிறுவனத்தின் நீதிபதிக்கு அல்லது வேறு எவரேனும் ஆளுக்கு எதிராக உறுதிகேள் எழுத்தாணை, தடையீட்டெழுத்தாணை, மேற்சொல் என்னும் எழுத்தாணை, ஆணையீட்டெழுத்தாணை, யாதுரிமை எழுத்தாணை என்ற இயல்பினவான கட்டளைகளைச் சட்டப்படி அனுமதித்து வழங்கவும் அதிகாரம் கொண்டது.

உறுப்புரை 141 இன் கீழ் மேன்முறையீட்டு நீதிமன்றமானது

அ. சட்டப்படி நடவடிக்கை எடுப்பதற்காக எவரேனும் ஆளை, அல்லது

ஆ. பகிரங்கக் கட்டுக்காவலில் அல்லது தனிப்பட்ட கட்டுக்காவலில் சட்டவிரோதமாக அல்லது முறையீனமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள எவரேனும் ஆளை

அந்நீதிமன்றத்தின் முன்னர் கொண்டுவருமாறும் அவ்வாறு கொண்டுவரப்பட்ட எவரேனும் ஆளை விடும்படியும் அல்லது விளக்க மறியலில் வைக்கும்படியும் அல்லது சட்டப்படி வேறுவகையான அத்தகைய ஆளுக்கெதிராக நடவடிக்கை எடுக்கும்படியும், ஆட்கொணர் எழுத்தாணைகளை என்ற வகையிலான கட்டளைகளை வழங்கலாம் அத்துடன் விடுவிக்கலாம்.

உறுப்புரை 145 மேன்முறையீட்டு நீதிமன்றம் தானாகவே செயற்பட்டு அல்லது ஏதேனும் விண்ணப்பஞ் செய்யப்பட்டதன்மேல், ஏதேனும் முதனிலை நீதிமன்றத்தின் எந்தப் பதிவேட்டினையும் சமர்ப்பிக்குமாறு கேட்கலாம், சோதனையிடலாம் அத்துடன் பரிசோதிக்கலாம். மேலும் அதன் மீளாய்வுத் தத்துவங்களைப் பிரயோகிக்கையில் நீதி நிருவாக நலன்கள் தேவைப்படுத்தக் கூடிய வகையில் அது பற்றி ஏதேனும் கட்டளையினை ஆக்கலாம்.

**குற்றத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளை பாதுகாப்பதற்கு மற்றும் துணைபுரிவதற்குமான சட்டம்**

2015ம் ஆண்டின் 04ம் இலக்க குற்றத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளை பாதுகாப்பதற்கு மற்றும் துணைபுரிவதற்குமான சட்டமானது குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளின் உரிமைகள் மற்றும் சலுகைகள், சர்வதேசத்தின் சிறந்த நடைமுறைகள், தராதரங்கள் மற்றும் விதிமுறைகளை அடிப்படையாகக் கொண்டு அவர்களின் உரிமைகளை பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்தல் என்பவற்றிற்கான ஏற்பாடுகளைச் செய்வதுடன், இச் சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்காக ஒரு தேசிய அதிகாரசபை, பொலிஸ் படையில் பாதிக்கப்பட்டவர் மற்றும் சாட்சிகளைப் பாதுகாப்பதற்கான பிரவொன்று அத்துடன் நிதியொன்றினையும் ஸ்தாபித்துள்ளது

| பிரிவு 3 | பிரிவு 4 |
|---|---|
| சட்டத்தின் பிரிவு 3 ஆனது உடனடி நிவாரணத்தினைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமை மற்றும் மரியாதை, நியாயம் மற்றும் சமத்துவத்துடன் நடத்துவதற்கான உரிமை உள்ளிட்ட பாதிக்கப்பட்டவரின் உரிமைகள் பற்றிய விரிவானதொரு பட்டியலை ஏற்பாடு செய்கின்றது. குறித்த பிரிவானது சிறுவர் தொடர்பான அனைத்து விடயங்களிலும் அச்சிறுவரின் மேலான நலனானது கவனத்திலெடுக்கப்பட வேண்டுமென பாதிக்கப்பட்ட பிள்ளையொன்றினைக் கையாளுவது தொடர்பாகவும் விசேட கவனம் செலுத்தியுள்ளது . மேலும் இது பாதிக்கப்பட்டவர்களை பொதுத் தீங்கு மற்றும் அச்சுறுத்தல்களிலிருந்து பாதுகாப்பதுடன் ஏதாவது உடல் அல்லது மனக்காயம், பாதிக்கப்பட்ட | உரிமைகளிற்கு மேலதிகமான பிரிவு 4 ஆனது பாதிக்கப்பட்டவர்களுக்கான சலுகைகளை வழங்குகின்றது. பாதிக்கப்பட்டவர் ஏற்பட்ட செலவுகளுக்கான (தேற்றமளவிலான நீதிமுறை அதிகாரம் அல்லது நீதித்துறை நடைவடிக்கைகள்) பணத்தினை அதிகாரசபையிடமும் மற்றும் கிடைக்கக் கூடிய வளங்களின் அடிப்படையில் அரசு அல்லது அதிகாரசபையிடமிருந்து மருத்துவ சிகிச்சைக்கான பணத்தினையும் கோருவதற்கு உரித்துடையவர் பிரிவு 5 ஆனது உண்மையான அல்லது சாத்தியமான தீங்கு அல்லது அச்சுறுத்தல் அல்லது துன்புறுத்தல் அல்லது மிரட்டல் என்பவற்றில் |

| | |
|---|---|
| தீங்கிற்கான மருத்துவ சிகிச்சைகளிற்குமான ஏற்பாடுகளை செய்கின்றது. தகவலறியும் உரிமை மற்றும் பிரதிநிதித்துவ உரிமை போன்ற உரிய செயல்முறை உரிமைகளையும் இப்பிரிவு ஏற்பாடு செய்கின்றது | இருந்து விடுபடல், மரியாதையாக நடாத்தப்படுதலை பெறுவதற்கும் சாட்சிகளின் உரித்துடமையை ஏற்பாடு செய்கின்றது. குறித்த சட்டம் மேலும் சாட்சிகள் மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் அல்லாத நபர்களை துன்புறுத்தல் மிரட்டல் மற்றும் வேலைக்கு அமர்த்தல் என்பவற்றிலிருந்து பாதுகாப்பதற்கு ஏற்பாடு செய்கின்றது. |

**குறித்த சட்டத்தின் கீழ் உருவான சட்டங்களை பிரவு 8 முதல் 10 குறிப்பிடுகின்றது.**

**சாட்சிகள் அல்லது குற்றத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு எதிரான இழைக்கப்படக்கூடிய குறிப்பிட்ட சில குற்றங்களை சட்டமானது உருவாக்குகின்றது.**

- பாதிக்கப்பட்ட நபர் அல்லது சாட்சியை ஆளுக்கு அல்லது நற்பெயருக்கு அல்லது சொத்திற்கு காயம் ஏற்படுத்துவதாக அல்லது தன்னிச்சையாக தீங்கேற்படுத்துவதாக மிரட்டும் (பிரிவு 8(1) ) அல்லது
- தன்னிச்சையான கடும்காயம் ஏற்படுத்தல் அல்லது தவறான தடை ஏற்படுத்தும் (பிரிவு 8(2) )அல்லது
- பலவந்தமாக அல்லது வஞ்சகமான முறையில் அதிகாரத் துஸ்பிரயோகம் செய்தல் அல்லது குறித்தொரு இடத்திலிருந்து வெளியேறுமாறு சாட்சி அல்லது பாதிக்கப்பட்டவரை ஏதாவது பிற முறைகளினால் தூண்டுதல் அல்லது கட்டாயப்படுத்தும் (பிரிவு 8(3) )அல்லது
- முறைப்பாடு அளிப்பதிலிருந்து அவர்களைத் வேண்டுமென்று தடுத்தல் அல்லது அளிக்கப்பட்ட முறைப்பாடு அல்லது மேற்கொள்ளப்பட்ட அறிக்கையினை மீளப்பெறுவதற்கு அவர்களைக் கட்டாயப்படுத்தல் அல்லது உறுதிப்படுத்தக் கோரல் அல்லது மேற்கூறியவற்றிற்கு பதிலடி கொடுக்கும்
- ஆளெவரும் தவறொன்று புரிகின்றார்.

அனைத்துக் குற்றங்களும் மேல்நீதிமன்றில் விளங்கப்படும் என்பதுடன் ஆகக் கூடியளவிலான மறியற்றண்டனை அல்லது குற்றப்பணம் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் சாட்சிகள் மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் அல்லாத நபர்களை துன்புறுத்தல் மிரட்டல் போன்றவையைப் பாதுகாப்பு, மற்றும் அவ்வாறான நபர்களின் தொழில்களில் மோசமான மாற்றங்கள் (பிரிவு 8(4)), பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளின் இரகசியத்தன்மைக்கான பாதுகாப்பு (பிரிவு 8(5), குற்றம் புரிந்தவர்களுக்கு எதிரான நடைவடிக்கையை ஆரம்பிப்பதில் லஞ்சம் மற்றும் ஊழலைத் தடுத்தல் (பிரிவு 8(6)) போன்றவற்றிற்கான ஏற்பாடுகளைச் செய்கின்றது.

மேற்குறிப்பிட்ட குற்றங்கள் பிடியாணையின்றி கைதுசெய்யப்படக் கூடியவையும் பிணைவழங்க முடியாதவையுமாகும்.

குறித்த சட்டமானது சாட்சிகள் வெளிநாடுகளிலுள்ள இலங்கை இராஜதந்திர தூதுக்குழுவிலிருந்து ஆடியோ-வீடியோ இணைப்பின் மூலம் சாட்சியமளிக்க இயலுமானதாகத் திருத்தப்பட்டது.

# ஆறாவது கற்கையலகு

## பொறுப்புகளும் கடப்பாடுகளும்

| | | |
|---|---|---|
|  | **விரிவுரை மணித்தியாலங்கள்** | 6 |
|  | **மதிப்பீட்டு முறைமை** | வகுப்பறைக் கலந்துரையாடல் |
| | **கற்றலின் பயன்விளைவுகள்** | கற்கையின் முடிவில் பின்வருவன பங்கேற்பாளர்களுக்கு இயலுமானதாயிருக்கும்<br>• சிறுவர் இழிதொழில் வாணிபத்துக்கெதிரான போராட்டம் தொடர்பான பொறுப்புகள் அல்லது கடப்பாடுகளை அறிந்து கொள்ளல் மற்றும்<br>• சிறுவர் இழிதொழில் வாணிபத்துக்கு எதிராக போராடும் பொறுப்புகள் அல்லது கடப்பாடுகள் எவர் சார்பானது என கற்றுக்கொள்ளல் |

### a. பங்கேற்றல், தடுத்தல், பாதுகாத்தல், முன்னேற்றல், புனர்வாழ்வு அல்லது மீள் ஒருங்கிணைப்பு செய்தல்

முன்னைய ஐந்து அலகுகளும் சிறுவர் இழிதொழில் வாணிபம் என்பதால் கருதப்படுவதென்ன என்பது தொடர்பான விரிவான அறிவையும் தெளிவையும் உங்களுக்கு வழங்கியிருக்கும். சிறுவர் இழிதொழில் வாணிபத்துக்கு எதிராக போரிடல் தொடர்பான காரணங்கள் மற்றும் விளைவுகள், சர்வதேச மற்றும் உள்நாட்டு சட்ட கட்டமைப்புகள் என்பவற்றை அறிந்திருப்பீர்கள்.

அடிப்படை அல்லது முன்னணி சட்ட நிறைவேற்று உத்தியோகஸ்தர்கள் எனும் அடிப்படையில் சிறுவர் இழிதொழில் வாணிபம் என்றால் என்ன? அது எவ்வாறு தொழிற்படுகின்றது? என்பதை அறிந்து வைத்திருத்தல் மட்டும் போதுமானதல்ல. சிறுவர் இழிதொழில் வாணிபத்துக்கு எதிராக போராடுவதற்காக சிறுவர் இழிதொழில் வாணிபத்துக்கு எதிராக போரிடுதல் தொடர்பான பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் எவர் சார்பானது என்பதனையும் இப்பொறுப்புகளும் கடப்பாடுகளும் எந்தெந்த நிலைகளில் திருப்தி செய்யப்பட வேண்டும் என்பதையும் கற்றுக்கொள்ளுதல் கட்டாயமானது. இதன் பொருட்டு இவ்வத்தியாயமானது வேறுபட்ட நிலைகளிலும் வேறுபட்ட மட்டங்களிலும் சிறுவர் இழிதொழில் வாணிபம் தொடர்பில் வேறுபட்ட பொறுப்பில் உள்ளவர்களுக்கு எழுகின்ற பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடவுள்ளது.

## 6.1 அறிமுகம்

கையேட்டின் நான்காம் மற்றும் ஐந்தாம் அலகுகள் மூலம் சிறுவர் இழிதொழில் வாணிபத்துக்கு எதிராக உறுதிப்படுத்தப்பட்டுள்ள சர்வதேச மற்றும் உள்நாட்டு சட்டங்கள், கொள்கைகள் பற்றியும் அதன் வழியில் எழும் பொறுப்புகள் மற்றும் இயல்புகள் பற்றியும் அறிந்திருப்பீர்கள்.
சிறுவர் இழிதொழில் வாணிபத்தை ஒழிப்பதற்காக பின்வரும் மட்டத்தில் வினைத்திறனான பொறுப்பு மிகுந்த தலையீட்டினை தனித்தனியாகவும் ஒரே சமயத்திலும் நிறைவேற்ற வேண்டும்.

- சிறுவர் இழிதொழில் வாணிபத்தை **தடுத்தல் (Prevent).**
- பாதிக்கப்பட்ட சிறுவர்கள் மற்றும் பாதிப்புக்கான அபாயத்தை எதிர்நோக்குகின்ற சிறுவர்களை **பாதுகாத்தல் (Protect).**

- மீட்டெடுக்கப்பட்ட பாதிப்படைந்த சிறுவர்களுக்கு **புனர்வாழ்வளித்து (Rehabiliate)** சமூகத்துடன் மீள ஒருங்கிணைத்தல்.
- தடுத்தல், பாதுகாத்தல், புனர்வாழ்வளித்தல் மற்றும் மீள ஒருங்கிணைத்தல் எனும் நடவடிக்கைகளின் போது **பங்குப்பற்றுகை மற்றும் உரிமைகள் அடிப்படையானதொரு அணுகுமுறை**யை **(Participatary and Rights-Based Approach)** ஏற்றுக்கொள்ளுதல்.
- சிறுவர் இழிதொழில் வாணிபம் செய்தலுக்கு எதிரான போராட்டத்தினை தடுத்தல், பாதுகாத்தல், பங்கேற்றல், புனர்வாழ்வு மற்றும் மீள ஒருங்கிணைத்தல் தொடர்பிலான பொறிமுறைகளை **ஊக்குவித்தல் (Promote).**


பலேர்மோ நெறிமுறையேட்டின் (Palermo Proctocol) அடிப்படையில் ஓர் அரசானது கீழுள்ள பொறுப்புடைமைகளுக்கு உட்படுகின்றது.

- இழிதொழில் வாணிபம் செய்தலை குற்றமென அறிவித்தல், இழிதொழில் செய்யும் நபர்களை விசாரணை செய்தல், வழக்குத் தொடுத்தல் மற்றும் தண்டித்தல்
- எல்லைகளை கட்டுப்படுத்தும் பொறிமுறைகளை உருவாக்குதல்
- வழிமுறைகளை உள்ளடக்கிய முயற்சிகளை எடுத்தல் மற்றும் சிவில் சமூகத்துடனான ஒத்துழைப்பின் மூலம்
- பாதிக்கப்பட்டவர்களை பாதுகாத்து அவர்களுக்கு உதவிகளை செய்விக்கும் பொறிமுறைகளை முன்னெடுத்தல்
- சட்டத்தை நிறைவேற்றும் அதிகாரிகள் மற்றும் எல்லையை காவல் செய்யும் அதிகாரிகள் என்போரை இது தொடர்பில் பயிற்றுவித்தல்
- பாதிக்கப்பட்டவரை அறிவுறுத்தி விழிப்புணர்வு செய்தல்.

மனித இழிதொழில் வாணிபம் போல சிறுவர் இழிதொழில் வாணிபம் இலகுவாக வெளிப்படுத்தப்பட முடியாத குற்றமொன்று அல்ல. ஏனைய குற்றங்கள் போலன்றி இப்பரந்த நிலையிலுள்ள வாணிபமானது வேறுபட்ட நிலைகளில் பல நபர்களை பங்கேற்க செய்யக்கூடிய அதேவேளை வெவ்வேறு பிரதேசங்களிலும் வெவ்வேறு நாடுகளிலும் இடம்பெறக்கூடிய ஒரு குற்றமாகும். சிறுவர் இழிதொழில் வாணிபத்துக்கு எதிராக போரிடும் மற்றும் தடுக்கும் பொறுப்புடைமை ஒரு தனிநபரின் மீது சுமத்தப்பட்டதாகவோ அல்லது ஒரு முகவரின் பொறுப்பில் மட்டும் இருப்பதாகவோ அமையவில்லை. இப்பொறுப்புடைமையானது தனிப்பட்டவர் தொடர்பிலானதாகவும் பங்குதாரர்கள் பலரின் இணைவில் பிரயோகிக்கப்பட வேண்டியதாகவே அமைந்துள்ளது. பின்வரும் வரைபடத்தை நோக்குக:-

பொறுப்புகளாக கூறப்பட்டுள்ள மேலுள்ள விடயங்கள் யாவும் சிறுவர் இழிதொழில் வாணிபம் தொடர்பான அனைத்து நிலைகளிலும் நிறைவேற்றப்பட வேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது. அந்நிலைகள் பின்வருமாறு:-

- ஆள் அல்லது சிறுவர் சேர்க்கும் நிலை /Stage of recruitment
- நகர்த்தும் நிலை /Stage of movement
- சுரண்டும் நிலை /Stage of exploitation




ஆகவே எந்நபர் எந்நிலையில் எப்பொறுப்புடைமையை நிறைவேற்ற வேண்டும் என மிக தெளிவாக அறிந்து வைத்திருத்தல் சிறப்பானதாகும். இப்பாடநெறியின் அடுத்த பகுதிகளில் மேற்கூறிய விடயம் தொடர்பில் கலந்துரையாடலாம்.

## 6.2 சிறுவர் இழிதொழில் வாணிபம் செய்தலை தடுப்பதற்கான பொறுப்புகள்

சிறுவர் இழிதொழில் வாணிபம் செய்தலை தடுப்பதற்கான செயல் தன்மையை தலையீடுகளையும் பொறிமுறைகளையும் அறிமுகப்படுத்தல் சிறுவர் இழிதொழில் வாணிபத்துக்கு எதிரான போராட்டத்தில் இன்றியமையாத பிரதான அம்சமாகும். ஒரு சூழ்நிலை தொடர்பில் எதிர் நடவடிக்கை காட்டுவதை விட உயிர்ப்பான முயற்சியினால் அதனைத் தடுத்தல் பயன் மிகுந்தது எனும் அடிப்படையிலேயே இவ்வணுகுமுறை எழுந்துள்ளது. சிறுவர் இழிதொழில் வாணிபம் இடம்பெற்ற பின்பு அதனை சீர்செய்ய அல்லது சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதை விட சிறுவர் இழிதொழில் வாணிபம் இடம்பெற முன்பே சூழ்நிலைகளை கட்டுப்பாட்டில் வைத்திருத்தல் உயிர்ப்பான முயற்சியாக அமைகின்றது.

| பொறுப்பு கூற வேண்டியர் | பொறுப்புகள் |
|---|---|
| அரசு | *1. சிறுவர் இழிதொழில் வாணிபத்தை குற்றமாக பிரகடனம் செய்தல்*<br>ஒரு இயற்கை நபராலோ அல்லது சட்ட நபராலோ கீழுள்ள அமைப்பு ரீதியான நடவடிக்கைகள் புரியப்பட்டிருப்பின் அது தொடர்பில் சட்டவாக்க அல்லது ஏனைய நடவடிக்கைகள் என்பவற்றினை ஏற்றுக்கொள்வதன் மூலம் குற்றவியல் குற்றம் (ஊசைஅயைெட முககநஉெந) என பிரகடனப்படுத்தல்<br>✓ சிறுவர் இழிதொழில் வாணிபம் செய்ய முயற்சி செய்தல்<br>✓ சிறுவர் இழிதொழில் வாணிபம் செய்வதற்கான ஒத்துழைப்பு அல்லது ஊக்குவிப்புகள் செய்தல்<br>✓ வேறு நபர்களை சிறுவர் இழிதொழில் வாணிபம் செய்விக்க ஒழுங்குப்படுத்தல் அல்லது மற்றும் ஆற்றுப்படுத்தல் அல்லது வழிப்படுத்தல<br>(மனித இழிதொழில் வாணிபமானது உள்நாட்டு சட்டத்தின் கீழ் குற்றமொன்றாக ஏற்கனவே அடையாளப்படுத்தப்பட்டிருப்பின் சிறுவர் இழிதொழில் வாணிபம் தொடர்பான பொறுப்புடைமைகள் மற்றும் தண்டனைகள் என்பவற்றை பொருத்தமான சட்ட ஏற்பாடுகளுடன் அடையாளப்படுத்தி ஏற்றவாறு திருத்தியமைத்தல் வேண்டும்)<br>• இது தொடர்பான குற்றங்களுக்கான குற்றவியல் பொறுப்புடைமைகளை உறுதிப்படுத்தக்கூடிய சட்டங்களை மற்றும் ஏனைய பொறிமுறைகளை ஆக்குதல்<br>• சிறுவர் இழிதொழில் வாணிபம் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய குற்றங்களை பறிமுதல் செய்யக்கூடிய சாதனங்கள் மற்றும் நடவடிக்கைகள் தொடர்பிலான சட்ட மற்றும் அத்தியாவசிய ஏனைய நடவடிக்கைகளை பிரகடனப்படுத்தல் மற்றும் பறிமுதல் செய்யக்கூடிய நடவடிக்கைககள் சிறுவர் இழிதொழில் வாணிபத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் பயனுக்காக கையாளக்கூடியதாயிருத்தல்<br>• மிக தீவிரமாகவோ அல்லது குறைந்தளவிலேயோ சிறுவர் இழிதொழில் வாணிபம் மற்றும் அது தொடர்பான குற்றங்களுக்கு ஒத்துழைக்கும் பிறழ்வாக செயற்படும் பகிரங்க அதிகாரிகள் தொடர்பில் சட்ட மற்றும் நிர்வாக நடவடிக்கைகளை ஏற்று அமைத்தல்<br><br>1995ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க தண்டனைச் சட்டகோவைக்கான திருத்தச்சட்டம் மற்றும் 2016ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க திருத்தச்சட்டம் - தண்டனை சட்டக்கோவை 1995<br>இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கான திணைக்களச்சட்டம், இல 21, 1985<br>குடியகல்வு மற்றும் குடிவரவு (திருத்த) சட்டம் இல 31, 2006<br>பெண்கள் மற்றும் சிறுவர்களை விபச்சாரத்துக்காக வாணிபம் செய்தலை தடுக்கும் மற்றும் போரிடும் பொருத்தனை சட்டம் இல-30, 2005<br><br>*2. தகுதிவாய்ந்த பகிரங்க அதிகாரிகள்*<br>• சிறுவர்கள் தொடர்பில் நீதி, நிர்வாகம், குடியகல்வு, குடிவரவு மற்றும் ஏனைய வேலைகளை வழங்க கடமைப்பட்டுள்ள பகிரங்க அதிகாரிகளிடத்தே (உதாரணம்:- சிறுவர் பாதுகாப்பு அதிகாரிகள், பாடசாலை ஆசிரியர்கள் போன்றோர்) சிறுவர் இழிதொழில் வாணிபத்துக்கு எதிரான போராட்டம் ஊழலற்றத் தன்மை மற்றும் வினைத்திறனான விசாரணைப்புலங்கள் தொடர்பில் தகைமைகளை உருவாக்குதல் மற்றும் விழிப்புணர்வு செயற்படுதல் |

| | |
|---|---|
| | *3. பகிரங்க அதிகாரிகள், சட்ட நிறைவேற்று அதிகாரிகள் மற்றும் பொதுமக்களுக்கிடையிலான ஒத்துழைப்பை அல்லது கூட்டுறவை அதிகரித்தல்*<br>• தகவல் கேந்திரங்கள் மற்றும் சமூகத்துக்கும் பகிரங்க அதிகாரிகளுக்கும் தொடர்பு கொள்ளக்கூடிய அலைவரிசைகள் என்பவற்றை ஸ்தாபித்தல்<br>• சிறுவர் இழிதொழில் வாணிபத்தின் அளவு மற்றும் குணாதிசயங்களை அடையாளப்படுத்தக்கூடிய மற்றும் ஒழுங்குப்படுத்தப்பட்ட குற்ற நடவடிக்கைகளில் ஈடுபடும் குழுக்கள் அல்லது குழுமங்கள் சிறுவர் இழிதொழில் வாணிபத்தில் ஈடுபட வரிசைப்படுத்தப்பட்டுள்ள பொறிமுறைகள் தொடர்பில் தரவுகளை சேகரித்தல் மற்றும் ஆய்வுகள் நடாத்தல் என்பவற்றை சிறுவர் இழிதொழில் வாணிபத்தை தடுக்கும் செயற்பாடுகளை அறிமுகப்படுத்த முன்னதாக அதிகரிக்க வேண்டும்.<br>• சமூகத்தை மையப்படுத்திய கொள்கை நடவடிக்கைகளை விருத்தி செய்தல்<br>*4. வறுமை, கல்வியை பெறக்கூடிய வாய்ப்புகள் போதுமானதாக இன்மை, பொருளளவிலான து'பிரயோகம் முதலிய காரணங்களால் சிறுவர் இழிதொழில் வாணிபத்துக்குள்ளாகி பாதிப்படையும், பாதிப்படைகின்ற பிள்ளைகள் தொடர்பான எல்லா விடயங்கள் தொடர்பிலும் அனைத்து மட்டங்களிலும் அறிந்துக் கொள்ளக்கூடிய உத்திகளையும் நடவடிக்கைகளையும் அறிமுகப்படுத்தல்*<br>*5. பிற நாடுகளில் எல்லை கட்டுப்பாட்டில் ஈடுபடும் முகவர் நிறுவனத்துடனான கூட்டுறவை வலுப்படுத்தல் மற்றும் மற்றும் நாடுகளுக்கிடையிலான தகவல் பரிமாற்ற தொடர்புகளை மேம்படுத்தல் விஷேடமாக தோற்றம் பெற்ற மற்றும் இடப்பெயர்ந்து போய் சேரும் நாடுகள் தொடர்பில் அதிக அக்கறைகளை செலுத்துதல்* |
| **அரச முகவர்கள்** | 1. வினைத்திறனான மற்றும் பொறுப்பு வாய்ந்த முறையிலான சட்ட மற்றும் நிர்வாக பொறிமுறைகளை சிறுவர் இழிதொழில் வாணிபம் தொடர்பில் நடைமுறைப்படுத்தல்<br>2. சிறுவர் இழிதொழில் வாணிபத்துக்காக உருவாக்கப்படும் பொய்யான ஆவணங்களை கண்டறியக்கூடியவாறான தகைமைகளை அது தொடர்பில் செயற்படும் அதிகாரிகளுக்கு ஏற்படுவதை இலகுப்படுத்தல் மற்றும் நேர்முக செவ்வி காணுதல் போன்ற தொழில்நுட்பம் சாராத கண்டறியும் உத்திகளை விருத்தி செய்தல்<br>3. பிறழ்வாக செயற்படும் அதிகாரிகள் அல்லது சிறுவர் இழிதொழில் வாணிபம் தொடர்பில் பிரயோகிக்கப்படும் சட்ட மற்றும் நிறைவேற்று சட்டத்தை விஞ்சி செயற்பட்ட அதிகாரிகள் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கைகளை கொண்டு வந்து நிறைவேற்றல்<br>4. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர்கள் மற்றும் மனித வளமுகவர்கள் யாவற்றையும் பதிவுசெய்து கண்காணித்தல் |

| | |
|---|---|
| **ஊடகம்** | 1. *சிறுவர் இழிதொழில் வாணிபத்தின் தன்மைகள், அளவு, விளைவுகள் மற்றும் இதற்கான தண்டனைகள் தொடர்பிலான விழிப்புணர்வை இலத்திரனியல் ஊடகம் ஊடாக ஒலிபரப்பக்கூடிய போதுமான காலத்தையோ அல்லது எழுத்து மூல ஊடகத்தில் வெளியிட போதுமான இடப்பகுதியையோ ஒதுக்கீடு செய்தல்*<br><br>2. *சிறுவர் இழிதொழில் வாணிபத்தில் தீவிரமாகவோ அல்லது குறைந்தளவிலேயோ பங்கேற்கும் அல்லது இவற்றுக்கு ஒத்துழைப்பு வழங்கும் தனியாட்கள் அல்லது நிறுவனங்கள் தொடர்பில் உத்தியோகபூர்வமாக பெறப்பட்ட தகவல்களை பகிர்வதன் மூலம் அதிகாரமளிக்கப்பட்ட அங்கங்களுக்கு இது குறித்து அறிய உதவிசெய்தல்*<br><br>***நெறிமுறையான அறிக்கைப்படுத்தலுக்கான வழிகாட்டிகள்***<br><br>• பாதிப்படைய செய்ய தீங்கு செய்ய வேண்டாம்-பாதிக்கப்பட்ட சிறுவரின் சூழ்நிலையை குறுகிய காலத்துக்கோ அல்லது நீண்டகாலத்துக்கோ மேலும் மோசமாகக்கூடிய எந்தவொரு நேர்காணலையும் செய்யாது விடல் மற்றும் எந்தவொரு தகவலையும் வெளியிடாது விடல் மற்றும் இதனை பொறுப்பேற்காது விடல்.<br>• அறிக்கைப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கும் போது பாதிக்கப்பட்ட சிறுவர் அல்லது மற்றும் அவருடைய பெற்றோரின், பாதுகாவலரின் இணக்கத்தை பெறுதல். அவர்கள் ஏதேனும் ஒரு கட்டத்தில் அல்லது ஏதேனும் விடயம் தொடர்பில் வழங்கிய இணக்கத்தை மீளப்பெறின் அதனை மதித்தல்<br>• பாதிக்கப்பட்ட சிறுவர்கள் மற்றும் சிறுவர் சாட்சிகள் என்போரின் இரகசியத்தன்மை மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கு மதிப்பளிதல்<br>• தகவல் வழங்கும் மூலமானவரின் அடையாளம் மற்றும் இரகசியத்தன்மை என்பவற்றை அறிக்கைப்படுத்தும் செயற்பாடுகளின் போது பாதுகாத்தல், குறிப்பாக புகைப்படங்கள் கையாளும் போது அது குறித்து மிக கவனம் செலுத்துதல்.<br>• பாதிப்பட்ட சிறுவர்களை மீள அதிர்ச்சிக்குள்ளாக்க வேண்டாம்-பாதிப்படைந்த சிறுவர்கள் உணர்வு ரீதியாக சாட்டப்படக்கூடிய வகையிலான கேள்விகளை கேட்க வேண்டாம். கேள்விகளுக்கான பதில்களை வழங்க அவர்களை கட்டாயப்படுத்த வேண்டாம்.<br>• மிகச்சரியான தகவல்களை மட்டும் வழங்கவும்-பாதிக்கப்பட்ட சிறுவர்களோ அல்லது அவரின் பெற்றோர் அல்லது பாதுகாவலரோ எந்நேரமும் மிகச்சரியான தகவலை மட்டுமே வழங்கக்கூடிய தன்மையை கொண்டவர்களாக இருக்கமாட்டினர். இவர்களுக்கு வெவ்வேறு விடயங்கள் வெவ்வேறு நேரங்களில் நினைவுக்கு வரலாம்.<br>• ஊடகத்தில் கையாளப்படும் மொழி தொடர்பில் கவனியுங்கள்-பாதிக்கப்பட்ட சிறுவர்களை அவமானப்படுத்தும் அதிர்ச்சிக்குள்ளாக்கும் மற்றும் இழிவுப்படுத்தும் சொற்களையோ வார்த்தைகளையோ அல்லது சொற்றொடர்களையோ கையாள வேண்டாம். |

| | |
|---|---|
| **சர்வதேச ஒழுங்கமைப்புகள், சிவில் சமூக ஒழுங்கமைப்புகள் அல்லது சமூகங்கள் மற்றும் தனிநபர்கள்** | **சர்வதேச ஒழுங்கமைப்புகள்**<br><br>சிறுவர் இழிதொழில் வாணிபம் தொடர்பில் அறியப்படுத்துமளவில் அரசாங்கத்தின் மற்றும் அதன் முகவர்களின் தகைமைகளை முன்னேற்றி அமைத்தல்<br><br>**சிவில் சமூக ஒழுங்கமைப்புகள் அல்லது சமூகங்கள் மற்றும் தனியாட்கள்**<br><br>தமது சமூகத்தில் சிறுவர் இழிதொழில் வாணிபம் தொடர்பில் நிலவும் செயற்பாடுகள் இருப்பின் அது தொடர்பான தகவல்களை பொறுப்புகள் வாய்ந்த அதிகார ஸ்தாபனங்களுக்கு வழங்குவதன் ஊடாக ஒத்துழைத்தல்<br><br>கேள்விக்காக பிள்ளைகளை வழங்குதலை தவிர்ப்பதனூடாக அல்லது வாய்ப்புக்காக ஒத்தாசைகளை வழங்குதலுடாக சிறுவர் இழிதொழில் வாணிபத்துக்கு கண்டனம் செய்தல்<br><br>உதாரணங்கள்:<br><br>**பிள்ளை தொடர்பான சிறுவர் இழிதொழில் வாணிபத்துக்கான கேள்வி வளர்ச்சி -** மலிவான வீட்டு வேலையாள், விபச்சாரம், இளம் பிள்ளை மணமகள், சட்டமுரணான கைத்தொழிலுக்கான ஊழியர்கள்<br><br>**பிள்ளைகளாக சிறுவர் இழிதொழில் வாணிபத்துக்கு ஒத்தாசைகள் வழங்குல் வளர்ச்சி-** வாணிபம் செய்பவர்களுக்காக வாகனங்களை வாடகைக்கு பெறுதல், பொய்யான ஆவணங்களை தயார்ப்படுத்த இடங்களை வாடகைக்கு பெறல், அல்லது சிறுவர் இழிதொழில் வாணிபத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்களை தடுத்து வைத்தல் |

## 6.3 சிறுவர் இழிதொழில் வாணிபத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களை பாதுகாத்தல் தொடர்பான பொறுப்புகள்

சிறுவர் இழிதொழில் வாணிபத்தை தடுக்க உயிர்ப்பான முயற்சிகள் அறிமுகப்படுத்தப்படும் அதேசமயம் அதற்கு சமமாக முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ சிறுவர் இழிதொழில் வாணிபத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்களை பாதுகாக்கவும் பொறிமுறைகள் எடுக்கப்படல் முக்கியமானதாகும்.

- **அடையாளப்படுத்தக்கூடிய பாதிக்கப்பட்ட சிறுவர்கள்**
  அவசர மற்றும் நீண்ட கால சேவைகளை வழங்குவதற்காக பாதிக்கப்பட்ட சிறுவர்களை அடையாளப்படுத்தி முடிவு செய்து கொள்ளுதல் முக்கியமானதாகின்றது:- வதிவிடம், உணவு, சுகாதார மற்றும் பற்சுகாதார கவனிப்பு, சட்ட உதவிகள், கல்வியை பெறும் வழியை ஏற்படுத்தல், தொழிற்கல்வி மற்றும் பொருளாதார வாய்ப்புகள்

- **தேவைப்படும் சேவைகளுக்கான குறிப்புகளை வழங்கல்**
  பின்வரும் அட்டவணையானது சிறுவர் இழிதொழில் வாணிபத்தால் பாதிப்படைந்த சிறுவர்களை பாதுகாக்கும் பொறுப்புகள் தொடர்பான விடயங்களை பிரதிபலிக்கின்றது.

<table>
<tr><th>பொறுப்புக்கூற வேண்டியவர்,</th><th>பொறுப்புகள்</th></tr>
<tr><td>அரசு</td><td>1. பாதிப்படைந்த சிறுவர்களை அடையாளப்படுத்தக்கூடிய வினைத்திறனான பொறிமுறைகள் மற்றும் துடிப்பான பரிந்துரை சேவைகள் என்பவற்றை உள்ளடக்கிய பாதிப்படைந்த சிறுவர்களை பாதுகாக்கும் விசாலமானதொரு அல்லது பரந்ததொரு முறையை ஸ்தாபித்தல்<br><br>• சிறுவர் இழிதொழில் வாணிபத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களை அடையாளப்படுத்தவும் நேர்காணல் செய்யவும் ஏற்றவகையான ஒழுங்கான அல்லது நேர்த்தியான பயிற்சியினை சட்ட நிறைவேற்று அதிகாரிகள் மற்றும் சேவை வழங்குனர்களுக்கு வழங்குதல்<br>• சிறுவர் இழிதொழில் வாணிபத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களை பாதுகாக்கும் முறையின் செயற்பாடுகளை முறையாக கொண்டு செல்ல தேவைப்படும் மனித, பொருளாதார மற்றும் ஏனைய வளங்களை ஒதுக்கீடு செய்தல்.<br>• விசாரணை, சட்ட பிரயோகம் அல்லது நிறைவேற்றம் மற்றும் வழக்குத் தொடுத்தல் என்பவற்றை உள்ளடக்கிய நடுநிலையான நீதியை பெறக்கூடிய சமமான வினைத்திறனான அணுகுமுறையை உறுதிப்படுத்தல்.<br><br>பாதிப்படைந்தவர்கள் மற்றும் சாட்சிகள் தொடர்பிலான சட்டம் இல 04, 2015 அல்லது பாதிப்படைந்தவர்களுக்கு பாதுகாப்பு அளித்தல் மற்றும் சாட்சிகளுக்கு உதவுதல் தொடர்பான 2015 ஆண்டின் 04ஆம் இலக்க, கீழமைந்த தேசிய அதிகாரசபையினால் ஸ்தாபிக்கப்பட்டுள்ள பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளை பாதுகாக்கும் தேசிய அதிகாரசபை<br><br>பிள்ளைகள் மற்றும் மகளிர் பிரிவு- இலங்கை பொலிஸ் (திணைக்களம்)</td></tr>
<tr><td>அரச முகவர்கள்</td><td>1. சிறுவர் இழிதொழில் வாணிபத்தினால் பாதிக்கப்பட்ட மற்றும் பாதிப்படையும் அபாயத்துக்குட்பட்ட சிறுவர்களை அடையாளப்படுத்தும் பொறிமுறையொன்றை விருத்தி செய்தல்<br>2. விசாரணை செய்பவர்கள் மற்றும் வழக்கு தொடுனர்களுக்கு முறையே வினைத்திறனான விசாரணை செய்யவும் வழக்குத் தொடுக்கவும் ஊக்குவித்தல்<br>3. இருமுறை பாதிப்படையக்கூடிய சிறுவர்களை பாதுகாக்க மாற்று முறையிலான விசாரணை உபாயங்களை ஏற்றுக்கொள்ளுதல்<br>4. பாதிப்படைந்தோருக்கு உதவுதல் தொடர்பில் வினைத்திறனான அணுகுமுறையை பிரயோகித்து அதனை தொடர்ந்து செயற்படுத்தல்<br>உதாரணம்:-<br>• நிரந்தரமான அல்லது தற்காலிகமான வதிவிட அந்தஸ்துக்களை வழங்குதல்<br>• பாதிப்படைந்த சிறுவர்ளுக்காக முகாம்கள், சுகாதார நிலையங்கள், கல்வி மற்றும் பொழுதுபோக்கு வசதிகளை வழங்கி கொண்டு நடாத்தல்<br>5. சட்ட, நிறைவேற்றுத்துறை, சேவை வழங்குனர் மற்றும் சிவில் சமூகத்தின் ஒத்துழைப்பினை அதிகரித்து கொண்டு துடிப்பான மற்றும் சிறுவருடன் நட்புறவான ஆற்றுப்படுத்துகை அல்லது வழிப்படுத்துகை முறைமை ஒன்றை செயல்படுத்தல்<br><br>உதாரணம்:- அவசர தொலைத்தொடர்புக்கான சேவையை தாபித்து அதனை முகாமைப்படுத்தல் அல்லது நடாத்தி செல்லுதல்<br>6. சட்ட நிறைவேற்றுநர்கள் மற்றும் சேவை வழங்குனர்களின் தொடர்பாடல் திறன்களை விருத்திசெய்தல்<br>7. சிறுவர்களின் அதியுயர் நலன் மற்றும் சிறுவர்களுக்கான உரிமைகளை எந்நேரமும் பாதுகாத்தல், குறிப்பாக, தனிப்பட்ட இரகசியத்தன்மைக்கான உரிமையை எடுத்து நோக்கலாம்.<br><br>• பெண்கள் தொடர்பான தேசிய குழு<br>• தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை</td></tr>
</table>

| | |
|---|---|
| **ஊடகம்** | 1. பாதிக்கப்பட்ட சிறுவர்கள் நீதியை அடையவும், ஊழலான சட்ட நிறைவேற்று அதிகாரிகள் மற்றும் சேவை வழங்குனர்கள் ஒழுங்குப்படுத்தப்படவும் அதிகாரிகளின் கவனத்தை ஈர்த்தல்.<br>2. சிறுவர் இழிதொழில் வாணிபம் மற்றும் சிறுவர்களை சுரண்டும் அனைத்து விதமான நடவடிக்கைகள் தொடர்பிலும் எந்தளவிலுமான பொறுத்துக்கொள்ளாதன்மையை உருவாக்க உதவுதல்.<br>3. தகவல் வெளியிடுவதால் எந்தவொரு பாதிப்படைந்த சிறுவரினதும் அடையாளம் வெளிப்படுத்தப்படமாட்டாது எனும் உத்தரவாதத்தை உறுதிப்படுத்துவதினூடாக பாதிப்படைந்த சிறுவரின் தனியாளுக்கான உரிமை மற்றும் இரகசியத்தன்மையினை மதித்தல். |
| **சிவில் சமூக அமைப்புகள் அல்லது சமூகம் மற்றும் தனிநபர்கள்** | 1. பாதிப்படைந்த சிறுவர்களை அணுகவும், சிறுவர் இழிதொழில் வாணிபம் நடாத்தும் வலையமைப்புகளை கண்டுபிடிக்கவும் மற்றும் மிகச்சரியாகவும் உடனடியாகவும் தகவல்களை பொருத்தமான அதிகார ஸ்தாபனங்களுக்கு அமைத்து கொடுப்பதன் ஊடாக சிறுவர் இழிதொழில் வாணிபம் செய்பவர்களை அடையாளப்படுத்தவும் சட்ட நிறைவேற்றுனர்கள் மற்றும் சேவை வழங்குனர் என்போருக்கு உதவியளித்தல்.<br>2. சமூகத்தில் நிலவும் சிறுவர் இழிதொழில் வாணிபம் மற்றும் சிறுவருக்கு இடம்பெறும் சுரண்டல் தொடர்பிலான விழிப்புணர்வுடன் இருப்பதோடு, ஏதேனும் சந்தேகத்திற்கிடமான தனியார்களையோ நிறுவனங்களையோ அவதானிப்பின் அது தொடர்பில் சட்ட நிறைவேற்றுத்துறைக்கு அறிவிக்க வேண்டும்.<br>3. சட்ட நிறைவேற்றுத்துறை அல்லது சேவை வழங்குனருக்கு பாதிக்கப்பட்ட சிறுவர்களை ஆற்றுப்படுத்தல் அல்லது வழிப்படுத்தலின் மூலம் அவர்களுக்கு உதவுதல். |

## 6.4 சிறுவர் இழிதொழில் வாணிபத்தினால் பாதிப்படைந்த சிறுவர்களுக்கு புனர்வாழ்வளித்தல் மற்றும் மீள் ஒருங்கிணைத்தல் தொடர்பான பொறுப்புகள்

சிறுவர் இழிதொழில் வாணிபத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு புனர்வாழ்வளித்து அவர்களை மீள ஒருங்கிணைக்கும் நடவடிக்கைகளுக்காக பாதுகாக்கும் பொறிமுறையும் சமூக பங்கேற்பும் சமாந்தரமாகப் பங்களிக்க வேண்டும்.

| பொறுப்புக்கூற வேண்டியவர் | பொறுப்புகள் |
|---|---|
| **அரசு மற்றும் அரச முகவர்கள்** | ✓ சிறுவரின் சிறந்த நலன் தொடர்பில் கவனம் செலுத்துகின்ற பாதிப்படைந்த சிறுவர்களுக்கான புனர்வாழ்வு தொடர்பான வசதிகள் மற்றும் பொறிமுறைகள் பொருத்தமான சேவை வழங்குனருக்கு அறிமுகப்படுத்தல்<br>✓ எந்நேரமும் சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் அபாயமற்ற தன்மையை உறுதிசெய்தல்<br>✓ வாழ்திறன்இ கல்வி அல்லது அவர்களின் தேவைக்கேற்ற விதத்தில் பயிற்சி அடிப்படையிலான கல்வி என்பவற்றினை ஸ்தாபித்தல் மற்றும் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் இவ்வசதிகளை பெற்றுக்கொள்ள வழியினை உறுதிசெய்தல்<br>✓ பொருத்தமான முறையிலும் பாதுகாப்பாகவும் இருக்கும் சந்தர்ப்பத்தில் பாதிப்படைந்த சிறுவர்களை அவர்களது சமூகத்திற்கே திருப்பியனுப்பி வைக்கும் உத்தியான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.<br>✓ சிறுவர் இழிதொழில் வாணிபத்தால் பாதிப்படைந்த சிறுவர்களுக்கான மனோதத்துவ ஆலோசனை தொடர்பில் உத்தரவாதம் செய்து கொள்ளல்.<br>✓ அதிர்ச்சியிலிருந்து மீண்டு வரக்கூடிய நம்பிக்கைத் தன்மையை சிறுவர்களிடத்தில் ஏற்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளல் |
| **ஊடகம்** | சிறுவர் இழிதொழில் வாணிபத்தால் பாதிப்படைந்த சிறுவர்கள் தொடர்பில் அரசு கொண்டுள்ள அனைத்துவித நடத்தைகளையும் மாற்றுவதற்கு உதவுதல் |

| | |
|---|---|
| **சிவில் சமூக ஒருங்கமைப்புகள் சமூகம் மற்றும் தனிநபர்கள்** | மீள் ஒருங்கிணைத்தலுக்காக பின்வரும் அம்சங்களுக்காக அரசு மற்றும் அரச முகவர்களுடன் ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டும்.<br>✓ தேவை மதிப்பீடுகளை நடத்துதல்<br>✓ மனோரீதியான சிகிச்சை மற்றும் ஆதரவு வழங்குதல்<br>✓ குடும்பத்தை மீள ஐக்கியப்படுத்துதல்<br>✓ பாதுகாப்பான இல்லம் மற்றும் அடிப்படை தேவைகளை வழங்குதல்<br>✓ தொழிற்கல்வி அல்லது வாழ்திறன் பயிற்சிகளை பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு வழங்குதல்<br>✓ பாதுகாப்பு இல்லத்தில் உள்ள சிறுவர் பாதுகாப்பு பணியாளர்களும், சிறுவர் நட்புறவு தொடர்பாடல் மற்றும் சிகிச்சைகளில் ஈடுபடும் அரச அதிகாரிகளுக்கும் நேர்த்தியான திறன் மேம்பாட்டு பயிற்சிகளை வழங்குதல |

## 6.5 பங்குபற்றுகை மற்றும் உரிமை அடிப்படையிலான அணுகுமுறையினை ஏற்றுக்கொள்ளும் பொறுப்பு

சிறுவர் இழிதொழில் வாணிபம் தொடர்பான தடுத்தல், பாதுகாத்தல், புனர்வாழ்வளித்தல் மற்றும் மீள்ஒழுங்கிணைத்தல் நடவடிக்கைகளின் போது அரசு சிவில் சமூகம் மற்றும் ஊடகம் என்பன பங்குபற்றுகை மற்றும் உரிமை அடிப்படையிலான அணுகுமுறையினை ஏற்று உருவாக்கிக் கொள்ள வேண்டும். சிறுவர் இழிதொழில் வாணிபத்தை தடுக்கவும், சிறுவர் இழிதொழில் வாணிபத்தால் பாதிப்படைந்த சிறுவர்களை பாதுகாக்கவும் புனர்வாழ்வளிக்கவும் முயற்சிகளையும் நடவடிக்கைகளையும் விருத்தி செய்து நிறைவேற்றும் அனைத்து பங்குதாரர்களும் சிறுவர் உரிமைகள், சிறுவரின் சிறந்த நலன் மற்றும் சமத்துவமான நடாத்துகை அல்லது பாரபட்சமின்மை என்பவற்றை மனதில் இருத்தி கவனிக்க வேண்டும்.

> சிறுவர் உரிமைகளை **மதிக்கவும்**
>
> சிறுவர்களின் **சிறந்த நலனுக்கு முன்னுரிமை** வழங்கவும்
>
> ஒவ்வொரு சிறுவரும் **சமத்துவமாக நடத்தப்படுவதையும் பாரபட்சம் காட்டப்படாமையையும்** உறுதிசெய்ய வேண்டும்

இவற்றுக்கு மேலதிகமாக சிறுவர் இழிதொழில் வாணிபத்தால் பாதிக்கப்பட்ட மற்றும் பாதிக்கப்படக்கூடிய அபாயத்துக்கு ஆளாகக்கூடிய சிறுவர்களை பாதுகாப்பதற்கான முயற்சிகளை வடிவமைக்கும் போது கருத்துகளை முன்வைக்கவும் பங்குபற்றவும் சிறுவர்களுக்கு வாய்ப்புகளை வழங்குதல் வேண்டும். திருப்பி அனுப்புதல், புனர்வாழ்வளித்தல் மற்றும் சமூக மீள் ஒருங்கிணைப்புத் திட்டங்கள் குறிப்பான புனர்வாழ்வு மற்றும் சமூக மீள் ஒருங்கிணைப்பு தொடர்பான தேவை மதிப்பீடுகள் என்பவற்றை நடாத்தும் போது சிறுவர் இழிதொழில் வாணிபத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் நோக்குகள் அல்லது கருத்துகள் மற்றும் சிறுவரின் சிறந்த நலன் என்பன கவனிப்பட்டுள்ளதை உறுதி செய்ய வேண்டும்.

## 6.6 சிறுவர் இழிதொழில் வாணிபத்துக்கான எதிர்ப்பு மற்றும் சமூக மீள்ஒருங்கிணைப்பு என்பவற்றை ஊக்குவிக்கும் பொறுப்பு

சிறுவர் இழிதொழில் வாணிபத்தால் பாதிப்படைந்த மற்றும் பாதிப்படையக்கூடிய சிறுவர்களுக்கு நீதியை பெற்றுத்தரக்கூடிய வகையில் அரசு, ஊடகம் மற்றும் சிவில் சமூகத்திற்கு சிறுவர் இழிதொழில் வாணிபத்துக்கு எதிர்ப்பு மற்றும் சமூக மீள்ஒருங்கிணைப்புக்கான ஆதரவு என்பவற்றை ஊக்குவிக்கக்கூடிய பிரச்சாரங்கள் மற்றும் சிறுவர் இழிதொழில் வாணிபத்துக்கு எதிராக போராடும் நிகழ்ச்சிகளை நடாத்தும் பொறுப்பு காணப்படுகின்றது. பாதுகாத்தல், தடுத்தல் மற்றும் மீள்ஒருங்கிணைத்தல் என்பவற்றுக்காக சிறுவர் இழிதொழில் வாணிபத்துக்கான அரசு மற்றும் சமூகத்தின் மறுமொழியை விருத்தி செய்தல் மற்றும் உரிமை அடிப்படையிலான அணுகுமுறையை விருத்தி செய்தல் என்பவற்றை ஊடகம் தனது தகைமையினால் பொறுப்பொன்றாக எடுத்து செய்தல் வேண்டும்.

## 6.7 முடிவுரை

சிறுவர் இழிதொழில் வாணிபத்தால் பாதிக்கப்பட்ட மற்றும் பாதிப்பை எதிர்நோக்கும் சிறுவர்களை பாதுகாத்து அவர்களின் எதிர்காலம் பாதுகாப்பானதாக மற்றும் வெற்றிகரமானது அல்லது வளமானது என்பதை உறுதி செய்து கொள்வதற்காக சமூகத்தில் வாழும் அனைவரும் சிறுவர் இழிதொழில் வாணிபத்தை எதிர்த்து கண்டனம் செய்யும் பொறுப்பை நேரடியாகவோ உட்கிடையாகவோ கொண்டுள்ளனர். எவ்வாறாயினும் சிறுவர் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபடும் சட்ட நிறைவேற்று அதிகாரிகளும் அதற்கு சமமான ஏனைய அதிகாரிகளும் சிறுவர் இழிதொழில் வாணிபத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் புனர்வாழ்வு தொடர்பில் பொறுப்புகள் கொண்டவர்கள் மட்டுமல்ல பொறுப்புடைமைக்கு ஆளாகக்கூடியவர்கள் என நினைவில் இருத்தல் வேண்டும்.



***கற்றற் கருவிகள்***

**பயிற்சிகள்:-**

பங்குபற்றுனர்கள் அல்லது மாணவர்களை ஐந்து குழுக்களாக வேறுபடுத்துதல் ஒவ்வொரு குழுவையும் பின்வரும் தலைப்புகளில் ஒன்றை தெரிவு செய்யுமாறு வழிநடாத்துக.

1. அரசு
2. அரச சார்பற்ற ஒழுங்கமைப்புகள்
3. சமூகம் அல்லது சமுதாயம்
4. ஊடகம்
5. தனியார்

ஒவ்வொரு குழுவையும் பங்குதாரர்களில் ஒருவரை பிரதிநிதித்துவப்படுத்துவதாக கருத்திற்கொண்டு தமக்கான கடப்பாடுகள், மற்றும் கடப்பாடுகளை நிறைவேற்றுவதில் உள்ள சவால்கள் என்பவற்றை அடையாளப்படுத்துவதோடு ஏனைய ஒவ்வொரு பங்குதாரர் மூலம் பெறக்கூடிய ஒத்துழைப்பின் தன்மை பற்றியும் அடையாளப்படுத்தல்

ஒவ்வொரு குழுவையும் தாம் அடையாளப்படுத்திய விடயங்களை பட்டியல்படுத்தி (குறைந்தது ஐந்து குறிப்புகளையும் பட்டியல்படுத்தப்பட வேண்டும்) அவற்றினை பங்குபற்றுனர் அல்லது மாணவர்களுக்கு முன்வைக்க வேண்டும்.

பங்குபற்றுனர்கள் அல்லது மாணவர்களை ஐந்து குழுக்களாக வேறுபடுத்துதல் ஒவ்வொரு குழுவையும் பின்வரும் தலைப்புகளில் ஒன்றை தெரிவு செய்யுமாறு வழிநடாத்துக.

**பயிற்சிகள்:-**

இப்பாடநெறி ஆரம்பிக்க முன்தினத்தில் பங்குபற்றுனர்களை அல்லது மாணவர்களை ஐந்து குழுக்காளாக பிரிக்க வேண்டும். ஒவ்வொரு குழுவும் ஊடகமொன்றில் வெளியான உள்நாட்டு அல்லது வெளிநாட்டு சிறுவர் இழிதொழில் வாணிபம் தொடர்பான நிகழ்வொன்றை தெரிவு செய்து கொள்ள வேண்டும். பாடநெறியின் முடிவில் குழுக்கள் தாம் தெரிவுசெய்த நிகழ்வுக்கமைவான எவ்வொரு பங்குதாரர் சார்பாகவும் தனித்தனியான சம்பவ வரைவுகளை ஆயத்தம் செய்ய வேண்டும். அவை பின்வருவனவற்றை உள்ளடக்கியிருத்தல் அவசியமானது.

1. நிகழ்வை தடுக்க எடுக்கப்பட்டிருந்த நடவடிக்கைகள்
2. நிகழ்வு ஏற்படத் தொடங்கிய பொழுதிலிருந்து பிரச்சினையை தீர்க்கும் வரையான பகுதியில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்
3. இது போன்ற நிகழ்வுகள் எதிர்காலத்தில் இடம்பெறாதிருக்க எடுக்கப்பட்ட மற்றும் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள்

ஒவ்வொரு குழுவும் தமது சம்பவ வரைவுகளை ஏனைய குழுக்களுக்கு முன்வைக்க சந்தர்ப்பம் வழங்கப்படும்.

இப்பாடநெறி ஆரம்பிக்க முன்தினத்தில் பங்குபற்றுனர்களை அல்லது மாணவர்களை ஐந்து குழுக்காளாக பிரிக்க வேண்டும். ஒவ்வொரு குழுவும் ஊடகமொன்றில் வெளியான உள்நாட்டு அல்லது வெளிநாட்டு சிறுவர் இழிதொழில் வாணிபம் தொடர்பான நிகழ்வொன்றை தெரிவு செய்து கொள்ள வேண்டும். பாடநெறியின் முடிவில் குழுக்கள் தாம் தெரிவுசெய்த நிகழ்வுக்கமைவான எவ்வொரு பங்குதாரர் சார்பாகவும் தனித்தனியான வழக்கு வரைவுகளை ஆயத்தம் செய்ய வேண்டும். அவை பின்வருவனவற்றை உள்ளடக்கியிருத்தல் அவசியமானது.

4. நிகழ்வை தடுக்க எடுக்கப்பட்டிருந்த நடவடிக்கைகள்

# ஏழாவது கற்கையலகு

| தகவல்களை கையாளுதல் | | |
|---|---|---|
| | விரிவுரை மணித்தியாலங்கள் | 6 |
| | மதிப்பீட்டு முறைமை | வகுப்பறை கலந்துரையாடல் மற்றும் அவதானிப்பு |
| | கற்றலின் பயன்விளைவுகள் | கற்கையின் முடிவில் பின்வருவன பங்கேற்பாளர்களுக்கு இயலுமானதாயிருக்கும்.<br>✓ குற்றவாளிகளை அல்லது குற்றம் புரிந்தவர்களை அடையாளப்படுத்தல்<br>✓ சிறுவர் இழிதொழில் வாணிப வழக்குகளை அடையாளப்படுத்தல்<br>✓ வினைத்திறனான பதிவு செய்தல் முறைகளை கற்றுக்கொள்ளல்<br>✓ தகவல்களை அறிக்கைப்படுத்தல்<br>✓ தகவல்களை பரப்புதலை அல்லது வெளிப்படுத்தலை கற்றுக்கொள்ளல் |

### ய. தகவல்களை பெறுதல், பதிவு செய்தல், அறிக்கைப்படுத்தல் மற்றும் பரப்புதல் அல்லது வெளியிடல்

**அறிமுகம்**

## 7.1 இழிதொழில் வாணிபம் தொடர்பான இலங்கை சட்டங்கள்

இழிதொழில் வாணிப குற்றத்தை புரிந்த ஒரு நபருக்கெதிராக வழக்கிடக்கூடிய பிரதான குற்றவியல் சட்ட ஏற்பாடு தண்டனைச் சட்டக்கோவையாகும்.

தண்டனைச் சட்டக்கோவை 2006ம் ஆண்டு இல 16 திருத்தச்சட்டத்தால் கொண்டு வரப்பட்ட திருத்தத்தின் அடிப்படையில் பிரிவு 2(2) இலங்கை நீதிமன்றங்களுக்கு சிறுவர்களை உள்ளடக்கிய மனித இழிதொழில் வாணிப குற்றம் தொடர்பில் உள்நாட்டுக்கு அப்பாற்பட்ட வகையில் நியாயாதிக்கத்தை செலுத்தும் தத்துவத்தை நிலைநிறுத்தியுள்ளது.

நாடு கடந்த ஒழுங்குப்படுத்தப்பட்ட குற்றங்கள் தொடர்பான சமவாயத்தில் கைச்சாத்திடப்பட்டதன் அமைவாக, இழிதொழில் வாணிபம் தொடர்பான சட்டவாக்கத்தை கொண்ட மேலதிக கையேட்டை இல 16, 2006ம் ஆண்டின் தண்டனைச்சட்ட(திருத்த) கோவையில் அரசாங்கம் இயற்றியுள்ளது. பிரிவு 360 C (1) (C) சிறுவர் இழிதொழில் வாணிபம் பற்றி கூறுகின்றது.

**தண்டனைச் சட்டக்கோவை** | **விஷேட சட்டவாக்கம்**

பிரிவு 358A- கடன் அடிமைத்தனம், பண்ணை அடிமைத்தனம், பலவந்த மற்றும் கட்டாய பணியாட்களாக்குதல், அடிமையாக்குதல் மற்றும் ஆயுத மோதல் தேவைகளுக்காக சிறுவர் ஆட்சேர்ப்பு.

பிரிவு 360A – பாலியல் அடிமைகளுக்கான வாணிபம் செய்தல் (Procuration)

பிரிவு 360B(1)- சிறுவர்களை பாலியல் தேவைக்காக சுரண்டல்

பிரிவு 360C- இழிதொழில் வாணிபம் செய்தல்

பிரிவு 360D- சட்ட விரோத முறையிலான மகவேற்புகள்

பிரிவு E – சிறுவர் மோதலுக்கான ஆதரவை பெறல்

இல 4, 1841ம் ஆண்டின் நாடோடிகள் அல்லது அலைந்து திரிவோர் கட்டளைச் சட்டத்தின் கீழான குற்றங்கள்

விலைமாதர் விடுதி கட்டளைச சட்டம்

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகச் சட்டம் இல 21,1985


பெண்கள் மற்றும் சிறுவர்களை விபச்சாரத்துக்காக வாணிபம் செய்வதற்கு எதிராக போராடும் மற்றும் தடுக்கும் சமவாயம் (இன்னும் வர்த்தமானியில் அறிவிக்கப்படவில்லை)

**Section 360 C of Penal Code**

| | **செயல்** | **உத்தி** | **நோக்கம்** | |
|---|---|---|---|---|
| 360 ஊ (1) (ய) | பணம் அல்லது ஏனைய பிரதிபயனுக்காக எவரேனும் ஒரு நபர் மற்றொரு நபரை<br>• வாங்குதல்இ<br>• விற்றல்இ<br>• பண்டமாற்றும் செய்தல்<br>• அல்லது வாங்க, விற்க, பண்டமாற்றும் செய்ய தூண்டுதல் அல்லது<br>• வாங்க, விற்க, பண்டமாற்று செய்ய ஊக்குவித்தல் அல்லது உதவுதல் அல்லது | எவ்வுத்தியிலேனும் | எந்நோக்கத்துக்காகவும் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | இவற்றுக்கு தூண்டுதல் | | | |
| **360 (1) (டி)** | • ஒரு நபரை வேலைக்கமர்த்தல்<br>• ஒரு நபரை கொண்டு செல்லல்<br>• ஒரு நபரை இடமாற்றல்<br>• ஒரு நபரை நாடு கடத்தல்<br>• ஒரு நபரை பெற்றுக் கொள்ளல்<br>• இது போன்ற ஏனைய செயல்கள் | பின்வருவனவற்றை கையாளுதல் மூலம்<br>• பலாத்காரம்<br>• மோசடி<br>• வஞ்சனை<br>• தூண்டுதல்<br>• பிறிதொருவரின் பாதிப்பை அல்லது இயலாமையை சுரண்டுதல் | பலவந்தப்படுத்திய அல்லது கட்டாயப்படுத்திய தொழிலாளி,<br>• அடிமைத்தனம்,<br>• சேவகம்<br>• உறுப்புகளை துண்டித்தல்<br>• விபச்சாரம்<br>• பாலியல் சுரண்டல்<br>• எந்த நடவடிக்கையும் எச்சட்டத்தின் அடிப்படையிலும் குற்றமொன்றாகும். | இழிதொழில் வாணிபமாகும். |
| **360 ஊ (1) (ஊ)** | • ஒரு சிறுவனை வேலைக்கமர்த்தல்<br>• ஒரு சிறுவனை கொண்டு செல்லல்<br>• ஒரு சிறுவனைஇடமாற்றல்<br>• ஒரு சிறுவனை நாடு கடத்தல்<br>• ஒரு சிறுவனை பெற்றுக் கொள்ளல்<br>• இது போன்ற ஏனைய செயல்கள் | சிறுவரின் அல்லது பிள்ளையின் இணக்கத்துடனோ அல்லது இணக்கமில்லாமலோ | பலவந்தப்படுத்திய அல்லது கட்டாயப்படுத்திய தொழிலாளி,<br>• அடிமைத்தனம்,<br>• சேவகம்<br>• உறுப்புகளை துண்டித்தல்<br>• விபச்சாரம்<br>• பாலியல் சுரண்டல்<br>• எந்த நடவடிக்கையும் எச்சட்டத்தின் அடிப்படையிலும் குற்றமொன்றாகும். | |

**360C (1) (C)**



**குறிப்பு** - அறிமுகப் பகுதியானது இது தொடர்பான சட்டங்கள் குறித்து **விசேடமாக** பிரிவு 360 C(1) பற்றி நினைவுப்படுத்தியிருக்கும். அத்தியாயம் 4 மற்றும் 5 மூலம் சட்ட ஏற்பாடுகள் தொடர்பான வரைவிலக்கணங்கள் மற்றும் விளக்கங்களை பங்குபற்றுனர்கள் சிறப்பான அறிவுடனும், தெளிவுடனும் அறிந்திருக்க வேண்டும். வரைவிலக்கணங்கள் தொடர்பான போதியளவு விளக்கமில்லாத பட்சத்தில் இழிதொழில் வாணிப வழக்குகளை அடையாளப்படுத்த முடியாது. இது தொடர்பில் போதியளவு அறிவின்மையானது இழிதொழில் வாணிப குற்றத்தை அடையாளப்படுத்துவதில் குழப்பங்களை தோற்றவிக்கும் என்பதை கவனிக்க வேண்டும்.

உதாரணம்:- வீட்டு பணியாளாக வேலைக்கமர்த்தப்பட்டுள்ள சிறுவன் ஒருவரை கண்டுபிடித்துள்ள போது குற்றம் புரிந்தவரால் புரியப்பட்ட குற்றங்கள் எவை? இக்குற்றங்களுடன் தொடர்புடைய சட்டங்கள் யாவை?

- 14 வயதுக்கு மேற்பட்ட சிறுவன் ஒருவனை வேலைக்கமர்த்தல் இலங்கையில் தொழிற்சட்டத்தின் கீழ் குற்றமொன்றாக அமைகின்றதா?
- 14 வயதுக்கு கீழ்பட்ட சிறுவனாக அவனிருப்பின் விளைவுகள் என்ன?
- கல்வி வழங்குதலை வாக்குறுதியாக அளித்து அச்சிறுவனை குறித்த வீட்டுக்கு கூட்டி வந்துள்ளாரா? (ஒருவரின் பாதிப்பை அல்லது இயலாமையை சுரண்டல், சிறுவனின் குடும்ப பின்னணி)

சிறுவன் கொடுமை அல்லது பாலியல் துஷ்பிரயோகத்துக்கு ஆளாகி உள்ளானா? சிறுவரின் பாதிப்பு தொடர்பான விடயங்களை ஆராயும் போது எம்முறையில் தகவலை பதிவு செய்ய

***<u>தகவல்களை பெறுதல், பதிவு செய்தல், அறிக்கைப்படுத்தல் மற்றும் பரப்புதல் அல்லது வெளியிடல் என்பவற்றுக்கான கற்றற் கருவிகள்</u>***



- ஐக்கிய நாடுகள், சர்வதேச சிறுவர்களுக்கான அவசர நிதி அல்லது ஐக்கிய நாடுகள் சிறுவர்கள் நிதி அல்லது ருஜேஊநுகு :- பில்லியன் டொலர் சிறுவர் இழிதொழில் வாணிபம் (டீடைடமைெ னுழடடழச ஊரளைநௌள ழக ஊாடைன வுசயககஉமைெ) (4 நிமிடங்கள்)
- காணொளியை இயக்கவும்- https:www.youtube.com/watch?v=elhX3XgaFsE
- Powerpoint slides- Slides 1 முதல் 3 (6நிமிடங்கள்)
- 2ம் Slide இல் வழங்கப்பட்டுள்ள கதையை பார்க்கவும் (15நிமிடங்கள்)
- 2ம் slide இல் வழங்கப்பட்டுள்ள கதையை பார்ப்பதோடு இழிதொழில் வாணிப வழக்கு மற்றும் அது தொடர்பான சட்டங்களை அடையாளப்படுத்தல் என்பவற்றுக்கான விஷேட குறிப்பை கொண்டுள்ள வழங்கப்பட்டுள்ள உதாரணம் தொடர்பில் பிரதிநிதிகளிடத்தே அவர்களின் தீர்ப்பு தொடர்பில் கேள்விகளை கேட்டல் (10நிமிடங்கள்)
- கலந்துரையாடல் (10 நிமிடங்கள்)

பங்குபற்றுனர்களை சிறிய குழுக்களாக வேறு பிரித்து அவர்களின் தற்போதைய அறிவு மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் மனித இழிதொழில் வாணிபத்தின் மூலங்கள் எவையென அடையாளப்படுத்துமாறு அவர்களை நெறிப்படுத்த வேண்டும். மூலங்கள் யாவும் முன்வைப்பு விளக்கப்படத்தில் அல்லது பிளிப்படத்தில் (கடனிஉாயசவ) எழுதப்பட வேண்டும் என்பதோடு திறந்த குழு கலந்துரையாடலொன்றில் கலந்துரையாடப்படவும் வேண்டும். (10 நிமிடங்கள்)

***<u>(55 நிமிடங்கள்)</u>***

## 7.2 தகவல்களை பெற்றக்கொள்ளல்

### a. ஆய்வு நெறிமுறை

**பின்னணி**

2018 இல் மனித வாணிப அறிக்கை என்பது இலங்கையில் ஆண்கள், பெண்கள் மற்றும் சிறுவர்களை கட்டாய பணியாட்களாவும் விபச்சார வாணிபத்துக்காகவும் ஒரு நாட்டிலிருந்து பிறிதொரு நாட்டிற்கு கூட்டிச்செல்லும் செயலுக்கான முதன்மையான தோற்றுவாய் அல்லது மூலமாக, இலக்காக மற்றும் குறைந்த பரப்பை கொண்ட அரசாகவே இருந்தது. இவ்வறிக்கைககள் இலங்கையிலிருந்து மத்திய கிழக்கு நாடுகள், தென்கிழக்காசியா மற்றும் ஆப்கானிஸ்தான் முதலிய அரசுகளுக்கு கட்டடம், ஆடைத்தொழில் மற்றும் வீட்டு பணியாள் போன்ற துறைகளின் சேவைகளுக்கு புலம்பெயர்ந்த ஆண்கள், பெண்கள் மற்றும் சிறுவர்கள் என்போர் பலாத்கார பணிக்கு மிக மோசமானளவில் ஆளாகினர் என்றும் மேலும் அவர்களுள் சிலர் பலவந்தப்படுத்தி விபச்சாரத்தில் ஈடுபடுத்தப்பட்டனர் எனும் விடயங்களையே வெளிப்படுத்தியிருந்தது. அதேவேளை விபச்சாரத்தால் பாதிக்கப்பட்ட பாலியல் தொழிலுக்காக வாணிபம் செய்யப்பட்டவருள் அனேகமான பெண்களும் பிள்ளைகளும் கரையோர பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என மேலும் வெளிப்படுத்தியது. பெண்கள், பிள்ளைகளை விட ஆண்பிள்ளைகளே வணிக பாலியல் சுரண்டலுக்கு அதிக ஆளாகியிருந்தனர். சமூக ரீதியில் பாதிக்கப்படக்கூடிய நிலையிலிருந்த சிறுவர்கள் நகரங்களில் பிச்சையெடுக்க கட்டாயப்படுத்தப்பட்டனர் அல்லது உடல், உள, பாலியல் துஷ்பிரயோகங்கள், ஊதியத்தை வழங்காது விடல் மற்றும் நடமாடும் சுதந்திரத்தை வரையறுத்தல் எனும் கொடுமைகளுடனான வீட்டுப்பணியாட்களாக தொழிலுக்கமர்த்தப்பட்டிருந்தனர்.

**நோக்கங்கள்**

இழிதொழில் வாணிபத்தை தடுக்கும் குறிக்கோளுக்காக இழிதொழில் வாணிபத்துக்கு சாத்தியப்படக்கூடிய பாதிப்படைந்தவர்களை அடையாளப்படுத்த சட்ட நிறைவேற்று அதிகாரிகள் தமது முயற்சியை பெருமளவில் அதிகரித்தல் வேண்டும். பாதிக்கப்பட்டவரை அடையாளம் காணுதலானது பாதிக்கப்பட்டவரின் சிறந்த நலனை குறிப்பாக கொண்டுள்ள நடபடிமுறைகளாக இருப்பதை உறுதி செய்தல் வேண்டும்.

தகவல்களை பெறுதல், பதிவு செய்தல், அறிக்கைப்படுத்தல் என்பவை தொடர்பில் அதிகாரிகளை பயிற்றுவித்தல் இதனால் அவசியமாகின்றது. இப்பாடநெறியானது சிறுவர் இழிதொழில் வாணிப வழக்குகளுக்கும் சிறுவர் இழிதொழில் வாணிபத்தால் பாதிக்கப்படக்கூடிய அபாயத்துக்கும் முகங்கொடுக்கும் சிறுவர்களை அடையாளப்படுத்த நேரடியாகவே சிறுவர்களை கையாளும் சட்ட நிறைவேற்று அதிகாரிகள் மற்றும் ஏனைய அரச அதிகாரிகளின் தகைமையயை விருத்தி செய்தலும் அத்தோடு தகவல்களை பதிவு செய்தல், அறிக்கைப்படுத்தல் மற்றும் பரப்புதல் அல்லது வெளிப்படுத்தல் என்பவற்றை கொண்டுள்ள உரிய அரச திணைக்களங்களுக்கும் அரச சார்பற்ற ஒழுங்கமைப்புகளுக்கும் முறைமைகளை அபிவிருத்தி செய்தலும் தேவைப்படுகின்றது.

**ஆய்வு முறைமை**

இப்பாடநெறியில் முன்வைக்கப்பட்டுள்ள தகவல்களாவன சட்டவாக்கங்கள், சர்வதேச சமவாயங்கள் மற்றும் சட்ட நிறைவேற்றுனர், வழக்குத் தொடுனர்கள் என்போருடன் நிகழ்த்தப்பட்ட நேர்காணல்கள் என்பவை மூலம் ஒன்று திரட்டப்பட்டவையாகும்.

### b. நேர்முகக்காணல் நுட்பங்கள்

**(அ) நேர்முகக்காணலுக்கான ஆயத்தம்**

- பாதிக்கப்பட்டவரின் வாக்கு மூலம் தேவையற்ற காலத் தாமதமன்றியும் வழக்கத்துக்கு மாறான அவசரமின்றியும் பதிவு செய்யப்பட வேண்டும்.
- காணொளி பதிவு செய்வதற்கு முன்னர் பாதிக்கப்பட்டவருடன் முன்கூட்டிய கலந்துடையாடல் ஒன்றை நிகழ்த்த வேண்டும் என்பதோடு நேர்முகம் காணுபவர் பாதிக்கப்பட்டவரை வழிநடத்தக்கூடாது என அறிவுறுத்தப்பட வேண்டும்.
- பாதிக்கப்பட்ட நபர் தாம் வசதியாக உணரும் ஒரு நபருடன் தொடர்பு கொள்ள அனுமதிக்க வேண்டும்.
- இவர் உரிய சிறுவர் பராமரிப்பாளர், ஆலோசகர் போன்றவராக இருக்கலாம்.
- நேர்முகக்காணலுக்கு முன்னர் பாதிக்கப்பட்ட சிறுவர் மனோதத்துவ நிபுணரிடம் ஆற்றுப்படுத்தப்பட வேண்டும்.
- பாதிக்கப்பட்டவர் ஒருபொழுதும் தனிமைப்படுத்தப்படக்கூடாது. நேர்முகக்காணல் நடைபெறும் போது தலையீடுகள் அல்லது ஏனைய குறுக்கீடுகள் அல்லது தொந்தரவுகள் என்பன தவிர்க்கப்பட வேண்டும்.
- பெண் காவல் அதிகாரியின் உதவியானது சூழ்நிலையில் தேவைப்படுமாயின் ஆணைப்பத்திரம் (Warrant) பெறுவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.
- நேர்முகக்காணலில் கண்டறிய வேண்டிய குறிப்புகளை உள்ளடக்கிய சரிபார்க்கும் பட்டியலொன்றை ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டும்.

அவ்வறிக்கையானது பின்வருவனவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

- நிகழ்வு தொடர்பான பட்டியல் /List of events
- நிகழ்வுகள் /facts
- குற்றமிழைத்தவர்களைக் கண்டறிதல் /Identifications of the culprits

**(ii) நேர்காணலின் போதானவை**

- நேர்காணுபவர் நேர்காணலை நடாத்திக் கொண்டிருக்கையில் அதன் போது எழுகின்ற புதிய விடயங்களை, நிகழ்வுகளை வெளிப்படுத்தக்கூடியவராக இருத்தல் வேண்டும்.
- பாதிக்கப்பட்டவரின் மொழியில் அவரது வாக்கு மூலத்தை நேர்காணுபவர் பதிவு செய்ய வேண்டும்.
- நேர் ாணுபவர் பாதிக்கப்பட்டவரின் உடலியல் நடத்தைகளையும் உணர்வில் ஏற்படும் மாற்றத்தையும் கூர்ந்து அவதானித்து அவற்றை மேற்கோள்காட்டி பதிவு செய்தல் வேண்டும்.
- நேர்காணுபவரால் வினவப்படும் கேள்விகள் எளிமையானவையாகவும், குறுகிய அல்லது குறும் வினாக்களாகவும் அவை பாதிப்படைந்தவர் அதிர்ச்சியிலிருந்து மீண்டு வந்து நிகழ்வுகளை முறையாக, அறிவுடன் மற்றும் முழுமையாக நினைவுப்படுத்தி பதிலுரைப்பதற்கு உதவுவதாக அமைதல் அவசியமானதாகும்.
- கையாளப்படும் மொழி மற்றும் சொற்பதங்கள் பாதிக்கப்பட்டவரால் விளங்கிக் கொள்ளக்கூடியதாக இருத்தல் வேண்டும். நேர்காணல் நடைபெறும் போது நேர்முகங்காணுபவர் கருத்துக்களையோ அல்லது விமர்சனங்களையோ வெளிப்படுத்தலாகாது.
- விசாரணையின் போது ஏற்படக்கூடிய முரண்பாடுகளை குறைத்துக் கொள்வதற்காக பதிவுசெய்து கொள்ளும் வாக்கு மூலங்களின் எண்ணிக்கையை குறைத்துக் கொள்ள வேண்டும்.
- பாதிப்படைந்தவரிடத்தே அச்சத்தை உருவாக்குவதற்காக பாதிப்படைந்தவர்கள் தாம் குற்றமொன்றை புரிந்ததாக ஒரு பிழையான உணர்வை ஏற்படுத்தும் வகையிலான தவறான தகவல்களை வாணிபம் செய்பவர்கள் அவர்களுக்கு வழங்குகின்றனர். இதனால் அவர்கள் குற்றத்தின் பாதிக்கப்பட்டவர் என்பதோடு கைது செய்யப்படக்கூடிய காரணமான எந்தவொரு குற்றத்தையும் அவள் அல்லது அவன் (அவர்) புரியவில்லை என்பதையும் நேர்காணுபவர் அவருக்கு உணர்த்த வேண்டும்.
- வாக்கு மூலமானது விரிவானதாகவும் தர்க்க ரீதியானதாகவும் இழிதொழில் வாணிபம் மற்றும் சுரண்டல் என்பவற்றின் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கியதாக அமைதல் வேண்டும்.
- சுரண்டலின் வகைப்பாடுகள், இழிதொழில் வாணிபம் நடைபெறுகையில் ஈடுபடும் வெவ்வேறு நபர்களின் வகிப்பங்கு மற்றும் அவர்களின் அடையாளம், நிகழ்வின் முழுமையான தொடர்பு வலையமைப்பு.்.சங்கிலி ஆகிய அனைத்து தகவல்களையும் இழிதொழில் வாணிபம் சார்பாக கவனங்கூர்ந்து நேர்காணுபவர் திரட்டிக் கொள்ள வேண்டும். (பாதிக்கப்பட்டவரால் குற்றவாளியை பெயரினால் அடையாளப்படுத்த முடியாமல் இருப்பினும் அவர்களின் உடற்தோற்றத்தின் மற்றும் வேறு சில விடயங்களின் அடிப்படையில் அடையாளப்படுத்தக்கூடியதாக இருக்கும். இப்படியான அடையாளப்படுத்தல் விசாரணையின் போது பயனுள்ளதாக அமையும். அவதானிக்கக்கூடிய உடலியல் அம்சங்களாக அங்கங்கள், பச்சைக்குத்திய, டட்டு (Tatoo) அடையாளங்கள், ஆடைகள், ஆபரணங்கள் போன்றவை)

**(iii) பாதிக்கப்பட்டவருடன் நேர்முகக்காணலில் ஈடுபட்ட பின்னர்**

- பாதிக்கப்பட்டவரின் முயற்சியானது அல்லது உழைப்பானது சட்ட மற்றும் நிறைவேற்று அதிகாரங்களின் ஒத்துழைப்புடன் எப்பொழுதும் மதிக்கப்படும் என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.
- பாதிக்கப்பட்டவர் நிகழ்வுகளை மீள நினைவுப்படுத்துகையில் அவை அவர்களை உடல் மற்றும் உள ரீதியில் தீங்குக்குள்ளாக்கி இரண்டாம் தரமான பாதிப்புக்கு உள்ளாக்கக்கூடிய விளைவுகளை ஏற்படுத்துமாயின் (நேர்காணல்களை மீள ஒழுங்குப்படுத்தல் அல்லது மீள நிகழ்த்தல் என்பவற்றை செய்யும் போது) அவ்வாறு செய்வதை தவிர்க்க வேண்டும்.
- பாதிக்கப்பட்டவரும் பாதிப்பை புரிந்தவரும் ஒரே வாகனத்தில் பயணிக்குமாறு பாதிக்கப்பட்டவரை கட்டாயப்படுத்தலோ அல்லது பாதிக்கப்பட்டவர்களை குற்றவாளிகளை கூட்டிச்செல்லும் வாகனத்தில் குற்றவாளிகளுடன் ஒன்றாக பயணிக்குமாறு கட்டாயப்படுத்தலோ ஆகாது. இவர்கள் சிறுவர்களாக இருப்பதானால் குற்றம் புரிந்தவரை பாதிக்கப்பட்டவர் அடிக்கடி காணுதலானது அவரது உள்ளத்தை பாதிக்கும் என்பதோடு தன்னைத்தானே ஒரு குற்றவாளியாக உணர வைப்பதாகவும் அமையும்.

**(iv) பாதிக்கப்பட்ட சிறுவர்களை நேர்காணும் போதான முக்கிய அம்சங்கள்**

- நேர்முகங்காணலுக்கு முன்பும், பின்பும், நடாத்தப்படும் போதும் பாதிக்கப்பட்டவருக்கு உணவு, நீர், தேநீர், சுகாதார வசதிகளை வழங்குதல் முதலிய வசதிகளை வழங்குதல் தொடர்பில் கவனித்தல் வேண்டும்.

- பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு தமக்கான உணவை தாமே தேர்வு செய்தல் போன்ற விசேட தேவைப்பாடுகளை வழங்குதல் வேண்டும்.
- நேர்காணும் இடம் பாதிக்கப்பட்டவருக்கு வசதியானதாக அமைதல் வேண்டும். சிறுவர்களுக்கான நட்புறவான சூழ்நிலையாக அது பேணப்படல் வேண்டும்.
- சிறுவருடன் வரும் நபரின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட வேண்டும்.

காவல் துறையானது பாதிக்கப்பட்ட சிறுவர்களின் எழுத்து மூல பதிவு செய்தலுக்கு மாறாக காணொளி மூலமாக வாக்குமூலங்களை பதிவு செய்தவற்கு எச்சரிக்கையாக செயற்பட வேண்டும் என்பதோடு விசாரணையாளர்களுக்கு உட்கட்டமைப்புகள் கிடைக்கப் பெறக்கூடியதாக இருக்க வேண்டும். உயரிய தரத்தில் காணொளியை பதிவுசெய்ய எடுக்கப்பட்ட முயற்சிகளாவன பாதிக்கப்பட்டவர் சம்பவத்திலிருந்து விடுபட்டு மறுமலர்ச்சியை பெற எடுக்கப்பட்ட உண்மையான அணுகுமுறையை பிரதிபலிக்கின்றது

**குறிப்பு** :- 4 முதல் 8 வரையான slides களை கவனிக்கவும்

பங்குபற்றனர்களில் இரு ஆய்வாளர்களை அல்லது தானாக முன்வரும் இருவரை அழைத்து அவர்களின் அனுபவத்துக்கமைவாக சிறுவர் ஒருவருடன் நேர்காணல் செய்வதனை செய்து காட்டுமாறு அறிவுறுத்தல்

இதனூடாக 1.நேர்காணலுக்கு முன்னர் 2.நேர்முகக்காணலின் போது 3.நேர்முகக்காணலுக்கு பின்னர் என நேர்முகக்காணல் நிகழ்வொன்றை மூன்றாக வேறுபடுத்துவதன் மூலம் நேர்முகக்காணலொன்றின் நுட்பங்களை குறிப்பாக எடுத்துக்காட்டுதல்.

பாதிக்கப்பட்ட சிறுவர்களை நேர்காணும் போதான சிறப்பம்சங்கள் இறுதியான குறிப்பாக கலந்துரையாடப்பட வேண்டும் என்பதோடு பாதிக்கப்பட்ட சிறுவர்களின் வாக்குமூலத்தை காணொளி மூலம் பதிவு செய்வதன் முக்கியத்துவம் குறிப்பாக எடுத்துக்காட்டப்பட வேண்டும். (பாதிக்கப்பட்ட சிறுவர் என்போர் 18 வயதுக்கு குறைந்த தனிநபர்களாவர். விசாரணையை இறுதியாக முடித்து குற்றவியல் வழக்கொன்றை நிறுவுதல் என்பது குறைந்த பட்சம் 2 முதல் 3 வருடங்கள் செலவிடக்கூடிய காரியமாகும். சில வழக்குகளில் பாதிக்கப்பட்டவரால் சம்பவம் தொடர்பான மீள நினைவுப்படுத்தல் போதியளவு ஞாபகமின்மை காரணமாக முடியாதிருக்கலாம். இவ்வாறான சந்தர்ப்பங்களில் காணொளி பதிவானது வழக்குத் தொடுனருக்கு உதவியாக அமையும்.)



***தகவல்களை பெற்றுக் கொள்ளுதல் தொடர்பான கற்றற் கருவிகள்***

**a. ஆய்வு நெறிமுறைகள்:- (15 நிமிடங்கள்)**
ஏழாம் பாடநெறி தொடர்பான தகவல்களை முன்வைத்தல்

***b. நேர்முகக்காணலுக்கான நுட்பங்கள்***

- பங்குபற்றுனர் இருவரின் உதவியுடன் அவர்களுள் ஒருவர் நேர்முகங்காணுபவராகவும் மற்றையவர் பாதிக்கப்பட்டவராகவும் செயல்பட்டு விளங்கப்படுத்தல்
- தயவுசெய்து 4 முதல் 7 வரையான ளடனைந களை அவதானிக்கவும் **(ஒரு பக்கத்துக்கு தலா 10நிமிடங்கள்)**
- 8வது ளடனைந இற்காக **(15 நிமிடங்கள்)**
- முதலில் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான நேர்முகக்காணலின் போதான சிறப்பம்சங்கள் தொடர்பான பங்குப்பற்றுடனான கலந்துரையாடல்

- அவர்களின் கருத்தை பட்டியல்படுத்த விளக்கப்படத்தை கையாளுதல் **(15நிமிடங்கள்)**
- அதன் பின்னர் பாடநெறி 7.2.1. b (IV) இனை ஆலோசித்தல் **(10நிமிடங்கள்)**

இழிதொழில் வாணிபம் என்றால் என்ன என்பதற்கான காணொளியை காண்பித்தல்
https://www.youtube.com/watch?v=DWoHgIoLCPg

***(65 நிமிடங்கள்)***

**c. நெறிமுறையான பிரச்சினைகள்**

'நெறிமுறைகள்' என்பன தார்மீக கோட்பாடுகளாக வரைவிலக்கணப்படுத்தப்படுவதோடு அவை ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சரியானதையும் பிழையானதையும் வழங்கப்பட்ட சந்தர்ப்பத்துக்கமைய முடிவு செய்ய உறுதியளிக்கின்றது. பாதிப்படைந்த சிறுவர்களுடன் தொடர்பு கொண்ட ஒரு குற்றவியல் விசாரணையின் போது நேர்முகக்காணலின் நுட்பங்களாவன "சிறுவர்களின் சிறந்த நலன்" தொடர்பில் கட்டாயம் கவனம் செலுத்த வேண்டும். சட்ட நிறைவேற்று அதிகாரிகளை தொழில்சார் நெறிமுறைகள் பற்றி கூறும் நிறுவனப்படுத்தப்பட்ட பொறிமுறைகளோ அல்லது கட்டுப்படுத்தும் சட்டவாக்கங்களோ காணப்படவில்லை.

மருத்துவ கட்டளைச்சட்டத்தினால் மருத்துவ பயிற்சியாளர்களுக்கான பொறிமுறை சட்டக்கோவை உருவாக்கப்பட்டுள்ளது.[77]

- முதற்கட்டமாக சட்ட நிறைவேற்று அதிகாரிகள் அடிப்படை சிறுவர் உரிமைகள் தொடர்பில் விழிப்புணர்வு கொண்டவராக இருத்தல் வேண்டும்.
- பாதிக்கப்பட்ட சிறுவரின் வயது, பால்நிலை அடையாளம், இனம், கலாசாரம், பிறப்பிடம் அல்லது பிறந்த தேசம், மதம், பால்சார் நோக்குநிலை, மாற்றுத்திறன், மொழி அல்லது சமூக பொருளாதார அந்தஸ்து என்பன மதிக்கப்பட்டு கவனிக்கப்பட வேண்டும். அச்சிறுவன் அல்லது சிறுமி நன்னடத்தை இல்லத்தில் இருப்பின் மேற்கூறியவை அவசியம் கவனிக்கப்பட வேண்டும்

| பாதிக்கப்பட்ட சிறுமியின் சுயவிபரம் | | |
| --- | --- | --- |
| வயது -15 வருடங்கள். குருநாகலையில் வாழ்கின்றாள்.<br><br>26 வயதான குமார என்பவருடன் காதல் தொடர்பொன்றை கொண்டிருந்தாள்.<br><br>அச்சிறுமி குமாரவுடன் சென்று அவனுடன் பாலியல் இடைத்தொடர்பு உறவில் ஈடுபட்டாள்.<br><br>அப்பொழுது விபச்சார விடுதிகள் தொடர்பில் காவலதிகாரிகள் செய்த திடீர் சோதனையொன்றின் போது கொழும்பில் வைத்து கைது செய்யப்பட்டாள். | நேர்முகங்காணுபவர் சிறுமியின் நடத்தை தொடர்பில் விமர்ச்சித்தலாகாது. → | உதாரணம்:- பாதிக்கப்பட்டவர் தமிழினத்தை சார்ந்தவராக இருப்பின் அவர் நன்னடத்தை இல்லம் முதலியவற்றில் இருப்பினும் கூட அவள் அல்லது அவன் எப்பொழுதும் தமிழ் பேசக்கூடிய அதிகாரிகளை அணுகக்கூடியதாக இருத்தல் வேண்டும். |

- நேர்முகங்காணும் அதிகாரி சிறுவர் தொடர்பில் உணர்ச்சிவயமானவராகவும் அத்தோடு பாதிக்கப்பட்டவருக்கு நடந்தது தொடர்பில் விமர்சனம் அல்லது முடிவு எடுத்தல் என்பவற்றை மேற்கொள்ளாதுமிருத்தல் வேண்டும்.
- சிறுவருடன் தொடர்பு கொள்ளும் எந்நேரமும் தனிப்பட்ட காவல் அதிகாரியை சிரேஷ்ட பதவியிலுள்ள அதிகாரி ஒருவர் மேற்பார்வை செய்ய வேண்டும் (உதவி பொலீஸ் அத்தியேட்சகர் அல்லது அதற்கும்

[77] ,yq;if kUj;Jt fl;lisr;rl;lk; 1927

உயர்நிலை அதிகாரிகள் /Assistant Superintendent of police or above) என்பதோடு தகவலை வெளியிடும் போது சிறுவரின் பாதுகாப்பை உள்ளடக்கிய சிறுவரின் சிறந்த நலன் கோட்பாட்டை மனதிலிருத்தி செயற்படல் வேண்டும்.

- சிறுவரின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக உயரிய தராதரமுடைய ஒரு தொழிலாண்மை (ீசழகநளளழையெடளைஅ) எப்பொழுதும் பேணப்பட வேண்டும்.

- அனைத்து வித தொடர்பாடலின் போதும் கையாளப்படுகின்ற மொழியானது சிறுவரால் நியாயமானளவில் புரிந்துக் கொள்ளக்கூடியது என உறுதிசெய்து சிறுவரிடத்தில் அறியப்படுத்தி இணக்கம் பெற்றிருத்தல் வேண்டும் என்பதோடு, இவ்வாறான நடவடிக்கைகளை சிறுவரின் இணக்கமற்ற நிலையிலேயே நடாத்துவதற்கு கட்டாயப்படுத்தப்பட்ட சட்டங்கள் அல்லது அரசாங்க ஒழுங்கு விதிகள் அல்லது வேறு வகையில் ஏதேனும் நெறிமுறை விதிகளில் அனுமதிக்கப்பட்டிருப்பின் சிறுவரின் இணக்கத்தை பெறுதல் விலக்களிக்கப்படும். (உதாரணம்:- ஊடகவியலாளர் நெறிமுறைக்கோவை.'. Code of Ethics of Journalist)

- விசாரணையின் போது பெறப்பட்ட உணர்ச்சிவயமான தகவல்களின் இரகசியத் தன்மையை பாதுகாத்தல் மற்றும் நியாயமான முன்னெச்சரிக்கைகளை எடுத்தல் என்பன அதிகாரிகளின் அல்லது விசாரணையாளர்களின் முதன்மையான கடப்பாடொன்றாக அமைகின்றது.

- பாதிக்கப்பட்ட சிறுவர் இரக்கத்துடனும் கௌரவத்துடனும் நடாத்தபடுவதற்காக உரித்துடையவராவர்.

**நெறிமுறையான பிரச்சினைகள் தொடர்பான கற்றற் கருவிகள்**



தரப்பட்டுள்ள சூழ்நிலையை உதாரணமாக கையாண்டு அச்சூழ்நிலையில் பாதிக்கப்பட்ட சிறுமியிடம் கேட்கப்பட வேண்டிய வினாக்கள் எவையென்றும் கேட்கப்படக்கூடாத வினாக்கள் எவையென்றும் பட்டியலிடுமாறு பங்குபற்றுனர்களை நெறிப்படுத்தல் (30நிமிடங்கள்)

**<u>பாதிக்கப்பட்ட சிறுமியின் சுயவிபரம்</u>**

வயது -15 வருடங்கள். குருநாகலையில் வாழ்கின்றாள்.

26 வயதான குமார என்பவருடன் காதல் தொடர்பொன்றை கொண்டிருந்தாள்.

அச்சிறுமி குமாரவுடன் சென்று அவனுடன் பாலியல் இடைத்தொடர்பு உறவில் ஈடுபட்டாள்.

அப்பொழுது விபச்சார விடுதிகள் தொடர்பில் காவலதிகாரிகள் செய்த திடீர் சோதனையொன்றின் போது கொழும்பில் வைத்து கைது செய்யப்பட்டாள்.

**பாதிக்கப்பட்ட சிறுமியிடம் கேட்கப்பட வேண்டிய வினாக்கள் எவை? கேட்கப்படக்கூடாத வினாக்கள் எவை? (20நிமிடங்கள்)**

- தரப்பட்ட சூழ்நிலையின் அடிப்படையில் திறந்த கலந்துரையாடலை மேற்கொண்டு மேற்காட்டப்பட்ட சூழ்நிலை தொடர்பில் பங்குப்பற்றுனர்களின் விளக்கங்களை கேட்டல் (10 நிமிடங்கள்)

Slide 10, 11
Build discussion

***<u>(60 நிமிடங்கள்)</u>***

## 7.3. தகவல்களை பதிவு செய்தல்

**a. தரவுகளை கையாளுதல் மற்றும் சேமித்தல்**

மனித இழிதொழில் வாணிபமானது நிலை மாறும் குற்றமாகும். குற்ற முகாமைப்படுத்தலுக்கும் குற்றத்தடுப்பு நுட்பங்களை விருத்தி செய்தலுக்கும் தரவுத்தளம் (னயவயடியளந) ஒன்றினை விருத்தி செய்தல் அவசியமாகும்.

**I. பொலிஸ் குற்றப் பதிவுகள் பிரிவு (CRI)**

2009ம் ஆண்டு அக்டோபரில் பொலிஸ் குற்றப்பதிவுகள் பிரிவானது (ஊசுஐ) சர்வதேச புலப்பெயர்வுக்கான ஒழுங்கமைப்பின் (ஐழுஆ) நுட்பமான ஒத்துழைப்புடன் விரிவான மற்றும் மத்தியப்படுத்தப்பட்ட தரவுகள் தொகுப்பு முறைமை ஒன்றை ஸ்தாபித்தது. இந்த தரவுத்தளமானது மனித இழிதொழில் வாணிபம் தொடர்பான வழக்குகள் தகவல்களை சேகரித்து இழிதொழில் வாணிப வழக்குகளை பின்தொடரவும், அவற்றின் மீது வழக்கு தொடுக்கவும் சட்ட நிறைவேற்று அதிகாரிகளுக்கு உதவி செய்கின்றது.

**II. கைவிரல் அடையாளத்துக்கான பதிவாளர்**

கைவிரல் அடையாளத்துக்கான பதிவாளர் (நிறுவனம்) கைவிரல் அடையாளம் தொடர்பான ஒரு வரையறைக்குட்பட்ட அல்லது எல்லைக்குட்பட்ட தரவுத்தளம் ஒன்றை பேணிவருவதோடு இந்நிறுவனமானது அல்லது பதிவாளர் குற்றத்தடுப்பு கட்டளைச் சட்டத்தினால் ஆளப்படுகின்றது. கட்டளைச் சட்டத்துக்கமைவாக, கட்டளைச் சட்டத்தின் அட்டவணையில் கூறப்பட்டுள்ள குற்றங்களை புரிந்ததாக தண்டனை சுமத்தப்பட வேண்டியதால் சந்தேக நபர்களின் கைவிரல் அடையாளங்களை பதிவு செய்து வைத்துக்கொள்ள கட்டளைச்சட்டம் அனுமதித்துள்ளது. மேற்கூறப்பட்டுள்ள கட்டளைச் சட்டத்துக்கு கொண்டு வரப்பட்ட திருத்தச்சட்ட மூலம் மனித இழிதொழில் வாணிபமும் அட்டவணையில் குற்றமொன்றாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது[78].

போதியளவு தரவுத்தளம் இல்லாமை சட்ட நிறைவேற்றத்துக்கு ஒரு தடையாக அமைகின்றது. மனித இழிதொழில் வாணிபத்தை மட்டும் மையப்படுத்தாமல் அனைத்து வித குற்றங்களுக்குமான தரவுத்தளமொன்றை இலங்கையில் ஸ்தாபிப்பது முக்கியமானாகும். இத்தரவுத்தளத்தில் பொலிஸ் ஏற்கனவே பதிவு செய்துள்ள குற்றங்கள் தொடர்பான புள்ளி விபரங்கள் மற்றும் குற்றத்துக்கான பங்குபற்றுனர்கள் தொடர்பான தகவல்களும் உள்வாங்கப்பட முடியும். தேசிய, பிராந்திய மட்டத்தில் குற்ற வழக்குகளின் அறிக்கைப்படுத்தல் முறைமை விருத்தி செய்ய இம்முறைமை உதவக்கூடியதாக இருக்கும். குற்றம் தொடர்பான புள்ளிவிபர தகவல்கள் ஏற்கனவே பொலிஸினால் தொகுக்கப்பட்டு வாசிப்பதற்காக பெறக்கூடியவாறு இருப்பதனால், விளப்படுத்தல், மேம்படுத்தல் (வளர்ச்சி) மற்றும் பரப்புதல் என்பவற்றுக்கே மேலதிக செலவுகள் உள்ளாகும். குற்றங்கள் தொடர்பான தரவுத்தளமொன்றானது குற்றவியல் புலனாய்வை இலகுப்படுத்தவும், குற்றத்தடுப்பு முறைமைகளை விருத்தி செய்யவும் மற்றும் இழிதொழில் வாணிபத்ததுக்கு எதிராக போராடுவதற்கான அறிவை பகிர்ந்து கொள்ளவும் உதவக்கூடியதாகும்.

---

[78] சட்ட இல 29.:.2017, 18.11.2017 முதல் அமுலாக்கப்பட்டது.

**பொலிஸ் நிலையமானது தரவுகளை வெளியேற்றக்கூடியவாறான தரவு சேகரிக்கும் முறைமையை கொண்டிருப்பதன் நன்மைகளும் தீமைகளும்**

| நன்மைகள் | தீமைகள் |
|---|---|
| குற்றவியல் பின்புலத்தை பரிசோதித்துக் கொள்ள இலகுவாக பெறக்கூடியதாயிருத்தல் | மனித தவறுகளால் தரவு பதிவினால் பாதிக்கப்படல் |
| சிறந்த தரவு தொடர்பாடலுக்கான சாத்தியம் | பிழையான விடயங்களை சேமிக்கக்கூடிய சாத்தியப்பாடுகள் |
| குற்றத்தடுப்பு முறைமைகளை நிறைவேற்றல் | அதிகாரமளிக்கப்படாத மாற்றங்கள் அல்லது மேம்படுத்தல்கள் |
| சந்தேக நபராக இருக்கக்கூடியவர்களை அல்லது சாத்தியமான சந்தேக நபர்களை அடையாளப்படுத்த உதவுதல் | தரவுகள் தவறாக திருடப்படல் அல்லது வேறு தகவல்களை தகவல் அமைப்புகள் மோசடியான முறையில் பெறல் (Hack) |
| ஏனைய நாடுகளுடன் தகவல்களை பகிர்ந்து கொள்ள இலகுவாக இருத்தல் | இரகசியத்தன்மை மற்றும் தனிப்பட்ட தன்மை தொடர்பான பிரச்சினைகள் |



***<u>தகவல்களை பதிவு செய்தல் தொடர்பான கற்றற் கருவிகள்</u>***

**a. தரவுகளை கையாளுதல் மற்றும் சேகரித்தல் (20நிமிடங்கள்)**

- கலந்துரையாடலானது குழு கலந்துரையாடகும்.

Slide 12

1. குழுசெயற்பாடு (டீசயளைளெவழசஅபைெ) - தரவு சேகரித்தலொன்றை விருத்தி செய்வதற்கான யோசனைகளை சேகரித்து விளக்கப்படத்தில் காட்டல் (15 நிமிடங்கள்)
2. பங்குபற்றுனர்களுடன் நன்மைகள், தீமைகளை கலந்துரைடயாடல் (10 நிமிடங்கள்)
3. தற்போதுள்ள அல்லது வெளியேற்றக்கூடிய தகவல் சேகரிப்பு முறைமை பற்றிய கருத்துக்களை பரிமாறும் அமர்வு (15 நிமிடங்கள்)

Slide 13

***<u>(45 நிமிடங்கள்)</u>***

## 7.4 தகவல்களை அறிக்கைப்படுத்தல் மற்றும் பரப்புதல் அல்லது வெளியிடல்

**a. தகவல்களை சரிப்படுத்தல், அறிக்கைப்படுத்தல் மற்றும் பரப்புதல் ∴ வெளியிடல்**

**(i) தகவல்களை சரிப்படுத்தல்**

தகவல்களை வெளியிட அல்லது பரப்புவதற்கு முன்னராக ஏனைய நிறுவனங்களுடன் தொடர்பு கொள்ள எத்தனிக்கும் நிகழ்வுகளையும் தரவுகளையும் சரிப்படுத்திக் கொள்ளல் முக்கியமானதாகும்.

- தரவுகளை சரிப்படுத்திக் கொள்வதற்கு பயன்பாட்டுக்கான சோதனையை சோதித்தல் முதலிய முறையான சோதனைகளை தரவுகளின் மீது செய்து பார்க்க வேண்டும்.
- ஒழுங்கற்ற தரவுகளை சீர்ப்படுத்திக் கொள்வதற்கு, தகவலை ஸ்தாபிக்க மற்றும் உறுதி செய்துக் கொள்ளக்கூடிய முறையான மேலதிக விசாரணை முறைமைகளை கையாள முடியும்.

- பிறரிடம் பெறப்பட்ட எந்தவொரு தரவையும் சரிபார்த்து கொள்வதற்கு, நீங்கள் கோரிய தகவல்கள் பற்றிய தெளிவை முன்கூட்டியே கொண்டிருப்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்

**தரவுகளை சரிபடுத்தலுக்கான குறிப்புகள்**

1. தகவல்களின் துல்லியம் மற்றும் சரியான தன்மை அல்லது வலிதான தன்மை என்பவற்றை உறுதி செய்ய அதிகாரிகளின் அனுபவம், அறிவு மற்றும் திறன் என்பவற்றை உபயோகித்துக் கொள்ளுங்கள். மேலும் சுயாதீன மூலங்களிலிருந்து அல்லது இணைவான சாட்சிகளை ஒன்று திரட்டி கொள்ளுங்கள்

| |
|---|
| சிறுவருடன் இணைந்துள்ள அல்லது சேர்ந்து வந்துள்ள நபரின் வாக்கு மூலங்கள் (இணையான சாட்சி)<br><br>விசாரணை குறிப்புகள் தொடர்பான துல்லியமான அறிக்கைப்படுத்தல்கள் மற்றும் குற்ற நுட்பம் தொடர்பான அவதானிப்பு |

2. தகவல்களுக்கான தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதையும், தகவல் இயைபானது என்பதையும் உறுதி செய்து கொள்ளுங்கள்.

| |
|---|
| இழிதொழில் வாணிபம் புரிந்தவரின் அடையாளம் தொடர்பான தகவல்கள் (உதாரணம்:- பச்சைக்குத்தல் அல்லது டட்டுக்கள், ஆடைகள் போன்றன) |

3. தகவல்களை ஒழுங்குப்படுத்திக் கொள்ளுங்கள்

| |
|---|
| ஒரு கோவையை ஒரு வழக்குக்காக கையாளுங்கள். தகவல் புத்தகத்தின் இலக்கங்களை உங்களின் இலகுவான குறிப்புக்காக பட்டியலிட்டுக் கொள்ளுங்கள் |

**III. பரப்புதல் ∴ வெளியிடல்**

- தகவல்களாவன மேலதிகாரி ஒருவரால் அதிகாரமளிக்கப்பட்டு உறுதி செய்யப்பட்டுள்ளதை (தகவல்கள் பிரயோகிக்கப்பட முன்னர்) உறுதி செய்து கொள்ளுங்கள். குறிப்பாக உலகளாவிய ரீதியில் தகவல்களை பரப்ப உத்தேசித்து இருப்பின், தகவல்களை சரிபார்த்துக் கொள்ளுங்கள்.
- எப்படியாயிருப்பினும், தகவல்களை பரப்புவதற்கான விருத்தி செய்கின்ற நடபடிமுறை எதுவும் இல்லை.

**b. எவ்வாறு பொதுமக்கள் இயைபான அதிகாரங்களுக்கு தகவல்களை வழங்க முடியும்?**

குற்றத்தை அறிவிக்கவோ அல்லது உதவியொன்றை நாடவோ இலங்கையிலுள்ள எந்தவொரு நபரும் 119 எனும் அவசர இலக்கத்தினூடாக பொலிஸ் அவசர சேவை கட்டுப்பாட்டுடன் தொடர்பு கொள்ளலாம். 2004 இற்கு முதல் ஒழுங்குப்படுத்தப்பட்ட அவசர பொலிஸ் எதுவும் காணப்படவில்லை. 2004 இற்கு முன்னர் பிரசைகள் மட்டும் (வெளிநாட்டோர் உட்பட) சேவையினை 011-2433333 எனும் தொலைபேசி வாயிலாக அவசர சேவையை பெற்றுக் கொண்டனர்.

இந்த அவசர அழைப்பு நிலையமானது பொலிஸ் செயலாளர் காரியாலய கட்டடத்தில் அமையப் பெற்றிருந்தது. பொலிஸ் அவசர சேவை 119 ஆனது 2004 நொவம்பர் மாதம் 8ம் திகதி மிரிஹான ஆணைகள் மற்றும் தகவல்களுக்கான காவல்துறை மேலதிகாரி பிரிவில் ஸ்தாபிக்கப்பட்டது. அதுமுதல், ஏதேனும் அவசர நேரத்தில் சம்பவம் இடம்பெற்ற இடத்திற்கு உடனடியாக பொலிஸை வரவைக்க அனைவராலும் கையாளக்கூடிய சேவையாக அனுமதிக்கப்படுகின்றது.

இழிதொழில் வாணிபத்தினால் பாதிப்படையக்கூடிய பாரிய ஆபத்தை எதிர்நோக்கும் சிறுவர்களை அடையாளம் காணுவதற்கான ஒரு முறை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை (NCPA) ஊடாக நடைபெறுகின்றது. இம்முறைமை கிராமிய மட்டத்திலான "விழிப்பான குழுக்கள்" (Alert Groups) மற்றும் "பாடசாலை பிள்ளைகளின் பாதுகாப்பு செயற்குழு" (School Child Protection Commitees) என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. 1929 எனும் அவசர இலக்கத்தினூடாக பொதுமக்கள் தொடர்பு கொண்டு சிறுவர் தொடர்பான துஷ்பிரயோகத்துக்கு எதிரான உதவியை NCPA இற்கு அறிக்கைப்படுத்தலாம்.

1938 இலக்கத்திக்கு அழைப்பு ஏற்படுத்தி பெண்கள் மற்றும் சிறுவர் விவகாரம் தொடர்பான அமைச்சின் உதவியை பெறவும் பொதுமக்களால் முடியும்.

0112369800 எனும் உடனடியான சேவை இலக்கத்தினூடாக தொழிலாளர் திணைக்களத்திற்கு செய்யப்படும் பொதுமக்களின் முறைப்பாடுகள் பிள்ளைகள் மற்றும் பெண்கள் பிரிவிற்கு கடத்தப்படும் அல்லது அனுப்பப்படும்.

## c. அரசாங்க திணைக்களங்கள், அரசாங்கமற்ற ஒழுங்கமைப்புகள், ஊடகங்கள் மற்றும் மக்கள்- தனியுரிமை அல்லது அந்தரங்கம் மற்றும் பாதுகாப்பு பிரச்சினைகள் என்பவற்றுக்காக தகவல்களை வெளியிடலில் கவனம் செலுத்தல்

மனித இழிதொழில் வாணிபத்துக்கான போராட்டம் மற்றும் சிக்கசலான பிரச்சினைகள் என்பவற்றுக்கான அனைத்து அதிகாரங்களையும் பங்கேற்க செய்யும் பல்துறை பங்குபற்றுகையின் முக்கியத்துவத்தை புரிந்து கொள்ள சர்வதேச புலம்பெயர்வு ஒழுங்கமைப்பு மற்றும் சர்வதேச தொழில் ஒழுங்கமைப்பு என்பவற்றின் நுட்பமான ஒத்துழைப்புடன் பங்குதாரர்களின் ஒத்துழைப்பை அதிகரிக்கக்கூடிய நீதியமைச்சின் தலைமையிலான ஒரு முன்னேற்ற நடவடிக்கையினை GOSL உருவாக்கியுள்ளது. இதனால், 2010 ஒக்டோபரில் ஒரு தேசிய மனித வாணிப இலக்கு அல்லது பணிபடை தொடங்கப்பட்டது.

**இலங்கையில் மனித இழிதொழில் வாணிபத்தை அடையாளப்படுத்த அனைத்து ஒத்துழைப்புடன் கூடிய முயற்சிகளையும் எடுக்கும் தலைமையான, அரச முகவர் நீதியமைச்சாகும். இழிதொழில் வாணிபத்தை அடையாளப்படுத்த அனைத்து முக்கிய பங்குதாரர்களினதும் ஒத்துழைப்பினையும் ஒன்றிணைவையும் கொண்ட வலிமைப்படுத்தலை ஏற்படுத்த 2010 இல் மனித இழிதொழில் வாணிப எதிர்ப்பு பணிப்படையினை நீதியமைச்சு ஸ்தாபித்தது. பணிப்படையின் அங்கத்தவர்கள் மாதம் ஒருமுறை எனும் விதத்தில் ஒன்றுக்கூடி பங்கேற்கும் பங்குதாரர்களுக்கான சிறந்த வழக்கங்கள் பற்றி கலந்துரையாடுவதோடு தகவல்களையும் பரிமாறிக் கொள்வர். தொலைபேசி இல:- 94(0)115325300**

முக்கிய அரச பங்குதாரர்களின் ஒத்துழைப்பை வலிமைப்படுத்தல் மற்றும் வழக்கிடுதலின் போதான வளர்ச்சியான வெற்றிகள் மற்றும் பாதிக்கப்பட்டவருக்கான பாதுகாப்பை விருத்தி செய்தல் எனும் விடயங்களுக்கான நோக்கத்திலேயே இப்பணிப்படை ஆரம்பிக்கப்பட்டது.

பணிப்படையின் அங்கத்தவர்களாக பின்வருவோர் இருப்பர்.

- வெளிவிவகார அமைச்சு
- பாதுகாப்பு அமைச்சு
- பெண்கள் விவகார மற்றும் பிள்ளைகள் விருத்திக்கான அமைச்சு
- சட்டமா அதிபர் திணைக்களம்
- தொழில் அமைச்சு
- சமூக சேவைகள் மற்றும் சமூக நலன் அமைச்சு

- குற்ற புலன்விசாரணை திணைக்களம்
- பொலிஸ் குற்றப்பிரிவு
- குடியகல்வு மற்றும் குடிவரவு திணைக்களம்
- பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான பொலிஸ் பிரிவு
- வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் பணியகம், இலங்கை
- தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை
- சிறுவர் பாதுகாப்பு மற்றும் நன்னடத்தை திணைக்களம்
- தலைமை சட்ட மருத்துவ அதிகாரி

நீதியமைச்சு, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை, தொழில் உறவுகளுக்கான அமைச்சு, மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு, வேலையாள் மற்றும் வேலைதருனர் ஒழுங்கமைப்பு மற்றும் சிவில் சமூக ஒழுங்கமைப்பு ஆகிய அரசாங்க முகவர்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய ''சிறுவர் தொழிலை தடுக்கும் மற்றும் இல்லாதொழிக்கும் தேசிய உந்தச்செய்யும் செயற்குழு''( A National Steering Committee on Prevention and Elimination of Child Labour) எனும் துறையிடப்பட்ட ஆலோசனை செயற்குழுவொன்றை தொழில்சார் திணைக்களம் கட்டியெழுப்பியது. மோசமான நிலையிலுள்ள சிறுவர் தொழிலாளரை காண்பிக்கும் இலங்கையின் சாலை வரைபடத்தை 2016 இச்செயற்குழு உருவாக்கியது. சாலை வரைபடமானது மோதலினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுள்ள வலயங்கள், தோட்டப்புறங்களில் உள்ள சிறுவர்கள் மற்றும் இழிதொழில் வாணிபம், தொழிலாளராக சுரண்டல் மற்றும் விபச்சாரம் முதலியவற்றுக்கு அதிகமாக பாதிப்புள்ளாகும் சிறுவர்களை கொண்டுள்ள ஏழ்மையான பின்தங்கிய பிரதேசங்கள் என்பவற்றை அடையாளப்படுத்தியது அல்லது சுட்டிக்காட்டியது. அங்கத்தவர்களின் ஒத்துழைப்பை விருத்தி செய்தல், சிறுவர் தொழில் தொடர்பான ஒருங்கிணைப்பை இலகுப்படுத்தல், அங்கத்துவ அமைப்பின் கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சிகள் என்பவற்றை விருத்தி செய்வதற்கு 2010 இல் தேசிய உந்துதல் வழங்கும் செயற்குழு உருவாக்கப்பட்டது.

- 2010 மார்ச்சில் சர்வதேச ஒழுங்கமைப்பு (ILO) உடன் இணைந்து நீதியமைச்சு மனித இழிதொழில் வாணிபம் தொடர்பான தற்போதைய சட்டம் தொடர்பான தேசிய பங்குதாரர் ஆலோசனை ஒன்றினை நடாத்தியது. இழிதொழில் வாணிபம் தொடர்பான இலங்கை சட்டத்தை காணுதல், அத்தோடு அது தொடர்பான சர்வதேச தராதரங்களை காணுதல் என்பனவே அவ்வாலோசனை கூட்டத்தின் நோக்கமாக அமைந்தது. சட்டமா அதிபர் திணைக்களம், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் பிரிவு, வெளிவிவகார அமைச்சுஇ குடியகல்வு மற்றும் குடிவரவு திணைக்களம்இ தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, தொழில்துறை அமைச்சு உள்ளடங்காலான அனைத்து பங்குதாரர்களும் இதில் பங்குபற்றினர். ஆலோசனை கூட்டத்தில் பின்பற்றல் அடிப்படையில் நீதியமைச்சு மற்றும் சர்வதேச தொழில் ஒழுங்கமைப்பு என்பவற்றின் கூட்டுத்தலைமைத்துவத்துடன் மனித இழிதொழில் வாணிபம் தொடர்பான ILO இன் செயற்திட்டத்துக்கான கொள்கை இலகுபடுத்தலுக்கும் அதனை கண்காணிக்க நிறைவேற்றுவற்கும் உந்துபடுத்தும் செயற்குழு ஒன்றினை மனித இழிதொழில் வாணிபம் தொடர்பில் உருவாக்கியது.
- புலம்பெயர எதிர்ப்பார்த்துக் கொண்டிருப்பவர் மற்றும் புலப்பெயர்ந்து மீள திரும்பி வந்தவர்களிடத்தே ஆலோசனைகளை வழங்க இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு திணைக்களத்தினால் அவர்களின் பணியாட்கள் ஆலோசனை வழங்குதல் தொடர்பில் நன்கு பயிற்றுவிக்கப்பட்டும் இலங்கையில் 25 வளகேந்திரங்கள் இயக்கப்பட்டும் வருகின்றன. சுமித்ரயோ, சஹனமியச மற்றும் woman in need-WIN மற்றும் சஹனய முதலிய மனோதத்துவ ஆலோசனைகளை வழங்கும் ஒழுங்கமைப்புகளுக்கு தேவையுள்ள நபர்களை ஆற்றுப்படுத்தும் ஒரு குறிப்பு அல்லது ஆற்றுப்படுத்தும் முறையையும் முகாமை அல்லது பராமரிப்பு செய்து வருகின்றது. முகாம் வசதிகள் விசாரணை அல்லது விளக்கத்திற்கு முன்பின் மற்றும் விளக்கங்களுக்கு உட்பட்ட காலங்களில் வழங்கப்படுகின்றது.
- இலங்கை சட்ட உதவி ஆணைக்குழுவின் (டுயுஊ) மூலம் இலவச சட்ட உதவிகள் மற்றும் ஆலோசனைகளை பெற முடியும். சட்ட உதவி ஆணைக்குழுவானது இல 27, 1978ம் ஆண்டு சட்டத்தினால் சமூகத்தில் ஏனையவர்களை போன்ற உரிமைகளை பெறாத பிரிவினர்க்கு இலவசமாக

சட்ட உதவிகளை வழங்கப்பட்ட சுயாதீன நியதிச்சட்ட ஒழுங்கமைப்பாக பிரகடனப்படுத்தப்பட்டது. சட்ட ஆலோசனைகளை வழங்குதல், வழக்கு தொடருதல், தேவைப்படும் வழக்குகளின் மூலம் தம்மை பிரதிநிதித்துவப்படுத்த உதவி புரிதல் உள்ளடக்கிய போதுமான சட்ட உதவிக்கான திட்டமொன்றை அவற்றை வழங்க வேண்டியவர்களுக்காக உருவாக்கி நிறைவேற்றல் டுயுஊ இன் நோக்கமாகும். டுயுஊ இன் கிளைகள் அனேகமாக அனைத்து மேல்நீதிமன்றத்தின் ஊடாகவும் இலங்கை முழுவதும் இயங்குகின்றன. சட்ட ஒத்துழைப்பு தேவைப்படுபவர் அதனை இலவசமாக பெற்றுக்கொள்ள அணுகும் குழுமம் ஒன்று சட்ட உதவிகள் ஆணைக்குழுவில் செயலாற்றுகின்றது.

- நாடெங்கிலும் நிறுவப்பட்டுள்ள அரச மருத்துவமனைகளில் மருத்துவ வசதிகளையும் மனோவியல் ஆலோசனை சேவைகளையும் பெற்றுக் கொள்ளலாம்.
- இழிதொழில் வாணிப எதிர்ப்பு செயற்பாடுகளில் மேற்கூறியவாறு பல்வேறு அரச மற்றும் அரச சாராத ஒழுங்கமைப்புகள் செயற்படுகின்றன. பாதிக்கப்பட்டவரின் நன்மைக்காக சட்ட நிறைவேற்றும் அதிகாரங்கள் தகவல்களை ஒழுங்கமைப்புக்குள் பகிர்ந்துகொள்வது கட்டாயமானதாகும். எவ்வாறாயினும், அனைத்து தரப்புகளும் பாதிக்கப்பட்டவரின் கௌரவத்தை எந்தவொரு சமயத்திலும் நிலைநிறுத்தல் வேண்டும்.

இலங்கையில் சிறுவர்களுக்காக உதவி வழங்க வினைத்திறனான செயலாற்றும் அரச சார்பற்ற ஒழுங்கமைப்புகளின் பட்டியல்

- Save the Children (சிறுவர்களை பாதுகாப்போம்)
- LEADS (தடங்கள்)
- CARE (பராமரிப்பு)
- World Vision International (உலக தரிசனம் – சர்வதேசம்)
- The Care of Children (பிள்ளையொன்றின் பாதுகாப்பு)

## 7.5 பொறுப்பு வாய்ந்த அறிக்கைப்படுத்தல் மற்றும் இரகசியத்தன்மையை பேணுதல் என்பவற்றில் ஊடகத்தின் வகிப்பங்கு

ஊடகவியலாளர்களுக்கான தொழில்சார் விதிமுறைகள் கோவையின் அடிப்படையில், அவர்களின் பாலியல் குற்றங்களால் பாதிக்கப்பட்டோர் தொடர்பிலான தகவல்களை வெளியிடல் தடைசெய்யப்பட்டுள்ளது. ஆயினும் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் தொடர்பான பிரத்தியேகமான எந்தவொரு ஏற்பாடும் காணப்படவில்லை.

**அரச அறிவிப்புகள்:- உருவாக்கப்பட்ட சட்டங்கள் அல்லது பாராளுமன்றத்தால் ஏற்று அங்கீகரிக்கப்பட்ட இல 5,1973ம் ஆண்டின் இலங்கை அச்சுப்பதிப்பு சபை சட்டத்தின் பிரிவு 30(i)(a) இனால் விதந்துரைக்கப்பட்டுள்ள ஊடகவியலாளர்களுக்கான விதிமுறை கோவை அல்லது கூறப்பட்ட சட்டத்தில் பிரிவு 30 (3) கீழ்,**

**6(1) குற்றங்களை அல்லது குற்ற வழக்குகளை அறிக்கைப்படுத்தும், அதனை அச்சுப்பதிக்கும் அல்லது பிரசுரிக்கும் ஒரு ஊடகவியலாளர் பின்வருவனவற்றை கூறலாகாது.:-**

- **பாலியல் குற்றங்களில் பாதிக்கப்பட்டவர்களின் பெயரை வெளியிடல்**

இலங்கையின் தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவு 286 ஆனது சிறுவர் தொடர்பான பிரசுரங்கள் பற்றி கூறிய போதும் பிரசுரங்களின் இரகசியத்தன்மை பற்றி போதுமானளவில் இவ்வேற்பாடு கூறவில்லை



***தகவல்களை அறிக்கைப்படுத்தல் மற்றும் பரப்புதல் தொடர்பான கற்றற் கருவிகள்***

**a. தகவல்களை சரிப்படுத்தல், அறிக்கைப்படுத்தல் மற்றும் பரப்புதல்**

- தகவல்களை சரிப்படுத்தும் அதிகாரங்களால் விருத்தி செய்யப்பட்ட எந்தவொரு நடபடிமுறையும் தற்சமயம் காணப்படவில்லை. இதனால் கலந்துரையாடலில் தகவல்களை சரிப்படுத்தலின் முக்கியத்துவம் கலந்துரையாடப்பட்டு பங்குபற்றுனர்களின் இது தொடர்பான அறிவு கைாளப்படவும் வேண்டும்.

Slide 14

**(15 நிமிடங்கள்)**

உதாரணம்: ஒரு குற்றவியல் விசாரணையின் போது சாட்சிகளின் வாக்குமூலங்களை பதிவு செய்யும் அறிவினை காவல் அதிகாரிகள் கொண்டிருப்பர். ஆயின் தகவல்களை பதிவு செய்யும் தேவைக்காக வாக்குமூலங்களை பதிவு செய்து கொள்ளுதல் தகவல்களை சரிப்படுத்த உதவப்போவதில்லை. பாதிக்கப்பட்டவரின் பிரதான வாக்குமூலம் தவிர்ந்த ஏனை சாட்சிகளின் ஏனைய வாக்குமூலமானது பாதிக்கப்பட்டவரின் விபரத்தை ஒன்று சேர்த்து மதிப்பை வழங்க வேண்டும்.

- அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அரச சார்பான மற்றும் அரச சார்பற்ற ஒழுங்கமைப்புகளாவன அவற்றின் பணிகள் மற்றும் தலையீடுகள் என்பவற்றை சுருக்கமாக பவர்பொயின்ட் ஸ்லைடுகளில் அறிமுகப்படுத்தும். **(15 நிமிடங்கள்)**

***(30 நிமிடங்கள்)***

**b. எவ்வாறு பொருத்தமான அதிகாரங்களுக்க பொதுமக்கள் தகவல்களை வழங்கலாம்**

- திறந்த கலந்துரையாடலில் தொகுக்கப்பட்ட யோசனைகள் பவர்பொயின்ட் முன்வைப்பினால் ஆதாரப்படுத்தப்பட வேண்டும். **(20 நிமிடங்கள்)**

Slide 15

**c. அரசாங்க திணைக்களங்கள், அரசற்ற ஒழுங்கமைப்புகள், ஊடகங்கள் என்பவற்றிற்கு தகவல்களை வெளியிடல் மற்றும் பகிரங்க – தனிப்பட்ட மற்றும் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகள் என்பவை தொடர்பில் கவனம் செலுத்துக (15 நிமிடங்கள்)**

**d. பொறுப்பு மிகுந்த அறிக்கைப்படுத்தல் மற்றும் இரகசியத்தன்மையை பேணுதல் தொடர்பில் ஊடகத்தின் வகிபாகம். (15 நிமிடங்கள்)**

- காணொளியை காண்பிக்கவும் **(4 நிமிடங்கள்)** – மனித இழிதொழில் வாணிபம் தொடர்பான 25 வேதனையான நிகழ்வுகள் (25 painfully disturbing facts about human Traffing) - https://www.youtube.com/watch?v=dqCSgCDGNT8
- வழக்காய்வு **(15 நிமிடங்கள்)**
- இரகசியத்தன்மை மற்றும் பாதுகாப்பு தொடர்பான தனியாள் அறிவினை சோதித்தல் **(10 நிமிடங்கள்)**
- சிறிய குழு கலந்துரையாடல் **(15 நிமிடங்கள்)**
- கருத்தமர்வு (Feedback Session) **(15 நிமிடங்கள்)**

***(45 நிமிடங்கள்)***

**தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை**

இல 330, தலவத்துகொட வீதி, மாதிவெல

ஸ்ரீ ஜயவர்த்தனபுர

011 - 2778911-12 -14

011 - 2778915 / 011 - 2778767

ncpa@childprotection.gov.lk
chairman@childprotection.gov.lk
chairman.ncpa@gmail.com

www. childprotection.gov.lk

9 789551 417314